ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகா.

தொகுதி 11 | ஜனவரி 1949 | பகுதி 1

சந்தோஷச் செய்தி

நமது வைத்ய சந்த்ரிகைக்கு சென்ற இதழுடன் 10 வயது பூர்த்தியாயிற்று; 11-வது வயது இன்று ஆரம்பமாகிறது என்கிற விஷயத்தை மிக ஸந்தோஷத்துடன் தெரிவிக்கிறோம்.

சென்ற மாதத்தில் இருந்த இருப்பை கவனித்து மறுபடியும் க்ரமமாக பத்ரிகை வெளிவர ஸௌகர்யம் ஏற்படச்கூடுமாவெனத் திகைத்து ஒரு வேண்டுகோளும் வெளியிடப்பட்டது. ஷி வேண்டுகோளைப் படித்த மெய்யன்பர்கள் பலர் "பத்ரிகை எக்காரணத்தைக் கொண்டும் நிற்கக்கூடாது; அதிக செழிப்புடன் வெளிவரவேண்டும்" என்று தெரிவித்து நமக்கும் ஊக்கத்தை அளித்திருக்கிறார்கள்.

சில மஹநீயர்கள் தங்கள் நன்கொடைகளை மிகதாராள மனதுடன் அளித்திருக்கிறார்கள்; அளிக்க முன் வந்துமிருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களது 1949 வருஷச் சந்தாவையும் முன் பணமாக அனுப்பியுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதுமாதிரியே மற்ற நண்பர்களும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவியைச் செய்யும்படி வேண்டுகிறோம். நன்கொடையாக உதவ ஸௌகர்யமில்லாத அன்பர்கள் தங்கள் சந்தாவையாவது தாமதமில்லாமல் அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம். மேலும் ஒவ்வொரு வைத்ய சந்த்ரிகை அன்பர்களும் தங்களைச் சேர்ந்த இரண்டு ஸுஹ்ருத்துக்களையாவது சந்த்ரிகையின் சந்தாதாரர்களாகச் சேர்த்து அனுப்பினால் மிக உபகாரமாக விருக்கும்

இனி சந்த்ரிகை சிறப்பாக வெளியிட ஏற்பாடு செய்து கொண்டிருப்பதால் அப்படியே நிர்விக்னமாய் நிறைவேறும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து.

அடுத்த இதழில்:–

1. யோகரத்நாகரம்

சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பு.

2. க்ஷயரோகம்

ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை.

(இலங்கை ஆயுர்வேத வைத்யர் ஸ்ரீ கி, குமாரசாமி D. A. M.

ரக்த ஸம்ஹதி அல்லது தமனீஸம்ஹதி

BLOOD PRESSURE

(வைத்ய விசாரத S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ)

Blood Pressure என்ற ஒரு வித ரோக நிலையைப் பற்றியது இக்கட்டுரை. இந்நிலை ஆயுர்வேதத்தில் கூறப் பட்டுள்ளதா? இல்லையா? இதன் பெயரென்ன? என்ற வேண்டா விசாரத்தில் இறங்காமல் நவீனர்களால் சிற்சில யந்திர ஸாதனங்களைக் கொண்டு அறியப்பட்டு சிகித்ஸை செய்யப்படும் இந்நிலையை தோஷம்-தூஷ்யம் இவைகளின் விகிருதமான சேர்க்கையே வியாதி என்ற ஆயுர்வேதக் கொள்கைப்படி எவ்விதம் அறியமுடியும்? இவ்விகிருதி யை மாற்றி ஆரோக்கிய நிலைக்கு கொண்டு வருவது எங்ஙனம்? என்ற லக்ஷ்யத்துடன் எழுதப்படுகின்றது. அதனுல் Blood Pressure என்ற தொடரின் முழு மொழி பெயர்ப் பாக ரக்த ஸம்ஹதி எனப் பெயர் கொடுக்கப்பட்டிருக் கின்றது.

சில விளுடிகளில் சரீரம் முழுவதும் சுற்றிவரத் தகுந்த வேகத்துடன் ஹிருதயத்தினின்று வெளியிலனுப்பப்பட்டு வியான வாயுவின் சக்தியால் சரீரம் முழுவதும் பரவித் திரும்பி வரும் ரக்தத்தின் அமுக்கம் ரக்த வஹமான தமனி களில் பிரதிபலிப்பதையே ரக்த ஸம்ஹதி எனக் கூறுகி ரேும். இவ்வித பிரதிபலிப்பு கையின் பெருவிரலில் அடி யில் காணும் தமனியில் நன்கு தெரிகின்றது. அனுபவம் முதிர்ந்த வைத்தியர்கள், அந்த பிரதிபலிப்பின் அணுவான தாரதம்யங்களைக் கொண்டே, ஹிருதயம், ரக்தம், தமனி கள் போன்ற பல அம்சங்களின் பிரகிருதி, விகிருதியை அறிகிருர்கள். இவ்வித பிரதிபலிப்பின் வேகம் சில சம யம் குறைந்தும் அதிகப்பட்டும் கண்டு, சரீரத்தில் பல கெடுதல்களின் மூல காரணமாக ஆகின்றன என்பதால் இந்த விகிருதமான ரக்த ஸம்ஹதியை ஒரு தனி வியாதி லிங்கமாக கருதுகிருர்கள்.

ரக்த ஸம்ஹதியின் மாறுபாடு ஆரோக்கிய நிலையிலும் ஏற்படும். சோகம், கோபம், பயம் போன்ற பலவித உணர்ச்சிகள் தாக்கும் போதும் சாப்பாட்டிற்குப் பிறகும், ஸ்நானம் செய்தவுடனும், கடினமான தேகப் பயிற்சிக்குப் பிறகும் ரக்த ஸம்ஹதியில் விசேஷமான மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இக்காரணங்கள் சீக்ரம் மாறி விடுமாதலால் இந்த ரக்த ஸம்ஹதியின் மாறுதல் சரீரத்திற்கு விசேஷக் கெடுதி ஒன்றும் விளைவிப்பதில்லை.

ரக்த ஸம்ஹதியில் மாறுபாடுகள் ஏற்பட முக்யமாக கீழ்க்கண்டவை காரணமாக கருதப்படுகின்றன.

வெளியிலனுப்பப்படும் ரக்தத்தின் அளவின் ஏற்றத் தாழ்வு.

ரக்தவஹ தமனிகளின் தசைகளில் எதிர்ப்பு சக்தி அதிகமாகுதல்.

ரக்தம் ஸ்வபாவத்தைவிட நீர்த்தோ, தடித்தோ இருத்தல்.

ஹிருதயத்தின் அறைகள் விரிவடைதல்.

ஹிருதய அறைகளின் விரிவு சுருக்கங்களின் நேசம் தாமதிக்கப்படுதல்.

சோகம், கோபம் போன்ற உணர்ச்சி வசமாகுதலாலும், காபி, டீ, மத்யம் போன்றவைகளின் அதிக உபயோகத்தினாலும், ஹிருதயத் துடிப்பில் ஏற்படும் மாறுதல்கள்.

இவை சில சமயம் ரக்தஸம்ஹதி அதிசமாவதற்கும் குறைவதற்கும் காரணமாகவோ, ரக்த ஸம்ஹதியின் அதிகம் குறைவு இவைகளினால் ஏற்படக்கூடியதாகவோ இருக்கும். அதிக ரக்த ஸம்ஹதியை (High Blood Pressure) எனவும், ஊன (குறைந்த) ரக்த ஸம்ஹதியை (Low Blood Pressure) எனவும் கூறுகின்றோம்.

இது தனித்து வரக்கூடிய பிரதான வியாதியல்ல. சிற்சில வியாதிகளில், முக்கியமாக வாதத்தின் விருத்தியிலும்

[22-ம் பக்கம் பார்க்க]

சிர ரோகத்தின் விளக்கம்.

[இலங்கா ஆயுர்வேத சித்த வைத்தியக் கல்லூரி ஆசிரியர் வைத்திய கலாநிதி திரு. வி. கனகசபை அவர்கள் எழுதியது.]

(சென்ற வருஷ 213-ம் பக்கத் தொடர்ச்சி.)

கபாலக் கரப்பான் பலவுக்கும் பொதுச் சிகிச்சைகள்.

பரங்கிக் கிழங்குச் சூரணம்:—கோட்டம், கருஞ்சீரகம், குரோசாணி, வசுவாசி, நத்தைச்சூரி சமூலம், சிறுகுறிஞ்சா வேர், இயங்கம் வேர்ப்பட்டை, சீந்திற்கொடி, வகை கழஞ்சு 3. சாதிக்காய் கழஞ்சு 8. செண்பகப்பூ கழஞ்சு 1. மிளகு கழஞ்சு 6. கராம்பு கழஞ்சு 6. சுக்கு கழஞ்சு 5. பறங்கிக் கிழங்கு இராத்தல் 1. இவைகளை நறுக்கி வெய்யிலிற் காயவைத்து இடித்து மெல்லிய துணியால் அரித்து ஒன்றுபடக் கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும். நாளொன்றுக்கு இருவேளை வெருகடிப் பிரமாணம் வென்னீரிற் குழைத்து இருபது நாளுண்டுவர திரிதோஷங்கள் கோளாறடைந்து வரும் கரப்பான், கிரந்தி, ஆரம்பகுட்டம், ஆண் பெண்களின் மர்ம ஸ்தானங்களில் வரும் புண்கள், தொண்டை, வாய் முதலிய வுறுப்புகளில் உண்டாகும் விரணங்கள், சிரத்தில் வரும் கிரந்தி, கரப்பான், சூலை, முதலிய ரோகங்களும், பாண்டு, கிரகணி, குண்மம், மூலம் மூலவாய்வு, அரையாப்பு, விப்புருதி, அதர குட்டம், கண்டக் கரப்பான், எலிக்கடி முதலிய சில் விஷங்கள், பிரமியம், அண்டவாதம், முகசிங்கி, உஷ்ணம், பற்பலரோகம் முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—மச்ச மாமிசம், புளி, உப்பு, காரம், கரப்பான் பண்டங்கள் முதலியவற்றை நீக்கி உணவு உட்கொள்ளவும். பசும்பால், நெய் சேர்த்துக் கொள்ளவும்.

நிம்பச் சூரணம்.

வெள்ளறுகு சமூலம், இலவங்கப்பட்டை, சிவனார் வேம்பின்வேர், புங்கம்வேர், நிலவாகைவேர், அவுரிவேர், சதுரக்கள்ளிவேர், தயிர்வேளைவேர், குப்பைமேனிவேர், அம்மான் பச்சரிசி சமூலம், வெள்ளைக்காக்கணம்வேர்,

கையாந்தகரை, வேம்பின்வேர், இதின் பழம், காய், பூ, கொழுந்து, பட்டை, தூதுவளைவேர், சிறுகாஞ்சோன்றி வேர், சீந்தில்கிழங்கு, சத்திச்சாறணைவேர் வகை பலம் 1. திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, கறியுப்பு, சவட்டுப்பு, கல்லுப்பு, பொரித்த வெண்காரம், சீனக்காரம், பொரிகாரம், சவர்க்காரம், அப்பளக்காரம், நவச்சாரம், யவாச்சாரம், சத்திச்சாரம், உமரிச்சாரம்,[1] தும்பச்சாரம்,[2] கடுகு, ஓமம், சாதிக்காய், கராம்பு, சாதிபத்திரி, புன்னைவித்து, புங்கம் வித்து, சுத்திசெய்த சேங்கொட்டை, வலம்புரி, கோட்டம், சடாமாஞ்சில், சிற்றரத்தை, குந்திருக்கம், கொடிக்களர்ச்சி வித்து, உள்ளி, குளவிந்தமஞ்சள், சுத்திசெய்தஎட்டிவித்து, மகிழம்வித்து, ஏலம், சீரகம், சுத்திசெய்த கெந்தகம், சிவதைவேர், கடுகுரோகணி, செண்பகப்பூ, வாய்விளங்கம், சுத்திசெய்த காந்தம், வகை கழஞ்சு $1\frac{1}{2}$.

செய்முறை:—இவைகளில் காரசார லவணங்களும், உள்ளி, சேங்கொட்டை, காந்தம், கெந்தகம் நீங்கலாக மற்றச் சரக்குகளை நறுக்கி வெய்யிலிற் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு; கெந்தகம், காந்தம் இவையிரண்டையும் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து, காரசார லவணம், உப்பு, சேங்கொட்டை இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக சேர்த்து அரைத்து ஷை சூரணத்தோடு கலந்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இச்சூரணத்தில் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை நெய், தேன் இவைகளிலொன்றிற் குழைத்து உண்டு இள வெந்நீர் குடிக்கவும். பத்து நாட்களுக்கொருக்கால் கரப்பான் ரோகங்களுக்குக் கூறிய தைலங்களில் ஒன்றைத் தேய்த்து ஸ்நானம் செய்யவும். இவ்வண்

---

1. உமரிச்சாரம் என்பது உமரிப்பூண்டை நிழலிற் காயவைத்து ஒரு புதுச் சட்டியிற்போட்டு எரித்துச் சாம்பலாக்கி காற்படி சாம்பலை ஒருபடி தண்ணீரிற் கரைத்து அசையாமல் ஒருநாள் வைத்து அதிற் தெளிந்த நீரை வடித்து தீயில் வற்றக்காய்ச்ச ஒரு வகை உப்பு உண்டாகும். இதுவே உமரிச்சாரமாகும்.

2. இதுபோலவே தும்பச்செடியை எரித்துச் சாம்பலாக்கி நீரில் கரைத்துக் காய்ச்சி உப்பாக எடுத்துக் கொள்வதே தும்பச்சாரமாகும்.

ணம் இம்மருந்தை 40 நாள் உண்டுவரின் சகல கரப்பான் ரோகங்களும், கிரந்தி, குட்டம் முதலிய கெட்டபிணிகளும் நீங்கி தேகம் நன்நிலையடையும். இம்மருந்தினை நிம்பகற்ப மென்று கூறுவர்.

பத்தியம்:—உப்பு, புளி, காரசாரங்கள் தவிர்க்க வேண்டியது.

செங்கத்தாரி எண்ணை

செங்கத்தாரி, பீச்சுவிளாத்தி, வீளி, துத்தி, அவுரி, மல்லிகை, பேய்க்கொம்மட்டி, முசுக்கட்டை, தாதுவளை, கொன்றை, தில்லை, முல்லங்கி, புங்கு இவைகளின் வேர் வகைக்குப் பலம் 1. உள்ளி, வசம்பு, சுத்திசெய்த துத்தம், சேங்கொட்டை, குக்கில், கடல்நுரை, கடுக்காய், சுக்கு, சுத்திசெய்த காந்தம், கருஞ்சீரகம், குங்கிலியம், வாய் விளங்கம், வெந்தயம், சுத்திசெய்தலிங்கம் வகை கழஞ்சு 1. நல்லெண்ணை படி 1.

செய்முறை:—முன் சொல்லிய வேர் வகைகளை நறுக்கி யிடித்து ஒரு பாண்டத்திற் சேர்த்து 8 படி தண்ணீர்விட்டு நாலொன்றாக வற்றக் காய்ச்சி வடித்த கஷாயத்துடன் நல் லெண்ணையைச் சேர்த்து வயிரச் சரக்குகளும் சேங்கொட்டையும் நீங்கலாக மற்றச் சரக்குகளை யிடித்து வைரச் சரக்குகளுடன் சேர்த்து ஷெ கஷாயத்தாலரைத்து முன் கஷாயத்துடன் கலக்கவும். சேங்கொட்டையை அதன் பால் கைபடாமல் ஒரு குறட்டால் பற்றி நறுக்கி தைல பாண்டத்திற் போட்டு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

உபயோகம்:—இவ்வெண்ணையை 7 நாள் காலை மாலை களிற் $\frac{1}{4}$ பலவீத முட்கொண்டு தலையிலும் பூசிவர சகல கரப்பான் கிரந்தி குட்டம் முதலிய பிணிகள் மாறும். பத்தியம் முன் முறையிற் கூறியவாறே காத்துக்கொள்ளவும்.

(தொடரும்)

ஸ்ரீ

க்ரஹணீ ரோக விசாரம் *

(ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத
ஸ்ரீ P. விச்வநாத சர்மா, புதுக்கோட்டை.)

अग्निमूलं बलं पुंसां रेतोमूलं च जीवितम् ।
तस्मात् सर्वप्रयत्नेन वह्निं शुक्रं च रक्षयेत् ॥

என்று பூர்வமஹர்ஷிகளின் உபதேச வாக்யம். உயிர் வாழவும், ஐஹிக சுகத்தையோ, ஆமுஷ்மிக சுகத்தையோ அனுபவிக்கவும், ஆரோக்யத்துடன் கூடின சரீர பலத்தை விரும்பாதார் மனித ஸமூகத்தில் காண்பதரிது. அப்படி ஐஹிக ஆமுஷ்மிக சுகஸாதனமான சரீரத்திற்கு அக்னி பலமே மூலகாரணமாக விளங்குவதால் முழு முயற்சி கொண்டு, பகவத் கருணையின் ஆச்சர்யப் பெருக்காய் சிருஷ்டிக்கப் பெற்ற அக்னியின் சம்ரக்ஷணமே மனித சமுதாயத்தின் முதல் கடமையாய் நிற்கிறது. ஆகையால்தான், सर्वप्रयत्नेन रक्षयेत् என்று முன்னோர் வற்புறுத்துகின்றனர்.

நாம் "க்ரஹணீ" என்ற அவயவத்தையும் அது தோஷித்ததால் ஆன ரோகத்தையும் தெரிந்து கொள்ளுமுன் அது எந்த ஜாடராக்னி கார்யத்திற்காக கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதோ, அந்த அக்னி காரிய பிரகாரத்தையும், அதில் "க்ரஹணீ" அவயவத்தின் உபயோகத்தையும் தெரிந்து கொள்வது அவசியம்.

சரகரும்

शान्तेऽग्नौ म्रियते युक्ते चिरं जीवत्यनामयः ।
रोगी स्यात् विकृते मूलं अग्निस्तस्मान्निरुच्यते ॥

என்று க்ரஹணீ ரோகத்தை விவரிக்குமிடத்தில் முதலில் ஜாடராக்னியை முக்யமாய் விளக்குகின்றார். இந்த ஜாட

---

* திருச்சி ஆயுர்வேத ஸபையின் வருஷாந்த விழாவில் வாசிக்கப்பட்ட உபந்யாஸம்.

ராக்னிகர்மாவில் ஜிஹ்வை முதல் குதம்முடிய பற்பல அவ வங்களும் பங்கெடுத்துக் கொள்கின்றன,

अन्नं कालेऽभ्यवहृतं कोष्ठं प्राणानिलाहतम् ।
द्रवैः विभिन्नसङ्घातं नीतं स्नेहेन मार्दवम् ॥

सन्धुक्षितः समानेन पचत्यामाशयस्थितम् ।
औदर्योऽग्निर्यथा बाह्यः स्थालीस्थं तोयतण्डुलम् ॥

"உசிதமான காலங்களில் உண்ணப்படும் உணவு, முதலில் பிராண வாயுவால் ஆமாசயத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கு பலவிதமான பாசக திரவங்களால் காடின்ய ரூபம் நீங்கப்பெற்று மிருதுவான அன்னக்குழம் பாய் மாறுகின்றது. பிறகு ஸமானவாயுவின் உதவியுடன் ஜாடராக்னி எனப்படும் பித்தநீர் அவ்வுணவை ஆமாசயத் தில் பக்வம் செய்கின்றது. சாதாரணமான நெருப்பு ஒரு பாத்திரத்தில் நீருடன் கூடிய அரிசியை பக்வம் செய்வது போலவே பித்தாக்னியும் செய்கின்றது."

உணவு உட்கொள்ளப்படும்பொழுது அறுசுவை உள்ள போதிலும், ஆமாசயத்தில் மதுரமாகவும், நுரையு ள்ளதாகவும், கபத்தன்மை பெற்றதாகவும் ஆகிறது. ஜாட ராக்னியால் பக்வம் செய்யப்பட்ட அவ்வுணவுக் குழம்பு நாபி தேசத்தை அடையும்பொழுது பித்தத்துடன் கூடி அம்லபாவத்தைப் பெற்றதால் பித்தத் தன்மையைப் பெறுகின்றது. பிறகு சிறு குடலுக்குள் வந்த அவ்வாஹா ரக் குழம்பு, அங்கு பித்த வெப்பத்தினால் பக்வம் செய்யப் பட்டும், திரவரூபம் சோஷிக்கப்பட்டும், கடுரஸத்தையும், வாதகுணத்தையும் பெறுகின்றது. இவ்விதமாய் இந்த ஆஹாரத்தின் ஸாரமே ஆங்காங்கு பக்வப்படுத்தப்பெற்று முறையே, ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்ரம், என ஸப்த தாதுக்களாய் பரிணமிக்கின் றது.

அஷ்டாங்க ஹ்ருதய சாரீரத்தில்

अन्नस्य पक्ता सर्वेषां पक्तॄणां अधिको मतः ।
तन्मूलास्ते हि तद्वृद्धिक्षयवृद्धिक्षयात्मकाः ॥
तस्मात् तं विधिवद्युक्तैः अन्नपानेन्धनैः हितैः ।
पालयेत् प्रयतस्तस्य स्थितौ ह्यायुर्बलस्थितिः ॥

சரகத்தில்

आयुर्वर्णो बलं स्वास्थ्यं उत्साहोपचयौ प्रभा ।
ओजस्तेजोऽग्नयः प्राणाश्चोक्ताः देहाग्निहेतुकाः ॥

என்றும், சரீரத்தின் அக்னிகள் அனைத்திலும், அவைகளின் ஆதார பூதமான ஜாடராக்னியே, மற்றவைகளின் ஆக்கத்திற்கும், அழிவிற்கும் காரணமாய் இருப்பதாலும், ஆயுள், வர்ணம், பலம், ஸ்வாஸ்த்யம், உத்ஸாகம், ஓஜஸ், தேஜஸ், வீர்யவிருத்தி முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதாலும், அவ்வக்னியை உசிதமான அன்னபானம் என்னும் விறகுகளால் தகுந்த முயற்சியுடன் காத்து வர வேண்டுமெனவும் கூறி ஜாடராக்னியை வாயாரப் புகழ்கின்றனர். அந்த ஜாடராக்னி, ஸமம், விஷமம், தீக்ஷ்ணம், மந்தம் என நல்ல நிலைமையிலும், மாறுபட்ட நிலைமையிலுமாய் நான்கு விதமாய் பிரிக்கப்படுகிறது.

समः समाने स्थानस्थे विषमोऽग्निः विमार्गगे ।
पित्ताभिमूर्च्छिते तीक्ष्णः मन्दोऽस्मिन् कफपीडिते ॥
समोऽग्निः विषमस्तीक्ष्णः मन्दश्चैवं चतुर्विधः ।
यः पचेत् सम्यगेवान्नं भुक्तं सम्यक्समस्त्वसौ ॥
विषमोऽसम्यगत्याशु सम्यग्वाऽपि चिरात् पचेत् ।
तीक्ष्णो वह्निः पचेत् शीघ्रं असम्यगपि भोजनम् ॥
मन्दस्तु सम्यगप्यन्नं उपयुक्तं चिरात् पचेत् ।
कृत्वाऽऽस्यशोषाटोपान्त्रकूजनाध्मानगौरवम् ॥

என்று ஜாடராக்னிக்கு ஸமான வாயுவின் உதவியே முக்ய மானது. பக்வாசயத்தை முக்யஸ்தானமாய்க் கொண்ட அவ்வாயு தன் ஸ்தானத்தில் நல்ல நிலைமையில் இருந்தால் அதன் உதவியுடன் ஜாடராக்னியும் நல்ல நிலைமையில் இருக்கும். அதையே ஸமாக்னி என்று கூறுவர். அவ்வாயு தன் ஸ்தானத்தை விட்டு ஒழுங்கற்ற நிலைமை அடையுமானுல் ஜாடராக்னியும், வைஷம்யம், தைக்ஷ்ண்யம், மாந்த்யம் என்ற குணங்களைப் பெறுகிறது.

விஷமாக்னியால், முறை தவறி உட்கொள்ளப்பட்ட உணவும் வெகு சீக்ரத்தில் ஜீர்ணிக்கப்படுகிறது. அல்லது முறைப்படி உட்கொள்ளப்பட்ட உணவும் வெகு மந்தமாய் ஜீர்ணிக்கப்படுகிறது. தீக்ஷ்ணுக்னியால் விதி தவறி அதிகப்படி உண்ணப்பட்ட உணவும் வெகு எளிதில் ஜீர்ணிக்கப்படுகிறது. மந்தாக்னியால், விதிப்படி உட்கொண்ட ஆகாரமும் மிக மிக மந்தமாக ஜீர்ணம் செய்யப் படுவதோடல்லாமல், வயிற்றுப் பொருமல், வயிற்று இரைச்சல் முதலிய கோளாறுகளும் உண்டாக்கப்படுகிறது

இந்த மூன்று விதமான அக்னி விகாரங்களும் க்ரஹணீ என்னும் அவயவத்தின் தோஷமாகவே புராண மஹரிஷிகளால் கூறப்படுகின்றன. ஜாடராக்னியின் தோஷங்களினுல் கிரஹணீ என்னும் அவயவத்திற்கு அழிவும் க்ரஹணீ தோஷத்தினுல் ஜாடராக்னிக்கு அழிவும் ஏற்படுவதாக

विभागेऽङ्गस्य ये चोक्ताः विषमाद्यास्त्रयोऽग्नयः ।
तेऽपि स्युः ग्रहणीदोषाः समस्तु स्वास्थ्यकारणम् ॥ என்றும்,
दुष्यति ग्रहणी जन्तोः अग्निसादनहेतुभिः ।
ग्रहण्या बलमग्निर्हि स चापि ग्रहणीश्रितः ॥

என்ற ச்லோகங்களில் கூறுகின்றனர்.

க்ரஹணீ என்னும் அவயவத்தை ஆங்கில வைத்தியர்கள் (Pyloric Valve) என்று கூறுகின்றனர். இது ஆமா

சயமும், சிறு குடலும் சந்திக்குமிடத்தில் நாபி என்னும் குடல் பிரதேசத்தின் மேல்பாகத்தில் கபாடம் எனத்தகும் வலயாகாரமான அவயவம். இது ஆமாசயத்தில் ஆகாரம் விழுந்தவுடனேயே சிறு குடலுக்குப் போகாதவாறு தடுத்து நிறுத்தி பாசகத் திரவங்களுடன் ஒன்று சேர்ந்து அன்னக்குழம்பாய் ஆனபின்புதான் அதை சிறு குடலுக்குப் போகுமாறு செய்கின்றது. இது அப்படிச் செய்யாவிடில் பித்தநீர் என்ற ஜாடராக்னியால் சரியாக பாகம் ஆவதற்கு முந்தியே ஆஹாராதிகள் ஆமமாகவே சிறு குடலுக்குள் சென்று விடும்.

யக்ருத் என்ற கோள (gland) த்திலிருந்து பெருகும் பித்தமே ஜாடராக்னி எனப்படுகிறது. அதுவே மற்ற "ஆஹார ஜரணோபயோகி பாசக திரவங்களுக்கு" ஆதாரமாய் இருந்து பலத்தைக் கொடுக்கிறது. முக்யாக்னியாகிய அந்த பித்தாக்னியில் கோளாறு ஏற்படும்பொழுது மற்றைய ஜீர்ணக் கருவிகளுக்கும் பழுது ஏற்படுகிறது.

"न खलु पित्तव्यतिरेकात् अन्योऽग्निरुपलभ्यते" आग्नेयत्वात् दहनपाचनादिषु अभिप्रवर्तमानः अग्निवदुपचारः अन्तरग्निरिति என்று

ஜீர்ணோபயோகியான திரவங்கள், ஆமாசயம், பக்வாசயம், நாபி, முதலிய பற்பல இடங்களில் உற்பத்தியாயினும் கூட க்ரஹணீ என்னும் அவயவத்திற்கு அடுத்து இருக்கும் யக்ருத் பித்தம் என்னும் பித்தாக்னியே பிரதான ஜீர்ணகாரி திரவமாய் கூறப்பட்டிருக்கிறது.

அஷ்டாங்க ஹ்ருதயத்திலும்,

> तत्रस्थमेव पित्तानां शेषाणामत्यनुग्रहम् ।
> करोति बलदानेन पाचकं नाम तत्स्मृतम् ॥

என்று விவரித்திருக்கிறது.

இந்த க்ரஹணீ என்னும் அவயவம் பித்த கலையை அடுத்து आमाशय अन्त्यभाग த்தில் இருக்கிறது. இதன் உதவியே

ஜாடராக்னி எனப்படும் பித்த கலைக்கு முக்யமானதாகும்.

ग्रहण्या बलमग्निर्हि स चापि ग्रहणीं श्रितः । என்பதாலும்

अग्न्यधिष्ठानमन्नस्य ग्रहणात् ग्रहणी मता ।

नाभेरुपरि सा ह्यग्निबलोपस्तम्बबृंहिता ।

अपक्वं धारयत्यन्नं पक्वं सृजति पार्श्वतः ॥

என்ற ச்லோகங்களால் சரகரும் அவயவத்தின் ஸ்தானத்தையும், ஸ்வரூபத்தையும், கார்யத்தையும் விவரித்திருக்கிறார்.

ஆனால் ஸுச்ருதரோவெனில்,

षष्ठी पित्तधरा नाम या कला परिकीर्तिता ।

पक्वामाशयमध्यस्था ग्रहणी सा प्रकीर्तिता ॥ என்றும்

षष्ठी पित्तधरा— या चतुर्विधमन्नपानं आमाशयात् प्रच्युतं पक्वाशयोपस्थितं धारयति । என்று

பித்தரா என்ற பித்த கலையையே க்ரஹணீ என்னும் அவயவமாகக் கூறுகிறார். அதைத் தழுவியே, பிற்காலத்தவரும், சிலரும், பித்த கலையையே க்ரஹணியாக எழுதியிருக்கின்றனர். ஆனால் பித்தகலை வேறு, க்ரஹணீ வேறு என்று பாச்சாத்ய சாரீர கிரந்தங்களிலும், மற்றும் தெரிய வருகிறது.

அவ்விதமெனில் எல்லாம் உணர்ந்த சஸ்திரோபயோகியான சாரீர கிரந்தத்தை முதலில் உலகுக்கு உணர்த்திய சுச்ருதர் பித்த கலையையே கிரஹணீ எனக் கூறினார் எனில், பித்த கலையை அடுத்து, அதன் ஏகதேசாங்கமாய் இருப்பதும், அக்னி பலாதிஷ்டானமாய் இருப்பதுமான க்ரஹணியை பித்த கலையாகக் கூறியதில் தோஷமொன்றுமில்லை யெனத் தோன்றுகிறது.

இவற்றை P. S. வாரியர் அவர்கள் எழுதிய ப்ருஹத் சாரீரத்தில் கிரஹணியை அன்னதரா என்ற கலையாகவும், பித்ததரா என்ற கலையை வேறாகவும் கூறியிருக்கிறார்.

पित्ताशये पित्तवहनालीषु विविधासु च ।
तथाऽन्याशयनालीषु चास्ते पित्तधरा कला ॥
यकृदुत्पादितं पित्तं पाचकाग्निविमिश्रितम् ।
काले तु विवृतद्वारा नाभिपार्श्वे यथायथम् ॥
आमाशयच्युतान्नस्य पाकार्थं विसृजत्यसौ ।
अन्यदा पिहितद्वारा पित्तं पित्ताशयोन्मुखम् ।
कृत्वा सञ्जाययत्यत्र भूयः काले च मुञ्चति ॥

இதில் विवृतद्वारा, पिहितद्वारा என்ற விசேஷணங்களால், கிரஹணீ கர்மாவையே எழுதியிருக்கிறார் என்றால், அவர் பித்த கலையே அதன் ஏகதேசாவயவமான கிரஹணியினால் தான் இக்கார்யத்தைச் செய்கிறது என்பதை மனதில் கொண்டே இவற்றைக் கூறியிருக்க வேண்டும்; இல்லாவிடில் இதன்பின்

त्रयोदशी अन्नधरा या भुक्तं आमाशयगते तत्क्षणं निरुध्य, तद्द्रवैः मिश्रणाद्यनन्तरं तत् क्रमात् अधो मुञ्चति, आमाशयान्त्यद्वारस्था ग्रहणीसंज्ञिता च । ग्रहणीरोगादौ भुक्तस्य अन्नस्यैव अतिसरणं एतत्कलाबलक्षयात् संभवति ।

என்று அவரே கிரஹணியை வேறு படுத்திக் கூறி இருக்க மாட்டார். (இதனால் ஆமாசயத்தில் பித்த கலையின் அந்த்ய பாகமாய் அமைந்து, ஆமாசயத்தில் சமைகின்ற ஆகாரத்திற்கு உணர்ச்சியுள்ள அவயவம் கபாடம் என ஆகிறது.) க்ரஹணீ ஆமாசய அவயவ:மென்பதும், ஆமாசயத்தில் சேருகின்ற பிரதானக்னியாகிய பித்தத்தின் விகாரமே க்ரஹணீ தோஷத்திற்கு முக்ய காரணம் என்றும்,

दुष्यति ग्रहणी जन्तोः अग्निसादनहेतुभिः ।
तस्मात् संदूषिते वह्नौ ग्रहणी संप्रदुष्यति ॥
दुर्बलाग्निबला दुष्टा त्वाममेव विमुञ्चति ।

என்பவைகளால் தீர்மானித்துக் கொண்டோம்.

(தொடரும்)

அசுத்தமான பூரத்தின் அபாயம்

பூரம் என்று சொல்லப்படுகிற ரஸபஸ்மத்தை அதிகமாக உட்கொள்வதனுலும் அசுத்தமான பூரத்தை உட்கொள்வதனுலும் பற்பல பாகங்களில் வசிக்கும் பல ஜனங்கள் கொடிய வியாதிகளினுல் கஷ்டப்படுகிருர்கள்.

பூரம் மலச்சிக்கலுக்கும் ஸ்திரீ வியாதிகளுக்கும் பரிகாரமென்று கருதி ஆயுர்வேத வைத்தியர்களும் ஆங்கில வைத்தியர்சளும் அதை ஸாதாரணமாக மருந்துகளில் உபயோகிக்கிருர்கள். வியாதியஸ்தர்களுக்குப் பூரம் கொடுக்கும் எல்லா வைத்தியர்களும், வைத்தியர்களின் முறைகளின் பிரகாரம் பூரத்தை மருந்தாக உட்கொள்பவர்களும் அடியில் கூறப்படும் விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு மனிதன் மருந்தாகச் சாப்பிடக் கூடிய அளவு கால் கிரெயின் (Grain) முதல் ஐந்து கிரெயின் வரையிலிருக்கலாம். அதாவது அரைக்கால் குந்துமணி எடைமுதல் மூன்று குந்துமணி எடை வரையில் வியாதியஸ்தர்களின் வயதுக்கும், தேகதத்துவத்திற்கும் ஏற்றதாகவிருக்கும். அதிகமாக உட்கொண்டால் வயிற்றுப் போக்குண்டாகும். அடி வயிற்றில் வலி ஏற்படும். உட்கொள்ளும் பூரம் அசுத்தமானதாக விருந்தால் அதனுல் உபாதிகள் மிகவும் கடுமையாக இருக்கும். கடைகளில் "கரோஸிவ் சப்ளிமேட்" என்று சொல்லப்படுகிற சுத்தம் செய்யப்படாத பூரத்தோடு இது கலந்து விற்கப்படுகிறது. இந்தக் "கரோஸிவ் சப்ளிமேட்" மிகவும் கெட்ட விஷவஸ்து. இதைக் கட்டியாக உட்கொண்டால் இந்தக் கெட்ட விஷவஸ்து உள் சதையோடு சம்பந்தப்பட்டவுடன் சதை நாசமாகிவிடுகிறது. திராவக ரூபமாக அதாவது ஜலரூபமாக உட்கொண்டால் வாயிலும், தொண்டையிலும் புண் ஏற்படுவதோடு குடலிலும் ஜீரணப்பையிலும் எரிச்சலுண்டாகிறது. ஆதலால், வியாதியஸ்தர்கள் மல ஜல விஸர்ஜனம் செய்யும்போது மிகவும் வலியால் வருந்துகிருர்கள். மலம் சீதமாகவும் இரத்தமாகவுமிருக்கும். கரோஸிவ் சப்ளிமேட்டினுல் தொண்டைக்

குத்தலும் சுரமும் இன்னும் மற்ற வியாதிகளுமுண்டாவதுண்டு. ஆகையினால் எல்லா வைத்தியர்களும் கடைக்காரர்களும் தாங்கள் வியாதியஸ்தர்களுக்கு பூரம் கொடுப்பதற்குமுன் அல்லது விற்கிறதற்குமுன் ஷி பூரம் சுத்தமாகவும் சாஸ்திரீயமாகவும் தயார் செய்யப்பட்டதா வென்று நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பூரம் செய்யப்படும் விதம்.

ரஸத்தின் வீரம் 4 பாகம், ரஸம் 3 பாகம் இவைகளை எடுத்துக்கொண்டு அரைத்து ஒன்றாகக் கலக்க வேண்டும். பிறகு இதை அடுப்பில் வைத்துக் காய்ச்சி அதனின்று உண்டாகும் ஆவியை ஒரு குளிர்ந்த பாத்திரத்தில் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்க்கப்பட்ட ஆவி வெள்ளைத் தூளாக அந்தப் பாத்திரத்தில் படிந்திருக்கும். இதுதான் சுத்தமாக்கப்படாத பூரம். இதில் ரஸத்தின் வீரம் கொஞ்சம் கலந்திருக்கும். இதை வென்னீரில் போட்டு நன்றாய்க் கலக்கினால் ரஸத்தின்வீரம் நீரில் கரைந்துபோகும். பூரம் கரையாமல் நின்றுவிடும். சிறிது நேரம் தண்ணீரை அசையாமல் வைத்திருந்தால் சுத்தமான பூரம் அடியில் தங்கிவிடும். மேலாகவிருக்கிற தண்ணீரைக் கீழே வார்த்துவிட்டு மறுபடியும் முன்போல் பாத்திரத்தில் வெந்நீரை விட்டு கலக்க வேண்டும். சிறிது நேரம் கழிந்த பிறகு மேலாகவிருக்கிற தண்ணீரைக் கீழே வார்த்துவிட வேண்டும்.

பரீக்ஷை.

இம்மாதிரி மேல் நிற்கிற தண்ணீரை இறுத்து அத்தண்ணீரில் நவச்சாரத்தைச் சேர்த்து அத்தண்ணீர் வெள்ளை நிறத்துடன் கலங்கலாக விருந்தால் இன்னும் பூரம் சுத்தமாகவில்லையென்று அறிந்து கொள்ளவேண்டும். விடாமல் இன்னும் அதில் வெந்நீரை ஊற்றி நன்றாகக் கலக்கவேண்டும். இப்படியாகச் செய்த பிறகு மீண்டும் ஒரு முறை தண்ணீரை இறுத்து அத்தண்ணீரில் முன்போல் நவச்சாரத்தைச் சேர்த்தால் அப்போது வெள்ளை நிறத்துடன் கலங்கலுண்டாகாமலிருந்தால்தான் பூரம் சுத்தமானதாகவிருக்கும்.

திருச்சி ஆயுர்வேத ஸபா

15-வது வருஷாந்தக் கொண்டாட்டம்.

சென்ற 19–12–48 ஞாயிற்றுக்கிழமையன்று திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் திருச்சி ஆயுர்வேத ஸபாவின் 15-வது வருஷாந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. சென்னை வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் ஆசிரியர் ஸாஹித்ய ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத, ஸ்ரீமான் V. S. வெங்கட ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் தலைமை வகித்தார். அச்சமயம் சிதம்பரம் ஸாஹித்ய ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத ஸ்ரீ, P. S. ஸ்ரீனிவாஸய்யர் கபோல்பண ஸந்நிபாதத்தைப்பற்றி ஸம்ஸ்கிருதத்திலும், புதுக்கோட்டை ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத ஸ்ரீ P. விசுவனாத சர்மா, "க்ரஹணீ" யைப்பற்றித் தமிழிலும் எழுதப்பட்ட ஸாரம் நிரம்பிய கட்டுரைகளைப் படித்தனர். பிறகு அவ்விஷயங்களில் சர்ச்சை நடந்தது.

16-வது வருஷத்திற்கு கீழ்க்கண்டவர்கள் ஸபை நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர், P. G. கணபதி சாஸ்திரீ, ஸ்ரீரங்கம். உப தலைவர், ஸ்ரீ M. V. ஸுப்ரமண்ய அய்யர், திருச்சி. S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரீ, கார்யதர்சீ, ஸ்ரீ P. S. ராமசர்மா, கரூர், ஸ்ரீ L. S. கணேசன் L. I. M. திருச்சி, ஸ்ரீ சூலபாணி வாரியர் திருச்சி, ஸ்ரீ A. ராகவராவ், திருச்சி, அங்கத்தினர்கள்.

ஸ்ரீ V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ தனது தலைமையுரையில் பேசும்பொழுது, ஆயுர்வேதத்தின் பற்பல சிகித்ஸாக்கிரம விசேஷங்களை யொட்டியே, தற்சமயம் நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பிரசாரமடைந்துள்ள பற்பல வைத்ய முறைகள் சிகித்ஸை செய்து வருவதைக் குறிப்பிட்டு ஆயுர்வேதத்தின் பிரசாராபிவிருத்தியில் அரசாங்கத்தின் குறுக்கிடுதலைப்பற்றி அன்னார் பேசியதாவது:—

கலையின் அபிவிருத்தியிலும் பிரசாரத்திலும் அக்கலைஞன்தான் அதிகாரி. அதில் அரசாங்கம் குறுக்கிடுவதாலும், நியமங்களை ஏற்படுத்துவதாலும் கலாபிவிருத்திக்குத்தான் இடையூறு ஏற்படும். இவ்விதம் அரசாங்கம் குறுக்கிடாமல் கலைஞனுக்கு வேண்டிய வஸதிகளைப் பூர்ணமாய் செய்து கொடுத்து அதன் அபிவிருத்திக் கிரமங்களில்,தான் தலையிடாமலிருப்பதே அரசாங்கம் செய்யும் பெரிய உபகாரம். இவ்வாறே முன்னுட்களில் கலாபிவிருத்தியில் அரசாங்கம் ஈடுபட்டு வந்தது. இம்முறை ஆயுர்வேதத்திற்கும் முக்கியமாகப் பொருந்தியது. ஆயுர்வேத அபிவிருத்தி மார்க்கங்களைப்பற்றி ஆலோசிப்பதையும், அவ்வாலோசனைகளை நடைமுறையில் கொண்டு வருவதையும் ஆயுர்வேத மறிந்தவன் வசம் விட்டு, அரசாங்கம் அவனுக்குப்போதிய உதவியளிப்பதே உத்தமமானது.

மேலும் மருந்து முறைகளையும், சிகித்ஸை முறைகளையும் ஒரு விதக் கட்டுப்பாட்டிற்கு (Standardization) கொண்டு வருவது யுக்தமல்ல, ஆயுர்வேதக் கொள்கைக்கே விரோதமானது. வியாதியின் நிலை, நோயாளியின் நிலை, வயது, உடல்கூறு. தேசம், காலம் போன்ற பலவித காரணங்களை யொட்டி அவைகளுக்குத் தகுந்தவாறு மருந்து யோகங்களில் வேண்டாத சில திரவ்யங்களை அகற்றுவதும் வேண்டியவைகளைப் புகுத்துவதும்தான் சிறந்த அறிவாளியின் காரியம். மற்றும் ஒரே சரக்கின் குணம் பல சரீரங்களில் பலவித அவஸ்தைகளில் பலவிதமான குணங்களுள்ளதாகக் காணப்படுகின்றது. மருந்து செய்வது சிகித்ஸை சௌகரியத்திற்கே தவிர, மருந்து வியாபாரத்திற்காகவே அல்ல. அதனுல் மருந்து யோகங்களைக் கட்டுப்பாடுடன் அமைப்பது (Standardization) யுக்தமல்ல.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. ஸமீப காலத்தில் சென்னை மாகாணத்தில் எல்லா விடங்களிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தின்கீழ், பிரதி தினமும் ஆயிரக்கணக்கான

நோயாளிகளுக்கு அருமருந்தாக உபயோகிக்கப்பட்டுவரும் ஆஸவாரிஷ்டங்களையும் சேர்த்திருப்பது ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் அதனால் பலன் பெறும் பொது ஜனங்களுக்கும் மிகுந்த கஷ்டத்தை உண்டாக்குவதாலும். ஷை ஆஸவாரிஷ்டங்களில் முக்யமாக போதை தரக்கூடிய அம்சமே இல்லாததாலும், கெடுதல் இல்லாததுடன் விசேஷ நன்மை தரக்கூடியதாதலாலும் இதை மேற்படி சட்டத்திலிருந்து விலக்களிக்கப் பல தடவை கேட்டுக் கொண்டும் அரசாங்கத்தார் இதுவரை ஒன்றும் செய்யவில்லை என்பது குறித்து மிக வருத்தம் தெரிவிப்பதுடன் இனியும் தாமதியாது பக்கத்து மாகாணமாகிய பம்பாய் மாகாணம் போல் உடனே ஷை ஆஸவாரிஷ்டங்களுக்கு விலக்களிக்கும்படி கோருகின்றது.

2. நெடுநாளாக ஆப்காரி சட்டத்தின்கீழ் உள்ள கஞ்சா, பங்கா, அபின் போன்ற வஸ்துக்கள் சிகித்ஸை உபயோகத்திற்கு இதற்கு முன் வைத்தியர்களுக்கு கஷ்டமில்லாது கிடைத்து வந்தும், தத்காலம் அவை கிடைக்காமல் வைத்தியம் செய்வது மிகவும் கஷ்டமாயிருப்பதால் தகுந்த பந்தோபஸ்தின்கீழ் வைத்தியர்களுக்கு எப்போதும் போல் கிடைப்பதற்கு வசதி செய்யக் கேட்டுக்கொள்கிறது.

3. தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத் தலைவர், ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகளின் 10—12—48 தேதிக் கோரிக்கையின் பிரகாரம் இவ்வாயுர்வேத ஸபையை அம் மஹாமண்டலத்தின் கிளையாக மாற்றும் விஷயத்தை நிர்வாக ஸமிதி அங்கத்தினர்கள் பரிசீலித்து நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பிறகு ஸபை மங்களத்துடன் முடிவுற்றது.

விசேஷ நன்கொடை வரவு

காட்டுப்புத்தூர் ஜமீந்தார் ஸ்ரீமான் ஸப்தரிஷி ரெட்டியார் அவர்கள் நமது வைத்திய சந்திரிகைக்கு ரூ. ஐம்பது நன்கொடை அளித்துள்ளார்கள். அன்னாருக்கு நமது மண்டலம் நன்றி தெரிவிக்கிறது.

திராவிட ஆயுர்வேத மஹாமண்டலம்

வைத்ய சந்த்ரிகை பிரசுர விஷயம்

1948-ஹு டிசம்பர்-மீ 19-உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் திராவிட ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 2-வது ஸ்தாயிஸமிதி கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வஹித்தார்கள். மண்டல மெம்பர்கள் பலர் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருந்தனர். மதராஸிலிருந்து ஸ்ரீ N. மாதவ மேனோன், T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் இருவர்களும் வைத்திய சந்திரிகை நிர்வாஹ விஷயமாக தங்கள் அபிப்பிராயத்தை கடிதம் மூலம் தெரிவித்தார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வைத்ய சந்திரிகையின் நிர்வாஹத்திற்குப் போதுமான அளவில் மண்டலத்தில் நிதி இல்லாததால் நிதி திரட்டுவதற்காக வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள மண்டல மெம்பர்களை ப்ரார்த்திக்கப்பட்டது.

2. வைத்ய சந்திரிகைக்கு நிரந்தரமாக விஷயதானம் செய்ய கீழ்க்கண்டவர்களடங்கிய ஒரு ஸமிதி (Editorial Board) நிறுவப்பட்டது.

1. ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ அவர்கள், தென்னூர் திருச்சி. 2. V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரிகள், அவர்கள், மைலாப்பூர், மதராஸ். 3. P. S. ராமசர்மா அவர்கள், கரூர். 4. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள், தென்னூர், திருச்சி. 5. G. சுப்பையா வைத்தியர் அவர்கள், கும்பகோணம். 6. G. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள், தஞ்சை. 7. P. S. ஸ்ரீனிவாஸ அய்யர் அவர்கள், சிதம்பரம். 8. பண்டிட். S, நாராயண அய்யங்கார் அவர்கள், மதுரை. இவர்களை ப்ரதான ஆசிரியருக்கு விஷயதானம் மூலமாக வேண்டிய உதவி செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வைத்ய சந்திரிகையை தொடர்ந்து ப்ரசுரிக்க இடைக்காலப் பொருளுதவியின் பொருட்டு திரவிய ஸஹாயம் அளிக்க முன் வந்த அடியில் கண்டவர்களுக்கு தமது நன்றியை தெரிவிக்கின்றது.

1. ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள், திருச்சி, ரூ. 100
2. ஸ்ரீ V. R. சுப்ரமண்ய அய்யர் அவர்கள், திருச்சி, 100
3. ஸ்ரீ A. ராகவராவ் அவர்கள், திருச்சி, 100
4. ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள், கரூர், 100
5. ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியர் அவர்கள், ஸ்ரீரங்கம், 75
6. ஸ்ரீ A. K. ராகவேந்திராசார் அவர்கள், கரூர், 10
7. ஸ்ரீ G. சுப்பையா வைத்யர் அவர்கள், கும்பகோணம், 10
8. ஸ்ரீ N. வெங்கடேச சர்மா அவர்கள், திருச்சி, 10
9. ஸ்ரீ P. S. ஸ்ரீனிவாஸ அய்யர் அவர்கள், சிதம்பரம், 10
10. ஸ்ரீ R. V. ராமா சாஸ்திரிகள், கரூர், 10
11. ஸ்ரீ T. S. ஈசுவர அய்யர் அவர்கள், திருச்சி, 5
12. ஸ்ரீ N. C. S. ராகவன் அவர்கள், ஸ்ரீரங்கம், 5
13. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரிகள், திருச்சி 5
14. ஸ்ரீ M. V. சுப்ரமண்ய அய்யர் அவர்கள், திருச்சி, 5
15. ஸ்ரீ S. L. நீலகண்ட சர்மா அவர்கள், செனப்பிரட்டி, 5
16. ஸ்ரீ G. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள், தஞ்சை. 5
17. ஸ்ரீ T. V. ஜயராம சாஸ்திரிகள் அவர்கள், ஸ்ரீரங்கம், 3
18. ஸ்ரீ V. நடேச சர்மா அவர்கள், திருச்சி, 3
19. ஸ்ரீ P. S. விசுவநாத சாஸ்திரிகள் அவர்கள், கரூர், 3
20. ஸ்ரீ V. S. வெங்கடசுப்ரமண்ய சாஸ்திரிகள், சென்னை, 3

பிற்பகல் 2-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது.

V. R. Subrahmanya Iyer,
General Secretary.

23—12—48

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

க்ஷயத்திலும் ஏற்படும் வாத கோபத்தினுல் ஏற்படும் வியாதிகளில், ஹ்ருதயம், ரக்தம், தமனிகள், விருக்கம் இவைகளில் விசேஷித்து கெடுதலைத் தெரிவிக்கும் பிரதான மான குறியாகின்றது. சிற்சில சமயத்தில் பிரதானமான வியாதிக்கு சிகித்ஸை செய்தலாலேயே நேர்மைக்கு வருகின்றது. சில சமயத்தில் பிரதான வியாதியைவிட இந்த லக்ஷணத்திற்கு விசேஷ சிகித்ஸைகள் புரிவது அவசியமாகின்றது.

அதிக ரக்த ஸம்ஹதி-HIGH BLOOD PRESSURE

ஒற்றைத் தலைவலி, தலை சுற்றுவது, தலை கனத்திருத்தல், அடிக்கடி மார்பு, முகத்திலிருக்கும் தமனிகளில் குபீர் என ரக்தம் அதிகமாக நிறைந்து வியர்வை ஏற்படுதல், ஞாபக மறதி அதிகமாகுதல், சித்தப் பிரமம், மனதில் உன்னத அபிலாஷைகள், உடம்பு கனத்திருப்பது போன்ற உணர்ச்சி, தேகத்தளர்ச்சி, மூச்சுத் திணறல், ஹிருதயப் படபடப்பு, ஹிருதயத்தில் வலி, சிறுநீர் குறைந்து பிரிவது, நீரில் (ஆல்ப்யுமென்) ஆஸிகா தோன்றுதல், காலிலும் முகத்திலும் வீக்கம், சிலசமயம், வாய் வழியாக ரக்தம் கக்குதல், முகத்தில் களையின்மை, அஜீர்ணம் ஏற்படுதல் இவை ரக்த அமுக்கம் அதிகமாகுதலின் சின்னங்கள்.

இவ்வியாதி முற்றும்போது ஹிருதயத்தின் இடது கீழறை விரிந்து விடுகின்றது. தமனிகளின் உள் ஸ்தானத்தில் வீக்கம் ஏற்பட்டு தமனியின் துவளும் தன்மை அகன்று தடித்து விடுகின்றது. ஸூக்ஷ்ம தமனிகளில் தடிப்பு ஏற்பட்டு அதன் துவாரமே அடைபட்டுப் போகின்றது. அப்பொழுது தமனிகளின் தடிப்பு காரணமாக ரக்த ஓட்டம் தடைபடுவதும், அதற்காக ஹிருதயத்தின் அமுக்கவேலை அதிகப்படுவதும் அதனுல் அதன் இடது கீழறை விரிவடைவதும் ஏற்படுகின்றன. சாகை (கை கால்) களிலிருக்கும் தமனிகள் முதலில் தடிக்கின்றன. பிறகு கோஷ்டதமனிகள்; அதனுல் கிரமமாக

விருக்கங்கள் பாதிக்கப்படுகின்றன. விருக்கம் பாதிக்கப் படுமுன் ரக்த ஓட்டம் அதிகப்படுவதில் நீர் அதிகமாக பிரியும். விருக்கமும் பாதிக்கப்பட்டதும் விருக்கம் சுருங்குவதும் நீரில் லஸீகை தோன்றுவதும் நீரில் எரிச்சலும் ஏற்படுகின்றன.

வியாதியின் பலமேற ஏற, ஹிருதயம், மஸ்திஷ்கம் விருக்கம், யகிருத் இவைகளில் கேடு ஏற்படுவதால் ஆங்காங்குள்ள தமனிகளிலும் தடிப்பு ஏற்பட்டு அந்தந்த ஆசயங்கள் வேலை விகிருதி அடைகின்றது. சில சமயம் ரோகியின் தேக எடை திடீரென குறைய ஆரம்பித்து ரக்தம் குறைந்து பாண்டு, காமலா, சோதம் இவை அதிகமாகின்றது. தமனிகளில் ஏற்பட்டிருக்கும் தடிப்பில் ரக்த ஓட்டம் சுத்தமாக பிரதான தமனிகளில் தடைபட்டு விட்டால், ஹிருதயம் நின்று விடுகின்றது. சில சமயம் ரக்தமே ஆங்காங்கு தடித்து உரைந்து கட்டி கட்டியாக லஞ்சரிக்கையில் தமனிகளை அடைத்து ஹ்ருதயத்தின் வேலையை தடைபடுத்துகின்றது. அதனால் ஹ்ருதயத்தில் வலி ஹ்ருதயத்தின் இடது பாகத்தில் ஏற்படுகின்றது. இவ்வலி அடிக்கடி ஏற்பட்டு ஹிருதயம் நின்று விடும்போது மரணம் ஏற்படுகின்றது.

தமனிகளின் தடிப்பினால் ஹிருதயம் அதிகமாக அமுக்கவேண்டியிருப்பதால், ஹ்ருதயத்தின் நடை குறைந்து, நடு நடுவே ஒவ்வொரு அமுக்கமும் தடைபட்டு ஏற்படுகின்றது. ஹ்ருதயத்தின் அறைகள் விரிவடைவதால் ஹ்ருதயம் துர்பலமடைந்து, அமுக்க வேகம் தாங்காமல் வெடிக்க ஹேதுவாகின்றது.

(தொடரும்)

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

தலைவர். ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய,
ஆத்ரேயாச்ரமம், தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

பொதுக்கார்யதர்சி:
ஸ்ரீ. V. R. ஸுப்ரஹ்மண்ய அய்யர், "பாரத்வாஜ ஆச்ரமம்"
ஆண்டார் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

மண்டல ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் பொதுக்காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மண்டல அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 5
(ஜனவரி முதல் டிஸம்பர் வரை (Calender Year)

மண்டல அங்கத்தினர்களுக்கு மண்டலத்தின் பத்ரிகையான வைத்ய சந்த்ரிகை தனிக் கட்டணமின்றி அனுப்பப்பெறும்,

சந்தா அனுப்பவேண்டிய விலாஸம் :—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உப கார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் உபகார்யதர்சிக்கு எழுதிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியர்,
ஆசிரியர்—"**வைத்ய சந்திரிகா**" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

குறிப்பு: சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் விஷயங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்ப வேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பிப் பெற வேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பட வேண்டும்.

க்ரஹணீ ரோகவிசாரம்.

(ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத,
ஸ்ரீ P, விச்வநாத சர்மா, புதுக்கோட்டை.)

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

அதீசாரங்களுக்கு செய்யவேண்டிய சிகித்ஸைகளை வேண்டிய அளவு, செய்யாமலிருந்து விடுவதாலும், ஜாடராக்னியை அழிக்கும் குணமுடைய உணவுகளை உபயோகிப்பதாலும் கிரஹணீ ரோகம் உண்டாகின்றது.

கிரஹணீ ரோகமானது வாத பித்த கபங்களால், தனித்தனியே மூன்று விதமும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும் ஆக நான்கு விதமாகக் காணும்.

அக்னி மாந்த்யம், உணவு மெதுவாக ஜீர்ணமாதல், புளித்த ஏப்பம், உமிழ்நீர் அதிகம் ஊறுதல், அரோசகம், நாவரட்சி, தேஹவாட்டம், வாந்தி, காதிரைச்சல், குடல் இரைச்சல். இவைகள் கிரஹணியின் பூர்வரூபங்கள்.

சரீரம் இளைத்துப்போதல், மூச்சு உஷ்ணமாய் இருத்தல், தமகவாஸம், ஜ்வரம், மூர்ச்சை, தலைவலி, அஜீர்ணம், கைகால் வீக்கம் இவைகள் நான்குவித கிரஹணீயின் சாமான்ய லக்ஷணங்கள்.

அவற்றுள் வாத தோஷத்தினுல் உண்டாகும் கிரஹணீ, ரோகிக்கு வாய் உலர்ந்து விடுதல், கண் மழுங்கிக் கொள்ளுதல், காதுகளில் இரைச்சல், அடிக்கடி விஷூசியைப்போல் பேதி முதலியவை உண்டாதல், எல்லா சுவைகளிலும் விருப்பம், குதத்தில் கடுப்பு, உணவு ஜீர்ணமான பிறகும், ஜீர்ணமாகும்போதும் வயிற்றில் பொருமல், வாத ரோகமென்றும், ஹ்ருதய ரோகமென்றும், குல்ம

மென்றும், அர்சஸ் என்றும், ப்லீகம் என்கிற மண்ணீரல் வியாதி என்றும், பாண்டு ரோகமென்றும்—இவ்விதம் பல விதமாக பிராந்தியுண்டாதல் இவையுண்டாகும். இன்னும் சுவாஸமும், காஸமும் தோன்ற அடிக்கடி மல விஸர்கம் செய்வான்.

பித்தக் கிரஹணியிலோ, மலம் கறுப்பு நிறமாகவும், மஞ்சளாகவும், திரவமாகவும் இருக்கும். ரோகி, மஞ்சள் நிறமாகக் காணப்படுவான். துர்நாற்றமும், புளிப்புமுள்ள ஏப்பம் வரும். மார்பு தொண்டை முதலியவற்றில், வேக்காடு, அரோசகம், நாவரட்சி ஏற்படும்.

கபக்கிரஹணியில் சாப்பிடப்படும் உணவு மிகவும் சிரமப் பட்டு பக்வமாகும். வாந்தியும், அரோசகமும் உண்டாகும். வாயில் கோழை சிக்கிக்கொண்டு அடிக்கடி கபம் சிரவித்து துப்பப்படும். ஜாடராக்னி மந்தப்படும். ஸ்திரீகளிடம் விருப்பம் உண்டாகாது. தேகம் இளைக்காமலிருந்தும் துர்பலம் அதிகரித்து இருக்கும்.

ஸந்நிபாத கிரஹணியில் மூன்று தோஷ கிரஹணியில் உண்டாகும் எல்லா லக்ஷணங்களும் காணப்படும்.

இதைத்தவிர இன்னும் ஸங்க்ரஹகிரஹணீ, கடீயந்த்ர க்ரஹணீ என்று வேறு இரண்டு க்ரஹணீ ரோகங்களும் காணப்படுகின்றன.

अन्त्रकूजनं आलस्यं दौर्बल्यं सदनं तथा। द्रवं शीतं घनं स्निग्धं सकटीवेदनं शकृत्॥ आमं वहु सपैच्छिल्यं सशब्दं मन्दवेदनम्। पक्षात् मासात् दशाहाद्वा नित्यं वाप्यथ मुञ्चति॥ दिवा प्रकोपो भवति रात्रौ शान्तिं व्रजेच्च सा। दुर्विज्ञेया दुश्चिकित्स्या चिरकालानुवन्धिनी॥ सा भवेत् आमवातेन संग्रहग्रहणी मता। स्वपतः पार्श्वयोः शूलं गलज्जलघटीध्वनिः॥ तं वदन्ति घटीयन्त्रमसाध्यं ग्रहणीगदम्॥ என்று.

கிரஹணீ என்னும் அவயவத்தை ஆச்ரயித்துள்ள தோஷத்திற்கு அஜீர்ணத்திற்குச்செய்வதுபோல் சிகித்ஸை

செய்யவேண்டும். அந்த ரோகிக்கு உண்டாகும் ஆம தோஷத்தை அதிசாரத்திற்குக் கூறியுள்ள முறையை அனுசரித்து பக்வ நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும்.

நியமிதமான போஜனகாலத்தில் பஞ்சகோலம் முதலியவற்றைச் சேர்த்து பக்வம் செய்யப்பட்டதும், லவணம் சேர்க்கப்பட்டதும், லகு குணமுடையதுமான யவாகூ முதலிய திரவான்னத்தையும், பின்னுல் தீபனகுணமுள்ள ஔஷதங்களையும் அந்த ரோகிக்குக் கொடுக்கலாம்.

கிரஹணீ தோஷமுள்ளவருக்கு மோர் பத்யமாய் உபயோகிக்கத் தகுந்தது. இது லகு குணமுடையதாகையால் தீபனம், க்ராஹி என்னும் தன்மையுடையது. மதுரபாகமடையுமாகையால், பித்தத்தை விருத்தி செய்யாது. துவர்ப்பு, உஷ்ணவீர்யம், விகாஸி, ரூக்ஷத் தன்மை இக்குணங்களால் கபத்திலும் அனுகூலமானது. அப்பொழுதே கடைந்தெடுத்த மோர்- இனிப்பும், சிறிது புளிப்பும் கலந்து தடித்திருக்குமாகையால் குடலில் அழற்சி உண்டு பண்ணுததாகவும் வாததோஷஹரமாகவும் இருக்கும்.

ஆமதோஷம் தீர்ந்துள்ள வாத கிரஹணீ ரோகிக்கு, தீபனகுணமுள்ள சரக்குகள் சேர்த்து பக்வம் செய்த கிருதத்தை கொடுத்துவர வேண்டும். ஜாடராக்னி தூண்டப்பட்டு சிறிது விருத்தி அடைந்திருக்கையில், மலமூத்ர அபானவாயுக்கள் கட்டுண்ட பிணியாளிக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஸ்நேஹ சிகித்ஸையை செய்வித்துப் பிறகு ஸ்வேத சிகித்ஸையையும் அப்யங்கமும் செய்வித்து, நிரூஹவஸ்தியை பிரயோகிக்கவேண்டும். பிறகு வாத தோஷம் தணிவடைந்திருக்கையில் யவக்ஷாரம் கலந்து ஆமணக்கு எண்ணெயிலாவது, நெய்வக கிருதத்திலாவது வயிற்றிலுள்ள தோஷம் முற்றிலும் வெளியாகும்படி விரேசனம் செய்விக்கவேண்டும். பிறகு குடலிலுள்ள ஆசயங்கள் சுத்தமாகவும் ரூக்ஷமாகவும் ஆனபிறகு மலமும் கட்டப்பட்டுப்போனுல். தீபனகுணமும் அம்லரஸமும்,

வாதஹரமானகுணமுள்ள சரக்குகளைச் சேர்த்து பக்வம் செய்த தைலத்தினுல் அந்த ரோகிக்கு அனுவாஸன வஸ்தியை பிரயோகிக்க வேண்டும். இங்ஙனம் நன்ருக நிரூஹ வஸ்தியும், விரேகமும் அனுவாஸனமும் செய்து வைத்த பிறகு இலகுவான பத்யான்னங்களைக் கொடுத்து மீண்டும் கிருதத்தை சிறுகச் சிறுகச் சேர்க்க வேண்டும்.

பித்த கிரஹணியில்-திரவமாய் விருத்தியாய் உள்ள பித்தம் ஜாடராக்னியை அவிக்கக்கூடியதாய் இருந்தால் அதை விரேகத்தினுலாவது வமனத்தினுலாவது தொலைத்து திக்தரஸமும், இலகு, கிராஹி, தீபனம் என்கிற குணங்களும் உடைய விதாஹி என்கிற தீயகுணமற்ற உணவுகளைக் கொடுக்கவேண்டும். படோலாதி சூர்ணம், பூநிம்பாதி சூர்ணம், நாகராதி சூர்ணம். சந்தனாதி சூர்ணம் முதலியவைகளாலும் திக்தரஸமுள்ள ஸ்நேஹன ஔஷதங்களாலும் ஜாடராக்னியை விருத்தி செய்யவேண்டும். கபத்தினுல் கிரஹணீ விகாரப்படுமானுல் அப்பொழுது தீக்ஷ்ணவஸ்துக்களால் வமனம் செய்வித்து, கடுவும் அம்லமும் க்ஷாரகுணமுள்ள ஔஷதங்களால் கிரமமாக ஜாடராக்னியை விருத்தி செய்யவும்.

ஸந்நிபாத தோஷங்களால் உண்டான கிரஹணீயில் பஞ்சகர்மங்களையும், தனித்தனி தோஷத்தினுல் உண்டாகும் கிரஹணிகளுக்குக் கூறியுள்ள சிகித்ஸைகளையும், பிணியாளியின் சரீரபலம் முதலியவற்றை அனுஸரித்து பிரயோகிக்கவேண்டும்.

கிரஹணியில் கபம் க்ஷீணித்து அதன் ஸ்தானத்தில், பித்தம் வாதத்துடன்கூடி விருத்தி அடைந்து ஜாடராக்னியை மேலோங்கச் செய்தால் அப்பொழுது வாயுவுடன் கூடிய அவ்வக்னி (பஸ்மகாக்னி) உட்கொண்ட உணவை சீக்ரத்தில் பசனம் செய்து எல்லா தாதுக்களையும் ஓஜோ தாதுவையும் அழித்து மரணமுண்டுபண்ணும். அப்பிணி

யாளி போஜனம் செய்ததும் சுகமாய் இருப்பான். உணவு ஜீர்ணமானதும் பரிதவிப்பான். அக்னி மிதமிஞ்சி அதிகரிப்பதால் நாவரட்சியும், இருமலும், தேஹ அழற்சி, மூர்ச்சையும், உபத்ரவங்களாக உண்டாகும். மிக்க மேலோங்கியெரியும், பாஹ்யாக்னியை தண்ணீர் ஊற்றி அவிப்பது போல மிதமிஞ்சிய ஜாடராக்னியை, குருவாகவும், ஸ்நிக்தமாகவும், மந்தமாகவும், ஶாந்த்ரமாகவும், சீதமாகவும், ஸ்திரமாகவும் உள்ள அன்னபானங்களால் சமனம் செய்யவேண்டும். மிதமிஞ்சி விருத்தியான ஜாடராக்னியானது இடையிடையே ஸமயம் நேரிடும் பொழுது பசனம் செய்வதற்கு தீனியின்றி பிணியாளியை அழித்து விடாதபடி, உணவு முற்றிலும் ஜீர்ணமாவதற்கு முன்பே இவனுக்கு போஜனபதார்த்தங்களை அப்போதைக்கப் போது கொடுத்து வரவேண்டும்.

நேத்ர ப்ரகாசிகை.

(ஸ்ரீநிவாஸஅய்யங்கார், தஞ்சாவூர்.)

[பாபகர்மாக்களால் ஏற்படும் நேத்ரரோகங்களும் அவைகளுக்கு சாந்தி பரிஹாரங்களும் சொல்லப்படுகின்றன.]

பிராம்மணர்களிடத்தில் த்வேஷம் கொண்டு செய்யுந் தகாத காரியங்களால் 'பிரத்யா' என்னும் சாபம், சர்ப்பங்களைக் கொல்லுதல், பதிவிருதாபங்கம், தானதர்மங்களைச் செய்யாது மறுத்தல், அந்நியஸ்திரீ ஸம்போகம், அமாவாசை, பௌர்ணமி முதலிய பர்வ காலங்களில் புணர்தல் பதிவிரதைகளைக் காம இச்சையால் பார்ப்பது, பெரியோர்களைத் தூஷித்தல், சிவநிந்தை, விஷ்ணுநிந்தை செய்தல், வேதநிந்தனை, யோகிகளை இகழ்தல், ஆகமம், இதிகாசம், புராணம் முதலியவற்றை அசட்டை செய்தல், சிலத்ரோக நினைப்பு, செய்கை.

சில சொத்தை அபகரிப்பது, சாப்பிடத்தகாதவற்றை சாப்பிடுதல், பொய்யை நினைப்பது, பொய்ச்சாட்சி சொல்லல், ஆசாரமின்மை, கோயிலுக்குப் போகாதிருத்தல்.

பூஜை செய்யாதிருத்தல். விளக்கேற்ருதிருத்தல், தீபதானஞ்செய்யாமை, செய்பவரைத் தடுத்தல், ஜீவஹிம்சை, ஜீவ வதம் முதலியவற்ருல் வியாதிகள் உண்டாகின்றன.

ருத்ராபிஷேகம், பால், சந்தனம், பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம், இவற்ருல் அபிஷேகம் செய்தல், பரமசிவன் சிரசில் தீர்த்தத்தை ஒரே காலத்தில் ஆயிரம் தாரைகளால் விழும்படி அபிஷேகஞ்செய்தல், இடைவிடாது தாராபிஷேகஞ்செய்தல், சங்காபிஷேக முதலிய மற்றைய அபிஷேகங்கள் செய்தல், வெளுப்பாயும், அழுக்கற்றதாயுமுள்ள வஸ்திரத்தை உடுத்துதல், சந்தனம், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, கஸ்தூரி, முதலியவைகளால் அபிஷேகஞ்செய்து சாப்பிடல் (லேபனஞ்செய்தல்) ஸகஸ்ரநாமார்ச்சனை, இனிய சுவையுள்ள நைவேத்யங்கள், தியான ஆவாகனுதி ஷோடச உபசாரங்கள், அநேக ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள், பிராம்மணர்களுக்குத் திருப்தியை யளிக்கத்தக்க மனோகரமான விருந்திடுதல், நாகப்பிரதிஷ்டை செய்தல், அரசமரம் முதலியவற்றை வைத்துப் பயிர் செய்தல், பசுமுதலிய பிராணிகளைக் காப்பாற்றுதல், ஸூர்யபூஜை, ஆதித்யாதி நவக்ரக பூஜை, மிருத்யுஞ்ஜய ஜபம், பலவிததானம், நல்ல பசு, நெய்யில் தாமரை நூல் திரியிட்டு அகண்ட தீபங்களைக் கோயில்களில் ஏற்றுதல், கிணறு, நடைவாவி, குளம் முதலிய வெட்டுவித்தல், ந்யாஸ விந்யாஸங்களை உச்சரித்தல், அநேக கவசங்களைப் பாராயணஞ் செய்தல், ப்ரும்மநிஷ்டர்கள், அத்யயனஞ் செய்த சுரோத்திரியர்கள், மகான்கள், வேதவேதாந்தங்கள் முதலிய சாஸ்திரங்கற்ற அந்தணர்கள் முதலியவர்களின் அநுக்கிரகம் பெறுதல், ஸர்ப்பசாந்தி செய்தல், ஈசுவரனிடத்தில் இடைவிடாத பக்தி, அறிந்து நடத்தவேண்டிய மற்ற தர்மங்களை நடத்துதல் முதலியவற்ருல், இருட்டானது எப்படி சூரியோதயத்தால் போக்கடிக்கப் படுகிறதோ, அப்படி நேத்ர ரோகங்கள் யாவும் போக்கடிக்கப்படுகின்றன.

(தொடரும்)

ஸ்ரீதந்வந்தரயே நம:

க்ஷயரோகம்.

[ஆயுர்வேதவைத்தியர். கி. குமாரசாமி. D A. M. (CEYLON)]

(36-ம் பக்கத்தொடர்ச்சி.)

அர்த்தம்:-சிவபெருமாலின் சிரசிற் பொருந்தியவன், அமிர்த மயமான கிரணத்தையுடையவன், க்ஷயரோகத்தைத் தீர்ப்பவன், இங்கிதன், குபேரன், இந்து என்னும் பெயர்களையுடையவனுமாகிய சந்திரனையும் க்ஷயம் கொள்ளச் செய்தவனான க்ஷயரோகத்தின் உற்பவத்தைச் சொல்லுவோம்.

முற்பிறப்பிற் செய்த தீவினை தந்தையாகவும், உலகத்தில் இப்பிறப்பிற் செய்த பாவமே தாயதாகவும், க்ஷயம் என்ற பிள்ளை பிறந்து, தாய் தந்தையரின் சிரமத்தப்பே செவிலித்தாயாகச் சிறப்போடு வளரும் நாளில், துணையாகவுள்ள பித்தமென்ற தோழனோடு சேர்ந்து, ஈசனின் நெற்றிக் கண்ணில் உற்பத்தியான சுரராசாவைக் கண்டு மந்திரிப் பதவி கொடுத்து, சேர்க்கைக்குரிய பாண்டு என்ற மனைவியைக் கூடியிருந்து இரத்தமான குமாரரை ஈன்றெடுத்து, பொருந்திய பீனிசத்தின் கூடார வாசலில் காண்கின்ற அருவருப்பு, சர்த்தி முதலியன பிரதானித் தொழில்களைச் செய்ய, மிகுந்த அதிசாரம் கட்டியம் கூற நிலையாகவுள்ள சுவாசம் என்னும் வாசியைச்சாரும் என்பதாம்.

"சுரமுறு புருடன் வேந்தன் தோன்றிடு மிருமல் தோகை
உரமுறு மிளைப் பமைச்ச னோங்கு கட்டியங் களைப்பாம்
திர முறு மரசாதிக்கஞ் செய்யுமிக் குணங்கள் சேரில்
புரமுற வெரித்தோன் சொன்ன ராசசேற்பனமாம் பொன்னே',

அர்த்தம்:—சுரமாகிய புருடன் என்பவன் ராஜன். தோன்றிடும் இருமல் என்ற தோகை ராணி. நெஞ்சை உறுத்துகின்ற இளைப்பு மந்திரி. ஓங்கிய கட்டியக்காரர்களே களைப்பு. இவர்களின் ஒன்று சேர்ந்த அரசாட்சியை, முப்புரமெரித்தவராகிய உருத்திரன் இராச சேற்பன நோய் என்கின்றார். இன்னும்,

ரோகராஜனுகிய க்ஷயரோகமானது, சுரரோகம் அரசனுகவும், காமாலை ரோகம் மனைவியாகவும் பாண்டு ரோகம் சேனுதிபதியாகவும், ரத்த பித்தரோகம் புத்திரனுகவும், காசரோகமும், சுவாசரோகமும் மந்திரிகளாகவும், வாதபித்த ரோகங்கள் காவற்காரர்களாகவும், வாந்திரோகமும், அரோசகரோகமும் கட்டியக்காரர்களாகவும், சோபைரோகமும், அதிசார ரோகமும் சிநேகிதர்களாகவும், பீநிச ரோகம் பொக்கிஷத்திரவியமாகவும், கண்டத்தொனிகள் பேரிகை முதலிய வாத்தியங்களாகவும், மற்ற ரோகங்கள் பரிசனங்களாகவும் கூடிய ஒரு பெரும் ரோகம் எனவும் வேறு நூல்கள் கூறுகின்றன.

க்ஷயரோகப் பொதுக்குணம்.

இருமல், காய்ச்சல், அதிகமாய்ச் சளி வெளியாகுதல், இராக்காலங்களில் வேர்வையுண்டாகி தேகம் கசிந்து கொண்டிருத்தல், தேகபலம் இழந்து கொண்டு வருதல், சரீர நிறை குறைந்து கொண்டு வருதல், நெஞ்சுநோ, ஆயாசம், இளைப்பு, குரல் மாறுதல், நிம்மதியின்மை என்பன.

இருமியே சியலுமுண்டா யிடை யிடை சுரமுந்தோன்றி
அருவியே மிடறுங் கன்றி யற்பமே யுவாந்தியாகும்
மருவிய வசனந்தானு மறுத்துசேர்ந்தாளும் வற்றிக்
கருவியுங் குறைந்து வாடுங் கசரோக மாகுங்காணே.
கண்டமு நெஞ்சுங் காய்ந்து கண்ணுமுட் குழியுநீடி
அண்டிடு காலை மாலை யருஞ் சுரந் தோன்றிக் கூறும்
மிண்டிய விருமல் மிஞ்சி வெகு நாளாய் நிற்கிலீது
கொண்டிடு கயரோகந்தான் கூறுநன் மருந்து கேண்மோ.

க்ஷயரோகம் வரும் காரணம்.

இயல்புக்கு மிஞ்சிய கடும் வேலைகளைச் செய்வது, சத்துள்ள ஆகாரங்குறை, அன்னபானங்களை உபயோகிப்பதற்கான விதிகளை யுக்தப்படி நிறைவேற்ருமை, பலவேறு உணவுகளை நியமமின்றி அருந்துதல், வேகங்களைத் தடுப்பது, தாதுக்கள் க்ஷீணமடைதல், அதிக சிந்தனை, கெடுதியை விளைவிக்கும் தொழிலும் முயற்சியும், ஜனநெருக்

கம், சுகாதாரமற்ற வீடு, நல்ல காற்று வசதிக்குறைவு, நாட்டின் மோசமான சுகாதாரநிலை, வறுமை, மதுபானம், சந்ததி, தொற்றுதல் என்பவைகளே.

க்ஷயரோக ஸம்ப்ராப்தி.

இது வாதத்தின் மிகுதியால் தோன்றுகின்றது. அநேகமாக வரட்டு இருமலாக உண்டாகி பின்பு கபமோ, பித்தமோ இதற்கு பக்கபலமாய்ச் சேருகின்றது. சில சமயங்களில் இருமி இரத்தம் துப்ப நேருவதுமுண்டு. மார்பு, முதுகுப் பிரதேசங்களில் ஏதாவது அடிபடுவதால் வெளிக்கு ஒருவித காயமும் காணப்படாவிட்டாலும், உள்ளே விரணமேற்பட்டு அதனால் சுவாசாசயங்களில் ரணம் உண்டாகின்றது. நாளடைவில் இவ்விரணம் விருத்தியடைகின்றது. அப்போது மார்பில் வலியும், சுவாசம் விடமுடியாதபடி நோவும், ஒற்றை ஒற்றையான சிறு இருமலும் மெதுவாகத் தோன்றும். காலக்கிரமத்தில் இருமல் முற்றி இரத்தம் துப்புதலும், இரத்தம் வாந்தியாவதும் நேரிடும். பயங்கரமான களைப்பும் உண்டாகும். மனிதன் தினம், தினம் மெலிந்து வருவான். மேலும் முக்கியமாகக் கபமும், சாதாரணமாய் மற்றத் தோஷங்களும் பிரகோபித்து இரஸ தாது ஓடுவதற்கான ஸ்ரோதோ மார்க்கங்கள் தடுக்கப்படுவதாலும், அதிகமாகச் சிற்றின் பத்திலீடுபட்டு சுக்லதாது துர்விநியோகப்படுவதாலும், ஏனைய தாதுக்களும் கிரமமாக க்ஷீணிப்பதனாலும் இவ் ரோகம் தேகத்தில் பரவித் துன்பத்தை விளைவிக்கின்றது. (ரோகம் தேகத்தை ஆச்ரயித்துப் பரவுந்தன்மை ஸம்ப்ராப்தி யெனப்படும்.)

விளம்பினேர் க்ஷயரோகம் வருதல் கேளு
விசையான மூலத்தில் சூடு கொண்டு
தளம்பியே கபாலத்தில் முட்டி ஜாடி
தாது வெல்லாம் கல கலத்து ரத்தம் வற்றி
உளம்பியே நீரெரிந்து சுரமுந் தோன்றி
உளைச்சலொடு பீனிசம் நாக்கு ருசியற்று
கிளம்பியே யெட்டு வகை சயங்களாகி
கோளாறு கொண்டு விடும் இளைப்புத்தானே.

க்ஷயரோக பூர்வரூபம்.

சுவாசக்கோளாறு, உடலில் வேதனை, வாயில்கோழை ஊறுதல், தொண்டை வரளல், வாந்தி, பசியின்மை, மயக்கம், பீனிசம், இருமல், அதிக நித்திரை, கண்கள் வெளிறல், பிரதிச்யாயம், அதிக தும்மல், வாயில் ஒருவித இனிப்பு உண்டாதல், தேகம் இளைத்துப்போதல், மார்பு அதிரல், இயற்கைக்கு விரோதமான இரத்தாசயத் துடிப்பு, இரு கைகளும் இளைத்தல், பாதங்களில் வீக்கம், நகங்களும் மயிர்களும் அதிகமாய் வளர்ந்துபோதல், வேண்டிய அளவு உணவுகளை யுட்கொண்ட போதிலும் தேக வலிமை குறைவடைதல் இவைகள் சம்பவிக்கும்.

இறைச்சி உண்பதில் அதிக விருப்பத்தையும், மது பானத்தில் மிகுந்த ஆசையையும், புணர்ச்சியில் பேராவலையும் அடைதல், அடிக்கடி தன் கைகளை உற்றுப்பார்த்தல், புயங்களின் அளவுகளை அறிய வேண்டுமென்கின்ற ஆவல், சரீரம் நன்ருய் இருக்கையிலேயே அதில் ஏதோ அருவருப்பான விகாரங்கள் உண்டாயிருப்பதாகக் காணுதல், அதிக இரக்கமுள்ளவனுயிருத்தல், தலையில் முக்காடிட்டுக் கொள்ளுதல், இன்பமான பதார்த்தங்களை இன்பமில்லாததுபோல் நோக்கல், அன்னபானுதிகளில் மயிர், துரும்பு, ஈ, எறும்பு இவைகள் இருப்பதுபோல் தோற்றுதல் தன் தேகத்தைத் தானே பார்த்துத் திடுக்கெனப் பயப்படுதல், வாந்தியிலும், கோழையிலும் அசங்கித மில்லாதிருத்தல்— இவைகளையும் பெறுவான். இன்னும் ஸ்வப்னத்தில் காகம், கிளி, ஸல்லகி என்கின்ற பக்ஷி, மயில், கழுகு இப் பறவைகளையும், குரங்குகள், நரிகள், நாய்கள், சர்ப்பங்கள், ஓணன்கள், வண்டுகள் இவை தன்னைத் தீண்டுவதாகவும், உபத்திரவப்படுத்துவதாகவும், அல்லது சுமந்துகொண்டு போவதாகவும் தோற்றும். வற்றிப்போன நதிகளையும், உலர்ந்தும், காற்று-புகை காட்டுத்தீ இவைகளால் அழிக்கப்பட்டும் கிடக்கும் விருக்ஷங்களையும், மயிர்க்குவியல்களின் மீதும், எலும்புக் குவியல்களின்மீதும், உமிப் போர்களின்மீதும், சாம்பல் கும்பலின்மேலும் ஏறிப்போவதாக

வும் பர்வதங்களைப்போன்று தேஜோராசிகள் கீழே விழுவதாகவும் அவன் காணுவான். (பூர்வரூபம் என்றால் நோய் வருவதற்கு முன்பு தோன்றும் குறிகள்.)

க்ஷயரோகத்தின் ரூபம்.

தோள்கள், விலாப்பக்கங்கள், இவற்றில் வேக்காட்டுடன் கூடிய வேதனை, கைகளிலும் பாதங்களிலும் எரித்தல், தேகம் எங்கும் ஆச்ரயித்த ஜ்வரதாபம், இருமல், சரீர இளைப்பு, இரத்தம் கக்கல், துர்ப்பலம், அஜீர்ணம், தீவிர நாடி, கஷ்டசுவாசம், மேல்மார்பு, முதுகு, இவற்றில் வேதனை, குரலடைப்பு இவைகள் க்ஷயரோக ஸாமான்ய லக்ஷணங்கள்.

இருமியே சீழும் வீழ்ந்து இடைவிடாச் சுரமுங்காயும்
பருவமாய் நெஞ்சில் பற்றி பதறியே யிரத்தம் வீழும்

(தொடரும்)

சுகாதாரம்*

(S. பஞ்சநத சர்மா)

சுகாதாரமென்றால் ஆரோக்யத்தை நிலை நிறுத்தும் வழி, அவ்வித வழியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்றக் கடமைப் பட்டுள்ளோம். ஆரோக்கியமென்பது பொதுவாக எல்லோரும் அறிந்த விஷயம். ஆதலால் ஆரோக்யத்தைக்காக்கும் வழிகளைச் சிறிது ஆராய்வோம். உடலுறுப்புகள் மிகவும் உறுதியாகவும் ஒழுங்காகவும் இருந்தால்தான், அவயவங்களைச் சார்ந்த மற்ற சிறு பாகங்களும் அவயவங்கள் சமூகமான உடலும் அதனதன் வேலைகளை வேண்டியவளவு நன்றாக நிறைவேற்ற வல்லவைகளாகயிருக்கும். ஆதலால் நாம் உடலுழைப்புகளாலும், ஆகார நியமங்களாலும், ஆசார முறைகளாலும், அவ்வுருப்புகளை உறப்படுத்தி நம் ஆரோக்யத்தை அதிகமாக்கி உடலுக்கு அபாயம் ஏதும் ஏற்படாவண்ணம் அதைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியம். யௌவனப்பருவத்தில் நம் தேக நிலையைப் பலப்படுத்தி ஆரோக்யத்தை யதிகரிக்கச் செய்து வருவ

---

* மைலாபூர் ஸ்ரீவெங்கடரமண ஆயுர்வேத வைத்யசாலை ஆண்டு விழாவில் நடந்த உபந்யாஸம்.

துடன் முதிர்ந்த வயது வந்த பிறகும் அங்கலைமக்கு யாதொரு சிதைவும் ஏற்படாமல் கவனித்து வந்தோமாயின், நமக்கும் நம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் ஊழியம் செய்ய வலிமையுள்ளவர்களா வோம். ஆகையினால் ஆரோக்யமே அநேக நன்மைகளுக்கும் மனிதன் உத்ஸாகத்திற்கும் காரணமென விளங்குகிறது. பொதுவாக ஆரோக்யத்தின் அடிப்படைத் தத்துவத்தை மிக்க சுருக்கமாக ஆசாரம், ஆகார நியமங்கள் என இருவகையாக முன்பு பிரித்துள்ளோம். ஆசாரமென்பது, முதலில் உடல் சுத்தியைச்செய்து அதன்மூலம் மனச்சுத்தியைச்செய்யும் செய்கைகள். அவைகளாவன:- காலையிலெழுந்திருந்தவுடன் மலஜலம் கழித்தல், பல் துலக்குதல், குளிர்ந்த ஜலத்தில் குளித்தல், எண்ணெ தேய்த்துக் குளித்தல், உடற்பயிற்சி, தூக்கம் முதலிய நாம்தினமும் செய்யக்கூடிய அப்யாசங்கள். இவைகளாலுண்டாகும் மனச்சுத்தி இருந்தால்தான் உத்ஸாக சக்தியும் ஏற்படும். அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தால் நம் உடலுக்கு சுகமும் மனதிற்கு சாந்தியும் கிட்டுகின்றன. பிறகு இயற்கையாகவே வரும் மலஜலத்தை சோம்பலினாலோ அல்லது வேறு காரணங்களாலோ அடக்கினோமாகில்

वेगान्न धारयेत् वातविण्मूत्रक्षवतृट् क्षुधाम् ।

போன்ற பல வாக்கியங்களால் சொல்லப்பட்டபடி ஜலதோஷம், தலைவலி முதலான நோய்களுக்கு ஆளாக நேரிடும். இதுபோல் இயற்கையான பசி, தாகம் முதலியவைகளையும் அடக்காமல் இருக்கவேண்டியது முக்யம். பிறகு நாம் கவனிக்க வேண்டியது பல் துலக்குதல். நாம் பல் துலக்க உபயோகிக்கும் வஸ்து, கசப்பு, உவர்ப்பு, உரைப்பு, ரஸமுள்ளதாக இருந்தால் வாயிலுள்ள வழவழப்பு போக்கடிக்கப்பட்டு, உமிழ்நீர் ஊற்றமும் நன்றாக உண்டாகி அஜீர்ணம், வயிற்றுவலிபோன்ற வியாதிகளுக்கும் இடம் இருப்பதில்லை. அதிகாலையிலேயே மற்ற கார்யங்களை முடித்துக்கொண்டு குளிப்பது மேல். புத்திக்கு இடமான மூளைக்கநவி குளிர்ந்திருந்தால் தான் புத்தி பரிசுத்தமாகி, மனதிற்கும் உடலுக்கும் சுறுசுறுப்பு உண்டாகும். குளிக்கும் சமயம் குளிர்ந்த ஜலத்தால் தலையையும், சூடான ஜலத்தால் உடலையும் கழுவவேண்டும். எண்ணெய் தேய்த்து குளித்தல் என்ற பழக்கத்தால் உடலில் பளபளப்பும் மென்மையும், கண்களின் பார்வை சக்தி அதிகமாகவும் ஏற்படுகின்றன.

अभ्यंगमाचरेन्नित्यं स जराश्रमवातहा ।
दृष्टिप्रसादपुष्ट्यायुः स्वप्नसुत्वक्त्व दार्ढ्यकृत् ॥

என்ற வாக்யமும் இவ்விஷயத்தையே உட்கருத்தாகக் கொண்டுள்ளது. தற்காலத்தில் (Paralisis) போன்ற வாத வியாதிகளைப் போக்கடிக்கக் கையாளும் கிழி, பிழிச்சல், பிடித்து விடுதல் முதலிய சிகித்ஸைகளும் எண்ணை குளித்தலையே அடிப்படையாகக் கொண்டவை

கள். மேலும் அநேக மனிதர்களைத் தன் விருந்தாக்கிக் கொள்ளும் (Blood Pressure) என்ற நோயை வரவொட்டாமல் தடுக்கும் முயற்சியாகவும் எண்ணெ குளித்தலைச் சொல்லலாம். நாம் தினசரி செய்யக் கூடிய தேகப்பயிற்சியால் உடனுக்குடனேயே நல்ல ஆரோக்யத்தை அடைவதைப் பார்த்திருக்கலாம். சுத்தமான காற்றுள்ள இடங்களிலும், அளவாகவும் செய்யும் தேகப்பயிற்சியே பலன் தருவதாக ஆகும். அவ்விதமில்லாவிடில் ஒரு பெரிய யானையை நேரிடையாகத் தன்வசம் செய்ய முயற்சிக்கும் சிங்கத்திற் கொப்பாகும். "विभक्त घनगात्रत्वं व्यायामादुपजायते" என்ற விளக்கப்படி நம் உடலமைப்பு நன்றாகவும், பலமுள்ளதாயும், தாகம், பசி முதலியவைகளின் சகிப்புத்தன்மையுடனும் இத்தேகப்பயிற்சியால் இருக்கும் தூக்கத்தை இரண்டு நாட்கள் பகலிலும் இரவிலும் கையாளாமல் இருந்தால்தான் அதன் அருமை நன்றாகப் புலப்படுகிறது. முறைப்படி இரவில் தூங்குவதுதான் ஆரோக்கியத்திற்குகந்தது என்றும் பகலில் செய்யும் தூக்கம் ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல எனவும் மிக்க விரிவாக நம் நூல்களில் விளக்கப்பட்டிருக்கிறது. நல்ல காற்றோட்டமும், பரிசுத்தமுமுள்ள இடங்களில் தூங்குவதுதான் நன்மை பயக்கும். நம் உடல் கெடாமல் ஆரோக்கியத்துடனிருக்க ஆசாரங்களைத்தவிர இரண்டாவது ஊன்றுகோல் ஆகாரம். நம் உடலில் தேகப்பயிற்சிபோன்ற அநேக கார்யங்களால் தினமும் குறைபடும் சக்தியை சமமாகவோ அல்லது அதிகமாகவோ செய்தல், கனம், உயரம் இவ்விரண்டையும் அதிகரித்தல், உடலின் உஷ்ண நிலையை இடைவிடாமல் பாதுகாத்தல், உஷ்ண சக்தியைக்கொடுத்து அதன் மூலம் தசைகளைப் பலப்படுத்தல் என்ற நான்கு கார்யங்கள் நாம் உட்கொள்ளும் ஆகாரத்திற்குண்டு. நாம் உட்கொள்ளும் ஆகாரம் அளவாகவும், முறைப்படியும் இருக்கவேண்டும். சமைத்து புசித்தால்தான் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய ஆகாரத்திலுள்ள, கொழுப்பு, சர்க்கரை முதலான சத்துக்கள் பிரிபட்டு, உடலின் ஒவ்வொரு பாகத்திற்கும் சேரமுடியும். ஆதிகாலம் தொட்டு நம் தேசத்தில் சமைத்து உண்ணும் பழக்கம் கையாண்டு வருவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். षड्रसं मधुरप्रायं नातिद्रुतविलम्बितम् । என்ற வாக்யத்தின் கருத்தை யனுசரித்து கூடுமானவரை வேகமாகாமலும் தாமஸமாகாமலும் புசிப்பதே ஆரோக்யத்திற்கு உதவியாகும். மேலும் எதிரிகளால் ஆகாரங்களில் விஷம் கலந்திருக்கும் சமயம் அவைகளின் அடையாளங்களும் அவைகளிலிருந்து தப்பும் வழிகளும் நம் நூல்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. கையால் எடுத்து உண்பதின் கருத்தும், அவ்வித ஆகாரங்களைப் புசித்து ஆரோக்யத்தை சீர் கெடாமல் செய்வற்கேயாம். தோழர்களுடனும், உறவினர்களுடனும் சூடாகவும் புதியதாகவுமுள்ள ஆகாரங்களைப் புசிப்பதே ஆரோக்யத்திற்கு மிகவும் நன்மை தரக்கூடியதாகும். ஆகாரத்தின் நடு நடு

வில் அதிகத் தண்ணீர் அருந்துவதாலும், மென்று உண்ணுததாலும் வாயிலுள்ள உமிழ்நீர் உணவுடன் சரியாகக்கலக்காமல், ஜீரணிக்கும் அக்னியின் சக்தியும் குறைபட்டு வயிற்றுவலிபோன்ற கஷ்டங்களுக் குள்ளாவதைப் பார்த்து வரலாம். நம்முன்னேரும்

अन्नस्य पक्ता सर्वेषां पक्तृणां अधिपो मतः तन्मूलास्ते हि ।

என ஜீரணிக்கும் கருவியான அக்னியை மேன்மைப்படுத்தியிருக் கின்றனர். புசிக்தும் சமயத்திலோ அல்லது தாகம் உண்டாகும் காலங்களிலோ மிகவும் உஷ்ணமாகவும் குளிர்ச்சியாகவும் தண்ணீர் அருந்துவது பற்களின் சக்திக்குறைவுக்கும் அதன் மூலம் பல கஷ்டங்களுக்கும் காரணமாகும். ப்ரயாணம் செய்தவுடனும், பசி, கோபம், சோகம் இவைகள் அதிகமிருக்கும் சமயங்களிலும் தண்ணீர் சாப்பிடாமல் இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். சிறிது நேரம் களைப்பாறி பிறகு அருந்தலாம்.

மேலும் நம் நூல்களில் ஆரோக்யத்தைக் கெடுக்கும் காரணங்க ளாக கெட்ட காற்று, ஜலம், தேசம், காலம் இவைகள் விளக்கப்பட் டிருக்கின்றன. இவைகளுக்குள் காற்று, ஜலம் இரண்டும் சரீரத்தை ஆரோக்யத்துடன் நிலை நிறுத்தும் சுமைதாங்கிகள். மேற்படி காற் றில் உள்ள கரியமில வாயுவை தாவரவர்க்கங்கள் இழுத்துக்கொண்டு அதிகமான ப்ராணவாயுவை பகல் காலங்களில் கொடுப்பதால் அக் காற்று நல்லதெனக் கூறப்படுகிறது. இரவில் இதற்கு நேர்மாருன கார்யம் செய்வதால் नक्तं सेवेत न द्रुमं அதாவது இரவில் மரங்க ளின் அடியில் உறங்கக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கிறது.

असात्म्यगन्धबाष्पसिकतापांसु धूमोपहं वातं अनारोग्यकरं विद्यात् ।

என்ற ஆயுர்வேத நூல்களின் விளக்கப்படி கெட்ட வாஸனை, புழுதி, வீடு பண்டசசாலைகளிலிருந்து வெளியாகும் புகைகள் காற்று கெடுவதற்கு காரணமாகின்றன. உதாரணமாக பெரி யம்மை, க்ஷயம் என்ற வியாதிகளின் கிருமிகள் எவ்விதம் காற்றில் கலந்து நோயைப் பரப்புகின்றனவோ அதைப்பார்த்தால் நன்கு தெரியவரும். இவ்வியாதிகளையுடைய நோயாளிகளுடன், சம்பா ஷணை செய்தல், தொடுதல், கூட உண்ணுதல் இவைகள் செய்யாமல் இருத்தலே நலம். மேலும் அஜாக்ரதைகளால் வரவழைத்துக் கொண்ட "வைசூரி, காலரா" என்ற வியாதிகளைப் போக்கடிக்க (Vaccination Inaculation) களை செய்து கொள்வதைவிட தங்கள் ஆரோக்யத்தைப் பலப்படுத்திக்கொண்டு வெளியிலிருந்து வரும் நோய்களைத்தடுத்து விடலாம் என்பது நம் நூல்களின் கருத்து. இக்காலங்களில் யுத்த அரங்கத்தில் உபயோகிக்கப்படும் (Poisoned gass) ளுல் வாயு கெடுபடுவதையும், அதைப்போக்கும் உபாயங்களை யும் धूमेऽनिले वा विषसंप्रयुक्ते எனத் தொடங்கி விளக்கியிருப்பதைப்

பார்த்தால் ஆயுர்வேதத்தின் மேன்மையைப் புகழாமலிருக்கமுடியா. எந்தவீடு, நல்ல காற்றோட்டமுள்ளதாயும், எலி கொசு, மூட்டைகளற்றும், சுற்றிலும் மரங்களடர்ந்ததாயும் பரிசுத்தமாயுமிருக்கிறதோ; அதைத்தான் ஆரோக்யத்திற்குகந்ததாய் மதிக்க முடியும்.

நாம் உட்கொள்ளும் ஆகாரங்களை பாகம் செய்வதற்கும், உடலிலுள்ள அவயவங்களால் உறுஞ்சும்படி செய்வதற்கும், உடலின் உள் பாகத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை வேர்வை, மூத்ரங்களாக வெளித்தள்ளுவதற்கும் உதவி செய்வது ஜலம் ஒன்றே. சுவை, நிறம், வாசனையாகிய குறைகள் நீங்கிய தண்ணீரே உயர்ந்த சுத்தமான குடி நீராகும். தற்காலத்தில் (Distiled Water) எனச் சொல்லப்படும் ஜலத்திற்கு சமமாக दिव्याम्बु ஆகாயத்திலிருந்து மேகங்கள் வழியாக கிடைக்கும் தண்ணீரை ஒப்பிடப்பட்டிருக்கிறது. ப்ராணிகளின் ஆரோக்யத்திற்கு நல்லதான இத்தண்ணீர் ஒவ்வொரு பூமியின் சேர்க்கையினால் தனித்தனி உருவம், வாசனை, ருசிகளை உடையதாகிறது. இந்த மாறுபாடுகளிலுள்ள க்ஷாரமாகவும் உப்பாகவுமுள்ள தண்ணீரையே இக்காலத்தில் (Hard Water) எனச் சொல்லுகின்றனர். நல்ல ஓட்டமுள்ள நதிஜலம், ஆழமான கிணறு, ஊற்றுஜலம், இவைகளே சுத்தமானவை. ஆகாயத்திலிருந்து வரும் ஜலத்திலும் முதல் முதல் வருவதை உபயோகிப்பது சுகத்திற்கு தகுந்ததல்ல எனச்சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலங்களில் அநேக ஜனங்கள், மூழுகி தங்கள் உடல் மனோவியாதிகளை போக்கடித்துக்கொள்ள உதவுவதும் கெடாததும் முன் காலங்களில் புனித தீர்த்தங்களென பெரும் புகழ் பெற்றதுமான, சுனை, நதி முதலியவைகளின் ஜலத்தைப் பரிசோதித்து, அதிலுள்ள ரேடியம் என்ற சக்தியே வாத நோய்களைப் போக்கடிப்பதாக மேல் நாட்டு விஞ்ஞானியும். டாக்டருமான ஸ்டைசன் அறிவித்துள்ளார். (Cholara, Typhoid, warms) முதலிய நோய்கள் பரவுவதற்கும் அசுத்தநீரே காரணம். அக்காலங்களில் व्यापन्नस्य अग्निक्कथनं என்றபடி கொதிக்கவைத்து ஜலம் சாப்பிடுவதே நலம். இந்நாட்களில் கெடுதலடைந்த ஜலத்தை சுத்தம் செய்வதுபோல் முன் காலங்களிலும் செய்தனர் என்பதற்கு

तेषां अपहृत्य दोषान् दुष्टंजलं शोधयितुं यतेत । धवाश्वकर्णासनपारिभद्राः ।

என்று தொடங்கும் வாக்யங்களே சான்றாகும்.

இவைகளைத்தவிர, அதிகமான கொசு, ஈ, எலி, பாம்பு முதலிய துஷ்டப்ராணிகளுடன் கூடிய தோட்டங்களையுடையதும், காய்ந்து வரண்ட பயிர்களையுடையதும், புகைபோன்று சூடான காற்றும்

உள்ள தேசத்தை கெடுதலடைந்த தேசமென்றும் பருவங்கள் தங்கள் தங்கள் காலங்களில் வராதது கெடுதலடைந்த காலமெனவும் நம் நூல்களில் விளக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒவ்வொருவரும் செய்யக்கூடிய அநாசாரங்களாலேயே, நம் ஆரோக்யத்திற்கு உதவக்கூடிய ஒவ்வொன்றும் கெட்டு அநாரோக்யத்தைச்செய்ய முற்படுகிறது. ஆதலால் நம் பாரத தேசத்தின் வைத்ய சாஸ்திரப் பொக்கிஷமான ஆயுர்வேதத்தை நாம் ஆதரித்து அதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை நன்ருக்த் தெரிந்துகொண்டு அவைகளைக் கையாண்டு நம் ஆரோக்யத்தை முதன் முதலில் உறப்படுத்தி பிறகு நம் தேசத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டு புரிவோமாகில் நம் பிறவி பலனுள்ளதாக ஆகும்.

ரக்த ஸம்ஹதி அல்லது தமனீஸம்ஹதி
BLOOD PRESSURE

[வைத்ய விசாரத S. V. ராதாகிருஷ்ன சாஸ்த்ரீ]

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிக ரக்த ஸம்ஹதியின் ஸம்ப்ராப்தி.

இது ஸ்வதந்திரமான வியாதி அல்லவெனினும் ரோகிகளில் பலருக்கு இவ்வுபத்திரவம் காணப்படுவதாலும், சிற்சில சமயம் பிரதானமான வியாதிக்கு சிகித்ஸை செய்யுமுன் இதற்கே பிரதானமான சிகித்ஸை செய்ய வேண்டி வருவதாலும், ரோகத்தின் ஒவ்வோர் லக்ஷணமும் தனிப்பட்ட ஸம்பிராப்தி விசேஷமுள்ளதாலும் இதை ஸ்வதந்திரவியாதி போல் மதித்து இதன் ஸம்பிராப்தியை கவனிப்போம். ரத்தஸம்ஹதி வியாதியாகத் தோன்றுவதற்குள் நான்கு வித நிலைகளை அடைகின்றது.

முதல் நிலை:— ரக்தத்தின் அளவு அதிகரித்தோ, வியான வாயுவினல் ரக்தம் வெளியனுப்பப்படும் விக்ஷேப சக்தி அதிகரித்தோ, ரத்தஸம்ஹதி அதிகரிக்கிறது. இந்நிலை அதிகமாக வெயில் நாட்களில் அதிகமாக ஏற்படுகின்றது. குளிர்காலத்தில் ஏற்படுவதில்லை. இந்த ரக்த

ஸம்ஹறதியை ரோகமாகக் கருதுமளவு உபத்ரவங்கள் இல்லாததால் மனிதன் ஸ்வஸ்தனுகவே காணப்படுகின்முன்.

இரண்டாம் நிலை :— ரக்தத்தின் அதிக விக்ஷேபத்தால் மூளையிலும் ரக்தம் அதிகமாகி, நாடி (Nerves) களின் காரியங்களுக்கு இடையூறு உண்டாக்குகின்றது. சரீரம் முழுவதும் ரக்தத்தை அனுப்பும் வியான வாயுவின் பிரகோபத்தால் அதிகம் ரக்தம் விக்ஷேபம் செய்யப்படுவதால் தமனிகளின் தசைகளின் விரிந்து சுருங்கும் நிலை நிலைமைக்கு மீறி அதிகமாகி விடுகின்றது. இந்நிலை ரக்தக்கொதிப்பு மூளைக்கொதிப்பு எனக் கருதப்படுகிறது.

மூன்ரும் நிலை :— தமனிகள் காலக்கிரமத்தில் விரிந்து சுருங்கும் சக்தியையே இழந்து கடினமாகின்றன. அதனுல் ரக்தஸஞ்சாரத்தின் காரியம் மிகவும் கஷ்டப்படுகின்றது. இந்த தமனிகளில் ஏற்படும் தடிப்பு, தமனிகளின் மூலஸ்தானமான யக்ருத்திலும் பிலீஹத்திலும், தமனிகளிலிருக்கும் மலத்தை வெளிப்போக்கும் விருக்கங்களிலுமிருக்கும் தமனிகளிலும் ஏற்பட்டு சரீரம் முழுவதும் ரக்தஸஞ்சாரகாரியம் வெகுவாகத் தடை பெறுகின்றது.

நான்காம் நிலை :— தடித்த தமனிகளின் வழியே ரக்தத்தை அனுப்ப அமுக்கம் அதிக தேவை யிருப்பதால் இக்காரியம் செய்யும் ஹிருதயம் சிரமமடைவதும் அதனுல் ஹிருதயத்தின் இடது கீழறை பெரிதாகிவிடுவதும், ஹிருதயத்தில் வலி, அறைகளின் நடுவிலிருக்கும் ஜவ்வு கதவுகள் சரிவரப்பொருந்தாமையும், கடினமான தமனிகளில் ரக்தம் ஸரிவரச் செலுத்தப்படாமல் திரும்பி எதிர்த்து ஹிருதயத்திற்குள் வருவதும் உபத்திரவங்களாக ஏற்படுகின்றது, ரக்தத்தின் மலம் தமனிகளில் ஸரிவர பிரிக்கப்பட்டு வெளியனுப்பப்படாமல் மலத்துடன் சேர்ந்தே ரக்தம் பிரவஹிப்பதால் ஏற்படும் ரக்த விகிருதியும் வாத விகிருதியுமாகச் சேர்ந்து வாதரக்தம், பக்ஷவதம், மூளைக்கொதிப்பு, ஆக்ஷேபகம் போன்ற துஷ்டவியாதிகள் ரூபமாகவோ, அல்லது ஹிருதயம் விரிந்தோ சரீரத்தை நாசம் செய்கிறது.

(தொடரும்)

வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் 43-வது வார்ஷிகோத்ஸவ ஸமயத்தில்

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரி அவர்கள் பேசினதின் சுருக்கம்.

ஸபையோர்களுக்கும் ஸபாபதி அவர்களுக்கும் வந்தனம். தார்மிகர்களுடைய தர்மத்தை ஸ்மரிப்பதால் ஸகல பாபங்களும் நசிக்கும். மங்களங்கள் வளரும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட இன்றையதினம் ஒரு விசேஷ புண்ய தினம். இந்த வேங்கடரமண ஆயுர்வேத வித்யாலயத்தில் ஆயுர்வேதம் கற்கும் விசேஷமான பாக்கியம் எனக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்தது. இன்று இந்தப் புனிதமான ஸந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளும் பாக்கியம் வாய்த்தது. இதில் பரமஸந்தோஷம் அடைகிறேன். இந்த பாக்கியத்தை அளித்துள்ள தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கு எனது கிருதக்ஞதையை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

புத்தியுள்ள மனிதர்கள் விரும்பத்தக்கவைகளுக்குள் முதன்மை பெற்றது ஆரோக்கியமேயாகும். ஏன்? உலகில் தர்மத்திற்காகவோ, பொருளுக்காகவோ, இன்பத்துக்காகவோ, மோக்ஷத்திற்காகவோ, எதற்காகவும் செய்யப்படும் காரியங்கள் அனைவற்றிற்கும் ஆரோக்கியமே அடிப்படை ஸாதனமாக இருப்பதே காரணமாகும். இந்த ஆரோக்கியத்தை அபஹரிப்பது நோய். நோயினால் மனிதருடைய, பிராணி வர்க்கத்தினுடைய ஸகலவிதமான ச்ரேயஸ்ஸுகளும் பாழாகின்றன. ஆயுளே அழிந்துவிடுகின்றது. ஆகவேதான் ஆரோக்கியத்தை அடையும் வழியைப் போதிக்கும் சாஸ்திரத்திற்கு மற்ற ஸகல சாஸ்த்ரங்களைப் பார்க்கிலும், அதிகமான மேன்மை. மேலும் ‘आयुर्वेदः पुण्यतमः’ ‘आयुर्वेदोऽमृतानां’ என்றெல்லாம் புகழப்

படுகின்றது. மேலும் ' नहि जीवितदानाद्धि दानमन्यत् विशिष्यते।' चिकित्सितात्पुण्यतमं न किञ्चिदनुशुश्रुमः। रोगपंकार्णवे मग्नं यः समुद्धरते नरम्। कस्तेन न कृतो धर्मः काञ्च पूजां न सोऽर्हति॥ इत्यादि। அதாவது— பிணிவாயிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொடுப்பதைக் காட்டிலும் விசேஷமான தானம் எதுவும் கிடையாது. நோய்களைப் போக்குவதை விட மேலான ஒரு புண்ணிய காரியம் கேழ்க்கப்பட்டதே இல்லை. வியாதியாகிய சேற்றுக்கடலில் மூழ்கித் திண்டாடும் மனிதனை யாதொருவன் ஆரோக்கியமாகிற கரையில் ஏற்றிவிடுகிறானோ, அவனால் எந்த தர்மம் தான் அநுஷ்டிக்கப் பட்டதாக ஆகாது? எந்த விதமான பூஜைக்குத்தான் அவன் அர்ஹனில்லை? இவ்விதம் உபகாரத்திற்கெல்லாம் பெரிய உபகாரமாக, தர்மத்திற்கெல்லாம் பெரிய தர்மமாக வைத்தியம் புகழப்படுவதின் காரணமென்ன? பிணியினால் படும் வேதனையை அகற்றிவிடுவதனால் மட்டுமல்ல; இவைகளுடன் கூட. வேறு ஒன்றுமுள்ளது. அதாவது பிணி பீடிதன் நற்கர்மங்களைச் செய்ய முடியாதவனாகிறான். அவனை நற்கருமங்களை அனுஷ்டிக்க லாயக்காகச் செய்கிறான் வைத்யன். இந்த பரம்பரா மூலமாக நோயற்ற மனிதன் புரியும் நற்கருமங்களுக்கும் வைத்தியன் காரணமாயிருக்கிறான் என்பதேயாகும். இப்படி வைத்தியனுக்கும், வைத்தியத்திற்கும் உலகம் போற்றும் நிகரற்ற மேன்மை ஏற்படின், நல்ல வைத்திய சிரேஷ்டர்களை ஏராளமாய் உத்பத்தி செய்யத் தகுந்த வித்யாசாலையையும், பிணிகளைப் போக்கச் சிறந்த சிகித்ஸா சாலையையும் சாசுவதமாய், தர்மத்திற்காக ஒரு பிரபு பிரதிஷ்டை செய்துள்ளாரென்றால் அந்த மகானுபாவருடைய மகத்துவத்தை யார்தான் எவ்விதம் தான் சொல்ல ஸாத்தியமாகும்.

வெய்யிலில் வாடுபவனுக்கு தாக சாந்திக்கு, கூலி பெற்றுக் கொண்டும் தண்ணீர் வார்த்தல் மிகுந்த புண்ணியமென்றால் தண்ணீருக்கே மூலஸ்தானமான கிணறுகள், குளங்கள், ஆறுகள், இவைகளையும், அதை வார்ப்பவன், பந்தல் எல்லாவற்றையும் ஏராளமாய் தர்மத்திற்காக தயார்

செய்து கொடுத்த மூலபுருஷனுக்கோ எவ்வளவு புண்ணீயம் ஓங்கும்! இவ்விதம், பணம் வாங்கிக்கொண்டு சிகித்ஸை மிக உயர்ந்த புனிதமான தொழில் என்றால், அந்த சிகித்ஸகனையும் சிகித்ஸையையும் தர்மத்திற்காகவே உத்பத்தி செய்யும்படியான தர்மஸ்தாபனத்தை பிரதிஷ்டை செய்துள்ளார் புருஷோத்தமன் தர்மப் பிரபு **ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி அய்யர்** அவர்கள்.

சரீர ரோகத்திலிருந்து விடுதலை ஏற்பட உதவி புரியும் ஆயுர்வேத கலாசாலை மட்டுமா! **सा विद्या या विमुक्तये** என்றபடி ஸம்ஸார ரோக ஸாகரத்திலிருந்து ஆன்மீக விடுதலையடைய ஸம்ஸ்கிருத சாஸ்திர கலாசாலையையும் கூடவே தர்மத்திற்காகத் தனித் தனியாகப் பிரதிஷ்டை செய்தார் எனில் இவ்வள்ளலின் புண்ணியத்தை ஆதிசேஷனால்கூட உரைக்க முடியாது. இவருடைய தர்ம வித்தியாசாலைகளின் இன்னமொரு முக்கிய விசேஷமென்னவெனில், மாணவர்கட்கு வித்யை மட்டும் தர்மத்திற்காக கற்பிப்பது மாத்திரமல்ல. பயிலும் மாணவர் எல்லோருக்கும் சாப்பாடு அல்லது சாப்பிடப் போதிய பண உதவியும் படிப்புக் காலம்பூராவும் கொடுக்கப்படுகின்றது.

ஸ்ரீமான் V. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் செய்துள்ள இரு தர்மவித்யாசாலைகளுடைய ஏற்பாடுகள் அவருடைய உதார தர்ம சித்தத்தை மட்டும் காட்டுவதாக இல்லை. ஆஸ்திக வைதிக தர்சனங்களில் சிரத்தை பக்தியை மட்டிலுமோ காட்டுவதாக இல்லை. இவை எல்லாவற்றுடன் கூட சாஸ்திரங்களுடைய ஸ்வரூபத்தையும், ஸூக்ஷ்மத்தையும், காலத்தின் சூழ் நிலையையும், உள்ளபடி அறிய வல்ல அன்னாரின் மேதையின் மகத்துவத்தையும் நன்கு விளக்குகின்றன.

பாருங்கள்! வேதாந்தாதி சாஸ்திரம் அதை மட்டும் பயின்ற பண்டிதர்களுக்கு பொருள் ஸம்பாதித்துக் கொடுக்கக் கூடியதல்ல. ஆகவே அவைகளை ஆத்மார்த்தம் பயின்றுவிட்டு, பொருள் ஸம்பாதனத்திற்கு அதிகமாய்

உதவிபுரியும் ஆயுர்வேத சாஸ்திரத்தையும் ஒரே மூலஸ்தானத்தில் படித்துப் பயன்படும்படியும் செய்துள்ளார். வாஸ்தவத்தில் இஃது சிறிய பிரயோஜனம் கேவலம் பணக் கண்கொண்டு பார்த்தால். பெரிய பிரயோஜனம் ஒன்றுள்ளது. அதென்னவெனில், ஆயுர்வேதத்தின் ஸூக்ஷ்மமான தத்வ விசேஷங்களை முதலில் நன்கு அறிய யோக்கியதையையும், ஆயுர்வேத உபதேசப்படி சிகித்ஸை புரியும் ஸாமர்த்தியமும், அனந்தமான ஆயுர்வேத சாஸ்திரத்தை பரீக்ஷைகளினாலும் அபிவிருத்தி செய்யவும் ஆற்றலும் ஒருவனுக்குக் கிடைக்க வேண்டுமாகில் அவனுக்கு ஆதியில் ஸம்ஸ்கிருத ஸாஹித்தியத்தில் மட்டுமல்ல; பூர்வோத்தர மீமாம்ஸாதி சாஸ்திரங்களிலும் திருடமான பயிற்சி பெறவேண்டிய தவசியம். இவ்விதமே தர்சனங்களில் நிஷ்கிருஷ்ட ஞானம் பெறவேண்டுமாகிலும் ஆயுர்வேதம் வெகு உதவி செய்கின்றது. இப்படி பரஸ்பரம் உபகாரமாயிருக்கும் சாஸ்திரங்களை ஒரே இடத்தில் பயின்று, தர்ம-அர்த்த-காம-மோக்ஷங்களைப் பெற பரம ஸாதனமாக வித்தியாசாலைகளை அமைத்துள்ளார் தர்மப்பிரபு ஸ்ரீ V. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

இப்பேர்ப்பட்ட பரம தார்மிகருடைய ஸ்மரணமும் ஸகல பாபராசிகளையும் போக்கவல்லது. சில தார்மிகர்கள் தங்கள் புதல்வரின் துராசாரத்தினால் அல்லது அசட்டுத்தனத்தினால் தங்கள் ஸொத்து அழியாமலிருக்க வேண்டும்; தன் வம்சத்தினர் கஷ்டமின்றி அதை அனுபவித்துக் கொண்டிருக்கட்டும் என்ற ஒரு நல்லெண்ணத்துடன் ஸொத்தை ஒரு தர்மத்திற்கு எழுதிவைத்து அதன் நிர்வாஹ உரிமையைத் தன் வம்சத்தினருக்கு மட்டுமே வைத்து விட்டுச் செல்வதுண்டு. அங்கு அவ்வம்சத்தினர் பசியாது புசிக்கும் தர்மம் தான் நிற்கும். ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடைய தர்மஸ்தாபனம் பரிபாலனம் செய்யப்படுவது போல் உலகில் வேறெங்கும் காண முடியாது. தந்தையின் தருமங்களை மேன்மேலும் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி செய்வதில் அல்லும் பகலும் ஈடுபட்டுக்கொண்டு அவருடைய அருமைப் புதல்வர்

ஸ்ரீமான் K. பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் தர்ம ரக்ஷாமணியாக விளங்குகின்றார். தான தருமங்கள் கொடுத்தவரைப் பார்க்கிலும், அவைகளை உண்மையாய் நிர்வாஹம் செய்து வருபவர்களுக்கே அதிகமான புண்ணியத்தைக் கூறுகின்றன தர்மசாஸ்திரங்கள்.

त्यागेनैके अमृतत्वमानशुः என்று உபநிஷத்தின் உபதேசம். பரம உத்தமத் தியாகத்தினால் புண்யபுருஷர் ஸ்ரீ V. கிருஷ்ண ஸ்வாமி அய்யர் அமிருதத்வத்தை அடைந்தவர். பாரத தேசத்தில் ஸத்வித்யைகளைப் பிரசாரம் செய்யவோ, அவர் செய்துள்ள தியாகத்திற்கு அடையாளமாக வருங்கால ஜனங்களுக்குத் தெரிவிக்கவோ, அல்லது நாம் இப்பொழுது அவருடைய தியாகத்தைப் பாராட்டுவதற்கோ எது ஸரியான முறையாகும்? ஸ்ரீ V. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களுடைய ஒரு முழுப் பிரதிமையைப் பூர்ணமாகக் கெட்டித் தங்கத்தினால் கட்டி, ரத்னங்களினால் அலங்காரம் செய்து ஸபையில் பூஜையில் வைத்தாலும் அதுமட்டும் போதியதாகும் என்று நான் எண்ணவில்லை. ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடைய தர்மசித்தத்திற்கேற்றவாறு நமது கடமையை— கிருதக்ஞதையைச் செய்யவேண்டுமாகில் அதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அதாவது அவருடைய தர்மங்களைப் பரிபாலனம் செய்வதுடன் மட்டும் நிற்காமல், மேன்மேலும் அபிவிருத்தி செய்து கொண்டே போய் கொண்டிருத்தல் தான். ஸ்ரீமான் V, கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஸத்வித்யா கல்பதருவின் விதையை விதைத்து முளைக்கவைத்துள்ளார். ஸத்புத்ரர் ஸ்ரீ K. பாலஸுப்ரமண்ய அய்யர் அதைச் செழிப்பாக வளர்த்துக்கொண்டிருக்கிறார். இந்த தர்ம வித்யா கல்பதரு தழைத்து, செழித்து, பழங்கள் நிறைந்து, நமது புனித நாட்டில் வித்யார்த்திகளுடைய ஸகல விருப்பங்களையும் பூர்த்தி செய்துகொண்டு சாசுவதமாய் விளங்கவேண்டும். இதற்கு தர்மரக்ஷாமணி ஐயர் அவர்கட்கு பூர்ண ஸஹாயம் புரிவது நம் ஒவ்வொருடையவும் முதற் கடமையாகும்.

(தொடரும்)

ஆயுர்வேதமும் ரஸாயனமும்.

[ஆயுர்வேத கேஸரி. கவி. டாக்டர். எஸ். ஏ. சஞ்சீவி, M. R C. M. M. D. (Ay.) A. M. I. R. E., A. M. Tech. I. (London.)]
(தேசீய வைத்திய ஆராய்ச்சியாளர்.)

பண்டைகால சாஸ்திர ஆராய்ச்சி செய்ததில் பிரம்மதேவனல் தக்ஷபிரஜாபதிக்கு வைத்திய கலை உபதேசிக்கப்பட்டு அவர் உமாவின் கேள்விகளுக்கு பதில் கூறுகையில் நந்தி, அசுவனி முதலியவர் கற்று இந்திரனுக்குபதேசித்து, இந்திரன், பரத்வாஜர், தந்வந்திரி என்பவர்களுக்கு உபதேசித்து அவர்கள் சரகர், ஸுஸ்ருதர்க்குபதேசித்து பரதகண்டத்தில் வைத்தியகலை பிறந்ததாகவும் இதை ஆயுள் வேதம் என்று காரணப்பெயரிட்டு அழைத்ததாகவும் கூறப்படுகிறது. இதைக் கற்றுணர்ந்த அகஸ்தியர் தமிழில் சித்த வைத்தியத்தை மொழிபெயர்த்ததுடன் பதினெண் சித்தர்களுடன் லோக பாஷாண ஆராய்ச்சிகள் செய்து சித்தவைத்திய கலையை சிருஷ்டித்தனர். இதனுல் உணருவது யாதெனில், கலையாகிய ஆயுர்வேதத்தில் ரஸாயன கிளையாக தோன்றுவது சித்தம். மேனுட்டவர் கருதுவது போல் இந்திய வைத்தியத்தில் ரஸாயனமில்லை என்று கூறமுடியாது, ஆனுல் ரஸாயன நுணுக்கங்களை நாம் ஆராயவேண்டும். உதாரணமாக தாமரை புஷ்பத்தில் என்னென்ன சத்துகள் : லோகம், உப்பு இருக்கின்றன என்று ஆராயவேண்டும் இன்னின்ன தாதுப்பொருள்கள் இத்தகைய ரோகங்களை கண்டிக்கும் என்பது மட்டும் உணர்ந்தால் போதாது. ஒவ்வொரு மருந்தும் மனித சரீரத்தில் பாய்ந்தும் எந்த உறுப்பில் எப்படி என்ன ரஸாயன கிரியை பெறுகிறது ; உபரஸாயன பிரிவுகள், மறு ரஸாயன பிரிவுகள் என்ன, அது எப்படி மாறுபட்டு ரோகம் திருகிறது என்பதை வைத்தியர்கள் ஆராய்ச்சி செய்வது தான் ரஸாயன கலை நுணுக்கம் உணர்வதாகும். மற்றும் செடி, கொடி, மரம், பூண்டு இதுகள் ஒரே குணமுடையதாக கருதப்பட்டாலும் அதன் பூமி வளம், நீர்ப்பாசன தன்மை, உரம் இதுகளைப் பொருத்தும் அதன் குணம் வேறுபடலாம்.

எம்மாராய்ச்சியில் சீமையில் (மேனுட்டில்) விளையும் அசுவகந்திக்கும் நம் நாட்டு அமுக்கிராக்கிழங்கிற்கும் பொது குணம் ஒன்ருனுலும் ரஸாயன தன்மையில் சில மாறுபாடுகள் கண்டுபிடித்தேன். மற்றும் மலையடிகளில் விளையும் பொருள், நாட்டுகிராமங்களில் விளையும் பொருள், கடல்கரை ஊர்களில் விளையும் பொருள் இதுகளில் ஒரே மூலிகையில் பல நுணுக்க தாது, ஜீவ சத்துகள் மாறுபடுகின்றன என்பது காணக் கிடைக்கின்றது. மேலும் ஒவ்வொரு மருந்துப் பொருளையும் நாம் ஆராயவேண்டும். அதன் ரஸாயன சக்தி (Chemistry) இன்னதென்று ஆராயவேண்டும். இதனுல் கூட்டுமருந்துகளில் உள்ள உள்கிரியை, ஜீவகிரியை இதுகளை உணரலாம். மேலும் ஒரு சரக்கிற்கு பதில் அடுத்ததை சேர்க்கலாம். மேனுடு இன்று இந்த

முறையால் தான் வைத்தியகலையில் மேன்பட்டது என்னலாம், மற்றும் மனித சரீரத்தில் அமைந்துள்ள தாது-லவண-ஜீவதத்துவப் பொருள்களை யுணர்ந்து அதற்கு சமப்படுத்த சம சக்திப் பொருள்கள் எங்கெந்த தாவர-ஜீவ-தாது பொருள்களில் கிடைக்கின்றன என்றும் ஆராயவேண்டும், அதுவே மனித வியாதியை திர்க்க சரியான பாதையாகும். ரஸாயன நுணுக்கங்களைப்பற்றி தனித்தனி விபரமாக சந்திரிகையில் அடிக்கடி எழுதப்படும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலம், திருச்சி.

16—3—49 உ ஷி மண்டலத்தின் ஸ்தாயிஸமியின் 3-வது அவஸரக்கூட்டம் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. மண்டலத்தலைவர் ஸ்ரீ. V. B. நடராஜசாஸ்த்ரிகளவர்கள் தலைமை வகித்தார்கள், தஞ்சை, சேலம் ஜில்லா கிளை சங்கங்களிலிருந்தும் மெம்பர்கள் வந்திருந்தார்கள். மூவர் தங்கள் அபிப்ராயத்தை கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்கள். அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்.

(1) தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தை அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்துடன் இணைக்கப்பட்ட சங்கமாக இருக்கப்படவேண்டுமென்று ஏகமனதாய் நிறைவேறியது.

(2) பரேடா மஹாஸம்மேளநத்திற்குப் போக கீழ் குறிப்பிடப்பட்ட 10 அங்கத்தினர்கள் தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் ப்ரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரிகள், தலைவர்.
,, V. சுப்ரமண்ய அய்யர், உப தலைவர்.
,, V. R. சுப்ரமண்ய அய்யர், பொதுக்கார்யதர்சீ.
,, A. ராகவராவ், உப கார்யதர்சீ.
,, P. S. ராமசர்மா. பொக்கிஷதார்.
மதுரை. பண்டித, S. நாராயண அய்யங்கார் ஸ்வாமி.
சேலம். ஸ்ரீ S. A. ஸஞ்ஜீவி
தஞ்சை, கும்பகோணம் V. R. லக்ஷ்மீகாந்த சர்மா.
பூவாளூர், C. ஸோமசுந்தரம் பிள்ளை,
ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரிகள்.

(3) சோப்ராகமிட்டியின் ரிபோர்டைப்பற்றி ஆலோசனை புரியவும், அபிப்ராயம் கொடுக்கவும் 1949-ஷு மே-மீ 7-உ சனிக்

கிழமையன்று தமிழ்நாடு ஆயுர்வேதமஹாமண்டலத்தின் விசேஷ அவசரமஹாநாடு திருச்சியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

(4) மண்டல அங்கத்தினருக்கு அங்கத்தினரின் அத்தாக்ஷிப் பத்திரம் தலைமைக் கார்யாலயத்திலிருந்து இனமாக அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு வேண்டிய நிபந்தனைகளை ஸ்தாயி சமிதி தீர்மானித்துக் கொள்ளும்.

(5) மண்டல வரவு செலவு டிபாஸிட் பாங்கில் செய்யவும், பாங்கில் தொகை போடவும் எடுக்கவும் பொதுக்கார்யதர்சி V. R. சுப்ரமண்ய அய்யருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மண்டலத்திற்கு திருநிதிபாங்கை பாங்கர்களாக நியமனம் செய்யப்பட்டது.

இப்படிக்கு,
V. R. Subrahmania Aiyar,
பொதுக்கார்யதர்சி.

20—3—49.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல நிதி வசூல்.

கும்பகோணம் ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா மூலம் வசூலான விவரம்.

ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா,	ரூ.	25	0
,, V. R. ஸ்ரீநிவாஸ அய்யர்,	,,	5	0
,, M. K. மஹாலிங்கம்,	,,	5	0
,, R. S. மணி,	,,	5	0
,, R. ராமானுஜாசாரியார்,	,,	5	0
,, K. S. ராமானுஜம்,	,,	5	0
,, N. S. சங்கர அய்யர்,	,,	5	0
,, K. மாணிக்கன் செட்டியார்,	,,	5	0
,, N. லக்ஷ்மண அய்யர்,	,,	5	0
,, K. வாஞ்சிநாத அய்யர்,	,,	1	0

கும்பகோணம் G. சுப்பையா வைத்யர் மூலம் வசூல்விவரம்.

ஸ்ரீ K. ராமநாதன்,	ரூ.	5	0
ஸ்ரீமதி ஸங்கீதபூஷணம் M. S. பட்டம்மாள்,	,,	5	0

ஒரு ரூபாய்க்கு உள்பட்ட மொத்த வசூல்:

ஸ்ரீ G. சுப்பையா வைத்யர் மூலம்	ரூ.	9	12	0

வைத்யசந்திரிகை சந்தாதாரர்களுக்கு அறிக்கை.

1949 ஏப்ரல்-மீ முடிவுக்குள் சந்தா துகை அனுப்பாதவர்களுக்கு மே-மீ ஸஞ்சிகை V. P. P. யில் அனுப்பப்படும்.

V. R. SUBRAHMANIA AIYAR,
பொதுக்கார்யதர்சி,

20-3-49.

வரவு.	ரூ	அ	ப
ஸ்ரீ தன்வந்தரி ஸ்வாமிகள்	1	0	0
நன்கொடை			
சென்னை டாக்டர் மாதவ மேனன்	50	0	0
கரூர் Dr. P. S. ராமசர்மா	25	0	0
வரவேற்பு கமிட்டி மெம்பர்கள் நன்கொடை.			
Dr. V. R. லக்ஷ்மீகாந்த சர்மா	250	0	0
மன்னார்குடி Dr. K. ராஜாவையா	100	0	0
,, ,, சிவசுப்பிரமண்ய அய்யர்	15	0	0
மாயவரம் ,, T. S. ஸ்ரீனிவாஸய்யர்	15	0	0
கும்பகோணம் Dr. திருவேங்கடசாமி (மலையாளம் மெடிகல் ஹால்)	15	0	0
கொத்தவாசல் Dr. K. ராமையா அவர்கள்	15	0	0
இதர ப்ரமுகர்கள்.			
கும்பகோணம் Dr. A. ஸுந்தரமய்யர்	10	0	0
ஸ்வாமிமலை ஸ்ரீ அப்புராயர்	5	0	0
,, ஸ்ரீ ஸ்வாமினாதய்யர்	5	0	0
சென்னை K. பாலஸுப்ரமண்ய அய்யர், (அட்வகேட்)	5	0	0
கும்பகோணம் நாராயணன் & Co.	5	0	0
பிரதிநிதிகள் கட்டணம், பொருள்காக்ஷி கட்டணம் மூலம் வரவு	339	0	0
ஆக மொத்தம் ரூ.	855	0	0

சிலவு	ரூ	அ	ப
ஸ்ரீ தன்வந்தரி பூஜை	1	0	0
புஷ்பம், பழம், சந்தனம், வெற்றிலை வகையறு	30	0	0
துணி போர்டு எலக்டிரிக் பிட்டிங்ஸ் (Fittings & Current) சார்ஜ்	62	8	0
பிரிண்டிங் சார்ஜ்	250	15	0
சாப்பாடு டிபன் வகையறு	248	8	0
தபால், தந்தி, பிரயாண சிலவு, விளம்பர சிலவு, ஸ்டேஷனரீஸ் சில்லறை சிலவு	210	10	0
போட்டோ எடுத்தது	51	7	0
	855	0	0

12-3-49.

V. R. SUBRAHMANIA AIYAR,
General Secretary.

V. R. L. SARMA,
வரவேற்பு கமிட்டி காரியதரிசி.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

நேத்ரப்ரகாசிகை.

[ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சாவூர்.]

நேத்ர ரோக நிதானம்— மல மூத்திரபந்தம், மிதமிஞ்சிய ஸ்திரீ போகம், இந்திரிய நஷ்டம், இந்திரிய ஸ்கலிதம், அதிகத் தூக்கம், அதிக கோபம், அதிக துக்கம், பொருள் நஷ்டத்தால் துக்கம், தலையில் மதம் பிடித்தவனால் அடிபடுதல், அதிக பாரம் தாங்குதல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளாதிருத்தல், எண்ணெய் தேய்த்துக்கொண்டு எண்ணெய் போகாமல் ஸ்நானம் செய்தல், அதிக ஆட்டம் கொடுக்கக் கூடிய காரியங்களைச் செய்தல், அதிகமாக புஸ்தகங்களைப் பார்த்தல், ரத்னம், ஸ்வர்ணம் முதலியவற்றை ஊன்றிப் பார்த்தல், உருகும் இரும்பு, சூரியன், நெருப்பு முதலிய தேஜஸ்ஸுக்களை உற்று நோக்குதல், அடிக்கடி அதிகம் பார்த்தல், மின்னலைப் பார்த்தல், அதிகப் பசியுடன் உருகின வஸ்துவைப் பார்த்தல், கிரந்திரோகம், மேகரோகம், கிருத்ரிமம், ஆபிசாரம் இவைகளினால் தோஷத்ரயங்கள் விரோதத்தை அடைந்து நேத்ர ரோகங்கள் உண்டாகின்றன.

பூர்வ ரூபம்— எரிச்சல், ஜ்வரம், மூர்ச்சை, அரோசகம், உருவம் குறைத்தலாகத் தெரிதல், கண்பார்வை மந்தப்படுவது, பசி, தோள்வலி, தலைவலி, தலைகனதி, துர்க்கந்தம், கண் சீழ், கண்பூளை, ஸூர்யன், தீபம், அக்னி, இவைகளைப் பார்க்கமுடியாதிருத்தல், தூக்கத்திலும் துர்க்கந்தம் ஏற்படுவது, ஸ்திரீ ஸங்கத்தில் இச்சை, கண் சிகப்பு, கண் இமை சேர்க்க முடியாமலிருத்தல், கண்வலி, கண்ணீர் விடுதல், திருஷ்டி மந்தம் இவ்விதமான 100 வித நேத்ர ரோகங்கள் உண்டாகின்றன.

தலைவலி அதிகம், அதனால் கண்களில் வலி அதிகம், இது வாயு அதிகக் கோபத்தை அடைந்தால் ஏற்படும் லக்ஷணம்.

கண் காய்ந்து போதல், எரிச்சல், ஸங்கோசம், சிகப்புக் கோடுகள் இவை பித்த கோபத்தால் ஏற்படும் லக்ஷணம்.

கண்சீழ், அழுக்கு ஜலம், விஸர்ப்பம் இவை ச்லேஷ்ம கோபத்தினுல் ஏற்படும் லக்ஷணம்.

ஷடி தோஷ குணங்களின் சேர்க்கையால், தோஷங்கள் சேர்ந்ததையும் அறியவும்.

(தொடரும்.)

வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் 43-வது வார்ஷிகோத்ஸவ ஸமயத்தில்

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரி அவர்கள் பேசினதின் சுருக்கம்.

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

முற்காலத்தில் நமது பாரதவர்ஷத்தில் நீதிமன்னர்கள் தான் இதுபோன்ற தர்மஸ்தாபனங்களைப் பரிபாலனம் செய்து வந்தனர். நமக்கு விதேச அரசாக்ஷிக் கொடுமை இப்பொழுது நீங்கிவிட்டது. திரும்பவும் நமது தர்மஸ்தாபனங்களுடைய உசிதமான பராமரிப்பு ராஜாங்கத்திலிருந்து விரைவில் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயம். முற்காலத்திய நீதிமன்னர்கள் தர்மஸ்தாபகர்களுடைய நோக்கத்திற்குச் சிறிதும் மாறுதலின்றி அவைகளைப் பாலனம் செய்தனர். இன்றைய ஜனநாயக அரசாக்ஷியில் அந்த மனப்பான்மை மாறிவருகின்றது. இவ்விதமின்றி அந்தந்த தார்மிகர்களுக்கு இருந்த நோக்கத்தைக் கவனித்து அதை மாற்றுமல் அதற்கு அனுகூலமான முறையில் அவர்களுடைய தர்மத்தைப் பரிபாலனம் செய்வதே மன்னர்களின் நீதியாகும்.

மான்யர்களே !

இந்த முக்கியமான தருணத்தில் இந்த வேங்கடரமண ஆயுர்வேத வித்யாலயத்தில் எந்தவிதமான அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதை நான் விளக்கவேண்டியது மிகவும் அவசியமென்று கருதுகின்றேன். இன்றைய தினத்தில் இந்த வேங்கடரமண ஆயுர்வேத வித்தியாலயம் ஆயுர்வேதத்தின் உண்மையான அபிவிருத்திக்கு வேண்டியதைச் சரியான முறையில் செய்துகொண்டிருப்பது போல் இந்தியாவில் ஓரிடத்திலும் ஒரு வித்யாலயமும் இல்லை என்பது நிச்சயம். நான் படித்த வித்யாலயம் என்ற அபிமானத்தால் இது உயர்ந்ததென்று சொல்லவில்லை. இதன் உத்ஸவ தினத்தில் இதன் முன்னிலையில் இதைப்புகழாது வேறு விதத்தில் சொல்லுவது என்பது அலௌகிகமென்ற காரணத்தாலும் இந்த வித்யாலயம் உயர்ந்தது என்று நான் கூறவில்லை. தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் இருக்கும் ஆயுர்வேத வித்யாலயங்கள், ஸர்க்காரால் நேரில் நடத்தப்படுபவைகள், யுனிவர்ஸிடியால் நடத்தப்படுபவைகள், தர்மநிதியால் நடத்தப்படுபவைகள் அநேகமாக அனைவற்றையுமே நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஒன்றும் வித்யா ஸம்ரக்ஷண விஷயத்தில் இந்த வித்யாலயத்திற்கு நிகரில்லை. கட்டடங்களும், ஔஷதசாலைகளும், ஆதுரசாலைகளும், பெரிது பெரிதாயிருக்கின்றன. மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் பெரும் எண்ணில் குழுமியிருக்கின்றனர். ஆனால் அவ்விடம் எல்லாவற்றிலும், ஓர் இடத்தில் கூட ஆயுர்வேதம் அதன் தத்துவ நிலையில் சுத்தமாய் பரிபாலிக்கப் படவேயில்லை என்பது துக்கிக்கத் தக்கது. மற்ற ஆயுர்வேத வித்யாலயங்களில் பயின்று தேறிய வைத்தியர்களுக்கு ஆயுர்வேதத்தில் சாஸ்திரீயமான ஞானம் மிகக் குறைவாக இருக்கின்றது. 'வேங்கடரமண ஆயுர்வேத வித்யாலயத்தில் பயின்றவர்களுக்கு நன்றாயிருப்பது போலில்லை என்ற அம்சத்தை மாத்திரம் கவனித்துக் குறை கூறவில்லை. பின் என்னவெனில், மற்ற வித்யாலயங்களில் தேறிய வைத்தியர்களின் இடையே அதிகமான நபர்களுடைய ஹிருதயத்தில், வித்யாப்யாஸ முடிவில், ஆயுர்வேத

சாஸ்திரத்தில் ஒரு இகழ்ச்சி மனப்பான்மை ஏற்பட்டுள்ளதையும், வேறு விதேச வைத்திய முறையில் அதிக மோஹம் ஏற்படுவதையும், அந்த விதேச முறையையே அதிகமாய் தனது தொழிலில் கையாளுவதையும் கண் கூடாக எல்லோரும் பார்க்கும் விஷயம். இந்தக் கெடுதல் விளையும்படியான ரீதியில் மற்ற ஆயுர்வேதப் பள்ளிகளில் பாடமுறை நடத்தப்படுகின்றது.

இந்த வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையில் நடைபெறும் பாடமுறையில், இதில் தேறும் வைத்தியர்கட்கு ஆயுர்வேத சாஸ்த்ர தத்வங்களில் கசடற ஞானம் நன்கு ஏற்படுகிறது. அதனால் அதில் ஆதரவு நிறைந்து நிற்கின்றது. வேறு வைத்திய முறையின் ஸாங்கர்யமில்லை. ஆதலால் சுத்தமான ஆயுர்வேதத்திலேயே ஆராய்ச்சி மனப்பான்மை வளருகின்றது. இந்த வித்யாசாலை இவ்விதமேன்மை பெற, அதன் பிரதிஷ்டாபகருடைய தர்மத்தின் பலமாக, ஆதியிலிருந்து இன்று வரையில் இங்கு அமைந்துள்ள, ஆயுர்வேதக் கல்வி போதிக்கும் ஆசார்யர்களுடைய அருமையான பாண்டித்யமும், வித்யா வளர்ச்சியில் ஆர்வமும், சிஷ்ய வாத்ஸல்யமும் ஒருங்கே சேர்ந்ததேயாகும்.

இவ்விதமாகில், இந்த ஆயுர்வேத கலாசாலையில் அபிவிருத்தி செய்யவேண்டிய அம்சம் ஒன்றுமில்லையென்று நான் கருதுவதாக க்ஷணமும் நீங்கள் நினைக்கவேண்டாம். பற்பல அம்சங்களில், பற்பல விதங்களில் உடனே வளர்ச்சி செய்யவேண்டிய அவசியமிருக்கின்றது. இந்தப் பள்ளிக்கூடம் ஆயுர்வேத மூலதத்வங்களை இன்னமும் கெடாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறதால், இக்கலாசாலையில் ஆயுர்வேதத்தை உண்மையான வழியில் அபிவிருத்தி செய்வது மிகவும் எளிது. சீக்கிரத்திலேயே நல்ல பலனளிக்கும் என்றுதான் சொல்லுகிறேன்.

ஒரு வித்யாசாலையை ஆயுர்வேதசாஸ்திரத்தில் வித்யாப்பியாஸமென்ன, கர்மாப்பியாஸமென்ன, ஆராய்ச்சி

என்ன எல்லாத் துறைகளிலும் உலகில், ஓர் மார்க்கதர்சியாக, ஆதர்ச வித்யாலயமாக ஏற்பாடு செய்யவேண்டுமாகில் இந்த வேங்கடரமண ஆயுர்வேத வித்யாலயத்திற்கு ஏற்கனவே இயற்கையாக அமைந்துள்ள அநேகவித சௌகர்யங்களை யோஜித்துப் பார்த்தால், இதுதான் சகல அபேக்ஷைகளையும் பூர்த்தி செய்யத்தக்க, உத்தம வித்யாலயமாக முதல் கீர்த்தியைப் பெறமுடியும் என்பதில் சிறிதும் சந்தேஹமில்லை. இந்த சௌகர்யங்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்த வித்யாசாலையை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் ஆயுர்வேதத்தைப் புனருத்தாரணம் செய்து, ஆயுர்வேதத்தால் அகில லோகத்திற்கும் ஆனந்தம் வளரும்படி செய்ய தர்மப்பிரபு ஸ்ரீ V. கிருஷ்ணசாமி அய்யரவர்களுடைய பரிபாலக ஸமிதியாருக்கும் விசேஷமாய் தர்ம ரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்பிரமணிய அய்யரவர்கட்கும், நம்மெல்லோர்க்குமே ஊக்கமும், உத்ஸாஹமும், ஒத்துழைப்பு முண்டாகும்படிக்கு ஸ்ரீ தன்வந்தரி பகவானைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆயுர்வேதக் கல்வித்திட்டத்தில் ஒரே ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றித் தெளிவு செய்ய விரும்புகின்றேன். ஆயுர்வேத புநருத்தாரண கார்யத்தில் கல்வி முறையே அல்லவா பிரதானமானது? இதில் முக்கியமானதொரு வாதம் என்னவெனில்— உலகில் எங்கும் விஜ்ஞானங்கள் (Sciences) எல்லாம் ஒரு ரூபமுடையவைகளாக இருக்கின்றன. விஜ்ஞான விஷயத்தில் தேசத்திற்கு தேசம் மாறுதலடைய முடியாது. சிகித்ஸா சாஸ்த்ரத்திலும் இதே நியாயந்தான். ஆதலால் இந்தியாவில் இன்றுள்ள ஆயுர்வேதம், யுனானி, ஸித்தம், ஆலோபாதிக், ஹோமியோபாதிக் முதலிய பற்பலவித சிகித்ஸா சாஸ்த்ரங்கள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஆராய்ந்து அவைகளிலிருந்து, ஸாரவத்தாகக் கடைந்தெடுத்து ஒரே ஒரு வைத்திய சாஸ்த்ரமுறை பிரதிஷ்டை செய்யப்படவேண்டும் என்பதே. இந்த வாதமே தற்சமயம் ஆயுர்வேதம் ஆங்கில வைத்தியம் இரண்டையும் ஒருவாறுகப் படித்துப்

பயின்றவர்கள் அநேகமாய் எல்லோருமே பேசுவது. இவ் விதம் செய்ய அவர்கள் சொல்லும் வழிகளாவன :— ஒரு பெரிய ஆராய்ச்சி சாலையில் நவீன விஞ்ஞான ஸித்தாந்தப் படிக்கு ஆயுர்வேத ஸித்த யுனானி முறைகளைப் பரீக்ஷை செய்து பார்த்து அவைகளிலிருக்கும் உபயோகமான ஸாராம்சங்களை நவீன வைத்திய முறையில் ஒன்று சேர்த்துக்கொள்ளுதல் முதலாவது; ஆலோபாதிக் காலேஜ்களில் ஆயுர்வேத தத்வங்களைப் போதித்தல் இரண்டாவது; ஆயுர்வேதக் கல்லூரிகளில் ஆயுர்வேதத்துடன் கூட ஆலோபாதிக் சாஸ்திரத்தையும் ஸம்பூர்ணமாய் கற்பித்தல்— ஆக விது மூன்றாவது முக்கியம். இவ்விதம் கல்வித் திட்டத்தை ஏற்படுத்துவதாலும் ஒருமைப்படுத்தும் வழிகளை வேகத்தில் கண்டுபிடிக்க ஒரு ஆராய்ச்சி சாலை நடத்துவதாலும் சீக்கிரமே ஒரே வைத்திய முறை தானாகவே உலகில் உண்டாகிவிடும் என்று அவர்களுடைய கருத்து.

இவ்விஷயத்தில் நான் உரைப்பதாவது :— ஸாதனங்களும் உபாயங்களும் வெவ்வேறாக இருப்பினும், சிகித்ஸா சாஸ்த்ரத்தின் தத்துவங்களும், லக்ஷ்யமும் ஒன்றாகத்தானிருக்கமுடியும். இதில் ஆக்ஷேபமே கிடையாது. ஆயுர்வேதத்தின் அடிப்படைக் கொள்கையுமிதுவே. வெவ்வேறாகத் தோன்றும் உலகிலிருக்கும் எல்லா வைத்திய முறைகளும் ஆயுர்வேதத்திலிருந்து உத்பத்தியாகி வளர்ந்தவையே. இனி வரப்போகும் ஒரே வைத்ய முறையும் அது எந்த ஸ்வரூபத்திலிருப்பினும் அதையும் ஆயுர்வேதமென்றே சொல்லியாகத்தான் வேண்டும். ஆயுர்வேத மதம் இதுவாதலால் ஒரே வைத்ய முறை ஸ்தாபனத்தில் ஆக்ஷேபமே இருக்க நியாயமில்லை.

ஆனால், ஆலோபாதிக் எனப்படும் மேல்நாட்டு வைத்ய முறையும், ஆயுர்வேதம், ஸித்தம், யுனானி வைத்ய முறைகளும் இன்றைய தினம் இந்தியாவில் எந்த சூழ்நிலையிலிருக்கின்றனவோ, அதைக் கவனித்துப் பார்த்தால் ஆலோபாதிக்கையும், ஆயுர்வேதாதிகளையும் பிணைத்து ஸாரமெடுக்கும் கார்யத்தை உடனே அநுஷ்டிக்கத் தொடங்குவது

விரும்பும் நற்பயனை அளிக்க முடியாதென்றும், மேலும் இதற்கு இவர்கள் செய்யும் கார்யங்களும் சொல்லும் உபாயங்களும் சரியான முறையல்ல என்றும் எனது தீர்மானம்.

எனது அபிப்பிராயம் :—ஆலோபாதிக்கை விஜ்ஞான ஸித்தாந்தமென்ற பிரமாணத்தில் ஆயுர்வேதத்தை ஆராய்ச்சி செய்து, இதிலிருந்து நல்ல அம்சங்களை அவர் சேர்த்துக்கொள்ளுவதை நாம் தடுக்கமுடியாது. இது அவரிஷ்டம். ஆனால் நமது கடமை ஆயுர்வேத ஸித்தாந்தமே சரியென்ற ஸத்யஸங்கல்பத்துடன், பக்தி சிரத்தையுடன் ஆலோபாதிக் முதலிய மற்ற ஸகல நூதனவிஜ்ஞானங்களையும் ஆயுர்வேத மூலஸித்தாந்த ரீதியில் ஆராய்ந்து பார்த்து, ஆயுர்வேதத்திலகப்படாத அவைகளிலிருக்கும் நல்ல விஷயங்களை ஆயுர்வேதத்தின் அந்தந்த அங்கங்களுடன் ஆயுர்வேத பரிபாஷையில் சேர்த்து ஆயுர்வேதத்தைச் சொந்த ரீதியில் வளர்ப்பதே நமது கடமையாகும். சரியான பயனுமளிக்கும். முதன்முதலில், ஆயுர்வேதத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் நன்கு ஆராய்ந்து படிக்கவும், சிகித்ஸை செய்யவும் வியாதி வராமல் தடுக்கும் உபாயங்களை யநுஷ்டித்துப் பார்க்கவும் பூர்ணமான வஸதி செய்யப்படவேண்டும். வகுப்பு வாதத்தினால் சில நாட்களாக பெயரளவில் பிரிந்து நிற்கும் ஸித்தவைத்தியத்தையும், யுனானிவைத்தியத்தையும் ஆயுர்வேதத்துடன் ஒன்று சேர்ப்பதில் ஒரு சிரமமுமில்லை. தத்துவத்தில் தகராறுமில்லை. இதை முதலில் செய்து ஒரே ஆயுர்வேதமாக்க வேண்டும். பிறகு ஆயுர்வேதத்தில் எந்த அங்கத்தில் என்ன குறைவிருக்கிறதென்று பரீக்ஷித்துப் பார்த்து, ஆலோபாதிக் முதலிய மற்ற சாஸ்திரங்களிலிருந்து தேவையான எல்லாவற்றையும் ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்கு ஆயுர்வேதத்தில் ஜீர்ணம் செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் மற்ற வைத்திய முறைகளை இங்கு கொண்டுவந்து வளர்ப்பதே ஆயுர்வேதத்தின் வளர்ச்சியாகும். மற்றது ஆயுர்வேதத்தினழிவாகும். இவ்விதமெல்லாம் செய்த பிறகு ஒரே வைத்தியசாஸ்திர முறையாக இந்தியாவில் மட்டுமல்ல ; உலகிலேயே பரிணமித்தால்

யாருக்கு ஆக்ஷேபம்? வரவேற்கிறோம். அவகாசமின்மையால் விரிவு செய்யவில்லை.

இவ்வித ஆயுர்வேத ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் இந்த வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலை ஈடுபட வேண்டும். இதற்குப் பூர்ண சௌகர்யம் இங்கிருக்கிறதென்பதை முன்பே தெரிவித்தேன். எனக்கு இந்த அருமையான சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளும் பாக்கியத்தைக் கொடுத்ததுக்குத் திரும்பவும் தந்யவாதம் சொல்லுகிறேன்.

ஜய ஆயுர்வேத.

சிவார்ப்பணமஸ்து.

ரக்தஸம்ஹதி அல்லது தமனீஸம்ஹதி.

BLOOD PRESSURE.

[வைத்ய விசாரத. S-V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.]

(78-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரக்த ஸம்ஹதி:— இதன் ஸம்பிராப்தியைப் பற்றி நவீன விக்ஞானத்தின் அடிப்படையில் இதுவரை குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்பற்றி ஆயுர்வேத ஸம்ஹிதைகளில் என்ன கூறப்பட்டுள்ளது என்பது பற்றி இனி ஆலோசிப்போம்.

சரகஸம்ஹிதை— ஸூத்ரஸ்தானம் விதிசோணிதீயாத்யாயத்தில் யுக்தமான ஆஹாராசார விதிகளினால் ஏற்பட்டுள்ள ரக்தத்தினால் ஏற்படும் பிராண ரக்ஷணத்தையும் அதைக் கெடுக்கும் ஆகார ஆசாரங்களையும் நல்ல ரக்தத்தின் லக்ஷணத்தையும், பிறகு ரக்தவஹஸ்ரோதஸ்ஸுகளின் துஷ்டியால் ஏற்படும் மதம், மூர்ச்சாயம், ஸந்யாஸம் என்ற மூன்று அவஸ்தைகளையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது— நவீனர்களின் விக்ஞானத்தில் நாம் முன் கூறிய அதிக ரக்த ஸம்ஹதியின் விவரணத்தைக் காட்டிலும் ஆயுர்வேதம்

படித்தவர்களுக்கு மிகவும் தெளிவாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. அதனால் அவ்வத்யாயத்தை பன்முறை படித்து ஆராயவேண்டியது மிகவும் அவசியம். அப்பிரகரணத்தைக் கொண்டே இவ்வதிக ரக்த ஸம்ஹதியின் ஐந்து நிதானத்தையும், சிகித்ஸையையும் விளக்குவோம்.

பிரதானமாக இவ்வியாதியில் கேடடைபவை ரஸ—ரக்தவஹமான ஸ்ரோதஸ்ஸுகள், ரஸவஹஸ்ரோதஸ்ஸுகளின் மூலஸ்தானமான ஹிருதயம், ரக்தவஹஸ்ரோதஸ்ஸின் மூலாதாரமான யகிருத்– ப்லீஹம்– அவைகளின் மலவிஸர்கஸ்தானமான விருக்கங்கள். ஸம்ஜ்ஞா (संज्ञा–) மனஸ்வஹமான ஸ்ரோதஸ்கள். இவை தனித்தோ, சேர்ந்தோ சில விசேஷ காரணங்களால் விகிருதி யடைந்த வாதாதிகளால் விகிருதி அடையச் செய்யப்பட்டு, வியாதியை உண்டாக்குகின்றன. இவ்வியாதியின் மூன்று அவஸ்தைகள்– மதம், மூர்ச்சாயம், ஸந்யாஸம் என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன. வரிசையாக இவை ஒன்றைவிட ஒன்று பலமதிகமுள்ளது. மதம்— ஸாத்யமெனவும், மூர்ச்சாயம்— கிருச்சிர (கஷ்டப்பட்டு) ஸாத்யமெனவும் ஸந்நியாஸம்– ஸாதாரணமாக அஸாத்யமெனவும் நல்ல சிகித்ஸையில் சில சமயம் கிருச்சிர ஸாத்யமெனவும் கருதப்படுகின்றது. இதில் பிரதானமான உபத்ரவம்— மோஹம் ஸ்ரோதஸ்களில் துஷ்டியால் வாயு அதிகப்பட்டு பிரகோபமடைந்து— சேதனை— (உணர்ச்சி) ஸ்தானமான ஹிருதயத்தைப் பீடிக்கும்பொழுது பிரக்ஞை தவறி குழப்பமும் மயக்கமும் ஏற்படுகின்றது. மதத்தில் மோஹம் மிகக் குறைவாக ஒருவித மதமதப்புடன் இருக்கும். மூர்ச்சாயத்தில் மோஹம் அடிக்கடி ஏற்படுவதும், ஸந்யாஸத்தில் மோஹம் நீடித்து மிகவும் கஷ்டப்பட்டு அகற்றவேண்டிய நிலையிலிருப்பதும் விசேஷம். (ஏப்ரல் ஸஞ்சிகையில் குறிப்பிட்டுள்ள 2, 3, 4-வது நிலைகளிற் கூறப்பட்டுள்ள ஆசய விகிருதிகளை மதமூர்ச்சாய ஸந்யாஸ அவஸ்தைகளில் பொருத்திப் பார்க்கவும்).

நிதானம்:— அதிக உப்பு, புளிப்பு, க்ஷாரம், உரைப்பு இந்த ரஸங்களதிகமான ஆகாரங்களை அதிகமாகவும் இடைவிடாமலும், தகுந்த பரிஹாரமற்றும் அருந்துவது, கெட்டுப்போனதும், அல்லது அதிக தீக்ஷ்ணமானதுமான மதுவை அதிகமான அளவில் அடிக்கடி சாப்பிடுவது, புகையிலை போன்ற தூமங்களை அதிக அளவில் ஸேவிப்பது (Smoking) கொள்ளு, உளுந்து, அவரை, எள்ளு— எள் ளெண்ணெய், கிழங்குகள், மாம்ஸம், தயிர், புளிப்புள்ள பதார்த்தங்கள், காடி போன்ற ஆகாரங்கள், பகலில் சாப்பிட்டவுடன் தூக்கம், பித்தம் போன்ற தோஷத்தால் ஏற்படும் வாந்தியை தடுப்பது— இவைபோன்ற பித்தம், ரக்தம் இவைகளின் விதாஹத்தை ஏற்படுத்தும் ஆகாராசாரங்கள், துஷ்டியடைந்து அதிகப்பட்ட ரக்தத்தை காலத்தில் வெளிப்படுத்தாமலிருத்தல், ஓய்வில்லாது களைப்பதிகமாகும் வரை சரீரம், மனது இவைகளுக்கு வேலையளித்தல், ரக்த பித்த துஷ்டியால் ஏற்படும் முகபாகம் (வாய் வேக்காளம்) உபகுசம் (பல் ஈறுகளில் பாகம்) பல் மூக்கு தொண்டை இவைகளில் புண்ணும் சீழும், இவை போன்றவைகளில் ரக்தத்தில் விஷம் பரவுவது (auto intoxication) மற்றும், ரக்த மேஹம், மதுமேஹம், பிரதரம், கர்பாசயவித்ரதி, குல்மம், விஸர்ப்பம், வாதரக்தம், விதக்தாஜீர்ணம் போன்ற வியாதிகள் ஸரியானபடி சிகித்ஸை செய்யப்படாமல் நீடிப்பது, ரஸம் ரக்தம், ரக்தவஹதமனிகள் இவைகளின் துஷ்டியினால் ஏற்படும் வியாதிகளில் இவைகளின் துஷ்டியை நிவர்த்திக்காமல், வாதாதி தோஷ சிகித்ஸை மட்டும் செய்வது, தூக்கமின்மை, அதிகக் கோபம், நீடித்த தலைவலி, அபஸ்மாரம், ச்வாஸம், இவைகள்.

பூர்வரூபமும் ரூபமும்:— வியாதி ஆரம்பித்து வெகுநாட்கள் வரை தன்னை இவ்வியாதி யுள்ளவனாகக் கருதுமளவிற்கு வெளித் தெரியாமல் வியாதி தன் காரியத்தை நடத்தும். ஆனால் அவன் அடிக்கடி, தலை சுற்றல், தலையின் பின்புறத்தில் வலி, திடீர் திடீரென தலையில் அதிக ரக்த

ஓட்டம் ஏற்படுவது போன்ற உணர்ச்சி, காதடைத்தல், கண்ணுக்கெதிரில் திடீரென வெளிச்சம் தோன்றுதல், மயக்கம், பிரமை, ஹிருதயப் படபடப்பு முதலியன சிறிது சிறிதாக அதிகமாகுவதாகத் தோன்றும்.

வாத மதம் :— தடங்கலுடன் வேகமாகவும் அதிகமாகவும் பேசுவதும், தடுமாறின நடையும், தோல் கருத்து வரட்சியுடன் இருப்பதும் விசேஷ லக்ஷணம்.

பித்த மதம் :— கோபத்துடன் வரண்ட சொற்களுடன் பேசுவதும் அடித்தல் திருடுதல் இவைகளில் ஆசையும், சிவந்து மஞ்சளான தோலும் விசேஷ லக்ஷணம்.

கப மதம் :— தோல் வெளுத்தும் அடிக்கடி ஆழ்ந்து யோஜனை செய்வதும், குறைத்து ஸம்பந்தமில்லாமல் பேசுவதும், சோம்பலும் சோர்வும் கபமதத்தின் விசேஷ லக்ஷணம்.

இந்நிலையில் உள்ள முற்கூறிய ரூபங்கள் அடிக்கடி ஏற்பட்ட போதிலும் அதிகமாக உபத்ரவப் படுத்துவதில்லை. சிறிதளவு பரிஹாரம்- விச்ராந்தி எடுத்துக்கொண்டாலே உபத்ரவங்கள் தணிந்து விடுகின்றன. இந்நிலையில் முக்யமான ஆசயங்களுக்கு ஒருவித விகிருதியும் ஏற்படாது. இது எந்த வியாதியில் உபத்ரவமாக வந்ததோ; அது சமன மடைந்ததும் இதுவும் சமனமாகும்.

சிகித்ஸை :— வியாதியின் உபத்ரவமாக வந்திருந்தால் அதன் சமனத்திற்கு முக்கியமாக சிகித்ஸை செய்யவேண்டும். வாய் வேக்காளம் போன்ற ரக்த பிரஸாதனம் முதலிய யுக்தமான சிகித்ஸை செய்தாலே மதமும் குறையும். இவ்வியாதி முற்றுமலிருக்க முன் காப்பாக, ஆரோக்கிய கரமாயுமுள்ள ஆஹார விஹாரங்களில் அதிக சிரத்தை செலுத்தவேண்டியது அவசியம்.

(தொடரும்.)

வைத்யக் குறிப்பு.

[Dr. K. SHARODY, Medical Officer, Ponavasal.]

பெயர்- ஸரஸ்வதி- வயது 35. ஊர்- பேருவூரணி. (தங்கவேலு நாடார் ஸம்ஸாரம்) 16—10—48-ல் ஷெ யாள் கொண்டுவரப் பட்டாள்.

தர்சனத்தில்— வயிறு வீக்கம், தண்ணீர் தங்குதல், பாண்டு, சோபம், மல மூத்திரபந்தம், ஆகாரமின்மை, தள்ளாடும் தன்மை, செயலின்மை, ச்ரமச்வாஸம். தொண்டையில் கபக்கட்டு முதலியன.

ஸ்பர்சனத்தில்— உஷ்ணம் 101 டிகிரி. தேகத்தில் சொர சொரப்பு, சிறிதளவு வெடிப்புக்கள் முதலியன.

பிரச்னத்தில்- சுமார் 6 வருடங்களுக்கு முன் இப்பிணியாளி 6-வது கர்ப்பத்தில் கொடும் துன்பங்கள் கண்டு கர்ப விச்சித்தி யடைந்து அதிலிருந்து தொடர்ந்து ரோகியாகக் கிடந்து வந்தாள். அன்று முதல் தன்னூரில் ஆஸ்பத்திரி வைத்தியம் விடாது நடத்திவர 3-வருடம் வரையில் சிறிதளவு சௌகர்யமாக விருந்தபோதிலும் நிச்சேஷம் விலகாது மறுபடியும் தொந்தரவுகள் வலுக்கையில் உள்ளூரில் தனிப் பட்ட முறையில் பரிஹரிக்கப்படுகையில் அவஸரக்கடுமைகளைச் சமாளிக்க மாதமுறை, பக்ஷமுறை, வாரமுறைகளில் உதரவேத மூலம் தங்கு நீரை வெளிப்படுத்தியும் பல மாதங்கள் வரையில் கடும்பத்திய மாகப் பார்த்து வந்தும் பயன் பெறாது பல மாதங்கள் தகுந்தவர்களிடம் நாட்டுவைத்தியம் பார்த்தும் சுகப்படாது மறுபடியும் இரண்டு மூன்று தாலூக்கா தலைமை ஆஸ்பத்திரிகளில் உள்ளிருந்து பரிஹரிக் கப்பட்டும் உதரவேதம் செய்தும் கவனித்துவர திரும்ப திரும்ப வயிறுப்புதல், நீர் தங்குதல் முதலியன உண்டாகிக்கொண்டே வந்தன. கடைசிமுறையாக தீரா த வியாதியென்று புறக்கணிக்கப்பட்டு கடைசியாக ஆவலின் பேரில் குண தோஷங்களைத் தெரிந்துகொள்ள கொண்டுவரப்பட்டாள்.

காணப்பட்ட மாத்திரத்திலேயே அசாத்தியமாகக் கருதப்பட்ட போதிலும் "த்ருணேந தத்வா தைலஸ்ய பிந்தும் தத்ராதிலாகவாத். விகாசி சேத் தைல மதாசு மூத்ரே ஸாத்யஸ்ஸரோகீ" என்ற மூத்திர பரீக்ஷையில் சாத்தியக் குறிகள் (கிருச்ரசாத்திய) காணப்பட்டமையால் ஒருவாரம் வரையில் பரீக்ஷித்துப் பார்க்கலாயிற்று. அதன்

பொருட்டு கீழ்க்கண்ட விதிகள் செய்யப்பட்டன. காலையில், புனர்நவாஸவம் பனவிரலாதிக்ஷாரம் சேர்த்து Ozs. 2 மத்தியானம் சோதாரி மண்டூரம் 3 குஞ்சா, மாலையில் அசோகாரிஷ்டம் 1-Oz. இரவில் பனவிரலக்ஷாரம் சோதாரி மண்டூரம் சேர்த்து 3 குஞ்சா வென்னீரில், Diunin 2.c.c. Injuction & Mag-Sulph. உள் பிரயோகத்திற்கும் அடிக்கடி சேர்க்கப்பட்டு வர நாளுக்கு நாள் 2, 5, 6, 8, 10, 15-தடவைகளில் நீர் பிரிய ஆரம்பித்து வீக்கம் வடியலாயிற்று. முதல் நாளிலிருந்தே நிறைய உப்புக் கஞ்சி முடிந்தவரையில் சாப்பிடவும் செய்யப்பட்டாள். முன் வைத்திய வழக்கப்படி பால், ரொட்டி முதலிய ஆகார வகைகள் அறவே நிறுத்தப்பட்டன.

ஒரு வாரத்திற்குள் பிணியாளியின் வயிறு வீக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய, உதரவேதம் மறுபடியும் தேவையிராதென்ற எண்ணம் கொள்ளலாயிற்று. மென்மேலும் முன்போல் வைத்யம் செய்யப்பட்டுவர தினம் 3, 4 தடவைகளில் மலப்ரவிருத்தியும் ஏற்பட்டது. நீரும் ஓயாது பகல் 8-தடவை, இரவு 10 தடவைகளாகப் போய்க்கொண்டிருந்தது 3 வாரங்களுக்குப்பின் பிணியாளி தினசரி காலையில் கோமூத்திரம் டீஸ்பூன் 2 வீதம் சிறிதளவு பாலில், விடாது சாப்பிட்டு வரச் செய்தாள். சென்ற டிசம்பர் மாத மத்தியிலிருந்தும் பூர்ண சௌக்ய நிலைமை யேற்பட்டு சாதம் சாப்பிடலானாள். காப்பி, இட்டலி, தோசை முதலியனவும் சூப்பு, மாம்சாதிகளும் சிறுகச் சிறுக உபயோகப்படுத்திவர ஜனவரி மாத மத்தியிலிருந்தும் பூர்ண சுகமேற்பட்டு தன் ஊருக்குச் சென்று வர ஆவல் கொண்டாள். ஆயினும் மறுபடியும் சிலநாட்கள் வரையில் ஔடதப்பிரயோகம் விடாது செய்து கொண்டு சுத்தமாக மாஸிக தர்மம் ஏற்படும் வரையில் குறைந்தது மறு நாலுமாத காலம் வரையில் எச்சரிக்கையாக விருக்கவேண்டுமென்று சொல்லி பிப்ரவரி மாதாரம்பத்தில் ஊர் சென்று மார்ச்சு மாதத்தில் திரும்பி வந்து வேண்டிய மருந்துகளைப் பெற்று ஊர் திரும்பியுள்ளாள்.

ஷெ பிணியாளி ப்ரச்ன பரீக்ஷையினின்றும் கர்ப்பாசயக்கோளாறினால் பீடிக்கப்பட்டவளாகக் கருதப்பட்டு பரிஹரிக்கப்பட்டாள். மேலும் அதற்கென்றே முக்யமாக ரஜப்ரவர்த்தினீவடி, காஸீஸ பஸ்மம், அசோகாரிஷ்டங்கள் முக்யமாகவும், சோதாரி மண்டூரம், சங்கவடி, புனர்நவா மண்டூரங்கள் அனுஸரணையாகவும் கோமூத்திரப்ரயோகம் ஐச்சிகமாகவும் உபயோகிக்கப்பட்டுவர வற்புறுத்தப்பட்டுள்ளாள்.

சரபேந்திரர் வைத்ய முறைகள்.

(குன்மரோக சிகிச்சை)

[தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 2. பதிப்பாசிரியர்கள் ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி, B.A., ஸ்ரீ S. வெங்கட்டராஜன், L.I.M. விலை சாதா பைண்டு 3—8—0 கலிகோ பைண்டு 4—0—0 கிடைக்குமிடம்—ஸ்ரீ S. கோபாலன் B.A., B.L., கௌரவ காரியதர்சி, சரஸ்வதி மஹால் லைப்ரெரி, தஞ்சாவூர்.]

தஞ்சைமா நகரில் 1798 முதல் 1832 வரை ஆண்டு வந்த மன்னர் சரபோஜி II மஹாராஜா பல கலைகள் பயின்றவர். அவர் ஒவ்வொரு வித்யையிலும் ஆராய்ச்சியிலும் சிறந்தவராக விளங்கினவர். பல விஷயங்களையும் ஒரே இடத்தில் பார்க்க, தெரிந்துகொள்ள பல அபூர்வமான புத்தகங்கள், சுவடிகள் முதலியவைகளை அரும்பாடு பட்டு அநேக வித்வான்கள் உதவியுடன் ஸரஸ்வதி மஹால் என்னும் புத்தகாலயத்தை ஸ்தாபித்தவர். இதில் வைத்ய ஸம்பந்தமான பல விஷயங்களையும் சேகரித்து "தந்வந்தரி மஹால்" என்பதையும் தனியாக அமைத்தார். இந்த ஸ்தாபனத்தில் ஆங்கிலம் முதலிய பல பாஷைகளிலும் ஸம்ஸ்கிருதம் முதலியவைகளிலும் சுமார் 1000 புத்தகங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

ஷை மன்னர் பல வைத்தியர்களை ஒன்று திரட்டி அநுபவத்தில் மிக உயரிய பிரயோகங்களை மட்டில் சேகரித்து லக்ஷக்கணக்கில் செலவு செய்து அரன்மனைத் தமிழ் வித்வான்களைக் கொண்டு எளிய நடையில் செய்யுளாக 18 புத்தகங்கள் எழுதுவித்தார். அங்ஙனம் எழுதி முடித்தவைகளில் இந்த குன்மரோக சிகிச்சையும் ஒன்று.

இப்புத்தகம் படித்தவர்களுக்கேயல்லாமல் படிப்பவர்களுக்கும் பயன்படும்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. முகவுரையும் மிக விரிவாக 118 பக்கங்களில் அமைந்திருக்கிறது. இதில் சரபேந்திரர் முறைகளின் சரித்திரம், குன்மவியாதியின் மேனாட்டவர், நம்நாட்டவர்களுடைய நிதானமும், ஆயுர்வேதத்தின் அடிப்படையான எல்லா அம்சங்களும் ஆயுர்வேத நூல்களின் வரலாறும் விஸ்தாரமாக எழுதப்பட்டிருக்கின்றன. இப்பாகம் ஆயுர்வேதம் என்பதை அறிந்துகொள்ள வேண்டியவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்குமென்பதில் ஐயமில்லை

அடுத்தபடியாக சரபேந்திரர் முறைகள். 182 பக்கங்களில் குன்மவியாதிகளுக்கான 134 முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. செய்யுட்களுக்கு விளக்கமும் எழுதப்பட்டிருக்கிறது. இம்முறைகளெல்லாம் பிரசாரத்திலில்லாதிருந்த குறைதீர இப்புத்தகம் இப்போது வெளிவந்திருக்கிறது. இதை ஒவ்வொரு வைத்யரும் அநுபவத்தில் பார்க்க

வேண்டியது அவசியமே. கைகண்டதாகப் பார்த்து எடுத்துத் தொகுத்த விஷயமென்பதால் இதில் தவறு ஒன்றுமிருக்காதுஎன்றே நம்பலாம். நாட்டு வைத்தியர் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை அனுபவத்தில் கொண்டுவருவது அத்யாவசியம்.

இதற்குமேல் அநுபந்தம் என்ற தலைப்பில் குணபாடம் ஒன்று இலை, வேர், பட்டை, கிழங்கு, விதை, புஷ்பம்-இது முதலியவை களைத் தனியாகப் பிரித்து எழுதியும், சுத்திக்கிரமங்களும், பெயரக ராதியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெயரகராதியில் 246 மருந்து களுக்கு ஆறு பாஷைகளில் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் பயிலுபவர்களுக்கும், பயின்றவர்களுக்கும் உபயோ கப்படக்கூடியது.

இப்புத்தகத்தைப் போலவே மற்ற புத்தகங்களையும் வெளியாக்க லைப்ரேரி நிர்வாகத்தினருக்கு அரசாங்கம் உதவியளித்து எல்லோரை யும் அறிவும் ஆற்றலும் அடையும்படி செய்வார்களென்று நம்பு கிறோம்.

காலரா அல்லது விஷ வாந்தி பேதி 0—2—0
குழந்தை வளர்ப்பு 0—4—0

[இவ்விரு சிறு நூல்களும் டாக்டர் S. A. ஸஞ்சீவி அவர்களால் வெளியிடப்பட்டது கிடைக்குமிடம்:— டாக்டர் S. A. ஸஞ்சீவி, ஸஞ்சீவி ஆஸ்பத்திரி, சேலம்.]

முதல் நூல்— "காலரா" நோயின் லக்ஷணம், வரும் காரணம் குறிகள், முதல் சிகிச்சை முதலியவைகளை சாதாரணமாக எல்லா ஜனங்களும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் வெளியிடப்பட் டிருக்கிறது.

அடுத்த "குழந்தை வளர்ப்பு" என்னும் நூல் மிக அழகாக அமைந்திருக்கிறது. பருவத்துக்கேற்ற பாட்டு, அதற்கேற்ற விவரங் கள் நன்குகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரு நூல்களும் எல்லோரும் வாசிக்க வேண்டியவைகளாகும்.

திருச்சி ஆயுர்வேத ஸபா

ஷை ஸபையின் தத்வித்யஸம்பாஷா பரிஷத் கூட்டம் 6-3-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஸ்ரீமான் P. G. கணபதி சாஸ் திரிகள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ் திரி அவர்கள் ஆஸவாரிஷ்டங்களின் நிர்மாணத்தைப்பற்றியும் அதில் நிர்மாண காலத்தில் ஏற்படும் தவறுதலால் ஆஸவாரிஷ்டங்கள் கெட்டுப்போவதைத் தடுக்கும் முறையையும் பற்றி விரிவாகப் பேசினர்.

மற்ருெரு கூட்டம் 31-3-49 வியாழன் மாலை 4-மணிக்கு ஆத்ரேய ஆயுர்வேதசாலைக் கட்டடத்தில் ஸ்ரீ V.B. நடராஜ சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. கல்கத்தாவிலிருந்து, மதராஸ் யூனிவர்ஸிடிக்கு இந்திய வைத்திய கலாசாலையை அதனுடன் இணைப்பதைப் பற்றிய விஷயத்தில் ஆலோசனை கூற வந்த ஸ்ரீமான் D. N. பானர்ஜீ M. D. (Professor of Pathology, Carmichael Medical College, Calcutta) அவர்கள் அன்று ஆயுர்வேத ஆராய்ச்சியில் தனது அனுபவத்தை விளக்கிக் கூறினர். அன்னர் சோப்ர கமிட்டியினல் சிபார்சு செய்யப்பட்டிருக்கும் ஆயுர்வேத-அந்நிய வைத்திய இணைப்பைப்பற்றிப் பேசுகையில், இரு வைத்திய சாஸ்திரங்களின் பகுதிகளை அவ்வவ்வாறே கலப்பதால், ஆயுர்வேதமும் மற்ற வைத்தியமும் அதனதன் தனித்தன்மையை இழந்து விடுவதுடன், பயிலும் மாணவர்களுக்கும் மிகவும் குழப்பத்தை உண்டாக்குவது இயற்கையே. அதனல் ஆயுர்வேதத்தின் மூல தத்துவங்களை ஆராய்ந்து, அத்தத்துவங்களுக்குச் சிறிதளவேனும் மாறுதல் ஏற்படுத்தாமல் அச்சித்தாந்தத்தின்படி மற்றவைத்திய விஷயங்களை ஆராய்ந்து ஆயுர்வேத மயமாக ஒன்றுகச் செய்தல் தான் யுக்தமே தவிர வெவ்வேருன அடிப்படைத் தத்துவங்களை ஆதாரமாக உடைய சாஸ்திரங்களை இணைப்பது அல்லது கலப்பது (Amalgamation or Synthesis) என்பது கெடுதியை விளைவிக்கும் எனத் தகுந்த ஆதாரங்களுடன் கூறினர்.

பிறகு உபன்யாஸகருக்கு வந்தனேபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. — S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, கார்யதர்சீ.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின்
திருச்சி ஜில்லா முசிரி தாலுகா கிளைச் சங்கம்
ஹெட் ஆபீஸ்: சோபனபுரம்

டி சங்கத்தின் முதலாவது கூட்டம் முசிரி தாலுகா விஸ்வாம்பாள் சமுத்திரம் கிராமத்தில் 18-4-49 திங்கட்கிழமையன்று வைத்ய பூஷணம் V.R. சுப்ரமண்ய ஐயர் அவர்கள் தலைமையில் மாலை 5 மணிக்கு கூடியது. தாலுகாவின் பல கிராமங்களிலிருந்தும் 20 வைத்தியர்களும் பல வைத்திய அபிமானிகளும் வந்திருந்தனர். சங்கத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்பட்டபின் வைத்யர் V. R. வேணுகோபால் ராஜா (வைரிசெட்டிப்பாளையம்) தலைவராகவும், S. T. ஸ்ரீனிவாச ஐயங்கார் (சோபனபுரம்) காரியதரிசியாகவும், G. ராமஸ்வாமி ஐயங்கார், சேஷாசலப்பண்டாரம், குழந்தைவேல் பண்டாரம் ஆகிய மூவரும் கமிட்டி மெம்பர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் 7-மணிக்கு வந்தனேபசாரத்துடன் இனிது முடிந்தது.

— S. T. ஸ்ரீநிவாஸன், கார்யதரிசி.

औषधं मङ्गलं मन्त्रो ह्यन्याश्च विविधाः क्रियाः ।
यस्यायुस्तस्य सिद्ध्यन्ति न सिद्ध्यन्ति गतायुषि ॥ १६ ॥

முன்பே வைத்தியன் ஆயுஸுக்கு அதிகாரியல்ல (न वैद्यः प्रभुरायुषः) என்று சொன்னேம். ஆயுர்பலம் அவரவரின் கர்மாயத்தம். மணி மந்திர ஔஷதங்கள் மற்ற சுபக் கிரியைகள் யாவும் ஆயுர்பல மிருந்தால்தான் பயன் படும். ஆயுர்பலமில்லாவிடில் பலிக்காது.

ஆதலால் வைத்தியன் மேல் சரியாக சிகித்ஸை செய்யவில்லையென்று வீண்பழி சுமத்த வேண்டாம் என்று பொதுஜனங்களறிவதற்கும், வைத்தியனுக்கு ஒரு ஆறுதலுக்கும் இந்த உபதேசம். 16

विकारनामाकुशलो न जिह्रीयात् कदाचन ।
न हि सर्वविकाराणां नामतोऽस्ति ध्रुवा स्थितिः ॥
नास्ति रोगो विना दोषैर्यस्मात्तस्माद्विचक्षणः ।
अनुक्तमपि दोषाणां लिङ्गैर्व्याधिमुपाचरेत् ॥ १८ ॥

நூலில் பெயர் கூறப்படாத ஒரு நோய் புலப்பட்டது. அப்பொழுது இந்நோய் நூலில் கூறப்படவில்லையே என்று நூலுக்கு ஒருவித குறையையும் எண்ணிவிடக்கூடாது. பெயர் புரியவில்லையே என்று சிகித்ஸை செய்யாமல் வாளாவிருக்கவேண்டிய அவசியம் சிறிதுமில்லை. ஸகலமான வியாதிகளுக்கும் தனிப் பெயர் கொண்டு ஸ்திரமான இருப்புத் திட்டமிட முடியாது. வாதாதி தோஷ விக்ஞானமே சிகித்ஸைக்கு முக்கிய வழிகாட்டி; பெயரல்ல. எவ்விதமெனில் தோஷங்களன்றி ரோகங்கள் இல்லை. ஆதலால் தோஷங்களுடைய லிங்கங்களை நன்ருய் கவனித்து எந்தப் புதிய நோயாயிருந்தாலும் சிகித்ஸை செய்துகொள்ளலாம்.

முதலாவது சுலோகம் சரகாசாரியரால் முதலில் எழுதப்பட்டது. பிந்திய ஆசார்யர்கள் எல்லோரும் தங்கள் கிரந்தங்களில் வரைந்துள்ளார்கள். ஸித்தாந்த நிதானக் கிரந்த கர்த்தா ஸ்ரீ கணநாதஸேனர் புதிய வியாதிப் பெயர்களிடுவதற்கு மிக அநுகூலமாக அழகாய் இதை வியாக்கியானம் செய்துள்ளார்.

வரப்போகும் ஸகல ரோகங்களுக்கும் ஸ்திரமான பெயர் ஏன் கொடுக்க முடியாது என்பதற்குக் காரணத்தையும், அங்கு எவ்விதம்

ஊகித்துக் கிரியை துவக்கவேண்டுமென்றும் ஸ்ரீ வாக்படர் விளக்குகிறார்— ஹிருதய ஸூ. அ. 12

स एव कुपितो दोषः समुत्थानविशेषतः ।
स्थानान्तराणि च प्राप्य विकारान् कुरुते बहून् ॥

तस्माद्विकारप्रकृतीरधिष्ठानान्तराणि च ।
बुद्ध्वा हेतुविशेषांश्च शीघ्रं कुर्यादुपक्रमम् ॥

வியாதியின் விளைவிற்கு தோஷம் ஒரே காரணமாயினும் அதே வாதாதி தோஷமானது இரண்டு வேறு காரணங்களால்— அதாவது தோஷத்திற்கு எது ஹேதுவோ அதனுடைய தனிப்பட்ட விசேஷங்களினாலும், கோபத்தை யடைந்த தோஷங்கள் விகாரங்களை உண்டு பண்ண எந்த ஒரு விசேஷ ஸ்தானத்தைப் பற்றுகிறதோ அந்தந்த ஸ்தான விசேஷங்களினாலும் அநேகவிதமான விகாரங்களைச் செய்யும் ஆகார காலதேசங்களுடைய மாறுபாடுகளினால் தோஷங்களை கோபிக்கச் செய்யக் கூடிய ஹேதுக்கள் எத்தனை விதம் என்பதை எவ்வித மெண்ண முடியும்! ஹேதுக்கள் மாறினாலும், ஆசயங்கள் மாறினாலும். ஸகல நோய்களுக்கும் ஸமவாயகாரணமான தோஷங்களுடைய நியதமான அததன் ஸ்வரூபங்கள் மாறுவதில்லை. ஆதலால் பெயர் தெரியாததற்காக அஞ்ச வேண்டியதில்லை, காரணங்களுடைய விசேஷங்கள்— ரூக்ஷத்தினால் கோபமடைந்த வாயுவா, சீதத்தினால் கோபமடைந்த வாயுவா? இது போல— சாகா விசேஷங்கள்— ஆம பக்வாசயங்கள் முதலிய விகாரத்தின் இயற்கை விசேஷங்கள்— தோஷங்களுடைய லக்ஷணங்கள் இந்த மூன்று பகுதிகளையும் ஆராய்ந்து பார்த்து தாமதமின்றி சிகித்ஸை புரிய வேண்டும்.

குறிப்பு:— இவ்விதம் ஆயுர்வேதசாஸ்திரத்தின் தனிச்சிறப்பு விளங்குகின்றது. மேல்நாட்டு வைத்திய சாஸ்திரம்போல் ஒரு ஜ்வரத்தில் அததற்குக் காரணமாகக் கல்பித்துள்ள ஒரு ஜீவாணு பரீக்ஷைகளினாலும் கிடைக்காவிடில் என்ன ஜ்வரமென்று நிர்ணயிக்கமுடியாது. ஜீவாணு நிர்ணயமாகாததால் சிகித்ஸையும் செய்யமுடியாது— என்ற கஷ்டம் ஆயுர்வேதத்தில் இல்லை. பெயர் கூறமுடியாவிடிலும் சிகித்ஸை செய்து ஸ்வஸ்தம் செய்துவிட முடியும். புதுப்பெயர் அவசியமாயிருந்தால் பிறகு பரீக்ஷை செய்து புதிய நாமகரணம் இடுவதிலும் சாஸ்திர விரோதமில்லை. இந்த ரீதியில்தான் ஸ்ரீ கணநாதஸேனர் ஸித்தாந்த நிதானத்தில் சில நோய்களுக்குப் புதிய பெயர் கல்பித்துள்ளார். 17, 18

रोगमादौ परीक्षेत ततोऽनन्तरमौषधम् ।
ततः कर्म भिषक् कुर्याज्ज्ञानपूर्वं विचक्षणः ॥१९॥

முதலில் ரோகத்தின் விசேஷங்களை நிதான-பூர்வரூப-ரூப-ஸம்பிராப்தி உபசயங்களென்ன, ஸஞ்சய-பிரகோப-பிரஸரங்களென்ன எல்லாவற்றையும் அலசிப் பார்க்கவேண்டும், பிறகே தகுந்த ஔஷதங்களைப் பரீக்ஷித்து மிகவும் கவனத்துடன் இதைச் செய்யவேண்டும்; இதைச் செய்யக்கூடாது, ஏன் செய்யவேண்டும்? ஏன் விலக்க வேண்டும்— என்ற தீர்மான ஞானத்துடன் வைத்தியன் எப்பொழுதும் சிகித்ஸை செய்யவேண்டும்.

இந்நாளில் பொதுவாய் இவ்வித ஞானத்துடன் சிகித்ஸை செய்வது அரிதாய்விட்டது. காரணம் ஞானக்குறைவுடன் சிகித்ஸை, திரவியம் ஸம்பாதிக்கும் தொழிலாக ஆகிவிட்டதே. ரோக பரீக்ஷைக்கு முன்பு நோயாளியின் பொருள் அந்தஸ்தின் பரீக்ஷை செய்வதும், நோகத்திற்குத் தகுந்த மருந்தைக் கொடுக்காமல் கைவசம் வியாபாரத்திற்குத் தயாராக்கி வைத்திருக்கும் மருந்துகளைச் செலவு செய்வதுமே எல்லா வைத்திய முறைகளிலும் நடைமுறை வைத்தியமாகிவிட்டது. இதற்கும் காரணம் வைத்தியர்களுடைய குற்றமல்ல; அரசாட்சியின் குற்றமே. 19

मूर्खश्चोरस्तथा म्लेच्छो ब्रह्मघ्नो मत्स्यघातकी ।
द्वेष्टा च ग्रामकूटश्च वंचको मांसविक्रयी ॥
एतांस्तु व्याधिना ग्रस्तान् न कुर्याच्छमनक्रियाम् ।
तेषां जीवातिसंदाता वैद्यो भवति पापभाक् ॥ २१ ॥

முரடன் அல்லது முட்டாள், மிலேச்சன், பிரம்ஹஹத்தி தோஷம் செய்தவன், புண்ய தீர்த்தங்களில் மத்ஸ்யம் பிடிப்பவன் தன்னை (வைத்தியனை) துவேஷிப்பவன், தேசத்துரோஹி, வஞ்சகன், சாப்பிடக் கூடாத கோ மாம்ஸம் முதலியவைகளை விற்பவன் இவர்களுக்கு வியாதி பீடையிருப்பினும் சிகித்ஸை அரசாங்க வைத்தியசாலைகளிலன்றி தனிப்பட்ட முறையில் ஸ்வதந்திர சிகித்ஸை செய்துகொண்டிருக்கும் வைத்தியன் செய்யக்கூடாது. தவறி வைத்தியம் செய்தால் ஆரோக்கியம் பெற்ற இந்த துஷ்டர்களிடமிருந்து வெகு விதக் கேடுகள் ஏற்படலாம். 21

दर्शनस्पर्शनप्रश्नैः परीक्षेत च रोगिणम् ।

रोगं निदानप्राग्रूपलक्षणोपशयाप्तिभिः ॥ २२ ॥

இந்த சுலோகத்தின் பொருள் நிர்த்தாரணத்தில் பிராசீன உரையாளர்களுக்கும் நவீன உரையாளர்களுக்கும் மதபேதமிருக்கிறது. அதன் விஸ்தாரத்தை மாதவநிதானத்திலும் ஸித்தாந்த நிதானத்திலும் உரைகளில் காண்க.

ரோகத்தின் அவஸ்தைகளும் தன்மைகளும் நிதானம், பூர்வ ரூபம், ரூபம், ஸம்பிராப்தி, உபசயம் ஆகிய ஐந்துவித விக்ஞானங்களினுல் ஏற்படுகிறது. இவைகளை ரோகியினிடத்தில் அறிய, தர்சனம்-கண்ணினுல் அறியக்கூடிய கார்யம், ஸ்பர்சனம்-தொட்டுப் பார்ப்பதால் அறியக் கூடியவை— பிரச்னம்-வாயால் கேட்டுத் தெரிந்துக் கொள்ளக் கூடியவை, ஆக மூன்றுவித உபாயங்களினுல் செய்துகொள்ள வேண்டும்.

சொல்லப்போகும் அஷ்டவித பரீக்ஷைகளும் இந்த மூன்றுவித உபாயங்களுக்குள் அநேகமாய் அடங்கிவிடும் என்று கிரந்த கர்த்தாவின் அபிப்பிராயம். ஆனுல் அநேகமாய் அடங்குமே தவிர முற்றிலுமடங்காது.

“प्रत्यक्षतस्तु रोगतत्वं बुभुत्समानः सर्वैरिन्द्रियैः सर्वानिन्द्रियार्थानातुरगतान् परीक्षेत अन्यत्र रसज्ञानात्” चरक. वि. अ. 4. என்று சரகாசாரியர் கூறியபடி பிரச்னத்துடன் கூட, ரஸனேந்திரியம் தவிர நான்கு ஞானேந்திரியங்களால் நோயாளியின் திரேகத்தில் அறிய வேண்டிய அகில விஷயங்களையும் அறியவேண்டியது அவசியமாகின்றது. எந்த இந்திரியத்தால் எந்த விஷயங்கள் அறியவேண்டும் என்பதையும் மிகச் சுருக்கமாகக் கூறுகிறோம். பரீக்ஷைக்கு வேண்டிய யந்திரசாதனங்கள் முதலிய விஸ்தாரத்தை பெரிய கிரந்தங்களிலிருந்தும், குருமுகமாயும் தெரிந்துகொள்ள வேண்டும்.

श्रवणेन्द्रिय परीक्षा— காதினுல் செய்யக்கூடிய பரீக்ஷையாவன-புப்புஸ ஹிருதய ரோகங்கள், சுவாஸ ரோகம், குடல் சப்தங்கள், விரணங்களில் சப்தத்துடன் வாயு நுரையுடன் ரக்தத்தை வெளிப்படுத்துவது முதலிய. காதினுல் செய்யும் பரீக்ஷைக்கு ‘ஸ்டெதஸ்கோப்’ எனப்படும் நாடீயந்த்ரம் கருவியாக இக்காலத்தில் ஸௌகர்யத்திற்காக உபயோகிக்கப் படுகிறது.

स्पर्शनेन्द्रिय परीक्षा— தோல் இந்திரியத்தால் அறியக்கூடியவை— ஜ்வரம் முதலியவைகளில் சீதம், உஷ்ணம், தோல் வியாதி முதலியதில் சொர சொரப்பு, வழவழப்பு முதலியன. யகிருத்

பிலீஹம் முதலிய ரோகங்களில் எவ்வளவு கடினம், வளர்ச்சி, எல்லை முதலிய நாடிபரீக்ஷை முற்றிலும் இதில் உட்பட்டவையே.

चक्षुरिन्द्रिय परीक्षा— கண்ணினால் செய்யப்படும் பரீக்ஷை. சரீரத்தில் வர்ண விசேஷங்கள், புஷ்டி, சோர்வு, இளைப்பு, விரணங்களின் அவஸ்தைகள், மல, மூத்ர ரக்த கப பரீக்ஷைகளுமிதில் அடங்கியவை. இக்காலத்தில் பூதக்கண்ணாடி முதலிய கருவிகள் கண்ணினால் ஆகும் பரீக்ஷைக்கு உதவிக்கு வைத்துக்கொள்ளப்படுகின்றன.

रासनी परीक्षा— சுவையிடமாகிய நாக்கு — வியாதி பரீக்ஷையில் உபயோகப்படுவதில்லை.

घ्राणेन्द्रिय परीक्षा— விரணங்கள், மலரூபமான சிலேஷ்மா, சீழ், ரக்தம், மலம், மூத்ரம், ரஜஸ் (மாதவிடாய் உதிரம்) இவை முதலியதின் நாற்ற விசேஷங்கள், அரிஷ்டக்குறிகளில் காணும் சில நாற்றங்கள் இவைகள் மூக்கு இந்திரியத்தால் பரீக்ஷித்து அறியக்கூடியவை.

प्राश्नी परीक्षा— வாயினால் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவை— தேசம், காலம். பிறவி, பழக்க வழக்கங்கள், வேதனைகளின் உத்பத்திகாலம், அவைகளின் ஏற்றக் குறைவு, சரீர- அக்னிகளுடைய பலாபலத் தன்மை, மல ஜல வாயுக்களுடைய பிரவிருத்தி முதலியவை. இவ்விதமாக வைத்தியன் தனது பஞ்சேந்திரியங்களில் சுவையறியும் நாக்கு நீங்கலாக மற்ற நான்கு ஞானேந்திரியங்களாலும், பிரச்னங்களாலும் -ஆக ஐந்துவித பரீக்ஷைகளினால் பிணியாளியின் திரேகத்தில் சகல பிணிகளையும் அறிந்து யுக்தி யுக்தமான சிகித்ஸையைச் செய்யவேண்டும். 22

சிகித்ஸையின் நான்கு அங்கங்களும், அவைகளின் பிரத்யேக குணங்களும்.

भिषग्द्रव्याण्युपस्थाता रोगी पादचतुष्टयम् ।
चिकित्सितस्य निर्दिष्टं प्रत्येकं तच्चतुर्गुणम् ॥ २३ ॥

दक्षस्तीर्थात्तशास्त्रार्थो दृष्टकर्मा शुचिर्भिषक् ।
बहुकल्प बहुगुणं संपन्नं योग्यमौषधम् ॥ २४ ॥

अनुरक्तः शुचिर्दक्षो बुद्धिमान् परिचारकः ।
आढ्यो रोगी भिषग्वश्यो ज्ञापकः सत्ववानपि ॥ २५ ॥

இவை அஷ்டாங்கஹிருதய சுலோகங்கள்.

வைத்தியன், ஔஷதம், பரிசாரகன், நோயாளி ஆக நான்கு அங்கங்கள் சிகித்ஸையில் இருக்கின்றன. இவைகளுக்கு நான்கு பாதங்கள் என்று சாஸ்திரத்தில் கூறுவது வழக்கம். அவைகள் ஒவ்வொன்றின் குணங்கள் பலவிருப்பினும் முக்கியமாக நான்கு குணங்கள் பெற்றிருக்கவேண்டும். ஆகவே சிகித்ஸை மொத்தம் 16 அங்கங்கள் கொண்டது. நான்கு பாகங்களில் வைத்திய னுக்கு மற்றவைகளைப் பார்க்கிலும் தன் குணங்கள் முற்றிலும் நன்ருய் அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்தால் வைத்திய னுடைய நான்கு பிரதான குணங்கள் முதலில் கூறப்படுகின்றன. 1. சீக்கிரத்தில் கார்யம் செய்யும் ஸமர்த்தன், 2. நல்ல ஆசிரி யரிடம் ஆயுர்வேத சாஸ்த்ர தத்துவங்களைக் கசடறப் பயின்ற வன், 3. அனுபவம் வாய்ந்தவன், 4. உள்ளும் புறம்பும் பரி சுத்தன்— இவ்விதம் வைத்தியனிருக்க வேண்டும்.

1. கஷாயம், சூர்ணம், ஸ்வரஸம் முதலிய பலவித கல்பங் கள்— (மருந்து விதங்கள்) செய்யத்தக்கதாயும், 2. பல அவஸ் தைகளில் பிரயோகிக்கக் கூடியதும், 3. நல்ல தேசத்தில் பயிராகி சரியான காலத்தில் சேகரிக்கப்பட்டு, வழுவின்றிக் காப்பாற்றப் பட்டதும், 4. ஒழுங்காகப் பாகம் செய்யப்பட்டுள்ள ஸம்பத்து (குணம்) பெற்றதுமான மருந்து சிலாக்கியம். இவ்விதமில்லா விடில் மருந்து குணம் தராது.

பரிசாரகன்— 1 நோயாளியினிடத்தில் இயற்கையிலேயே அன்பு கொண்டவனும், 2. உள்ளும் புறம்பும் பரிசுத்தனும், 3 சீக்கிரத்தில், 4 ஸமயோசிதமாய் செய்யும் புத்திசக்தி பெற்றவ னுமாக இருக்கவேண்டும். புருஷ நோயாளிக்குப் புருஷ பரிசார கனும், ஸ்திரீ நோயாளிக்கும், குழந்தைகட்கும் ஸ்திரீ பரிசாரி கையும் அமைக்கப்படவேண்டும்.

இது விஷயமிங்கு ஆசார்யரால் சொல்லப்படாவிடினும், கம்ய ஸ்திரீகளுடைய தர்சனத்தை நோயாளி பரிஹரிக்கவேண்டுமென்று நோயாளிக்குள்ள பொது உபதேசத்தில் இருப்பதால் அந்தந்த பாலுக்குகந்தபடியே பரிசாரகர் அமைக்கப்பட வேண்டுமென்று பழய ஆசிரியர்களும் சொல்லியுள்ளார்கள். வைத்தியர்களுக்கு சிக்ஷை கொடுப்பது போல் பரிசாரகர்களுக்கும் ஆரோக்கியசாலைகளில் சிக்ஷை கொடுத்தலவசியம்.

நோயாளி— 1. பணம் படைத்தவனுகவும், 2. வைத்தியர் சொல்படி முற்றிலும் நடப்பவனுயும், 3. தனது உபத்திரவங்களை யும், குணுபகுணங்களையும் சரியாக உணர்ந்து உரைக்கத் தெரிந் தவனுகவும், 4. பத்யங்களை ஸேவிக்கவும், அல்லது இந்த வைத்

தியர் தேவலையா அவர் தேவலையா வென்பது போன்ற சபல சித்தமில்லாமல் நல்ல மனோதைர்யம் படைத்தவனாயுமிருக்கவேண்டும். முற் கூறிய எல்லாவற்றிலும் எவ்வளவு மேன்மையோ அவ்வளவு சிகித்ஸை மேன்மை பெறும். 23, 24, 25.

தூத பரீக்ஷை.

दूतस्य प्रश्नाक्षरयोगसंख्या त्रिघ्नाऽष्टभाज्या प्रवदन्ति शेषे ।
समे च मृत्युर्विषमे च नैव विलोक्य वैद्याः खलु प्रश्नकाले ॥ २६ ॥

दूतो रक्तकषायकृष्णवसनो दण्डी जटी मुण्डितः
तैलाभ्यक्तवपुर्भयङ्करवचा दीनोऽश्रुपूर्णेक्षणः ।
भस्माङ्गारकपालपाशमुसली सूर्योऽस्तगे व्याकुलः
यः शून्यस्वरसंस्थितो गदवतो दूतस्तु कालानलः ॥ २७ ॥

स्वज्ञातिः श्वेतवस्त्रो द्रविणयुतकरः क्षत्रियो ब्राह्मणो वा
तांबूलास्यः सुशीलः शुभवचनवदः स्यात्प्रशस्तोऽत्र दूतः ॥ २८ ॥

सन्ध्याकाले तदा रात्रौ स्नानभोजनसंगमे ।
विपरीतेषु कालेषु न गच्छेत्तत्र बुद्धिमान् ॥ २९ ॥

வைத்தியன் நோயாளியைப் பார்க்கப் புறப்படுங்கால் நோயாளிக்கு பலிக்கக் கூடிய அசுபங்களை ஸூசனை செய்விக்கும் நிமித்தங்களை தூதன் மூலமாகவும், சகுனத்தின் மூலமாகவும் இருவிதமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். வைத்தியனைக் கூப்பிட வரும் மனிதருக்கு தூதன் என்று பெயர். அவன் மூலமாக ஊஹிக்கவேண்டிய விவரங்களாவன.

வந்த தூதன் வைத்தியரைக் கண்டு முதலில் கேழ்க்கும் வாக்கியத்தில் உள்ள அக்ஷரங்களை எண்ணி அந்த எண்ணை மூன்றினால் பெருக்கிக் கூடுதல் தொகையை எட்டால் வகுத்து வந்த மீதி எண்ணானது இரட்டைப் படையாக விருப்பின் பிணியாளிக்குப் பிணி விலகுவது கடினமென்றும், ஒற்றைப்படையாக விருப்பின் பிணி சீக்கிரத்தில் விலகி ஸுகமேற்படுமென்றும் வைத்தியர்கள் அறிந்து தகுந்தபடி நடந்து கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாக— தூதன் வைத்தியரைப் பார்த்து 'தயையால் இப்பொழுது வரமுடியுமா?' என்று வினவுகிறான். இதிலிருக்கும் 15 எழுத்துக்களை 3-ஆல் பெருக்க 45. அதை, 8-ஆல் வகுக்க மிச்சம் 5. இது ஒற்றைப் படை. இங்கு பிணியாளி சுகமடைவான்.

தூதன் சிவப்பு- கஷாயம்-கருப்பு வர்ணங்கள் உள்ள ஆடையை அணிந்திருப்பினும், தடி பிடித்துக் கொண்டிருப்பினும், சடைத்தலையோ மொட்டைத்தலையோ வைத்திருப்பவனும், எண்ணெய் பூசிய உடலுடனும், கடுஞ் சொல் பேசுபவனும், துக்கத்துடனும், கண்ணீருடனும், சாம்பல், தணல், ஓடு, சுருக்குக் கயிறு உலக்கை ஏதாவது கையிலேந்திக் கொண்டுா், ஸூர்யாஸ்தமனத்திற்குப் பிறகும், மனக் கலக்கத்துடனும் சூன்யமான த்வனியுடனும் வருவானாகில் அங்கே நோயாளிக்கு ஆரோக்கிய மேற்படுவது கடினம்.

தூதன் இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும், வெண்மை உடையணிந்திருந்தாலும், கையில் திரவியத்துடனும், வாயில் தாம்பூலத்துடனும், நற்குண சீலனும், மங்களவார்த்தை பேசுபவனும், பிராமண அல்லது க்ஷத்திரிய குலத்தில் ஜனித்தவராயின் அங்கு சிகித்ஸையினால் நல்ல பிரயோஜனம் கிடைக்கும்.

அதி அவஸரமாக இருந்தாலொழிய ஸந்தியாகாலத்தில், நடுநிசியில், வைத்தியன் ஸ்நானமோ, போஜனமோ, ஸங்கமமோ செய்துகொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில் அல்லது வேறு விபரீத கார்யங்களில் வைத்தியனிருந்தால் அச்சமயங்களில் புத்தியுள்ள தூதன் வைத்தியரிடம் அழைக்கவே போகக்கூடாது.

சகுன பரீக்ஷை.

छत्रं गौर्द्विजकन्यकामिषसुरापण्याङ्गना रोचनं
माङ्गल्यं नृपवाजिवारणदधिस्तोत्रादिपाठः शुभः ।
संगीतं करुणाभयानकमहारौद्रैर्विहीनं स्मर-
क्रीडाभावमनोहरं किमपि चेत् बालानि सद्योगिनः ॥ ३० ॥

मार्गच्छेदोऽहिमार्जारगोधासरटवानरैः ।
रोगिद्वाराऽभिनिर्गच्छन् मङ्गलं तदमङ्गलम् ॥ ३१ ॥

पुन्नामा वामतः श्रेष्ठो गजखेचरवर्जितः ।
स्त्रीनामा दक्षिणे श्रेष्ठः शिवाश्यामविवर्जितः ॥ ३२ ॥

दुर्गा काकस्तथा श्वान उलूकखरजंबुकाः ।
निर्गमे वामतः श्रेष्ठाः प्रवेशे दक्षिणाः शुभाः ॥ ३३ ॥

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்

விசேஷ மகாநாடு 7–5–49 சனி பகல் 12 மணிக்கு

மண்டலத்தலைவர்

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரி அவர்களின்

தலைமையில் திருச்சி தேசியக் கல்லூரியில் நடந்தது.

இந்திய வைத்திய முறைகளை ஆரோக்கிய வைத்திய உதவி அளிப்பதில் எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதை பரிசீலனை செய்ய இந்திய மத்ய சர்க்காரால் நியமிக்கப் பெற்ற சோப்ரா கமிட்டியினரால் ஸமர்ப்பிக்கப்பட்ட யாதாஸ்தை மஹாமண்டலம் பரிசீலனை செய்து தனது ஏகமனதான அபிப்பிராயத்தை கீழ்க்கண்ட யாதாஸ்து மூலமாக மத்ய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

சோப்ரா கமிட்டியின் யாதாஸ்தில் அனேக விஷயங்கள் விவாதத்திற்கும் மறுப்பிற்கும் இடமளிப்பினும், மத்ய சர்க்கார் ஆயுர்வேதத்தில் நன்மதிப்பையும் கொண்டு அதன் அபிவிருத்தியில் சிரத்தை காட்டுவதாலும், கமிட்டியார், தான் ஆயுர்வேதத்தை பூர்ண விக்ஞான அடிப்படையுடன் கூடியதாகவும், மற்ற வைத்திய முறைகளிடம் தோன்றும் குறைகளைக்கூட நிரப்பவல்லது எனப் பாராட்டி அதன் அபிவிருத்திக்குகந்த மார்க்கத்தைத் தேடுவதே தனது லக்ஷியமாகக் கருதுவதாக தெரிவித்துக்கொள்வதாலும் மத்ய சர்க்காருடையதும், கமிட்டியுடையதும் மனோபாவத்தைப் பாராட்டி மேற்படி யாதாஸ்தை வரவேற்கின்றது.

சோப்ரா கமிட்டி, இந்திய மேல்நாட்டு வைத்தியப் பிணைப்பையே தனது பிரதான லக்ஷ்யமாகக் கருதி அதற்குகந்த பாடத்திட்டம், ஆராய்ச்சி வைத்ய உதவித் திட்டங்கள் வகுத்துள்ளதை இந்த ஸம்மேளனம் கீழ்க்கண்ட காரணங்களால் தீவ்ரமாகக் கண்டிக்கின்றது.

(1) ஆயுர்வேத மூலதத்வ ஆராய்ச்சியைக் கொண்டு அதன் மூலஸித்தாந்தப்படி அதில் காணப்படும் குறைகளைப் பூர்த்திசெய்து ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்வது என்ற ஸுலபமானதும், முக்கியமாகச் செய்யப்பட வேண்டியதுமான மார்கத்தைச் சிறிதுகூட சிந்திக்கவில்லை.

(2) ஆயுர்வேதத்திலுள்ள குறைகளை அகற்ற, மாறுபட்ட அடிப்படைதத்துவங்களின் மூலபலத்தில் வளர்ந்து வரும் மற்ற வைத்திய சாஸ்திரத்தின் பாகங்களை அவ்விவிதமே இதில் இணைப்பது, பரிசயம், ஆராய்ச்சி முதலியவைகளால் பலம் குன்றியிருக்கும் ஆயுர்வேதத்திற்கு ஒரு வித உபகாரமும் அளிக்காது என்பதோடு மட்டுமல்லாமல், ஆயுர்வேதத்திற்கு பிறகு தவிர்க்கமுடியாத அபாயத்தையும், அழிவையும் அளிக்கவல்லது.

(3) ஆயுர்வேதத்தில் உலகிலுள்ள மற்ற வைத்திய சாஸ்திரங்களின் நல்ல பகுதிகளைச் சேர்ப்பது வரவேற்கக் கூடியதே. ஆயினும், அதற்கு அவைகளை ஆயுர்வேதத்தின் மூலதத்வ ஸித்தாந்தப்படி ஆராய்ந்து, அவைகளையும் ஆயுர்வேத மயமாக்கிக் கொள்ளுவதுதான் சரியான விஜ்ஞானத்திற்குகந்த மார்கமே தவிர, மூலதத்வ ஸித்தாந்தத்திற்கு ஒற்றுவருமா என்பதைச் சிறிதேனும் பரிசீலனை செய்யாமல் அப்படியே சேர்ப்பதென்பது மதியீனம்.

(4) ஆயுர்வேதத்தை ஆலோபதிக் திருஷ்டியில் ஆராய்ந்து ஆயுர்வேதத்திலிருக்கும் நல்ல அம்சங்களை ஆலோபாதிக் வைத்யத்துடன் சேர்க்கும் ஒரே நோக்கம் கொண்டு கமிட்டி வழி சொல்லியிருப்பது ஆயுர்வேதத்திற்கு அழிவை ஏற்படுத்தும்.

(5) எவ்வித சர்க்காருதவி கிடைத்தாலும் ஆயுர்வேதம் தனித்து எல்லாத்துறைகளிலும் வைத்ய உதவி அளிக்க வல்லதல்ல என்ற ஒரு வருந்தத்தக்க தோல்வி மனப்பான்மையுடனேயே ஆயுர்வேத மேனுட்டு முறைக் கலப்பை இது ஆதரிக்கின்றது.

(6) உண்மை என்பது உலகிற்கே ஒன்ருயிருந்தாலும் அதை அடையவும், அறியவும். கடைப்பிடிக்கும் பலவித மாறுபட்ட வழிகளை உதவியாகக் கொண்டுள்ள சாஸ்திரங்களை, உண்மையும், லக்ஷ்யமும் ஒன்ருயிருப்பதற்காக ஒன்ருக்கும் முயற்சி பயனளிக்காது என்பது பெரிய உண்மை.

(7) கமிட்டியின் யாதாஸ்து—பிணைப்பு மிகவும் நல்லதென சிபார்சு செய்கிறதே தவிர, அதற்குரிய சரியான மார்க்கங்களை ஆராய்ந்து கூறவேயில்லை. இரண்டு விஜ்ஞானங்களையும் சேர்த்துப் படிப்பித்தல் காலக்ரமத்தில் அவை ஒன்ருகும் என்று கூறுவது சென்னை முதலிய மாகாணங்களில் அம்முறையிலேயே பாடத்திட்டத்துடன் கடந்த 25 வருஷங்களில் நடத்தப்படும் கல்லூரிகளில் எள்ளளவேனும் பயனளிக்கவில்லை என்பது கண்கூடு.

(8) சரியான போதனுமுறையும், பாடசாலைகளும் ஆராய்ச்சிசாலைகளும் இல்லாததால் இந்திய வைத்திய முறைகள் மிகவும் சீர்குலைந்துவிட்டன எனக் கருதும் கமிட்டி, கிராம வைத்திய உதவி அளிப்புத்திட்டத்தில் இந்திய வைத்தியமும் முறைப்படி பயிலாத வைத்தியர்களுக்கு மேனுட்டு ஆரோக்கிய வைத்திய உதவிமுறையை மணிக்கணக்கில் வகுத்து கற்பிக்கச் சிபார்சு செய்வது விந்தையிலும் விந்தை. மேலும் குவைத்தியர்களை (quaks) அதிகமாக உலகின் கண்ணில் இந்திய வைத்தியத்தின் மதிப்பைத்தாழ்த்தும் சூழ்ச்சி முறையிலுள்ளது.

(9) பிணைத்தல் செய்யாவிடில் ஏற்படக்கூடிய தோஷங்கள் எனக் கருதப்படும்— தொழில் போட்டி, பல வைத்திய முறைகளுக்கு சர்க்கார் உதவி அளிக்க முடியாமை, மேனுட்டு முறைகளிலிருக்கும் நன்மை பயக்கும் உயர்ந்த அம்சங்கள், இந்திய வைத்தியத்தில் சேர்க்கப்படாததால் உண்டாகும் நஷ்டம் என்பது போன்றவை — ஓர் விஞ்ஞானத்தை— அதில் இந்தியாவுக்கேற்றதும் நம் முன்னேர்களின் தவத்தினுல் நிறுவப்பட்டு இந்தியாவுக்கே

தனிப்பெருமை அளிக்கும் வகையில் காப்பாற்றப்பட்டு வந்த ஆயுர்வேதத்தை, அபிவிருத்தி செய்யும் திட்டம் போடும்போது முக்கியமாக - ஏன்? ஒரு பொருட்டாகவே கருதக்கூடாதவையே.

இன்று மேனுட்டு வைத்திய முறை ஆராய்ச்சிக்குச் செலவிடும் அவகாசமும் பணமும் இந்திய வைத்தியத்தின் அபிவிருத்திக்குச் செலவிடப்பட்டால், இந்திய வைத்யம் தன் தனித்தன்மையிலேயே உலகிலுள்ள மற்ற வைத்திய சாஸ்திரங்கள் நன்மை பயக்கும் உயர்ந்த அம்சங்களே, அவ்வைத்திய சாஸ்த்திரங்களுக்கே புதிதான முறையில் அமைத்து சிறப்பிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை,

(9) பரீக்ஷை முறைகளில் ரக்தபரீக்ஷை, Blood pressure பரீக்ஷை— மலமூத்ர பரீக்ஷை முதலியவைகளை மேனுட்டு முறைப்படி ஆயுர்வேதத்தில் சேர்த்துக்கொள்வதால் சாஸ்த்ரீயமான சிகித்ஸையில் அவை ஒருவிதத்திலும் பயன் படாது போவதுடன், பரீக்ஷைக்கும் சிகித்ஸைமுறைக்கும் வாதாதி தோஷ ஸித்தாந்தத்திற்கும் ஒருவித ஸம்பந்தமுமில்லாமல் போவதால், சிறிது சிறிதாக ஆயுர்வேத மூலஸித்தாந்தங்களை உபயோகிக்காமலே சிகித்ஸை செய்யும் நிலை ஏற்பட்டு ஆயுர்வேதம் அழிவதற்கு வழியாகும்.

மேற்கண்டபடி விவாதத்திற்கும் மறுப்பிற்குமிடமளிப்பதால் சோப்ரா கமிட்டி யாதாஸ்து ஆயுர்வேத அபிவிருத்தி முறையாக கீழ்க்கண்டபடி திருத்தியமைக்கப்பட வேண்டும்.

ஆயுர்வேதம் அதன் தனித்தன்மையில் சுத்தமாய் காப்பாற்றப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அதன் ஸம்பந்தப்பட்ட நிர்வாஹம் அதிகாரம் முழுவதும் ஆயுர்வேதம்மட்டும் அறிந்தவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதன் குறைகளைப் பிற வைத்தியங்களிலிருந்து பூர்ணம் செய்ய முயற்சிக்கப்படுமுன் ஆயுர்வேத மூலதர்சனங்களில் ஆராய்ச்சியும் நடைபெற்றிருக்கவேண்டும். இவ்

விதம் ஆராய்ச்சிக்கழகத்தில் ஆயுர்வேத மூலதர்சனங்களிலும், ஆயுர்வேதத்திலும் பூர்ணமான ஆராய்ச்சிகள் நடைபெற்று விஷயவாரியாக ஆயுர்வேத ஸித்தாந்தப்படி புத்தகங்கள் எழுதப்படவேண்டும். பிறகே அது மாணவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும். இவ்விதம் ஆயுர்வேத மூலஸித்தாந்த ஆராய்ச்சியானவுடன், பிறகு மற்ற இந்திய முறைகளான ஸித்தம், யூனனி இவைகளை அதன் மூலஸித்தாந்த ஆராய்ச்சிக்குப் பிறகு அவைகளை ஆயுர்வேதத்திற்கு ஒற்றுவரும்படி இணைக்கவேண்டும்.

பிறகே ஆயுர்வேத அடிப்படையில் மற்ற வைத்திய இணைப்பிற்கு அனுமதிக்கவேண்டும்.

இக்காலத்திலும் ஆயுர்வேத ஸம்பந்தியான வியவகாரங்கள் ஸம்ஸ்கிருதத்திலேயே நடந்து வருவதால் முதலில் ஆயுர்வேதத்தின் விஷயவாரியான பாடபுத்தகங்களை இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான பாடதிட்டம் அமைப்பதின் பூர்வாங்கமாக ஸம்ஸ்கிருதத்திலேயே அமைக்க வேண்டும். பிறகே ஹிந்தியிலும் மற்ற மாகாண பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட வேண்டும்.

யூனிவர்ஸிடி முதலியவைகளில் ஆயுர்வேதத்தின் சிக்ஷணக்காக தனி facility இருக்கவேண்டும். அதில், சுத்த ஆயுர்வேத பண்டிதர்களை மட்டுமே நிர்வாகஸ்தர்களாக இருக்கவேண்டும்.

ஆயுர்வேதம் படிப்பிற்கு வரும் மாணுக்கர்கள் பின் ஆயுர்வேதத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கக்கூடியவர்களாதலால், அவர்களுக்கு, ஆயுர்வேதத்தில் பூர்ண விசுவாசமும், மதிப்பும் ஏற்படும்படி அவர்களுக்கு மூலதர்சனங்களில் பூர்ண ஞானமும் ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல வ்யுத்பத்தியும் கட்டாயப் பாடமாக்கவேண்டும். இவர்களுக்கு நவீன கெமிஸ்ட்ரி-பிஸிக்ஸ் முதலியவைகளின் ஞானம் அவசியமென்பதில்லை. அது research செய்யும்பொழுது research செய்பவர்களுக்குத் தனியாகக் கற்றுக்

கொடுத்தோ, அல்லது அச்சாஸ்திரம் பயின்றவரின் உதவி ஏற்படுத்தியோ அவைகளின் ஞானத்தை ஸம்பாதித்துக் கொடுக்கலாம்.

கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :

1. மதராஸில், இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் :(ஸ்தாபிக்கப் போகும்) ஆயுர்வேத வைத்தியரையே நிர்வாஹத் தலைவராக்க வேண்டும்.

2. ஸெண்டிரல் போர்டு ஆப் இந்தியன் மெடிஸினின் தலைவரும், இந்தியவைத்திய கலாசாலையின் தலைவரும் ஒருவராக இருப்பது நிர்வாஹத்தில் பாரபக்ஷ்யமில்லாமலிருக்க முடியாததால் தனித்தனி நபரையே இவ்விரு ஸ்தாபனங்களுக்கும் தலைவராக நியமிக்கவேண்டும்.

3. இந்திய வைத்ய ஸெண்டிரல் போர்டில், சர்க்காரால் ஸ்வயமாகவே அமர்த்தப்படும் (Nominated) 3 பெயர்கள் ஆயுர்வேத வைத்யர்களாகவே இருக்கவேண்டும்.

4. அந்த போர்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களிலிருந்தே தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

நேத்ர ப்ரகாசிகை.

[G. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சாவூர்.]

(90-ம் பக்கத் தொடர்ச்சி.)

அபத்யமான ஆகாரங்களை சாப்பிடுவதால் மஹா நேத்ர ரோகங்கள் உண்டாகின்றன. ஆகையால் பத்யமான ஆகாரத்தையும் கூறுவோம். நேத்ரங்களில் ரோகம் வருமுன் பத்யத்தினுல் வரும் வியாதிகளைத் தடுத்துவிடலாம்.

வெயிலில் அலைந்து வந்ததும் தலை ஸ்நாநம் செய்வது, அதிக ஜலம் சாப்பிடுவது, அதிக ஸ்திரீ சேர்க்கை, பகல் தூக்கம், இரவில் விழிப்பு, அதிகப் பசி, கோபம், அக்னி

மாந்த்யம், அதிகப் பேச்சு, அதிகப் பாட்டு, நாட்யம், புஷ்ப தாரணம், ரக்த வஸ்த்ரம் தரிப்பது, சந்தனம் பூசிக்கொள்ளு தல், தூமம், தீபத்தைப் பார்ப்பது, தாம்பூலம் போட்டுக் கொள்ளுதல் (வாயில் அடக்கி வைத்துக் கொள்ளுதல்)- மலபந்தம், மூத்ர பந்தம், தயிர், பால் சாப்பிடுவது, மோர், எண்ணெய் சாப்பிடுவது, கீரை, கடுகு, பிண்ணாக்கு, மீன், மாம்ஸபக்ஷணங்கள் சாப்பிடுவது, வெல்லம், புளிப்பு சாமான், உள்ளி, உரைப்பு, பெருங்காயம் இவைகள்சேர்ந்த பக்ஷணங்களை சாப்பிடுவது, தேங்காய்ப்பால் சாப்பிடுவது, அதிக வெய்யிலில் நடமாடுவது, பெருங்காற்றில் நடப்பது, வாஹனத்தில் பிரயாணம், பாயஸம், வடை, உளுந்து, கத் திரி, பாகல், சுரை, பூஷணி, கருணைக்கிழங்கு இவைகளை சாப்பிடுதல், ஊன்றிப் பார்த்தல் (ஸூக்ஷ்மதர்சனம்) இவைகள் அபத்யம். இவைகளால் கண் ரோகங்கள் உற் பத்தியாகின்றன.

பழய சம்பா அரிசிச் சாதம், துவரை, பயிறு, பசுநெய், சர்க்கரை, சுரைத்தளிர், எலியால், பிரமிய வழுக்கை, பொன்னாங்கண்ணி, இளங்கீரை, கீரைப்பாலை, இளம் உள்ளி இலை, இளம் தூதுளம் இலை, சக்ரவர்த்திக் கீரை, சிறுபூளை, சிறுகீரை, மூக்கரட்டை, நெருஞ்சில் கீரை, அருகம்புல் கீரை, இவை பத்யமான கீரைவகைகள்.

கோவை, முள்ளுக் கத்திரி, மணற்றக்காளி, கண்டங் கத்திரி, பிரண்டை, தூதுவளங்காய், தாமரைக் கிழங்கு, இவைகளின் காய்கள் பத்யமானவைகள்.

மூங்கில் முளை, இஞ்சி, தேற்றாங்கொட்டை, கடுக்காய், நெல்லிக்காய், திப்பிலி, மிளகு, பப்பாளிக்காய், வெற்றிலை, மாதுளை, எலுமிச்சை, நார்த்தை இவைகளின் ஊறுகாய் கள் பத்தியம்.

வாழை, முருங்கை, அவரை, புடல், பீர்க்கு, பேய்ப் பீர்க்கு இவை பத்யம்,

ஜீரகம், மல்லி, வெந்தயம், சதகுப்பை, கருவேப் பிலை, ஓமம், இந்துப்பு, நெய்ச்சட்டிப்பூண்டு, கடுகு, நில

வேம்பு, பேரரத்தை, தூதுணங்காய் இவைகள் காய்ந்தது பத்தியம்.

உடும்பு, முயல், ஆடு, மான் இவைகளின் மாம்ஸம் உப்புடன் கலந்து காய்ந்தது பத்தியம்.

கௌதாரி, கோழிக்குஞ்சு, மயில், காடை, நீலக்ரௌஞ்சம், மணிப்புரு, கொக்கு, பொன்னுந்தட்டான், சிட்டுக்குருவி, மாடப்புரு இவைகளின் மாம்ஸம் பத்யம்.

(தொடரும்)

ரக்தஸம்ஹதி அல்லது தமனீஸம்ஹதி.

BLOOD PRESSURE.

[வைத்ய விசாரத. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ]

(99-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற மதங்கள்: முன் கூறிய ரக்தஜமதத்தைக் காட்டிலும் வேறாக விஷஜம், மத்யஜம் என -விஷமுஷ்டி (எட்டிக் கொட்டை) போன்ற விஷங்கள் மத்யம் உபயோகத்தாலும் தாத்காலிகமாக ரக்த அமுக்கம் அதிகமாகி அதனாலும் மதம் ஏற்படுவதுண்டு. ஆனால் விஷத்தின் சக்தி அதிகமாக இல்லாவிடில் தானாகவே சமனமாகிவிடும்.

மூர்ச்சாயம்: மதத்தின் அவஸ்தையில் கவனிக்கப்படாமல் நீடிக்கப்பட்டால் உள்ளுறுப்புகளின் விகிருதி ஏற்படும் நிலை. சிலருக்கு மதாவஸ்தை வெளியில் தெரியாமலேயே திடீரென இந்நிலை ஏற்படுவதுண்டு.

வாத மூர்ச்சாயம்: ஹிருதய அறைகள் விரிவடைதலும், ஹிருதயத்தில் வலியும், தமனிகள் விரிந்து சுருங்கும் சக்தி இழந்தும், ஹிருதய அறைகள் வலுவிழந்தும், அறைகளின் ஜவ்வுக்கதவுகள் சரிவர மூட விடாமலும் தமனிகள் தடித்தும், ரக்த ஓட்டம் தடைபடுவதால் சரீரம் முழுவதும் வலி, நடுக்கம், இளைப்பு, திடீர் திடீரென கண்முன் காரிருள் தோன்றி மயக்கம் வருவதும், மயக்கம் சீக்ரம் தெளிவடைதலும் இதன் விசேஷ லக்ஷணம்.

பித்த மூர்ச்சாயம்: கண்கள் சிவந்து கலங்குதல், நாவரட்சி, தோல் மஞ்சளாகுதல், மலமிளகிப்போகுதல், கண்களுக்குமுன் மஞ்சள் சிகப்பு நிறத்தோற்றம் தோன்றி மயக்கம் வருதல், வியர்வையுடன் மயக்கம் தெளிதல் இவை இதன் விசேஷ லக்ஷணம்.

கபஜ மூர்ச்சாயம்: சரீரத்தில் கனமான ஈரமான தோலினுல் போர்த்தப்பட்டது போன்ற (அமுக்கம்) உணர்ச்சி, நாவில் ஜலம் ஊறுதல், உமட்டல், ஹிருதயத்தில் ஒரு வித சங்கட உணர்ச்சி, கண்முன் கருமேகம்போன்ற இருண்ட உணர்ச்சி ஏற்பட்டு மயக்கம் வந்து வெகுநேரம் கழித்து தெளிவு ஏற்படுதலும் இதன் விசேஷ லக்ஷணம்.

இம்மூன்று தோஷங்களின் கோபம் ஒரேகாலத்தில் ஏற்பட்டாலும், ஏதாவதொன்றின் வேகம் அதிகரித்து மற்றவை அதை பலப்படுத்தினுல் அபஸ்மாரத்தில் போல் கட்டை போல மனிதனை மயக்கத்திற்குள்ளாக்கும். ஆனுல் அபஸ்மாரத்தில் ஏற்படும், விறைப்பு, உதறுதல், இந்நிலையின் பரிணும ரூபமாக ஆக்ஷேபகம், பக்ஷவதம், மூளைக் கொதிப்பு, ஹிருதயம் நின்று விடுதல் ஏற்படுவது ஸஹஜம். இவ்வித பரிணுமம் ஏற்பட்டாலும் ஏற்படாவிடினும் மூர்ச்சாயம் அதன் வேகம் அடங்கினவுடன் தெளிந்துவிடும். வேகம் ஏற்பட்டால் தான் பிரகோபமடைந்த தோஷங்களின் பலம் குறையும்.

ஸந்யாஸம்: இந்நிலை மிகக்கடினமானது. உடனே பலன் தரக்கூடிய சிகித்ஸை செய்யாவிடில் பிராணஹானி ஏற்படுத்தவல்லது. இதில் ஏற்படும் மோஹம் தானுகத் தெளிவடைவதில்லை என்பது இதன் விசேஷம். ஹிருதயம் மிகவும் பீடிக்கப்பட்டு வாக்—சரீரம்—மனஸ் இம்மூன்றின் சேஷ்டைகளும் ஒடுக்கப்பட்டு, கட்டைபோல் கிடக்கும் நிலை—ஸந்யாஸம். சீக்கிரமே ஹிருதயத்திற்கு பலமளித்து, சரீரம், மனஸ் இவைகளின் சேஷ்டையை திரும்பி ஏற்படுத்தாவிட்டால் மரணமே. இந்நிலையிலிருந்து தப்புவதே துஸ்ஸாத்யமானது.

அதிக ரக்த ஸம்ஹதியின் சிகித்ஸை: ரக்த துஷ்டியையும், ரக்தவஹ தமனீ துஷ்டியையும், பிரதானமாக அகற்ற வேண்டியிருப்பதால், அத்துஷ்டி அதிகப்படாமலிருக்க, முன் நிதானத்தில் கூறப்பட்டுள்ள ரக்தத்தைக் கெடுக்கும் ஆகாரம், விஹாரம் முதலியவைகளை நிறுத்தி, ரக்தத்தை பிரஸாதனம் (தோஷமில்லாமல் செய்யும் சிகித்ஸை) செய்யப்படவேண்டும். மதுமேஹம்-ரக்தமேஹம்-விரணங்கள் போன்றவைகளுக்குகந்த சிகித்ஸை செய்யப்பட்டாலே அவைகளின் உபத்ரவமான இவ்வியாதியின் சமனமும் ஏற்படும். வியாதி வராமல் தடுக்கக்கூடியவைகளில் நல்ல ஆரோக்கியகரமான ஆஹார விஹாரங்கள்தான் முக்கியமானவை. இவ்வியாதிக்கென விசேஷ சிகித்ஸை சிற்சில கொடிய அவஸ்தைகளில் வியாதியின் கடுமையைக் குறைக்க உதவுமே தவிர நீடித்த பலனலிக்காது.

மனம், சரீரம் இவை இரண்டிற்கும் பூர்ணமான சாந்தி அவசியம். இதற்காக நோயாளியை எப்பொழுதும் படுக்கையிலிருக்கும்படி செய்ய நேரிடும். இத்துடன் நல்ல விரேசனங்களை அடிக்கடி செய்விக்கவேண்டும். சரீரத்தை நன்கு பிடித்துவிட்டுக் கொள்வது, சிற்சில தேகப்பயிற்சிகள் முதலியவை ஹிருதயத்திற்கு சிரமம் கொடுக்காத வகையிலும் அதிகம் பெருமூச்சு வாங்காத வகையிலும் செய்வது நலம். ஆகாரம் அருந்தியவுடன் சுமார் 1-2 மணி நேரமாவது நல்லஓய்வு அவசியம். 1-2 மைல் நடப்பது-மெதுவாக ஸைகிள் விடுவது போன்றவை மிகவும் ஹிதம். பிராணாயாமம்—மெதுவாக சுவாஸத்தை நன்கு இழுத்து விடுதல் சிறந்தது. அவஸரப்பட்டு காரியம் செய்தல், நடை, சாப்பிடுதல் முதலியன கூடாது.

ஆகாரத்தில் விசேஷமான பத்தியமுறை அனுஷ்டிக்க வேண்டும். எளிதில் ஜீர்ணமாகக்கூடாத மாவுப்பண்டங்கள், கிழங்குகள், தயிர் முதலியன நீக்கியும், ஆகாரத்தின் அளவைக் குறைத்தும், சரியான வேளையில் ஹிருதயத்தையோ, ரக்தத் தமனிகளையோ அதிகமாக ஊக்கப்படுத்தாத இளம் காய்கள், பழங்கள், பால்போன்ற ஆகாரங்கள்

அருந்துவது, மாம்ஸம், காபி, டீ போன்றவையை நிறுத்துவது, உப்பு-காரம் இவைகளைக் கூடியவரை குறைப்பது நலம். வியாதியின் உபத்ரவம் அதிகமாக இருக்கும் பொழுது உப்பு, புளிப்பு, காரம் சேர்ந்த உணவை முழுவதும் நிறுத்தி, பால்-பழவகை சாதம் இவைகளையே அருந்துவது உடனே வியாதியின் கடுமையைக்குறைக்கும். புகையிலை, மத்யம் இவை அறவே நிறுத்தப்படவேண்டும்.

ஆகாரம் அருந்துவதற்கு சுமார் 1-மணி நேரம் முன்பு சிறிது சிறிதாக 1-2 டம்ளர் வென்னீர் சாப்பிடுவது நலம். இது ஆகாரம் விதக்தமாகாமல் (புளிப்படையாமல்) காப்பாற்றுவதுடன், ஆகாரத்தின் அதிக அளவையும் குறைக்கும். மலபந்தத்தையும் அகற்றும்.

மலபந்தமகற்றுவதற்கு பலநாளுக்கொருதடவை பேதிக்கு கொடுப்பதைவிட, தினம் ஒருதடவை மலம்பிளிப் போகும்படி செய்வது நல்லது. இதற்கு உப்புகளும், கந்தகம் அல்லது லகுவான உப்பு கலந்த பேதிமருந்துகளும் குடலிலுள்ள ஜலாம்சத்தை அதிக அளவில் வெளியாக்குமாதலால் நல்லவை. ரஸபுஷ்பமும் (calomel) சிறந்தது. வாரம் ஒருமுறை ஒரு பஸ்தி (எனிமா) எடுத்துக் கொள்ளலாம். இளம் சூடான வென்னீரில் ஸ்நானம், குளிர்ந்த ஜலத்தில் நனைத்த துண்டினால் உடம்பு முழுவதும் நன்கு தேய்த்து விடுவது, சரீரத்தை நன்கு பிடித்து விடுவது (massage) இவை தமனிகளின் கெடுதலை அகற்றவல்லவை.

அதிகமான ரக்த ஸஞ்சாரத்தைத்தடுக்க, ஸிராவேதம் போன்ற ரக்தத்தை வெளிப்படுத்தும் உபாயங்கள், ரக்தத்தின் அளவைக் குறைப்பதால் உடன் குணமளிக்கின்றன.

மேற்கூறியவை மிகவும் குணமளிக்கக்கூடியவை. இவ்வித ஆஹார விஹாரத்தாலேயே வியாதியின் பலத்தைக் குறைப்பது ஸுலபம். வியாதியின் பலத்தை அநுஸரித்து மேற்கண்ட முறைகளை அவசியப்படி அனுஷ்டிக்க வேண்டும்.

(தொடரும்)

இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கழகம்

இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கழகம் இன்னும் சில மாதங்களில் இந்தியவைத்திய காலேஜுக்கருகிலுள்ள "வாலாஜாபாக்" என்ற கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்படும். இதற்குள் ஆசிரியர்கள் நிர்வாக அதிகாரிகள் முதலியோர் நியமிக்கப்படுவார்கள்.

ஸித்தவைத்தியம் பற்றிய பல விவரங்கள் இன்னும் ஏட்டுப் பிரதியில் இருப்பதாயும் அவற்றைப் புஸ்தக ரூபத்தில் கொண்டுவர வேண்டியிருப்பதாயும், ஆயுர்வேத வைத்தியம் பற்றியும் இவ்விஷயம் ஓரளவு உண்மையாக இருக்கிறது.

அமிஞ்சிக்கரைக்கருகில் சுமார் 20 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருப்பதாயும் அதில் மருந்துக்குத் தேவையான மூலிகைகளைப் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்திய வைத்திய ஆராய்ச்சிக்காக பட்ஜட்டில் ரூ .1,14 000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிராம வைத்தியத் திட்டம்.

கிராம வைத்திய திட்டத்தை அமுல் நடத்துவதற்காக 500 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்குக் கிராம வைத்தியர் பயிற்சி அளிக்கப்படும். கிராமங்களில் இந்திய வைத்தியத் தொழில் நடத்துபவர்களிலிருந்தே இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் தெரிந்தெடுக்கப்படவில்லை. பயிற்சிகாலம் சுமார் ஆறுமாதம். சென்னையிலும், மற்றும் மூன்றுவிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிந்தபிறகு ஒரு பரீக்ஷை நடத்தப்பட்டு தேறியவர்களுக்கு ஸர்டிபிகேட் கொடுக்கப்படும்.

ஸர்டிபிகேட் பெற்றவர்கள் ஸ்தலஸ்தாபனங்களில் வேலை பெறுவார்கள். இவர்களுக்கு மாதம் ரூ. 60 முதல் ரூ. 100 வரை சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சோப்ரா கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

இவ்விதம் மேற்படி செய்தியை இந்திய வைத்திய ஸ்பெஷல் ஆபீஸர் ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு மேமீ 30உ சென்னையில் பத்திரிகை நிரூபர்களுக்குத் தெரிவித்தார்.

சென்னை சர்க்காரின் கிராம வைத்தியத் திட்டம்.

மே,31௳

இந்திய வைத்தியத்தில் போதிய படிப்பும், அனுபவமும் உள்ள ஒரு சிலரை ஒரு கமிட்டி தெரிந்தெடுக்கும். இந்திய வைத்திய திருத்தி அமைப்பு இலாகா ஸ்பெஷல் அதிகாரியும், சென்னை இந்திய வைத்திய கல்லூரி தலைமை ஆசிரியரும், மூன்று ஸீனியர் (ஆயுர்வேத-ஸித்த-யூனானி) ஆசிரியர்களும் மேற்படி கமிட்டியில் இருப்பர். ஸ்பெஷல் அதிகாரி கமிட்டியின் தலைவராக இருப்பர்.

கலெக்டர் மூலமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களிலிருந்து அபேக்ஷகர்கள் பொறுக்கி எடுக்கப்படுவர். தஞ்சாவூர், ஏலூர், மங்களூர், சென்னை ஆகிய நான்கு இடங்களில் ஆறுமாதங்களுக்கு மேற்படி அபேக்ஷகர்களுக்கு வைத்திய சுகாதாரத்துறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

சோப்ரா கமிட்டி ரிபோர்ட்டில் 8-வது அத்தியாயத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ள பாடத்திட்டம் அனுஷ்டிக்கப்படும். அங்கிகாரம் பெற்ற ஸ்தாபனங்களிடமிருந்து பட்டம் பெற்றவர்களுக்கும் டெப்ளோமா உடையவர்களுக்கும், பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

பயிற்சி பெறும் மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் பூரா பயிற்சிக்கும் ரூ. 30 வசூலிக்கப்படும்

பயிற்சி காலம் முடிந்தபிறகு மூன்று வகைகளில் பரீக்ஷை நடத்தப்படும். 1. சஸ்திர சிகிச்சையும் பொது விஷயங்களும். எழுத்து மூலமாகவும், வாய் மொழியாகவும் பரீக்ஷை நடக்கும். 2. பொது சுகாதார விஷயங்கள் எழுத்து மூலமாகவும், வாய் மொழியாகவும். 3. இந்திய வைத்திய விஷயங்கள்.

ஒவ்வொரு அபேக்ஷகரிடமிருந்தும் பரீக்ஷைக் கட்டணம் ரூ. ஐந்து வசூலிக்கப்படும்.

B. கிளாஸ் R. I. M. களின் தற்கால நிலை.

(R. S. மணி, கும்பகோணம்.)

ஆங்கில ஆக்ஷியில் இந்திய வைத்தியர்களின் நிலை கேவலமாக தொழிலுக்குரிய மதிப்போ, கண்யமோ இல்லாமலிருந்து வந்தது. அதற்குக் காரணங்கள்: 1. அரசாங்கம் அன்னிய வைத்தியர்களுக்கு ஆதரவும், அதிகாரமும் அளித்து சுதேச வைத்தியர்களை வெகு தாழ்வாகக் கருதி,

ஒதுக்கி தொழிலுக்குள்ள மரியாதைகூட இல்லாமல் செய்தது. 2. இந்திய வைத்தியர்களின் ஏழ்மை. 3. அவர்களுள் ஒற்றுமை இன்மை. இம் மூன்று காரணங்களால் இந்திய வைத்தியர்கள் கிராமங்களை விட்டு வெளியே வரமுடியாமல் அஞ்சி ஒடுங்கி கோழைகளாய் வாழ்ந்தனர்.

காங்கிரஸ் ஆட்சியில் நாட்டு வைத்தியர்கள் முன்னேற்றமடைந்து தைரியமாக தொழிலை நடத்துவார்களென, அமைச்சர் ருக்மணி லெக்ஷ்மீபதி அம்மையார் காலத்திலிருந்து இன்னமும் எதிர்பார்த்துத்தான் வருகிறோம். சென்னையும், டெல்லியும் நமது நம்பிக்கையைத் தளர விடாமல் அடிக்கடி ஏதாவதொரு அறிக்கையைக் கிளப்பிக் கொண்டுதான் இருக்கிறது. கிராமங்களுக்கு அதிக வைத்ய உதவி அளிப்பதைப் பற்றி அறிய கமிட்டிகளை நியமிக்கிறார்கள். அந்தக் கமிட்டிகளின் தலைவர்களோ, மெம்பர்களோ, கிராம ஜனங்களோ, கிராம வைத்தியர்களோ அல்ல. கிராம ஜனங்களையும் கிராம வைத்தியர்களையும் அலட்சியப்படுத்தி, அடிமைப்படுத்தி வந்த பெரிய பெரிய டாக்டர்களைக் கொண்டு கமிட்டிகளை நியமித்தால் அவர்கள் விடும் அறிக்கை எப்படி யிருக்குமென்பதை கேட்கவா வேண்டும்?

கிராமங்களுக்கு அதிக வைத்திய உதவி என்று கூறிக் கொண்டே கிராமங்களில் இப்பொழுதிருந்துவரும் அறை குறை வைத்ய உதவியும் பறிக்கப்படுகிறது. தற்பொழுது கிராம ஜனங்கள் மட்டும் அல்ல; கிராம வைத்யர்களும், ஆங்கில டாக்டர்களிடம் போய்த் தீரவேண்டிய நிலையை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டது. இதற்கு முன் கிராம வைத்யர்கள் வைத்யம் செய்யலாம். ஆனால் எழுத்து மூலம் நான் இன்னாருக்கு வைத்யம் செய்தேன் என்று எழுதக்கூடாது. இப்பொழுது சர்டிபிகேட் கொடுப்பதுமட்டும் அல்ல; மருந்துகளும் வாங்கக் கூடாது. என்று தற்கால சர்க்கார் அமுல் செய்கிறார்கள். இந்திய வைத்யர்கள் முன்னெல்லாம் மருந்துகளோ, மருந்து சரக்

குகளோ வேண்டும்பொழுது விற்குமிடங்களில் வாங்கி வந்தனர். இப்பொழுதோ நாட்டு மருந்துச் சரக்குக் கடைகளில் வாங்கும் சரக்குகளைத் தவிர, இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் மருந்துகளோ, மருந்துச் சரக்குகளோ, வாங்கவோ எழுதி அனுப்பவோ முடியாது. இவர்கள் சீட்டுச் செல்லாது என்று நமது காங்கிரஸ் சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிருர்கள். இது இந்திய வைத்யர்களையே அவமதித்துத் சிறுமைப்படுத்தும் செய்கை என்பதை விளக்கவேண்டாமா?

இதனுல் பொதுஜனங்கள் வைத்யர்களிடம் நாடுவதைக் குறைத்து, ஆங்கில டாக்டரிடம் செல்லும்படி செய்வதற்காகவே இந்த உத்தரவு என்பதை வைத்தியர்கள் உணரவேண்டாமா? இப்புதிய உத்தரவு போடக்காரணம் என்ன? ஆங்கில மருந்துகளை வைத்தியர்கள் வாங்கி தகாத முறையிலோ, தெரியாமலோ முறை பிசகாக உபயோகித்தோ, பொதுமக்கள் உயிரைப் பரித்தனர் என்ரே, ஆரோக்யத்தை கெடுத்தனர் என்ரே, எத்தனை கேஸ்கள் எந்தெந்த ஊர்களில் பதிவாகியிருக்கிறது என்று வைத்யர்கள் கேட்கவேண்டாமா? வைத்யத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள நாட்டு வைத்யர்கள் தங்களுக்குத் தெரியாத புரியாத மருந்துகளையோ சரக்குகளையோ வாங்கி வைத்யம் செய்து தன் பெயரை கெடுத்துக் கொள்வார்களா? தன் தொழிலை நாசம் செய்து கொள்வார்களா? பின் எதற்காக இந்த உத்தரவு? வைத்யர்களைக் கேவலப்படுத்தி டாக்டர்களுக்கு வருமானம் செய்து வைக்கத்தானே?

கெந்தகம், காடிக்காரம், வீரம், பூரம், பாஷாணங்கள் முதலிய சரக்குகளும் இவைகள், சேர்ந்த சேர்க்கை மருந்துகள் அல்லது கூட்டு மருந்துகள், நாட்டு மருந்துக் கடையில் கிடைக்காதவைகளை இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் வாங்கும்படி நேருகிறது. இதற்கெல்லாம் டவுன்களிலுள்ள டாக்டர்களிடம் சென்று நான் இன்னர், இன்ன மருந்து செய்ய வேண்டும் என்ரே, கஞ்சா, அபின், சாரா

யம், பிராந்தி முதலிய சரக்குகள் தேவை என்றே அல்லது சில டானிக்குகளுக்காகவோ அல்லது குளுகோஸ், ஹார் லிக்ஸ் முதலியவற்றிற்காகவோ, மருந்து ஷாப்பில் வாங்கிக் கொள்வதற்கு தாங்கள் ஒரு சீட்டு எழுதிக் கொடுங்கள் என்று கேட்க முடியுமா?

இக்காலத்தில் ஆங்கில மருந்து எது? நாட்டுமருந்து எது? மூலிகைச் சத்துக்களோ, பாஷாணங்களோ, உப்பு களோ, நாட்டு வைத்தியத்திலும், இங்கிலீஷ் வைத்தியத் திலும் கலந்துதானே வருகிறது! இன்று ஆஸ்பத்திரி களில் சப்ளையாகும் மருந்துகள் எது? நாட்டுச் சரக் கினின்றும் தயாரித்தவைதானே! நாவி, வாளம், பாஷா ணங்கள், வீரம், பூரம், ரஸம், கெந்தி, துருசு, அபின், கஞ்சா, ஊமத்தை, கொடிவேலி, எருக்கு, தில்லை கள்ளி, சேங்கொட்டை, எட்டி, கற்பூரம், நவச்சாரம், கஸ்தூரி, புனுகு, ஜவ்ன், தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, நவரெத் தினங்கள் போன்ற சகல வஸ்துக்களை கொண்டும் மருந்து கள் செய்து தொழில் நடத்தும் வைத்யர்கள் எர்காட், கொயினு, ஸல்பாபைரிடின், புரோமைட், டிஜிடலிஸ் போன்ற சரக்குகளை அதன் குணங்களைத் தெரிந்தவர்கள் வாங்க லாயக்கில்லை என்றால் இது அறிவுக்குப் பொருத்த மாக இருக்கிறதா? இந்தக்காலத்தில் ஜாண்டுஸ், அலம் பிக்கெமிகல்ஸ், பெங்கால் கெமிகல்ஸ், நவரெத்னபார்மசி யூடிகல்ஸ், போன்ற பல பல ஸ்தாபனங்கள் ஏராளமான இந்திய மருந்துகளை ஆங்கில முறையில் தயார் செய்துவரு கின்றதே அவைகளை எல்லாம் இந்திய வைத்தியர்கள் எழுதக்கூடாதா? தற்பொழுது நாட்டில் பல பல மருந்து தயாரிக்கும் ஸ்தாபனங்களால் வெளி வரும் பேடெண்டுகளில் ஆங்கில, இந்திய 2 சரக்குகளும் கலந்து உள்ளவைகள்தானே அதிகம்! இவைகளை யார் யார் எழுதுவது? எப்படிப் பிரிப்பது? இந்திய வைத்தியர் களுக்கு ஆங்கில மருந்து ஷாப்புகளில் ஒன்றும் விற்கக் கூடாதென்றால் ஆங்கில டாக்டர்கள் எழுதும் இந்திய மருந்துகளான, தென்னமரக்குடி எண்ணெயும், பண்டா

ர்த்தெண்ணெயும், ஜெம்மி, பாத்ருடு, லிவர் க்யூர்களும், ஆஸவ அரிஷ்டங்களும், தைலங்களும், ச்யவனப்பிராச லேகியங்களும், லிக்விட் எக்ஸ்ட்ராக்டுகளும், இதுபோன்ற அனந்த இந்திய மருந்துகளை எழுதித்தள்ளும் டாக்டர்களை மட்டும் கேட்கவேண்டாமா? அவர்களுக்கு சரக்கின் குணமோ தயாரிக்கும் முறையோ தெரியுமா?

கிராமவாசிகளுக்கு அதிக வைத்ய உதவி என்று அடிக்கடி சொல்லும் அரசாங்கம் கிராம வைத்தியர்களை மருந்துகள் வாங்குவதினின்று தடைசெய்வது கிராமஜனங்களுக்குக் கிடைத்துவரும் வைத்ய உதவியையும் தடை செய்வதாகத்தானே அர்த்தம்? அரசாங்கத்தின் அறிக்கைகள் உண்மையாக இருக்குமானுல் சகல மருந்துகளும், சகல லைசென்ஸ் சரக்குகளும் வாங்கிக்கொள்வதோடு, மெடிகல் சர்டிபிகேட் கொடுப்பது போன்ற ஆங்கில டாக்டர்களுக்குள்ள உரிமைகள் அனைத்தும் இந்திய வைத்தியர்களுக்கும் உண்டு என்று பிரகடனப்படுத்துமானுல் அது உண்மையாக இருக்கும்; கிராம ஜனங்களுக்கு பெரிதும் பயன்படும்.

இந்நாட்டிலுள்ள பல் டாக்டர்கள் எல்லாம் எந்தக் காலேஜில் படித்து டிகிரி பெற்றிருக்கிறுர்கள்? 5-வருட அனுபவ ரிஜிஸ்டர் கூட இப்பொழுதுதானே ஏற்படுத்தி வருகிறுர்கள். இந்த டென்டிஸ்ட்ஸ் வாங்கும் சரக்குகள் கூட இந்திய வைத்யர்கள் வாங்கக்கூடாதென்றுல், பரம்பரை வைத்ய குடும்பத்தில் பிறந்து 10 வருட அனுபவத்திற்குப் பின் ரூ. 16—12—0 கட்டி ரிஜிஸ்டர் செய்துகொண்டு பல வருடங்களாக தொழில் செய்து வருவதற்கு அர்த்தம் என்ன? சென்டிரல் போர்ட் ஆப் இந்தியன் மெடிஸின் எதற்கிருக்கிறது? இதுவரை இந்திய வைத்தியர்களுக்கு என்ன சாதித்திருக்கிறது என்று கேட்பதில் என்ன குற்றம்? இது தவிர எத்தனையோ திரசர்களும், கண் டாக்டர்களும் இருக்கிறுர்கள். பல் டாக்டர்களுக்கும், கண் டாக்டர்களுக்கும் திரசர்களுக்கும் இருக்கும் மதிப்புகூட இந்திய வைத்தியர்களுக்கு இல்லை. அவர்கள் வாங்கும் சரக்

குகள் கூட இவர்களுக்கு வாங்க அனுமதி இல்லை என்றால் என்ன காரணம்? அவர்கள் ஆங்கில நாகரீகத்தை அப்படியே காப்பி அடிக்க வசதிகள் இருக்கிறது; ஒற்றுமை இருக்கிறது.

சென்ற அக்டோபரில் சென்னையில் நடந்த டாக்டர்கள் மகாநாட்டில் அதன் தலைவர் இந்திய வைத்திய முறையைப் பற்றி கேவலமாகப் பேசி இருக்கிறார். சர்க்கார் இந்திய முறையை அனுஷ்டிக்கக்கூடாது; ஆங்கிலேய முறை ஒன்றுதான் இருக்கவேண்டும் என்ற முறையில் பொருள்படும்படி பேசியதும் தவிர கிராமஜனங்கள் இந்திய வைத்தியத்தையே பெரிதும் விரும்புகிறார்கள் என்று சொல்வது உண்மையல்லவென்றும் ஒரு கிராமத்தில் இந்திய முறையும் ஆங்கில முறையும் தனித்தனியே இரண்டு ஆஸ்பத்திரிகள் இருந்தால் ஆங்கில முறை ஆஸ்பத்திரிக்குத் தான் அதிகக் கூட்டம் செல்லும் என்று சவால் விடுகிறார். இந்திய வைத்தியர்கள் ஏழைகள்; அரசாங்க மொழியாகிய ஆங்கிலம் தெரியாது. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அரசாங்க அனுதாபம் இல்லை. மெடிகல் சர்டிபிகேட் கொடுப்பது போன்ற அதிகாரமில்லை; மருந்து வாங்க அனுமதியில்லை. மேற்கண்டவைகள் எல்லாம் ஒருங்கே கொண்டுள்ளது ஆங்கில வைத்தியம். இரண்டும் போட்டி போட்டால் எது வெற்றிபெறும்? அரசாங்க ஆதரவும் வசதிகளும் உள்ளதுதானே வெற்றிபெறும்? இதனால் ஆங்கில முறை உயர்ந்தது; இந்திய முறை தாழ்ந்தது, அதை ஒழித்துவிடவேண்டும் என்று தீர்மானிப்பதா? ஷை வசதிகள் அனைத்தும் இந்திய வைத்தியத்திற்கும் அளித்து ஆங்கில டாக்டர்களுக்குள்ள சகல உரிமைகளையும் இந்திய வைத்தியர்களுக்கும் அளித்து இந்திய, ஆங்கில வைத்யசாலைகளைத் தனித்தனியே ஒரு கிராமத்தில் ஸ்தாபித்து எதற்குஅதிகக்கூட்டம் செல்கிறதென்று பார்க்கட்டும்! இதற்கு ஷை டாக்டர் ராகவனோ, சர்ஜன் ஜனரலோ, மந்திரிசபையிலுள்ள 2 டாக்டர்களுமோ பதில் சொல்லட்டும்! இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்திய வைத்யம் இன்னும் அழியாமல் குன்றாமல் குறை

யாமலிருக்கிறதென்றால் அதிலும் இந்த கிராம ஏழைவைத்யர்கள் கையிலிருந்து தவிக்கும் இந்திய வைத்யம் மறையாமல் இருக்கிறதென்றால் ஆச்சரியமல்லவா! அதற்கு காரணம் என்ன? இந்திய முறைகளிலுள்ள ஜீவசக்தி அல்லவா? எத்தனை கண், காது, மூக்கு, தொண்டை, ஆஸனம், குடல் நோய்களுக்கு ஆப்ரேஷன்தான் செய்ய வேண்டும் என்று டாக்டர்களால் தீர்மானிக்கப்பட்ட கேஸ்களை கிராம வைத்யர்கள் மருந்து கொடுத்து குணமாக்கி இருக்கிறார்கள். எத்தனை கை கால் முறிவு, புண், புறை கேஸ்களுக்கு மூட்டோடு துண்டித்துவிடவேண்டும்; இன்றேல் பிழைக்கமாட்டான் என்று டாக்டர்களால் தீர்மானித்ததை கிராம வைத்தியர்கள் மருந்து எண்ணெய்களைத் தடவி கட்டுக்கட்டி காப்பாற்றி இருக்கிறார்கள் என்பது டாக்டர்கள் லெக்ஷ்மீபதி, குருசாமி முதலியாரைப் போன்ற சென்னையிலுள்ள டாக்டர்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதானே! சந்தேகமுள்ள டாக்டர்கள் புத்தூருக்கும், திருவரம்பூருக்கும் சென்று பார்க்கட்டும்! குழந்தைகளுக்கு வரும் இசிவு, மாந்தம், கணையில் எத்தனை வகுப்பு உண்டு? அதற்கு என்ன சிகித்சை என்று எத்தனை டாக்டர்களுக்குத் தெரியும்? இவைகளை கிராம வைத்யர்கள் சில அணு சிலவில் 2, 3, நாளையில் போக்கி விடுவார்களே! டாக்டர்களால் முடியுமா? இவர்களிடம் சென்றால் எத்தனை மருந்து மாற்றுவார்கள்; எத்தனை நாள் அலையவேண்டும்? எத்தனை ரூபாய்கள் சிலவழிக்கவேண்டும்? மருந்துகள் வாங்கிக்கொள்ளக்கூட அனுமதி இல்லாத இந்திய வைத்தியர்கள், தொழிலை தைர்யமாகச் செய்யமுடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ள இன்றைய இந்திய வைத்தியர்கள் இவ்வளவு செய்வார்களானால் ஆங்கில முறைக்குள்ள வசதியும் சலுகையும் அத்தனையும் இருக்குமானால் எவ்வளவு செய்வார்களென நினைத்துப்பாருங்கள்!

எங்கு M. B. B. S. நிறைந்து இருக்கிறார்களோ அங்குதான் வியாதிகள் விபரீதமாக விளைந்து வருகின்றன. எங்கு இந்திய வைத்யர்கள் இருக்கிறார்களோ, அங்கு சாதா

ரண வியாதிகள் தோன்றி சாதாரண சிகித்சையில் அடங்கி விடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? டாக்டர்கள் மகாநாட்டுத் தலைவர் அபிப்ராயப்படிப் பார்த்தால் M. B. B. S. கள் உள்ள இடங்களில் வியாதியே இருக்காமல், கிராமங்களில் உள்ள மக்கள் அவ்வளவு பேரும் வியாதிகளால் நிறைந்து மடிந்து அல்லவா வரவேண்டும்? இந்த நாட்டில் கிராமங்கள்தான் அதிகம். அங்குதான் இந்திய மக்களில் அதிகம் பேர் வசிக்கின்றனர். அவர்களுக்கு வியாதிகள் வராமல் இல்லை; வைத்யம் நடக்காமலும் இல்லை. ஆங்கில டாக்டர்களால் உதாசீனம் செய்யப்பட்டுள்ள இந்திய வைத்யர்கள் அங்கு இல்லாவிட்டால் பணம், பணம் என்று பறக்கும் ஆஸ்பத்திரி டாக்டர்களால் கிராம மக்களை காப்பாற்றிவிட முடியாது. இவர்கள் இருக்கும் நகரங்களில் உள்ள மக்களுக்கு ஆங்கில முறையினால் இதுவரை எந்த வியாதி தடுக்கப்பட்டிருக்கிறது? எந்த வியாதியை நவீன முறைகளால் நிறுத்திவிட்டார்கள்? எந்த மரண விகிதத்தை கட்டுப்படுத்தி இருக்கிறார்கள்? இந்திய வைத்யத்தை நசுக்க ஆரம்பித்த பிறகுதானே தொத்து வியாதிகள் அதிகமாயின; அதைவிட பலமடங்கு சிகித்சை முறைகளும் பெருகி வருகின்றன. ஆயினும், பலன் என்ன? ஆங்கில முறையால் எந்த மக்கள் இப்பொழுது ஆரோக்கியமாக இருக்கிறார்கள், நகர மக்களா, கிராம மக்களா? இதைக்கொண்டு சொல்லட்டும்! எந்த வைத்யம் உகந்தது என்று.

சென்ற நவம்பரில் ஐக்கிய மாகாணத்தில் ஆங்கில முறையை ஒதுக்கிவிட்டு இந்திய முறையைத்தான் அரசாங்கம் வைத்துக்கொள்ளவேண்டும். அதுதான் இந்நாட்டுப் பொருளாதாரம், சீதோஷ்ணம், மக்களின் மனம், காயம், ஆகாரப் பழக்க வழக்கம் முதலிய எல்லாவற்றிற்கும் பொருத்தமுள்ளது என்று ஷை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டி ஆராய்ந்து சிபார்சு செய்திருக்கிறது. லக்ஷ்மணபுரியில் ஓர் பெரும் நிலப்பரப்புடன் உள்ள கட்டிடத்தை மத்திய அரசாங்கத்திற்கு மூலிகை ஆராய்ச்சிக்

காக கொடுத்து உதவி இருக்கிறது டை மாகாண கவர்ண் மென்ட். திருவனந்தபுரம் அரசாங்கமும் இந்திய வைத்யத்தைதான் ஒப்புக் கொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் அறிவாளிகள் அல்லவா ?

ஒரு டாக்டர் 10 பேருக்கு சிகித்சை செய்வதற்குள் ஏகப்பட்ட ஆடம்பரத்துடன் பிரமாதமாக விளம்பரமாகிவிடும். நோயாளிகளுக்கும் ஏராள சிலவு ஆகிவிடும். ஒரு கிராம வைத்யன் 100 பேருக்கு சிகித்சை செய்தாலும் சப்தமே இருக்காது. நோயாளிகளுக்கும் மிக மிக குறைந்த சிலவிலேதான் முடியும். இனியாகிலும் கனம் சுகாதார மந்திரி அவர்கள் இந்திய வைத்யர்களின் ஆடம்பரமற்ற எளிய உண்மை ஊழியத்தை உணர்ந்து அவர்களுக்குள்ள தளைகளை விடுவித்து ஒரு கிராம டாக்டர் செய்வதையே தான் ஒரு கிராம வைத்யன் ஆடம்பரமில்லாமல் செய்கிறுன் என்பதை அறிந்து கிராம ஜனங்களுக்கு முன்னிலும் திறமையாகவும், அதிகமாகவும், உற்சாகத்துடனும் வைத்யம் செய்ய கிராம வைத்தியர்களுக்கு வேண்டியதைச் செய்தால் சர்க்காருக்கு அதிகப்பணச் சிலவு நேராது. மக்களும் வைத்யர்களும் சுதந்திர நாட்டில், காங்கிரஸ் கவர்ன்மெண்டில் சந்தோஷம் அடைவார்கள். இவ்வளவு காலமாக எந்த வைத்யம் இந்நாட்டுக் கோடிக்கணக்கான மக்களைக் காப்பாற்றி வந்ததோ ; அந்த வைத்யத்தையும் அந்த வைத்யர்களையும் ஆதரிப்பது அரசாங்கத்தின் கடமை அல்லவா ?

என் போன்ற ஓர் ஏழை வைத்யன் இதை எழுத முற்பட்டது என் அறிக்கையை உடனே அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விடுமென்றல்ல ; சென்னையிலிருந்து குமரிவரை எத்தனையோ பெரும் பெரும் வைத்யர்களும் அவர்களின் சங்கங்களும் சமாஜங்களும் சம்மேளனங்களும் இருந்தும் ஒற்றுமையில்லாது, சித்த ஆயுர்வேத, யூனனி என்ற பெரும் பிளவுகளை வைத்துக்கொண்டும், சித்தவைத்தியர்கள் சங்கங்களிலே பல, பலபல, ஊர்களில் இருந்துகொண்டு இருப்பதை ஒன்றுபடுத்தி இந்திய வைத்தியமென்ற ஓரே பெயருடன் வைத்யர்கள் ஐக்கியமாகிப் பலப்

பட்டு அரசாங்கத்தை அணுகி ஆவன செய்யவேண்டு மென்பதற்காகவே எழுதுகிறேன்.

தற்பொழுது L. F. டிஸ்பென்ஸரிகளில் வேலைசெய்யும் L. M. P. க்கள் கிராம வைத்யர்கள் என்று அழைக்கப் படுகிறது. அது சுத்தத் தவறு. கிராம வைத்யர்கள் நம் இந்திய வைத்தியர்கள்தான் என்பதை நாம் தெரிவித்துக் கொள்ள வேண்டாமா? தவிர ஆலோபாதிக் டாக்டர்களும் தங்களை இந்திய வைத்தியர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். அதுவும் சுத்தத் தவறு. இந்நாட்டின் பூர்வீக முறைகளைக் கையாண்டு வருபவர்கள்தான் இந்திய வைத்யர்களே தவிர, ஆலோபாதிக் டாக்டர்களை இந்திய வைத்யர்கள் என்று அழைத்துக்கொள்வது பொதுஜனங்களை ஏமாற்றுவதற்கே? அதையும் நாம் மறுக்க வேண்டும்.

இதற்கெல்லாம் முதலில் நமக்குள் ஒற்றுமை வேண்டும். அதற்கு முதலாவதாக சங்கங்களையும், ஸபைகளையும் ஒன்றுசேர்த்து பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச் சங்கங்களை ஐக்கியப்படுத்துவதால் அவரவர் செய்யும் முறையோ, தொழிலோ மாறப் போவதில்லை நஷ்டம் ஒன்றுமில்லை, குறைவு ஒன்றுமில்லை; அதற்கு பதில் லாபமும், தைரியமும், பெருமையும் உண்டு. எல்லோருக்கும் பலன் உண்டு. தமிழ் ஜில்லாக்களில் மட்டிலும் 1000-க் கணக்கான B. கிளாஸ் R. I. M. களிருந்தும் அவர்களை ஒன்றுபடுத்தி தொழிலை ஒருமுகப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவர தற்போதைய சூழ்நிலையில் உள்ள சங்கங்களால் முடியாது. இதற்கு சென்ட்ரல் போர்ட் ஆப் இந்தியன் மெடிஸின் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என் தாழ்மையான விண்ணப்பம்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் திருச்சி ஜில்லா முசிரி தாலுகா கிளைச்சங்கம்.

H. O. சோபனபுரம்.

ஷை சங்கத்தின் இரண்டாவது மாதாந்தரக் கூட்டம் G. ராமஸ்வாமி ஐயங்கார் தலைமையில் 22—5—49ந்தேதி ஞாயிற்றுக்

கிழமை மாலை 2-30 மணிக்கு சோபனபுரம் கிராம போர்ட்ஸ்கூல் கட்டிடத்தில் நடைபெற்றது.

தாலூகாவின் பல கிராமங்களிலிருந்தும் 30 வைத்தியர்களும் பல வைத்திய அபிமானிகளும் வந்திருந்தனர்.

ஸ்ரீமான் S. T. ராஜமய்யங்கார் இச்சங்கம் 10 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு அங்கத்தினர்களின் ஊக்கமின்மையால் நடுவில் கலைந்து விட்டது. தற்சமயம் மறுபடியும் கூட்டியிருக்கும் இச்சங்கத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் விசேஷ சிரத்தை எடுத்து சங்கத்தை ஸ்திரப்படுத்த வேண்டுமென்பதை விரிவாக எடுத்துச் சொன்னார்.

பிறகு G. ராமஸ்வாமி ஐயங்கார் 'குன்மரோகம்' என்பது பற்றியும், S. T. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் 'தற்கால அரசாங்கமும் வைத்யமும்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டம் மாலை 5-மணிக்கு வந்தனோபசாரத்துடன் இனிது முடிந்தது.

24-5-49. —S. T. ஸ்ரீனிவாஸன், காரியதரிசி

ஆஸவங்கள், அரிஷ்டங்கள் விற்பனை

லைஸென்ஸ் வழங்கப்படும்.

சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

ஆஸவங்கள், அரிஷ்டங்கள் இவைகளின் உற்பத்தி விற்பனை சம்பந்தமாக சென்னை மதுவிலக்கு சட்டத்தின் கீழுள்ள விதிகள் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் பொது மக்களுக்கும் அசௌகர்யமாக இருப்பதாகவும், ஆகவே மேற் குறிப்பிட்டவைகளுக்கு மதுவிலக்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு பல விண்ணப்பங்கள் வந்தன.

தற்போதுள்ள விதிகளின்படி மதுவிலக்கு பிரதேசங்களில் லைசன்ஸ் பெற்று ஆஸவங்களையும், அரிஷ்டங்களையும் தயாரித்து விற்பனை செய்யலாம். லைசன்ஸ்கள் மூன்று விதம்.

(1) ஆயுர்வேத வைத்தியர்களுக்கான லைசன்ஸ்: வருஷம் ரூ. 1 வீதம் கட்டணம் கட்டி கலெக்டர்களிட

மிருந்து பெற்றுக்கொள்ளலாம். இந்த லைசன்ஸ் பெற்றவர்கள் அரிஷ்டங்களையும் ஆஸவங்களையும் உற்பத்தி செய்யலாம். மாகாணத்துக்குள் லைசன்ஸ் பெற்ற பார்மஸிகளிடமிருந்து வாங்கலாம். மாகாணத்துக்கு வெளியிலிருந்தும் தருவிக்கலாம். அவைகளை தங்களிடம் சிகித்ஸை பெற்றுக் கொள்ளுபவர்களுக்காவது யோக்யதாம்சங்களுள்ள ஒரு வைத்தியர் கூறுவதின் பேரில் மற்ற வியாதிஸ்தர்களுக்காவது விற்கலாம்.

(2) ஆயுர்வேத பார்மஸி லைசன்ஸ்: கலெக்டர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வருஷக் கட்டணம் ரூ. 10. இந்த லைசன்ஸ் பெற்றவர்கள் ஆஸவங்கள் அரிஷ்டங்களை உற்பத்தி செய்யலாம். ஆயுர்வேத வைத்தியர் லைசன்ஸ் பெற்றவர்களுக்கும் விற்கலாம். ஆயுர்வேத வைத்தியர் (பிராக்டிஷனர்) லைசன்ஸ் பெற்ற ஒருவர் சீட்டு பெற்ற நோயாளிகளுக்கு ஒரு தடவையில் ஒரு குவார்டுக்கு மேற்படாமல் சீல் வைத்த பாட்டில்களில் விற்கலாம். மாகாணத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்யலாம்.

(3) கெமிஸ்டு லைசன்ஸ்: கலெக்டர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வருஷக்கட்டணம் ரூ. 25. பிராந்தி, ஒயின்கள் போன்றவைகளை விற்கலாம். இந்த லைசன்ஸ் பெற்றவர்கள் ஆஸவங்களையும் அரிஷ்டங்களையும் லைசன்ஸ் பெற்றவர்களிடமிருந்து வாங்கலாம். மாகாணத்துக்கு வெளியிலிருந்தும் தருவிக்கலாம். அவைகளை ஒரு வைத்தியரின் சிபார்சு பெற்ற வியாதிஸ்தர்களுக்கு ஒரு தடவை ஒரு குவார்டுக்கு மேற்படாமல் ஸீல் வைத்த பாட்டில்களில் விற்கலாம்.

ஆகவே, தற்போது ஆயுர்வேத வைத்தியர்கள் எல்லா ஆஸவங்களையும் அரிஷ்டங்களையும் திராக்ஷாரிஷ்டம், திராக்ஷாஸவம், ம்ருத்வீகாஸவம், நாரிகேளாஸவம், பிப்பல்யாஸவம், கர்ஜூராரிஷ்டம் உள்பட தயாரிக்கலாம். வேறு வைத்தியர்கள் சிபார்சு பேரில் வியாதிஸ்தர்களுக்கு விற்கலாம். இதற்கு முன் தங்களிடம் சிகித்ஸை பெறுபவர்களுக்கே விற்கவேண்டுமென்றிருந்தது.

நேத்ரப்ரகாசிகை.

[G. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சாவூர்.]

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை என்று ஆறு ஆதாரங்கள் சரீரத்தினுடைய கட்டிற்கு இருக்கின்றன. அவைகளில் 72000, நாடிகள் உண்டாகின்றன. அவைகளில் 10 முக்யமானவை. அதிலும் மூன்று மிகவும் முக்யமானது. அவைகளின் பெயர் இடை, பிங்கலை, ஸுஷும்னை. இடையும், பிங்கலையும் பாம்பின் சட்டை போல் சரீரமுழுவதும் மூடிக் காக்கின்றன. ஸுஷும்னை என்பது ஆஜ்ஞை என்ற ஆதாரத்திலிருந்து மூலாதாரம் வரையில் வியாபித்து தூண்மாதிரி உடம்பைக் காப்பாற்றுகிறது. இடையிலும், பிங்கலையிலும் பிராணவாயு சுற்றுகிறது. ஸுஷும்னை என்பது எப்பொழுதும் ப்ருஹ்மயோகமார்கத்திலிருக்கிறது. தனஞ்சயன் முதலிய வாயுக்கள் மற்ற ஏழு நாடிகளிலும் ஓடுகின்றன. இடைக்குப் பிங்கலைக்கும் நுனியில் கண்கள் இரண்டும் இருக்கின்றன.

அன்னமயம் பிராணன் என்கிறார்கள். ஆத்மா பிராணமயமாகவிருக்கிறது. ஆத்மா ப்ருஹ்மமயம். ப்ருஹ்மம் அமிருதமயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அமிருதமயமென்று கண்களை முனிவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கண்கள் திரிதோஷங்களுடன் கூடியிருக்கிறது.

கண்ணில் வெள்ளையாக உள்ள பாகம் வாயுமண்டலம். கருப்பு ச்லேஷ்ம மண்டலம். தாரை பித்தமண்டலம்.

நேத்ர ரோகங்கள் மொத்தம் 100. இமையில் 24 ரோகங்களும், வெள்ளை ஸந்தியில் 9 ரோகங்களும், சுக்ல மண்டலத்தில் 13 ரோகங்களும், கிருஷ்ணமண்டலத்தில் 5 ரோகங்களும், ஜ்யோதிர் மண்டலத்தில் 7 ரோகங்களும், க்ருத்ரம ரோகங்கள் 22-ம், பிறவிமுதல் ஏற்படுவது 20 ரோகங்களும் உண்டாகின்றன. ஆக மொத்தம் நேத்ர ரோகங்கள் 100.

(தொடரும்)

யோகம்

[Dr. P. A. ஸுப்ரஹ்மண்ய அய்யர், கும்பகோணம்.]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

1. சகல கலைகளிலும் மிக முக்கியமானது ஜீவகலை யாகும். அந்த ஜீவகலையில் சக்தி, சிவம் இரண்டின் தன்மைகளும் அத்வைதமாக பிரதிபலித்திருக்கும். யோக ரூபமாகிய இந்தக்கலையில் இடைகலை, பின்கலை, சுழிமுனை என்னும் மூன்று கலைகளும் ரஜஸ், தமஸ் ஸத்வம் என்னும் முக்குணங்களாய் சரீரப்ரக்ருதியில் வியாபித்திருந்து ஜீவ வர்கங்களுக்கான இன்ப துன்பம் முதலியவைகளுக்கும் மேற்கண்ட முக்குணங்களே காரணமாகி இடை பின்சுழி இவைகளின் ஏற்றத்தாழ்வினால் பிணி, மூப்பு, சாக்காடு என்னும் காரியங்களை செய்து முடிக்கின்றன. இடைகலை, ஆதியாய் உள்ள மூன்றுகலைகளும் தன்தன் நிலையில் இருந்து பேதப்படாமல் இயங்கி வருமானால் அந்த மனிதர் அரோகம், திடகாத்திரம், தீர்க்காயுள், அறிவு, ஆற்றல் இவைகளுடன் விளங்குவார் என்பது சாஸ்திர சம்மத மாகும். அனுபவ சித்தாந்தமும் இதுவே.

2. இன்னிலையை அடையப் பல வழிகளுண்டு. இதில் முக்கியமானது அட்டாங்கயோக முறையில் மூன் ருவதாகிய, ஆஸன அப்பியாஸம் ஆகும். இம்முறையை பல பெரியோர்கள் புஸ்தகரூபமாகவும் பத்திரிகை வாயிலா கவும், வெளியிட்டு பிரஸித்தம் செய்து வருகிறார்கள். அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி உலக மக்களில் அநேகர் நன்மை அடைந்து வருவதை பிரத்தியட்சமாகப் பார்த்து வருகிறோம்.

3. இக்கட்டுரையை கண்ணுறும் புண்யசீலர்கள் எல் லோருக்கும் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால்; உங்களில் ஒவ்வொருவரும் பின் சந்ததி யார்களும் ஜீவகலையை அபிவிருத்தி செய்துகொள்ளு

வதற்கு ஏதுவான யோகாசன அப்பியாஸ முறையை பயிற்சி செய்துகொள்ளுங்கள். அதன் பிரயோஜனம் பல உள. முக்கியமாக ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய சிறு பிணிகளைத் தானே நிவர்த்தி செய்து கொள்ளவும், இதர காரியாதிகளை தவறில்லாமலும் உற்சாகத்துடனும் செய்தும், வெற்றி காணவும் உதவுவதோடு தன்னையும், தன் ஆதார தலைவனையும் கண்டு களித்து இன்பநிலையை அடையவும் முடியும். இவ்வரிய கலையை மகரிஷிகள் அனுசரித்து பல்லாயிர ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்கள். அம்முறையின் சிறுபகுதியாகிய இதை நாம் யாவரும் அப்பியஸித்து சுகமாய் வாழ்வோமாக.

ஓம் சாந்தி.

(தொடரும்)

ரஸௌஷதங்கள்.

[வைத்ய விசாரத. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி.]

2. பர்படீ.

பர்படீ (அப்பளம்) போன்று மெல்லிய தகடுகளாகத் தயாரிக்கப்படுபவையானதால் இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தயாரிக்கும்பொழுது ஏற்படும் ஒருவித பாக விசேஷத்தால் மூலத்ரவ்யத்தைக் காட்டிலும் விசேஷமான குணமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. இவை விசேஷமாக, கிரஹணீ (சிறுகுடல்)யின் சக்தியை ஸ்திரப் படுத்தி வளர்த்து ரக்தத்திலிருந்து மூத்ரத்தைப் பிரித்து வெளிப்படுத்தி சரீரத்திலுள்ள க்லேதாம்ச (கெடுதலளிக்கும் வீணான அம்ச)த்தை அகற்றுகின்றன. கிரஹணீ சக்தியை வளர்ப்பதாலும், மலத்திலுள்ள ஜலாம்சத்தைப் பிரித்து விடுவதாலும் முக்கியமாக இவை மலத்தை இறுகச்செய்பவைகளே. யகிருத், ப்லீஹம், விருக்கம் போன்ற ஆசயங்களில் ஏற்படும் கெடுதிகளை அகற்றுவதில் சிறந்தவை.

இதன் முக்யமான மூலத்ரவ்யம் ரஸமும் கந்தகமும். இவை இத்தயாரிப்பிற்காக சில விசேஷ சுத்திகளை அடைகின்றன.

ஹிங்குளத்திலிருந்து எடுக்கப்பட்ட ரஸம், அல்லது சுத்தி செய்த ரஸத்தை எடுத்து, கிரமமாக முன்னையிலை, சிற்றுமணக்கிலை, கருசலாங்கண்ணி, மணத்தக்காளி இலை இவைகளின் சாறில் வகைக்கு இரண்டுநாள் வீதம் அரைத்து பாவனை செய்யவும். ஒவ்வொரு பாவனைக்குப் பிறகும் வென்னீரால் ரஸத்தை நன்கு அலம்பவும். இது ரஸத்திற்கு விசேஷ சுத்தி. கந்தகத்தை பெருந்தூளாகச் செய்துகொண்டு அதை 7 நாள் கருசலாங்கண்ணிச் சாறில் பாவனை செய்யவும். பிறகு வென்னீர் விட்டலம்பி, காய வைத்து, நெய் தடவிய இரும்புக்கரண்டியில் போட்டு தணலில் காய்ச்சி உருகவைக்கவும். கந்தகத்தைக் காட்டிலும் நான்கு பங்கு கருசலாங்கண்ணிச்சாறு தயாரித்து ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போட்டு மேல் வாயை ஒரு மெல்லிய வெள்ளைத் துணி கட்டி அதன்மேல் உருகிய கந்தகத்தை விடவும். பிறகு அந்த கந்தகத்தை எடுத்து வென்னீர் விட்டலம்பி, காயவைத்து எடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு:— கந்தகம் 40 தோலா எடுத்துக் கொண்டால் அதை சுருக்குக் கொடுக்க, சுமார் பக்கா 1 படி கருசலாங்கண்ணி சார் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதம் சுத்தி செய்த ரஸகந்தகங்களையே பர்பபடிகளில் உபயோகப்படுத்த வேண்டும்.

1. **ரஸ பர்படீ:** ரஸம் கந்தகம் ஸம எடை எடுத்துக் கொள்ளவும். ரஸத்தில் கந்தகத்தை சிறிது சிறிதாகச் சேர்த்தரைத்து கஜ்ஜலியாக்கிக் கொள்ளவும். நல்ல கருப்பாகி ஓர் பளபளப்பு கொடுக்கும் வரை அரைக்கவும். சுத்தமான ஒரு இரும்புக் கரண்டி 4–5 அவுன்ஸ் ஜலம் பிடிக்கக் கூடியது, ஒரு இரும்பு கத்தி எருமை சாணம் (புதியது), முற்றின அகண்ட வாழை இலை, கரி அடுப்பு இவைகளைத் தயாரித்துக் கொள்ளவும். 10–12 அங்குலம் குறுக்கள

வுள்ள ஒரு மண்மடக்கில் (சராவத்தில்) $1\frac{1}{2}$–2 சேர் எருமை சாணத்தைப் பரப்பி அதன்மேல் மட்டமாக, காம்பு கிழித்து வாழையிலையின் ஒரு பாகத்தைப் பரப்பவும். மற்றொரு வாழையிலையில் பின்புறத்தில் சாணத்தை வைத்து ஒரு பொட்டணமாகக் கட்டிக் கொள்ளவும். இதற்கு சுமார் $1\frac{1}{2}$–2 சேர் சாணம் தேவை. இவ்வளவும் தயாரான பின் இரும்புக் கரண்டியில் நெய்தடவி தடவைக்கு $\frac{3}{4}$—1 தோலாவிற்கு மேற்படாமல் கஜ்ஜலி போட்டு கரி அடுப்பில் உருக்கி, நன்ருக உருகியவுடன் கத்தியால் மடக்கு சாணத்தின் மேலிருக்கும் வாழையிலை மேல் மெல்லியதாக தடவவும். $\frac{1}{2}$ நூல் கனத்திற்கு மேற்படாமல்– அப்பளம் போல் தடவ வேண்டும். உருகியதும் கருப்பாக பளபளப்புடன் கஜ்ஜலி ஆனவுடன் தடவவேண்டும். உடனே மேல் வாழையிலையில் கட்டிய சாணப் பொட்டணத்தால் மேல் அமுக்கவேண்டும்.

பிறகு வாழையிலையை எடுத்து ஜாக்ரதையாக பர்படியை கத்தியால் சுரண்டி எடுத்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் கவனிக்கவேண்டியவை: கஜ்ஜலி செய்தவுடனேயே பர்படியும் செய்துவிட வேண்டும். கஜ்ஜலி செய்து வெகுநாட்களுக்குப் பின் பர்படி செய்வது உத்தமமல்ல. பர்படி செய்யும்பொழுது மத்யமமான பாகத்தைக் கவனித்து உடன் வாழை யிலையில் தடவ வேண்டும். மிகவும் கருகிய பாகத்தில் எடுப்பது மருந்திற்கு கெடுதல்.

மிருது பாகமாக இருந்தால் பர்படி வளைந்து சிரமப்பட்டு ஒடியும். பளபளப்புடன் கூடிய கருப்பான வர்ணத்தில் சீக்ரம் ஒடியக்கூடியது மத்யமபாகம். கரபாகத்தில் தொடுமுன் தூளாகிவிடும். கரபாகத்தில் ரஸமும் பாகத்தில் ஓடிப்போய் கந்தகமும் கருகிப் போவதால் விஷம் போன்றதே அப்பாகத்தில் தேறிய பர்படீ.

பிறகு பர்படீயை இரண்டுநாள் நன்கு அரைத்துப் பிறகு உபயோகிக்க வேண்டும்.

தணலின் மேல் இரும்புக் கரண்டியில் காய்ச்சும் பொழுது திடீரென கந்தகம் பற்றிக்கொண்டு விடும். அதனால் தணல் புகையில்லாமலும் சிறிதளவிலும் இருக்க வேண்டும். கரண்டியின் மேல் பக்கம் தீ படாமலிருக்கும்படி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கந்தக பாகத்தில் சில வினாடிகளிலேயே மிருது மத்யம கரபாகங்கள் ஏற்பட்டுவிடுமாதலால் அவதானம் அதிகம் செலுத்தினாலன்றி ஸரியாக பாகம் அமைவது கடினம்.

இந்த சிரமத்தை ஓரளவில் குறைப்பதற்காக கீழ்க்கண்ட வழியைக் கையாள்வதும் உண்டு.— நல்ல புகையில்லாத தணலின் மேல் இரும்பு சட்டியை வைத்து அதன் மேல் சுமார் ½ அங்குலம் அளவு மணல் பரப்பி நன்கு சூடேறியவுடன் அதில் கந்தகக் கரண்டியை வைத்துக் கிளறிக் கொண்டு பாகம் வந்த ஸமயம் கவனித்து எடுப்பதும் வழக்கம். இந்த வழியில் அவ்வளவு சீக்கிரம் கந்தக பாகம் மாறுவதில்லை. சிறிது அவதானக்குறைவு ஏற்பட்டாலும் பெரிதான கெடுதி ஏற்படாது.

இதைத் தவிர சிலர் ஸ்டவ்விலும் உருக்குவது வழக்கம். இம்முறையில் தேவைக்கு தகுந்தபடி சூட்டைக் குறைத்துக் கூட்டுவது சுலபம் என்பது இதிலுள்ள நன்மை. எந்த முறையிலும் கவனக்குறைவில்லாமலிருப்பது அதிக அவசியம்.

இது எல்லா பர்படிகளுக்கும் பொதுவான விதி.

விஜய பர்படீ; முன் கூறியபடி சுத்தி செய்த ரஸம் 1 தோலா, கந்தகம் 2 தோலா, ரஜத (வெள்ளி) பஸ்ம ½ தோலா, ஸ்வர்ண பஸ்மம் ¼ தோலா, வைக்ராந்த பஸ்மம் ⅛ தோலா, முத்து பஸ்மம் அல்லது முத்து பிஷ்டீ* ⅛ தோலா. ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து பிறகு மற்ற

---

* **முத்துபிஷ்டீ** :— நல்ல ஓட்டையில்லாத நல்லமுத்தை கொதிக்கும் வென்னீரில் ½ மணி நேரம் ஊரவைத்து அலம்பி காயவைத்து இரும்பு உரலில் இடித்து-பொடி செய்து வஸ்திர காளனம் செய்யவும். கீரலில்லாத சுத்தமான கல்வத்தில் போட்டு ஒருநாள் எலுமிச்சம்

வைகளையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து உடன் பர்படி செய்யவும். இதன் செய்முறை ரஸபர்படியைப் போலவேதான்.

பஞ்சாமிருத பர்படீ : கந்தகம் 4 தோலா, ரஸம், லோஹ பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம் வகைக்கு 1 தோலா ரஸமும் கந்தகமும் கஜ்ஜலி செய்யப்பட்டபின் மற்ற பஸ்மம் சேர்த்து அரைத்து பர்படி செய்யவும்.

ஸப்தாமிருத பர்படீ ; பஞ்சாமிருத பர்படியிலுள்ள சரக்குகளுடன், வங்கபஸ்மம், யசத பஸ்மம் (துத்துநாக பஸ்மம்) இவைகளுக்கு ஒரு தோலா சேர்த்துச் செய்வது.

தாம்ர பர்படீ ; தாம்ர பஸ்மம் 3 தோலா, ரஸம் 3 தோலா, கந்தகம் 6 தோலா, சுத்த வத்ஸநாபி 1 தோலா. செய்முறை முன்போலவே.

ககன பர்படீ : ரஸம் 1 தோலா, அப்ரக பஸ்மம் 1 தோலா, கந்தகம் 2 தோலா. செய்முறை முன்போலவே.

லோஹ பர்படீ : ரஸம் 1 தோலா, லோஹ பஸ்மம் 1 தோலா, கந்தகம் 2 தோலா. செய்முறை முன்போலவே.

மண்டூர பர்படீ : ரஸம் 1 தோலா, மண்டூரபஸ்மம் 1 தோலா, கந்தகம் 2 தோலா. செய்முறை முன்போல்.

ஸ்வர்ண பர்படீ : ரஸம் 4 தோலாவில் தங்கரேக்கு 1 தோலா சிறிய சிறிய துண்டுகளாகச் சேர்த்து அரைத்து ஜாரணம் செய்தவுடன் எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு நாள் முழுவதும் அரைக்கவும். தேயாத கல்வத்தில் அரைக்கவும். எலுமிச்சம் பழச்சாறு கருத்துவிட்டால் ஜலம் விட்டு அலம்பிவிட்டு மேல் மறுபடியும் எலுமிச்சம்பழச்சாறு விட்டரைக்கவும். பிறகு 4 தோலா கஜ்ஜலி செய்து பர்படி செய்யவும். சிலர் ரஸத்தின் ஸ்தானத்தில் ரஸஸிந்

பழச்சாறு விட்டரைத்துக் காய்ந்தபின் சந்தனுத்யர்க்கம், அல்லது பன்னீர் விட்டரைத்து மை போலானவுடன் காயவைத்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

தூரம் சேர்த்து சிவந்த நிறமுள்ள பர்படி செய்கின்றார்கள்.

மேற்கண்ட யோகங்களை உற்று நோக்குங்கால், தேவைக்குகந்தபடி ரஸபர்படி கொடுக்கக்கூடிய ரோகங்களில் வித்வானான வைத்யன், ரோகம் ரோகி இவர்களின் நிலைமையை அனுஸரித்துத் தகுந்தவாறு திரவியங்களைச் சேர்த்து பர்படி யமைக்கலாம் எனத் தோன்றுகிறது.

சந்திரிகா மூலிகையின் அநுபவம்.

[V. B. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய, திருச்சி.]

லிங்கம்: பெண் குழந்தை. ஜனனமாகி 8-வது நாளில் இரவில் ஆரம்பித்தது— ஸர்வாங்கங்களையும் முறி முறியென்று முறித்துக் கொள்ளுதல், நடுக்கல், நித்திரை கிடையாது, ஸ்தன்யம் சாப்பிடுவதில்லை, பாலாடையில் போடும் பாலையும் கஷ்டத்தினால் குடிக்கிறது. மூத்ரத்தில் தோஷம், அளவு குறைவில்லை. மலம் சிறிது சிக்கலே தவிர சாதாரணமாய் வெளியாகிக் கொண்டிருக்கிறது. கண் சொருகல் சிலசமயம், சில சமயம் வாய் கோணல். ஜனித்த 8-வது நாளில் காண ஆரம்பித்த இந்தக் குறிகள் நாளுக்கு நாள் உக்கிரமாய் வளர்ந்து விட்டன. 5 நிமிஷங்கள் கூட ஆக்ஷேபமின்றி குழந்தைக்கு சாந்தி யென்பது இல்லை. குழந்தைக்குக் கிரஹபீடை, பயந்த கோளாறு என்று வியாதியல்ல என்று சிகித்ஸகரிடம் சொல்லவில்லை. மேற்படிக்கு செய்யப்பட்ட பரிகாரங்களினால் சமனம் ஏற்படவில்லை.

வியாதி ஏற்பட்ட 10-வது நாளில் அதாவது குழந்தை ஜனித்த 19-வது நாளில் நான் குழந்தையைப் பரீக்ஷை செய்தேன். குழந்தைக்கு முற்கூறிய லிங்கங்கள் பூர்ணமாயிருந்தன. தாயாருக்கு ஆரோக்கியக் குறைவு ஒன்றுமில்லை.

என்னுல் அநுஷ்டிக்கப்பட்ட சிகித்ஸையின் விவரம் :—

முதல் 1, 2—நாட்கள் சந்திரோதய மகரத்வஜம் 1 மாத்திரை, 8 பொட்டணம் 4 மணி நேரத்திற்கு 1 தரம் தேனில்— வாதாநுலோமனம், ஹிருதய பலம், கபஹரமாயுமிருக்கும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்டது.

தாயாருக்கு ஸ்தந்ய சுத்திக்காக— பிரபாகரயோகம் இன்று ஆரம்பித்து 1 வாரம் முடிய கொடுக்கப்பட்டது.

சந்திரோதய மகரத்வஜம் 2 நாட்கள் கொடுத்ததில் குழந்தையின் ஆக்ஷேபம் முதலிய லிங்கங்களில் ஒன்றும் சிறிதும் மாறுதலை அடையவில்லை. அதிகமாகவுமில்லை, குறையவுமில்லை.

3-வது நாளில் கோரோசனுதிவடி அரை காலை மாலை தேனில். திராக்ஷாரிஷ்டம் அரை அவுன்ஸில் பொடாஸியம் பிரோமைட் $\frac{1}{16}$ தோலா கலந்து ஜலம் அரை அவுன்ஸ் கலந்து கால் அவுன்ஸ் 4 மணிக்கொருதரம் கொடுக்கப்பட்டது. இது கேவலம் பரீக்ஷைக்காக செய்யப்பட்டது. கோரோசனுதிவடியினுல் மலசுத்தி நன்ருக ஆயிற்று. மற்றப்படி ஒரு குணமும் ஆக்ஷேபாபஸ்மாரத்தில் ஏற்படவில்லை.

4-வது நாள் சிகித்ஸை— சந்திரிகா—(सर्पगन्धा चोडा चांदा) மூலசூர்ணம் $\frac{1}{16}$ தோலா ரஸ ஸிந்தூரம் 4 யவம்=8 பொட்டணம் 4 மணிக்கொருதரம் தேனில்.

யுக்தி— வாத பித்த சமனம் செய்து நித்திரை உண்டு பண்ணும் உத்தேசத்துடன் சந்திரிகை. ரஸஸிந்தூரம் யோகவாஹி. சந்திரிகையின் குணத்தை விருத்தி செய்ய.

6-வது நாளில்— குழந்தைக்கு இருந்த எல்லாவித லிங்கங்களும் மெதுவாய் குறைய ஆரம்பித்தன. ஒருமணி நேரத்திற்கு ஒருதரமே ஆக்ஷேபம் நடுங்கல் சொருகல் ஏற்பட்டன. மூன்று நிமிஷங்களுக்குள் ஓய்ந்தன. சிறிது தூக்கம் கண்டது. வாயில் நுரை தள்ளவில்லை. ஆதலால் 6,

7, 8, 9-வது நாட்களில் மேற்படி அளவிலேயே சந்திரிகை ரஸ ஸிந்தூரம் 1 நாளில் 4 தடவை வீதம் கொடுக்கப்பட்டது. கிரமமாய் நாளுக்குநாள் விசேஷ பயன் கிடைத்தது. ஸ்தந்யமும் தானுக சாப்பிட ஆரம்பித்தது. 7-வது 9-வது நாளில் பிரதி காலையிலும் தனியாக கோரோசனுதி வடி மட்டும் அதிகப்படியாக மலாநுலோமனத்திற்காகக் கொடுக்கப்பட்டது. இதனுலும் நல்ல ஸௌக்கியம் கிடைத்தது. சிகித்ஸையின் 10-வது நாள் முதல் சந்திரிகையின் வேளைகளைக் கிரமமாய் குறைத்து 15-வது நாளில் தினம் 1 வேளை மட்டும் கொடுக்கப்பட்டது. 18-வது நாளில் சந்திரிகை நிறுத்தப்பட்டது. சந்திரிகா பிரயோகம் ஆரம்பித்த பிறகு மிசித்ராவகம் சந்திராத்யர்க்கம் ஸுதா ஜலம் கலந்து பலத்திற்காகக் கொடுக்கப்பட்டது. 2-வது நாளிலிருந்தே குழந்தைக்கு ஆக்ஷேபம் சமனமாக ஆரம்பித்துவிட்டது. 5—6 நாட்களுக்குள் பூர்ணமாய் குணமாகிவிட்டது. சிகித்ஸையின் ஆதியில் ஸ்நானம் நிறுத்தப்பட்டது. 11-வது நாளில் ஸுகுமார தைலத்தினுல் அப்யங்க ஸ்நானம் செய்விக்கப்பட்டது. முன்பு முகம் பார்க்காத குழந்தைக்கு ஸகஜமான விளையாட்டுக்கள் கிரமேண ஆரம்பமாகின.

இந்த வியாதி வாதபித்த தோஷப் பிரதானமானது. பாலாபஸ்மாரம் என்று ஊகிக்கிறேன். இதில் சந்திரிகை மூலத்தின் பிரயோகத்தால் நல்ல குணம் காணப்பட்டது.

கேரள ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தின்

தலைமையுரையின் ஸாரம்.

(முன் மாதத் தொடர்ச்சி)

கமிட்டியினர் குறித்த வழியால் இருவகை வைத்யங்களையும் ஒன்று செய்யாமல் இருவகை வைத்யங்களைமட்டில் சொல்லிக் கொடுப்பதால் நூறு வருஷங்களானுலும் ஒன்றுக்கொன்று உபகாரத்தால் ஒரே சாஸ்த்ரமாகத் தேறுவது எப்படி என்பது ஸம்சயமே.

ஆயுர்வேதத்தில், மலஜல ரக்த கப பரீக்ஷைகளில்லாமையால் இவைகளை அலோபாதிக்கிலிருந்தும், அலோபாதிக்கில் மல்லஸிந்தூராதி உயரிய பலத்தை அளிக்கவல்ல மருந்துகள் இல்லாமையால் இவைகளை ஆயுர்வேதத்திலிருந்தும் எடுத்துக் கொள்ளுதல் ஒன்றுக்கொன்று உபகாரமாகும் என்று சொல்லலாம், இருக்கட்டும். இதுதான் எப்படி என்பதைப் பார்ப்போம்.

ஆலோபாதிக் முறையால் கபபரீக்ஷை செய்து நியுமோனியா (Pneumonia) ஜ்வரம் என்று தேறி நின்றால் அது ஆயுர்வேதமுறையில் சிகித்ஸைக்கு எவ்விதம் உபகரிக்கும்? ஜீவாணு நாசகமான (Pneumo cocci) மருந்து அல்லவா அங்கு பிரயோகிக்கப்பட வேண்டும்? ஆகவே அலோபாதிக் முறையான பரீக்ஷை அலோபாதிக் சிகித்ஸைக்கே உபயோகமாகுமே தவிர ஆயுர்வேத சிகித்ஸைக்கு உபயோகமாகாது. இவ்விதமே மல்ல ஸிந்தூரம் கபவாத ஸந்நிபாதத்தைப் போக்கவல்லது. ஸந்நிபாதஜ்வரத்தில் மட்டுமல்ல; எங்கு கபவாதங்களால் ரோகம் உண்டாகிறதோ அங்கும் உபயோகமாகும். இவ்விதம் ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்ட மல்ல ஸிந்தூரம் தான் ஆலோபாதிக் முறையில் சிகித்ஸையால் எவ்விதம் உபகாரமாகும்? ஒரு முறையில் பரீக்ஷை செய்து மற்றொரு முறையில் சிகித்ஸை செய்தால் எப்படி முடியும்? ஈச்வரனே அறிவன்.

இவ்விதம் அநேக பரீக்ஷைகளால் இது ஒழுங்காகத் தேருததால் இப்படி ஒன்றாக இணைப்பது உடனே விடப்பட வேண்டும்.

பாரத தேசத்தில் ஒரேவித வைத்யத்தை நிலைநாட்ட ஒருவித கெடுதலுமில்லாமல் வேறுவழி என்ன என்றால் அதைக் கவனிப்போம்.

நமது பாரத தேசத்திலுண்டான ஆயுர்வேதமே எல் தேசங்களிலுமுள்ள எல்லா வைத்ய சாஸ்த்ரங்களுக்கும் மூலகாரணம் என்பது சரித்திரம் அறிந்தவர்களால் நன்கு அறியப்பட்டதாகும். இப்போதும் ஆயுர்வேதமே பாரத

தேசமுழுவதும் பரம்பியது. ஆயுர்வேதம் எல்லா அங்கங்களும் நிரம்பியதாக இருந்தது என்பதிலும் ஸந்தேஹமில்லை. அநேகவருஷங்களாக பாரத தேசத்தின் அடிமைத்தனத்தினுல் சரிவர போஷிக்கப்படாமலிருந்த போதிலும், இன்னமும் பாரத தேசத்தில் ஆயுர்வேதமே தலைசிறந்து விளங்குகிறது. ஆகவே, பாரத தேசத்தில் ஒரே வைத்ய முறையை ஸ்தாபிப்பதில் ஆயுர்வேதமே எடுத்துக்கொள்ளத் தக்கது. இதில் குறைவு ஸ்வல்பம்; மற்றவைகளில் அதிகம். குறைவு என்னவென்பது பரீக்ஷயினுல் அறிய வேண்டியது. இது பிறகு செய்யவுரியது. பரீக்ஷிக்காமல் சேர்ப்பது ஆபத்தை உண்டாக்கவல்லது.

ஆயுர்வேதத்தை வளர்க்க, ஆரோக்யசாலை, ஆராய்ச்சி சாலை, கோசசாலை, எல்லா உபகரணங்களும் நிறைந்த வித்யாலயங்கள் முதலில் ஸ்தாபிக்க்ப்படவேண்டும்.

பாடக் கிரமம்.

இப்போது ஆயுர்வேத சாஸ்திரத்தில் கிடைக்கிற சரக சுச்ருத காச்யப ஸம்ஹிதைகள், அஷ்டாங்க ஹ்ருதய பாவபிரகாச முதலிய நிபந்தங்கள், ரஸசாஸ்த்ரங்கள் இப்போதுள்ளபடியே பாடத்துக்கு உகந்தவையாயில்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

ஸ்வஸ்த விருத்தம் த்ரவ்யகுண விஜ்ஞான நிதான, சிகித்ஸை முதலிய இதுபோன்ற எல்லா விஷயங்களிலும் தனித்தனியாகப் பிரித்து எல்லா கிரந்தங்களிலிருந்தும் சேகரித்து ஒருங்கே சேர்த்து புத்தகங்கள் வித்வான்களால் தயாரிக்கப் பட வேண்டும். இக்காரியம் சுமார் இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே முடிந்துவிடலாம்.

ஆயுர்வேதத்தின் எல்லா அங்கங்களிலும் நேராகப் பார்த்துத் தொழிற் பயிற்சியை முன்னிட்டு சிஷ்யர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

பிறருடைய சாஸ்த்ரங்களிலிருந்து எது எடுத்துக் கொள்ளத் தக்கது? எப்படி எடுத்துக்கொள்ளத் தக்கது என்பதை கவனிப்போம்.

எது நமது ஆயுர்வேத சாஸ்த்ரங்களில் இல்லையோ; எது இல்லாமல் ஆதுரன் விஷயத்தில் கவலைப்படுகிருனே; அல்லது எது ஆயுர்வேத வழியைக் காட்டிலும் மிகவும் ஸுலபமாகவும் நிச்சயமாக வியாதி தீர்க்கத் தக்கதாகவு முள்ளனவோ அந்த ஸாதனத்தை அல்லது யந்த்ரத்தை அல்லது கருவியை அவைகள் பிறரால் ஆக்கப்பட்டவை என்று நினையாமல் ஆயுர்வேத வித்வான்களாலும் ஆதரிக்கத் தக்கவையே.

எல்லா பாரத தேச கலைகளும் சாஸ்திரங்களும் பஞ்சமஹா பூத தர்சன ஸித்தாந்தத்தையே மூலமாகக் கொண்டு செய்யப்பட்டமையால் அச்சாஸ்த்ரங்களுடைய அபிவிருத்தியில் மூலகாரணமான விஜ்ஞானங்களிலேயே (Basic Sciences) ஜ்ஞாநாபிவிருத்தி செய்யத் தக்கது.

இப்போது ஆயுர்வேத அபிவிருத்தியின் பொருட்டு பிறதேச விஜ்ஞானத்தால் ஆக்கப்பட்ட எக்ஸ்ரே, மைக்ராஸ்கோப், தர்மாமீட்டர் முதலிய யந்த்ர ஸாதனங்கள் இன்றியமையாதன. இந்த யந்த்ரங்களை உபயோகிக்கு முன் இதன் ஸ்வரூபத்தை அறிவிக்கும் மூல விஜ்ஞான தத்வத்தை செவ்வனே அறிந்துகொண்டால் தான் அதை உபயோகிக்கும் சாமர்த்யம் சரியாக உண்டாகும். அதனுல் ஆயுர்வேத ரீதியிலும் அவ்வுபகரணங்களை உண்டாக்கத் தக்க ஸாமர்த்யமும் தானே உண்டாகும்.

இவ்வளவு காலமாக நம் பாரத தேச ஆரோக்ய ரக்ஷணத்தில் சோப்ராக் கமிட்டியினரால் வெளியிடப்பட்ட யாதாஸ்துக்குப் பிறகு மத்திய-கீழ அரசாங்கத்தில் அடிப்படையில் மாறுதல் செய்து அனுஷ்டானத்தில் எந்தக் கெடுதல் உண்டாகுமோ அவைகளை நன்ருக விசாரித்தோம். சுத்தமான ஆயுர்வேத வளர்த்தியை அக்கமிட்டியின் உபதேசங்கள் லக்ஷ்யமாகக் கொண்டதானுல்; அப்போது அளவிறந்த ஸந்தோஷத்துடனும் நன்றியுடனும் அதை அநுஷ்டிப்பதற்கு நாம் அனைவரும் அவர்களுடன் கூடுவது யுக்தமாகும்.

தஞ்சாவூர் இந்திய வைத்திய சபையின் 7-வது ஆண்டுவிழா.

கடவுள் வணக்கத்தை காரியதரிசி ஸ்ரீ M சங்கர வைத்தியர் நடத்தி, Dr. T. B. சங்கர் ராவ் அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்க, Dr. V. S. பாண்டியா ஆமோதித்தார். ஸ்ரீ சங்கர் ராவ் நிகழ்த்திய பிரசங்கத்தின் சாரமாவது; இந்திய வைத்யத்தின் சிறப்பைப் பற்றியும் அதைக் கையாள்வதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் ஆயுர்வேதத்தின் அழிவில்லாத வழியில் ரிஷிகள் எழுதிவைத்திருக்கும் அரும்பெரும் குணம் வாய்ந்த பழமையான கிரந்தங்களைப் படித்து உண்மை தெரிந்துகொள்வதுடன், யோகசாஸ்திர நுட்பங்கள் தெரிந்து அன்னகோசம் முதலிய பஞ்ச கோசங்களின் வேலைத் தன்மைகளைப் பற்றியும் தெரிந்துகொள்வது மிகவும் நன்மை பயக்குமென்றும், தத்வ சாஸ்திர அடிப்படையில்தான் இந்திய வைத்திய கிரந்தங்களை ரிஷிகள் இயற்றியிருக்கின்றனரென்றும் நாட்டு வைத்யத்தில் புட பாகங்கள் முதலிய முறைகள் மிக உபயோகமானதென்றும் ஆயுர்வேத சாஸ்திரத்தின் மூலக் கருத்துக்களை தெரிந்துகொள்வதுடன் உடனடியாக பழைய மூலிகைகளை ஆராய்ச்சி செய்து உலகத்தாருக்கு அதன் முக்கிய தத்வத்தை தெரிவிக்க வேண்டியது ஒவ்வொரு வைத்ய சகோதரர்களுடைய கடமையுமாகும் எனவும் சில நோய்களில், மந்திர சிகித்ஸையும், யோக சிகித்சையும் இன்றியமையாததாகும் எனவும், வருங்காலத்தில் இளைஞர்கள் ஒவ்வொருவரும் தமது தேசத்துக்குகந்த மருந்துகளை ஊக்கமுடன் கண்டுபிடித்து அவைகளை ஆராய்ச்சி செய்து பொது ஜனங்கள் உபயோகத்திற்குக் கொண்டுவரச் செய்வது வைத்ய சகோதரர்கள் கடமை எனவும் தன்னைப் போல் வயோதிகம் எய்தினவர் மேல் அதிகமாக உழைக்கமுடியாவிடினும் வருங்கால இளைஞர்களாகிய உங்களுக்கு இது விஷயத்தை எடுத்துக் கூறுகிறேன் எனவும் எந்த வைத்யமாயிருப்பினும் நம் இந்திய தேசத்திற்கு உகந்த ரீதியில் அதை பயன் படுத்த வேண்டுமெனவும் கூறினர்.

Dr. T. M. நாராயணஸ்வாமி அய்யருக்கு வரவேற்பு பத்திரம் அளிக்கப்பட்டது. அவர் இந்திய வைத்தியத்தில் தனது ஆழ்ந்த அனுபவத்தைப் பற்றியும், அதன் குணாதிசயத்தைப் பற்றியும் சொன்னதுடன் இந்திய வைத்திய மத்திய போர்டில் மெம்பர் எனும் ஹோதாவில் தன்னால் கூடுமானவரை இந்திய வைத்தியத்திற்காக உழைக்கச் சித்தமாயிருப்பதாகக் கூறினார்.

அடுத்தபடியாக ஸ்ரீ. வாஸுதேவ சாஸ்திரிகள் ஆயுர்வேதத்தின் ஸாரத்தைப் பற்றியும் அதன் பெருமையைப் பற்றியும் அவைக்கு விரிவாக எடுத்து உரைத்தார்.

ஸ்ரீ D. S. பாலசுப்பிரமணிய சாஸ்திரி திரிதோஷங்களின் பிரகிருதியைப் பற்றியும், ஜ்வர சிகித்சையில் தோஷ கோபங்களைத் தெரிந்து கையாள வேண்டிய வழியைப் பற்றியும் இலகுவாகவும் விளக்கமாகவும் சாஸ்திர ரீதியாகவும் எடுத்துக் கூறினார். அடிப்படையில் ஆயுர்வேதத்தின் மகிமை மிகவும் உபயோகமானதென்றும் அதைக் கையாளவேண்டிய வழிகளையும் முக்கியமாக சில அபூர்வமான வியாதிகளெனக் கருதப்படும் மலடு, மதுமேகம் முதலிய வியாதிகளின் காரணமும் அவைகளின் சிகித்ஸைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

அடுத்தபடியாக ஸ்ரீ. V. V. ஸ்ரீனிவாஸய்யர் அவர்கள் ஹோமியோபதிக்கும், ஆயுர்வேதத்திற்கும் உள்ள அடிப்படையான உறவைப் பற்றியும், அவைகளின் குணநிசயங்களைப் பற்றியும் கட்டுரை மூலம் விளக்கினார். தலைவர் ஸ்ரீ T. B. சங்கரராவ் முடிவுரையில் மேல் கூறின ஒவ்வொருவருடைய பிரசங்கங்களுக்கும் மேற்கோள்களை எடுத்து விளக்கிச் சொன்னார்.

காரியதரிசி வந்தனோபசாரம் கூற சபை கலைந்தது.

ஆயுர்வேத வைத்தியத்துக்கு ஐ. மா. சர்க்கார் ஆக்கம்.

காசி. ஜூலை. 21

ஆயுர்வேத யூநானி மருந்துகள் தயாரிப்புக்காக லக்ஷ்மணபுரியில் ஒரு ஆயுர்வேத மருந்து சாலையை நிறுவ ஐ. மா. சர்க்கார் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த சர்க்கார் மருந்து சாலையில் வருஷா வருஷம் ரூ. 20 லக்ஷம் மதிப்புள்ள மருந்துகள் தயாரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ. மா. சர்க்கார் பராமரிப்பில் இருக்கும் 400 ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் மருந்துகள் சப்ளை செய்யப்படும்.

இவ்வருடம் இன்னும் 70 வைத்திய சாலைகள் திறக்கப்படும்.

ஆயுர்வேத யூநானி வைத்திய முறையில் புஸ்தகங்கள் தயாரிக்கவும் ஆயுர்வேத கல்லூரி திறக்கவும் சர்க்கார் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிகிறது.

சோப்ரா கமிட்டி ரிபோர்ட் பற்றி டாக்டர் ராஜன்.

"ஆயுர்வேத வைத்திய முறையில் நம்பிக்கை வைத்திருக்கும் ஏராளமான மக்கள் இந்நாட்டிலுள்ளனர் என்னும் உண்மையை மனதிலிறுத்திக் கொண்டு சோப்ரா கமிட்டி ரிபோர்டை ஆராய வேண்டும்'' என்று இந்திய வைத்ய சங்கத்தின் சென்னைக் கிளையின் ஆதரவில் சோப்ரா கமிட்டி யாதாஸ்து பற்றி நடந்த விவாதத்தின் போது சுகாதார மந்திரி டி. எஸ். எஸ் ராஜன் வற்புறுத்தினர்.

பார்வையாளராக இருந்த டாக்டர் ராஜன் விவாதத்தின் போது பேசுகையில் இந்நாட்டில் கஷ்டப்படும் நோயாளிகளை வசீகரிக்க முடியவில்லை என்று மேல்நாட்டு முறை வைத்யர்கள் வெட்கித் தலைகுனிந்துள்ளதாகவும் மக்களில் பெரும்பான்மையோர் ஆயுர்வேத முறையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் சோப்ரா கமிட்டியை ஆராயும் போது இந்த உண்மையை ஞாபகம் வைத்துக் கொள்வது அவசியம் என்றும் எழுத்தறிவில்லாத ஆயுர்வேத வைத்தியர்கள் செய்துள்ள அளவாவது மேல்நாட்டு முறை வைத்யர்கள் வியாதிகளை சமாளித்துள்ளனரா என்பது பிரச்னை என்றும் ஆயுர்வேத வைத்யர்களுக்கு டாக்டர்கள் கடமைகளைச் செய்துள்ளனரா என்பது பற்றியும் யோசிக்கவேண்டும் என்றும் கூறினர்.

காப்டன் G. ஸ்ரீநிவாஸமூர்த்தி பேசுகையில் இந்திய வைத்திய முறைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறினர்.

டாக்டர் யு, கிருஷ்ணராவ் பேசுகையில் இந்திய வைத்திய முறை மேல்நாட்டு முறைக்கு சமமாக முன்னேறிய பின்தான் இரு முறைகளையும் இணைக்கலாம் என்றும் அவசரப்பட்டு இணைத்தால் இந்திய முறை அழிந்துவிடுமென்றும் கூறினர்.

लघ्वी वहति दीप्ताग्नेस्तथा वेगवती मता ॥ ६७ ॥

மாம்ஸம் மேதஸ் அதிகமாயிருப்பவருடைய நாடி மிகவும் ஆழ்ந்து தெளிவாய் பேசாது. அதிக கவனத்துடன் நாடி நிர்ணயம் செய்யவேண்டியது. ஜ்வரத்தின் தாபம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நாடி உஷ்ணமாயும் அதிக வேகமாயும் துடிக்கும்.

குறிப்பு :— சில ஸந்நிபாத ஜ்வரத்தில் மட்டும், உதாஹரணமாக ஆந்த்ரிக ஸந்நிபாதத்தில், ஜ்வரவேகத்தை அநுஸரித்து நாடியின் நடை அதிகமாய் வளருகிறதில்லை. ஏக தோஷ ஜ்வரத்தில் அதிலும் பித்தப் பிரதானமான ஜ்வரத்தில் ஸந்தாபனம் ஏற ஏற நாடி கதி வேகம் ஏறும்.

சரீரத்தில் ஏற்படும் ஜ்வரஸந்தாபாதிக்யத்தினால் மட்டும் நாடி வேகம் ஏறுமென்பதில்லை. மானஸிக விகாரங்களான காமத்தினாலும் கூட தமனீ வேகம் அதிகரிக்கின்றது. இவ்வாறே மனோ பீதியினாலும் சோகம் சிந்தனைகளினாலும் நாடி மந்தமாயும் மெலிவாயும் ஆகின்றது. அக்னிமாந்தியமிருப்பினும், தாதுக்கள் க்ஷீணித்திருப்பினும் க்ஷயத்திற்குத் தகுந்தபடி மிகவும் மந்த கதியை அடைகின்றது.

ரக்த தாது ஸ்வபாவமான அளவைப் பார்க்கிலும் அதிகரித்தால் நாடியானது உஷ்ணஸ்பர்சமுள்ளதாயும், கனத்தும் இருக்கும். (Blood Pressure அதிகமாயிருப்பினும் நாடி கனமாய்ப் பேசும்) குடலில் ஆமதோஷமிருப்பின் நாடி மிகவும் கனமாயிருக்கும். ஆகாரம் நன்கு ஜீர்ணமாகி அக்னி தீபனம் ஏற்பட்ட சமயத்தில் லகுவாயும் சிறிது வேகமதிகரித்துமிருக்கும்.

चपला क्षुधितस्यापि तृप्तस्य वहति स्थिरा ।

உணவு உண்டவுடன் நாடி உறுதியாயும், ஜீர்ணமாய் பசி ஏற்பட்ட பொழுது சிறிது சஞ்சலமாயுமிருக்கும். 68

மரணக் குறிகளைப் போதிக்கும் நாடிகளைச் சொல்லுகிறார்—

मरणे डमरूकस्य भवेदेकदिनेन च ॥ ६८ ॥

டமருகம் என்று ஒரு வாத்தியம். மத்தியில் கட்டின சிறு கட்டையினால் இருபக்கமும் ஆட்டி அடிக்கும் 'ஒடுக்கு' வாத்தியத்திற்கு சமமானது என்று என் அபிப்பிராயம். இந்த வாத்தியத்தில் அடிப்பது போல் இரட்டைத்தாவு தாண்டி நாடி துடித்தால் அங்கு நோயாளி ஒரு நாளிற்குள்ளேயே மரித்துவிடலாம்.

कम्पते स्पन्दतेऽत्यन्तं पुनः स्पृशति चाङ्गुलीः ।
तामसाध्यां विजानीयात् नाडीं दूरेण वर्जयेत् ॥ ६९ ॥

நாடி நடுங்கி-நடுங்கி விரல்களுக்குப் புலப்படுமானல் அஸாத்தியமாகும்.

स्थिरा नाडी भवेद्यस्य विद्युद्द्युतिरिवेक्ष्यते ।
दिनैकं जीवितं तस्य द्वितीये मृत्युरेव च ॥ ७० ॥

உறுதியா யிருந்தாலும் நாடி மின்னல் போல்தோன்றி மறையும் நிலையிலிருப்பின் ஒருநாள் உயிர் வாழ்ந்து மறுநாள் மரணம் ஸம்பவிக்கும். 70

शीघ्रा नाडी मलोपेता शीतला वाऽथ दृश्यते ।
द्वितीये दिवसे मृत्युर्नाडी ज्ञेया विचक्षणैः ॥ ७१ ॥

நாடி சீதளமாயும், மலம் நிறைந்ததும், சீக்கிரமாய் துடித்தால் இரண்டாவது நாளில் மிருத்யு ஏற்படலாம். 71

मुखे नाडी वहेत्तीव्रा कदाचिच्छीतला वहेत् ।
आयाति पिच्छिलः स्वेदः सप्तरात्रं न जीवति ॥ ७२ ॥

உடலில் பிசுக்குடன் வேர்வையும், நாடி தீவ்ரமாயும், சிற்சில சமயத்தில் சீதளமாயும் நடக்குமாகில் சாதாரணமாய் ஏழு தினங்களுக்கு ஜீவிக்கமாட்டான். 72

देहे शैत्यं मुखे श्वासो नाडी तीव्रा विदाहवत् ।
मासार्धं जीवितं तस्य नाडी विज्ञानभाषितम् ॥ ७३ ॥

சரீரம் சில்லிட்டு, சுவாஸம் கண்டு, எரிச்சலுடன் தீவ்ரகதி நாடிக்கு ஏற்படின் பதினைந்து நாட்கள் ஜிவிப்பது அரிது. 73

मुखे नाडी यदा नास्ति मध्ये शैत्यं बहिः क्लमः ।
यदा मन्दा भवेन्नाडी त्रिरात्रं नैव जीवति ॥ ७४ ॥

முதலில் நாடி புலப்படாமலும், பிறகு சீதளமாயும் புலப்பட்டு சரீரத்தில் ஆயாசமும் அதிகமிருப்பின் சுமார் மூன்று நாட்களுக்குள் மரண மேற்படலாம். 74

अतिसूक्ष्माऽतिवेगा च शीतला च भवेद्यदि ।
तदा वैद्यो विजानीयाद्रोगिणं तं गतायुषम् ॥ ७५ ॥

அதிக வேகமோ, அதிக சீதளமோ, அதிக ஸூக்ஷ்மமோ நாடிக்கு ஏற்படினும் மரணம் நெருங்கும். 75

विद्युद्भ्रमिता नाडी दृश्यते च न दृश्यते ।
अकालविद्युत्पातेव स गच्छेद्यमशासनम् ॥ ७६ ॥

அமுங்கி மின்னல் போல காணுவதும் மறைவதுமாயிருப்பினும் மரணம். 76

तिर्यगुष्णा च या नाडी सर्पगा वेगवत्तरा ।
कफपूरितकण्ठस्य जीवितं तस्य दुर्लभम् ॥ ७७ ॥

கண்டத்தில் கபம் நிறைந்து, உஷ்ணமாயும் வேகமாயுமுள்ள நாடி பாம்புபோல் குறுக்குப்பாய்ச்சலில் நடக்குமாயின் உயிர் வாழ்வது அரிது. 77

चेलाञ्चलितवेगा च नासिकाधारसंयुता ।
शीतला दृश्यते या च याममध्ये च मृत्युदा ॥ ७८ ॥

சேலையினுல் பிடிப்பது போல் குறைந்த வேகமும், சில்லிட்டும், மூக்கில் மட்டும் சுவாஸம் ஓடுவது போலிருக்கும் நிலை ஏற்படின் ஒரு யாமத்திற்குள்ளே மரணம். 78

दृश्यते चरणे नाडी करे नैवाभिदृश्यते ।
मुखे विकसितं यस्य तं दूरं परिवर्जयेत् ॥ ७९ ॥

நாடி காலில் துடித்துக் கொண்டிருந்து, மணிக்கட்டில் புலப்படாவிடில், வாயும் சிறிது திறக்க ஆரம்பித்தால் அவனைத் துறக்க வேண்டியதே. 79

वातपित्तकफाश्चापि त्रयो यस्यां समाहिताः ।
कृच्छ्रसाध्यामसाध्यां वा प्राहुर्वैद्यविशारदाः ॥ ८० ॥

மூன்று தோஷங்களும் முழு வேகத்துடன் ஒன்ருகக் கெட்டு நாடியில் தெரிந்தாலும் ஆரோக்கியம் கிடைத்தல் அரிது. 80

ஜ்வரத்தில் வாதாதி தோஷங்களைக் காட்டும் நாடீ லக்ஷணம் —

वक्रा च चपला शीतस्पर्शा वातज्वरे भवेत् ।
द्रुता च सरला दीर्घाऽशीता पित्तज्वरे भवेत् ॥ ८१ ॥
मन्दा च सुस्थिरा शीता पिच्छिला श्लेष्मतो भवेत् ।
वक्रा च ईषच्चपला कठिना वातपित्तजा ॥ ८२ ॥
ईषच्च दृश्यते स्पृष्टा मन्दा स्याच्छलेष्मवातजा ।
सूक्ष्मा शीता स्थिरा नाडी पित्तश्लेष्मसमुद्भवा ॥ ८३ ॥

வாதஜ்வரத்தில் நாடீ கோணலாயும், சஞ்சலமாயும், சிறிது குளிர்ந்தும் இருக்கும். பித்தஜ்வரத்தில் நாடீ வேகமாயும், ஒழுங்காயும், சிறிது நீளமாயும், உஷ்ணமாயும் அடிக்கும். கபஜ்வரத்தில் நாடி மெதுவாயும், உறுதியாயும், சீதளமாயும் வழவழப்பாயும் இருக்கும். வாத பித்தஜ்வரத்தில் நாடீ கடினமாயும், கோணலாயும் சிறிதே சஞ்சலக் குறிப்புடனிருக்கும். வாத கபஜ்வரத்தில் நாடீ அழுத்திப்பார்த்தாலும் சிறிதே விளக்கமாகும், மிக மந்தமாயிருக்கும். பித்த கபஜ்வரத்தில் நாடீ குளிர்ந்தும், ஸூக்ஷ்மமாயிருப்பினும் உறுதியுடனும் இருக்கும், 81—83

ஆரோக்கிய நாடீ :—

हंसगा चैव या नाडी तथैव गजगामिनी ।
मुखं प्रशस्तं च भवेत्तस्यारोग्यं भवेत् सदा ॥ ८४ ॥

அன்னப்பக்ஷி போல், யானை போல் கம்பீரமாயும் நேராகவும் நாடியின் நடை யிருந்தால் முகமும் தெளிவாயிருக்கும், ஆரோக்கியமாயிருப்பான். 84

வைத்யருக்கு உபதேசம் :—

यो रोगिणः करं स्पृष्ट्वा स्वकरं क्षालयेद्यदि ।
रोगास्तस्य विनश्यन्ति पङ्कः प्रक्षालनाद्यथा ॥ ८५ ॥

நோயாளியின் கையைத் தொட்டு நாடீபரீக்ஷை செய்தபிறகு வைத்தியர் தன் கைகளை அவசியம் அலம்பிக் கொள்ளவேண்டும். அலம்புவதனுல் சேறு விலகுவதுபோல் நோய்கள் வைத்தியனைப் பற்றிக் கொள்ளாமல் விலகும்.

அலம்பாவிடில் நோயாளியின் நோய்கள் அவனைத்தொடும் வைத்தியனையும் அவசியம் ஒட்டிக்கொள்ளும். ஆதலால் வைத்தியன்

தன்னை ஸம்ரக்ஷித்துக் கொள்ளுவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

குறிப்பு :— மிகவும் புராதனமான ஆயுர்வேதக் கிரந்தங்களான சரக ஸுச்ருத அஷ்டாங்கஹ்ருதயம் முதலிய ஸம்ஹிதைகளில் நாடீ பரீக்ஷை விசேஷமாய் சொல்லப்படவில்லை. பிந்திய நூல்களில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உலகில் நமது பாரத தேசத்தில் தான் நாடீ பரீக்ஷையினால் வியாதி நிர்ணயம் செய்யும் ஒரு விசேஷ விஞ்ஞானம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அதிகமான தேர்ச்சியும் இன்னும் நமது பாரத தேசத்தில் தானிருக்கின்றது. இந்த யோகரத்நாகர க்ரந்தத்தில் சொல்லப்படாமல் மற்றும் பல நாடீ சாஸ்திரங்களில் விசேஷ விரிவு கூறப்பட்டிருக்கிறது. இந்த சுவையுள்ள பதார்த்தத்தைப் புசித்தவனுடைய நாடி இவ்விதமிருக்கும். இந்தக் கார்யம் செய்தவனுடைய நாடி இவ்விதமிருக்கும். ப்ரத்யேக ரோகங்களில் இவ்விதமிருக்கும்— என்றெல்லாம் பெரிய நாடி சாஸ்திரக்காரர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஆனால் அவ்வித விசேஷ விஞ்ஞானம் பெறுவது சாதாரணமாய் ஸாத்தியமாகாது. ஆமாவஸ்தை, பக்வாவஸ்தை, ஸந்தாபத்தின் ஏற்றக் குறைவு, தாதுக்களுடைய க்ஷயம், பூர்த்தி, வாத பித்த கபங்களுடைய பிரிவுகள், ஹ்ருதயத்தின் கதி, அரிஷ்ட லிங்கங்களிற் சில— இவை போன்ற விஷயங்களை நாடியிலிருந்து ஸுலபமாய், சிறிது பிரயத்னமாய் கவனித்துப் பார்க்கும் வைத்தியர்கள் எளிதிலேயே தெரிந்து கொள்ள முடியும். ஹ்ருதயத்தின் கதிதான் அலைபரவும் நியாயப்படி மணிக்கட்டில் நாடீ பரீக்ஷையினால் உணரப்படுகிறது என்பது சாரீர சாஸ்திர தத்துவமாயினும், ஹ்ருதயஸ்தானத்தில் மார்பில் நேராக குழாய் வைத்துக் காதால் பரீக்ஷை செய்யப்படுவதால் ஏற்படும் ஞானம் ஸம்பூர்ண அளவில் மணிக்கட்டிற்கடியில் நாடீ பரீக்ஷையினால் ஏற்பட முடியாது. இவ்விதமே கைநாடி பார்ப்பதினால் மார்பில் ஹ்ருதய பரீக்ஷைக் குழலினால் ஏற்பட முடியாத பற்பலவித விசேஷ விஞ்ஞானங்கள் நாடீ பரீக்ஷையினால் ஏற்படும். ஆதலால் நாடீ பரீக்ஷையும் மிக அவசியம். குழல் மூலம் ஹ்ருதய பரீக்ஷையும் மிக அவசியம். வைத்தியன் முக்கியமாய் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதாவது :— ஆரோக்கியம், வியாதி, அதன் அவஸ்தா விசேஷங்கள், அரிஷ்ட லிங்கங்கள், ஸாத்யாஸாத்யங்கள் முதலியவைகளை நாடீ பரீக்ஷையினால் மட்டும் ஒரு முடிவு செய்து விடக்கூடாது. அஷ்டஸ்தானபரீக்ஷை பூராவாகச் செய்து, எல்லாவித பரீக்ஷைகளிலும் ஒருவித ஒற்றுமையைக் கண்டுபிடித்து பிறகே ஒரு முடிவிற்கு வைத்தியர் வரவேண்டும். தனியாக நாடீ பரீக்ஷையினால் மட்டும் நோய் நிதானம் செய்வது சாஸ்திர ஸம்மதமே

யில்லை. தவறுதல் ஏற்படலாம். நாடி அதிகாரத்தில் இன்னும் அநேக நூல்களிலிருந்து எடுத்து எழுதக்கூடிய விஷயமதிகமிருக்கின்றது. விரிவிற்கஞ்சி விடுகின்றோம். மேலும் நாடிசாஸ்திரம் நூல்களிலிருந்து மட்டும் அதிகமறிய முடியாது. தன்னுடைய அநுபவத்தினால் மட்டுமே பயிற்சியும் தேர்ச்சியும் அடையக் கூடியது.

நாடி பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ मूत्रपरीक्षा ॥

अथातः संप्रवक्ष्यामि मूत्रस्य च परीक्षणम् ।
येन विज्ञातमात्रेण रोगचिह्नं प्रकाश्यते ॥ ८६ ॥

மூத்ர பரீக்ஷை.

சரீரத்தில் கழிவு வஸ்துக்களில் ஒன்றான மூத்ரத்தின் பரீக்ஷைக் கிரமத்தைச் சொல்லுகிறோம். அந்தந்த ரோகத்திற்குத் தகுந்தவாறு மூத்திரத் திரவத்தில் அநேகவித மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆதலால் மூத்திரத்தில் காணும் குறிகள் அந்தந்த விசேஷ வியாதியை விளக்குகின்றன. ஆகவே மூத்ர பரீக்ஷை செய்யவேண்டியது அவசியம்.

பரீக்ஷைக்கு மூத்ரமெடுக்க வேண்டிய விதம்.

निशान्त्ययामे घटिकाचतुष्टये उत्थाप्य वैद्यः किल रोगिणं च ।
मूत्रं धृतं काचमये च पात्रे सूर्योदये तत्सततं परीक्षेत् ॥ ८७ ॥
तस्याद्यधारां परिहृत्य मध्यधारोद्भवं तत्परिधारयित्वा ।
सम्यक् परिज्ञाय गदस्य हेतुं कुर्याच्चिकित्सां सततं हिताय ॥

வைத்தியர் ரோகியை விடிய நான்கு நாழிகைக்கு எழுப்பி மூத்திரம் விடச்செய்து முதலில் சிறிதளவு மூத்திரத்தைப் பிடிக்காமல் விட்டு மத்தியில் கிடைக்கும் நீரை சிறிது வாயகன்ற கண்ணாடிப் பாத்திரத்தில் ஏந்தி மூடிவைத்து ஸூர்யோதயமானதும் நன்றாய் பரீக்ஷை செய்து நோயின் காரணத்தைக் கண்டுபிடித்து தகுந்த மருத்துவம் செய்யவேண்டும்.

குறிப்பு:— 'வைத்தியன் ரோகியை விடியற்காலையில் எழுப்பி' என்ற உபதேசமானது யோகரத்நாகரர் காலத்தில் ரோகிகள் வசிக்கும் வசதியுள்ள ஆரோக்கிய சாலைகள் (Hospitals and Nursing

Homes) நம் நாட்டில் ஸஹஜமாய் இருந்துகொண்டிருந்தன என்பதைத் தெளிவாக்குகிறது. மூத்ரத்தின் ஆதி மத்திய அந்தங்களில் தனியான வித்யாஸங்கள் இருப்பதையும் தெரிவிக்கிறது. இது உண்மையே. இங்கு கிரந்த கர்த்தாவால் கூறப்படப்போகும் தைல பிந்து பரீக்ஷை செய்வதற்கு ஆதி அந்த மூத்ரத்தைப் பார்க்கிலும் மத்தியத்தில் கிடைக்கும் மூத்ரமே அதிகம் நல்லது என்று தாத்பர்யம் கொள்ளவேண்டும். ஏனெனில் மூத்திரத்தின் வர்ணம், குருத்வம், (Gravity) கலக்கம், தெளிவு, அடியில் தங்குதல், உரைந்துபோதல் முதலிய அநேகவித பரீக்ஷைகளுக்கு தாரையின் ஆதி, மத்ய, அந்த பாகங்களை சில ஸந்தர்பங்களில் தனித்தனியாகப் பரீக்ஷிக்க வேண்டியிருக்கிறது. வேறு சில ஸந்தர்ப்பங்களில் முழு அளவு மூத்ரத்தை யுடைய ஒரே பாத்திரத்தில் பெய்து பூராவையும் அல்லது முழு அம்சத்திலிருந்து ஒரு அளவு தனியாக எடுத்துப் பரீக்ஷை செய்ய வேண்டியிருக்கிறது.

மூத்ரத்தில் திரிதோஷ வர்ணக்குறிகள்—

वाते च पाण्डुरं मूत्रं सफेनं कफरोगिणः ।
रक्तवर्णं भवेत् पित्ते द्वन्द्वजे मिश्रितं भवेत् ॥ ८९ ॥
सन्निपाते च कृष्णं स्यादेतन्मूत्रस्य लक्षणम् ।

மூத்திரம் வாதாதிக்யமான ரோகங்களில் சிறிது வெளிராகவும், கபதோஷத்தில் சிறிது நுரையுடன் கூடியதாகவும், பித்தாதிக்யத்தில் சிறிது ரக்த வர்ணமுள்ளதாயும், ஸம்ஸர்கத்தில் தோஷங்களுக்குத் தகுந்தவாறு சேர்ந்த குறிகளும், ஸந்நிபாதத்தில் மூத்ரம் சிறிது கருப்பு வர்ணமுள்ளதுமாகவும் இருக்கும்.

மூத்ரத்தில் தைல பிந்து பரீக்ஷை:—

अन्यच्च—

परीक्षा विधिवत् कार्या रोगिमूत्रस्य तत्त्वतः ।
तृणेन दापयेत् तैलबिन्दुं तत्रातिलाघवात् ॥ ९० ॥
विकासितंतैलमथाशु मूत्रे साध्यः स रोगी न विकासित चेत् ।
स्यात् कष्टसाध्यः तलगे त्वसाध्यो नागार्जुनेनैव कृता परीक्षा ॥

மூத்ரத்தில் மத்தியில் ஒரே ஒரு துளி நல்லெண்ணெய் ஒரு பில் அல்லது ஈர்க்கினால் மிக மெதுவாய் சொட்டவேண்டியது. இத்தைலபிந்துவானது மூத்ரத்தின் மேல் நான்கு பக்கத்திலும் சுற்றி வேகத்தில் பரவுமாகில் அந்நோயாளி சுகமடைவான். பர

வாமல் நிற்குமாகில் நோய் கடின ஸாத்தியமாகும். தைலபிந்து நேரே கீழ் இறங்கி பாத்திரத்தினடிக்குச் சென்றால் நோய் அசாத்தியமாகும். இந்தப் பரீக்ஷையை முதலாவதாக ஸ்ரீ நாகார்ஜுனர் கண்டுபிடித்தார்.

चर्पटत:—

नीलं च रूक्षं कुपिते च वायौ पीतारुणं तैलसमञ्च पित्ते ।
स्निग्धं कफे पल्वलवारितुल्यं स्निग्धोष्णरक्तं रुधिरप्रकोपे ॥ ९२ ॥

मातुलुङ्गरसाभासं सौवीराभं जलोपमम् ।
प्रपाकरहितानां च मूत्रं चन्दनसन्निभम् ॥ ९३ ॥

अजीर्णप्रभवे रोगे मूत्रं तण्डुलतोयवत् ।
नवज्वरे धूम्रवर्णं बहुमूत्रं प्रजायते ॥

पित्तानिले धूम्रजलाभमुष्णं श्वेतं मरुच्छ्लेष्मणि बुद्बुदाभम् ।
तच्छ्लेष्मपित्ते कलुषं सरक्तं जीर्णज्वरेऽसृक् सदृशं च पीतम् ।
स्यात्सन्निपातादपि मिश्रवर्णः तूर्णं विधिज्ञेन विचारणीयम् ॥

சர்படர் என்பவர் கூறுகிறார்:— உடலில் வாயு கோப மேற்டின் மூத்திரம் ருக்ஷமாய் (மிகவும் ஸ்நேஹம்— எண்ணெய் பசை குறைவாய்) சிறிது கறுக்துக் காணும். பித்த தோஷம் கோபித்தால் மஞ்சள் அல்லது சிறிது சிவப்பாகவும் எண்ணெய் நிகரான தோற்றமும் கூடியதாயிருக்கும். சிலேஷ்ம தோஷ கோபத்தில் ஸ்நிக்தமாயும் (எண்ணெய் பசை மேலிட்டு) ஓடை நீர் போன்றதும், (கனமாயும், தெளிவாயும்) இருக்கும். ரக்தப் பிரகோபத்தில் மூத்ரம் சிறிது எண்ணெய் பசையுடன், உஷ்ணமாயும், சிவப்பாயும், சிறிது ரக்தம் கலந்துமிருக்கும்,

குறிப்பு :— மூத்திரம் பெய்யும் போது நோயாளிக்கு மூத்திர தாரையில் உஷ்ணநுபவம்ஏற்படும். பெய்தவுடன் கை ஸ்பர்சத்திலும் வைத்தியன் உஷ்ணத்தை உணரமுடியும். ஆகார பரிபாகத்தில் கெடுதல் ஏற்படின் தோஷங்களுக்குத் தக்கபடி மூத்திரம் துருஞ்சிப் பழச்சாறு போல், காடி போல், சுத்த நீர் போல், சந்தனம் போல் ஏதாவதொரு நிறத்தைக் காட்டும். சில அஜீர்ணங்களில் அரிசி அலம்பிய ஜலம் போலிருக்கும். புதிதான ஜ்வராரம்ப நிலையில் புகையடைந்தது போல் கலக்கமாயும், அளவில் அதிகமாயுமிருக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

சென்னை சர்க்கார் சிந்தித்து நடக்கவேண்டும்.

இந்திய வைத்திய விஷயங்களுடைய நிர்வாஹத்திற்கு வைத்தியரல்லாத ஒருவர் ஸ்பெஷல் ஆபீஸராக இருந்ததை எல்லோரும் வெகுவிதமாய் கண்டித்துக் கொண்டிருந்தனர். கனம் டாக்டர் T. S. S. ராஜன் அவர்கள் ஆரோக்கிய மந்திரியாக ஆனவுடனே அவர் முதல் கார்யமாகச் செய்ததானது வைத்தியரல்லாதவரை வைத்திய இலாகா நிர்வாஹம் செய்ய வைத்தது தவறுதலென்று அவரை அகற்றிவிட்டு ஒருபெரிய ஆங்கில வைத்திய நிபுணரான Dr. M. R. குருசாமி முதலியார் அவர்களை இந்திய வைத்திய டிரைக்டர் பதவியில் பூர்ண அதிகாரத்துடன் நியமனம் செய்தார். ஒரு சிகித்ஸா சாஸ்திரத்திலும் சிறிதும் பயிற்சி பெறுத ஒருவர் இந்திய வைத்திய இலாகா நிர்வாஹியாக இருந்த ஒரு பெருங் குறை ஒருவாறு நீங்கியதாகத் தோன்றிய போதிலும், தேசீய வைத்திய சாஸ்திரங்களைப் பற்றிய வரையில் விசேஷமொன்றுமில்லை என்பது தெளிவு.

Dr. M. R. குருசாமி முதலியார் அவர்கள் ஆலோபாதிக் சாஸ்திரத்தில் மிக மிகப் பெரியவர் என்பதில் ஆக்ஷேபமில்லை. அன்னாருக்கு ஆயுர்வேதம் முதலிய இந்திய வைத்தியங்களில் ஒருவித அபிமான மிருக்கலாமெனக் கருதலாமாயினும் இந்திய வைத்திய சாஸ்திரத்தில் சொல்லும்படியான தேர்ச்சி பெற்றிருக்கும் அடையாளம் ஒன்றும் இதுவரை Dr. குருசாமி முதலியார் அவர்களிடம் வெளிப்படையாக அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

ஆகவே, வைத்தியரல்லாத ஒருவர் நிர்வாஹியாக இருந்ததற்கும், தேசீயவைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சி பெறுத ஆலோபாதிக் வைத்தியர் தேசீய வைத்திய டிரைக்

டராக இருப்பதற்கும் வித்யாஸமோ, விசேஷமோ இல்லை யென்று இந்திய வைத்தியர்கள் சொல்லுவர்களானால் என்ன தவறிருக்கிறது? ஆயுர்வேதாதி சாஸ்திரங்களைப் பற்றிய நிர்வாகமோ அபிவிருத்தியோ செய்ய அந்த சாஸ் திரத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெரிய வைத்தியரை நிய மனம் செய்தால் தான் கார்யம் ஸித்தியாகும்.

ஆயுர்வேதத்தைச் சீர்திருத்த மேல்நாட்டு வைத்தியம் பயின்றவர்களால்தான் முடியும் என்று எண்ணுவதானது அடிப்படையிலேயே மிகப் பெரிய அபத்தமானது. இதைப் பற்றி விவரிக்க இங்கு இடமில்லை. சுருக்கமாக— மேல் நாட்டு விஞ்ஞானமே ஸித்தாந்தமென்று வைத்துக் கொண்டு அதன் மூலம் ஆயுர்வேத சாஸ்திர தத்துவங் களைப் பரீக்ஷை செய்து பார்த்தல் என்ற கொள்கையே அடிப்படியான அபத்தமாகும். ஆயுர்வேதத்தை அதன் மூல சாஸ்திரங்களாலும், பிரத்யக்ஷாதிப் பிரமாணங்களா லும் பரிசீலனம் செய்வதே முறை. இதற்கு அநுஷ்டான முறையில், கார்யத்தின் சௌகர்யத்திற்காக. மேல்நாட்டு விஞ்ஞானப் பயன்களை உபயோகித்துக் கொள்ள. ஒரு வகையில் மேல்நாட்டு விஞ்ஞானிகளும், ஆலோபாதிக் டாக்டர்களும், ஆயுர்வேதப்பிரதான வித்வான்களுக்கு உத வியாளராக வேலை செய்ய நியமனம் செய்வது உண்மை யில் உபகாரமாயிருக்கலாம். ஆயுர்வேத வைத்தியரைப் பிரதமாதிகாரியாக நியமனம் செய்யாமல் ஆங்கில வைத் தியரைப் பிரதமாதிகாரியாக நியமனம் செய்ததில் வைத்தி யரல்லாதவர் ஸ்பெஷல் ஆபீஸராக இருந்ததைப் பார்க் கிலும் இந்திய வைத்திய அபிவிருத்திக்கு பாதகமா யிருக்க லாமோ வென்றுகூட அஞ்ச வேண்டி யிருக்கிறது. காலம் தெரிவிக்கும்.

ஸ்டேன்லி மெடிகல் காலேஜ் மாஜி பிரின்ஸ்பால் Dr. தினகர ராவ் அவர்கள் இந்திய வைத்திய டிரைக்டர் பதவி யை ஏற்க முதலில் சர்க்காரால் செய்யப்பட்ட வேண்டு கோளைத் தனக்கு ஆயுர்வேதத்தில் பயிற்சி இல்லை என்ற ஒரே காரணத்தால் அப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்

துவிட்டார் என்று பிரஸ்தாபம் பிரஸித்தமான பின்பு Dr. M. R. குருசாமி முதலியார் M. D. அவர்கள் இந்திய வைத்திய டிரைக்டர் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதிலிருந்து Dr. முதலியாரவர்கள் தேசீய வைத்திய சாஸ்திரங்களில் ஆராய்ச்சிகள் செய்யவும், மேலும் முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டிய கார்யங்களில் திட்டங்கள் மனதில் வைத்திருக்கலாமென்று தேசீய வைத்தியர்கள் நினைக்கலாம். ஆனால் வெளிப்படையாக இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை.

சோப்ரா கமிட்டியின் சிபார்சுகளை அநுஷ்டானத்தில் கொண்டுவர நமது மாகாண சர்க்கார் உடனடியாகத் தொடங்கப் போகின்றது என்று ஸமாசாரப் பத்திரிகைகளில் ஒருதரம் பிரசுரமாயிற்று சோப்ரா கமிட்டியின் சிபார்சுகளில் எல்லாவற்றிலும் மிகப் பிரதானமானது ஆலோபதிக் ஆயுர்வேத வைத்திய முறைகளுடைய பிணைப்பே யாகும்.

இந்த பிணைப்பு உசிதமா, அநுசிதமா? ஸாத்தியமா, அஸாத்தியமா? உடனடியாக இதுதான் முதலில் செய்யவேண்டியதா, காலக்கிரமத்தில் ஒருநிலைக்கு மேல் ஆலோசிக்க வேண்டியதா? என்ற விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன.

சோப்ராக் கமிட்டி யாதாஸ்தை உருவாக்கிக் கொடுத்ததில் முக்கிய கர்த்தாவான காப்டன் G. ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்களும், அன்னாரின் சீடர்களான சில L. I. M. வைத்தியர்கள் மட்டுமே ஆலோபாதிக் ஆயுர்வேத முறைகளுடைய உடனடியாக பிணைப்பில் ஆர்வத்துடன் முயற்சி செய்கின்றனர். சென்னை மாகாணத்திலும், இதர மாகாணங்களிலும் உள்ள ஸகல ஆயுர்வேத வைத்தியர்களும் வைத்திய சாஸ்திரங்களுடைய பிணைப்பைக் கண்டனம் செய்கின்றனர். அகில இந்திய ஆயுர்வேதக் காங்கிரஸ், தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், கேரள—ஆந்திர ஆயுர்வேத மஹாமண்டலங்கள் எல்லாம் ஆயுர்வேத சாஸ்

திரம் அதனுடைய முறையில் வளர்க்கப்பட வேண்டுமே தவிர பிணைக்கும் சிந்தனை தற்சமயம் கூடாது என்று முறையிட்டுக் கொண்டே யிருக்கின்றன. இந்திய வைத்தியர்கள் மட்டுமல்ல, இந்தியாவிலிருக்கும் இங்கிலீஷ் வைத்திய முறையின் எல்லா டாக்டர்களும், அஸோஸியேஷன்களும், பத்திரிகைகளும் வைத்தியசாஸ்திரங்களுடைய பிணைப்பை பலமாக எதிர்க்கின்றனர்.

கனம் சுகாதார மந்திரிக்கும் அவஸரப்பட்டுப் பிணைப்பது அபாயகரமானது என்ற அபிப்பிராயமே இருக்கிறதாக அவருடைய ரேடியோ பிரஸங்கத்திலிருந்தும் தெரிகிறது.

இதில் முக்கியமாய் அநுபவம் என்ன பயனைச் செய்திருக்கின்றது என்று பார்த்து, அதன்மேல் ஒரு முடிவிற்கு வருவது உசிதமென்று சொல்லுவதில், விவாதமிருக்கக் கூடாது. அநுபவத்தில் பலித்திருக்கிறது என்ன? சென்னை சர்க்கார் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் கடந்த கால் நூற்றுண்டுகளுக்கு மேலாக, இப்பொழுது சோப்ராக் கமிட்டியில் சொல்லியிருக்கிறபடி இணைப்பு வைத்தியக் கல்வித் திட்டத்தை சிறப்பாக ஆரம்பநாள் முதற்கொண்டு தீவிர முயற்சியுடன் அநுஷ்டானம் செய்துகொண்டு வந்திருக்கின்றது. ஒரு கல்வி திட்டத்தை சரி; தவறு—என்று தீர்மானிக்க 25 வருஷகால அநுபவம் போதாதென்றோ, சென்னை சர்க்கார் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் இதற்குப் போதிய வசதி யில்லையென்று சொல்லவோ முடியாது.

ஆயுர்வேதம் அதன் சொந்த சாஸ்திரீய தத்துவங்களிலோ, அப்பியாஸங்களிலோ 25 வருஷங்களுக்கு முன்பிருந்ததைப் பார்க்கிலும் இன்று ஏதாவது ஓர் வகையில் அபிவிருத்தியாகி யிருக்கிறதா? இந்திய வைத்தியங்கள் என்று சொல்லப்படும் ஆயுர்வேதம்-யுனானி-ஸித்த வைத்திய சாஸ்திரங்களை யாகிலும் திரட்டி ஸாரமாக எடுத்து ஒரு வைத்திய முறையாகச் செய்வதில் முதற்படியான கார்யமாவது செய்ய முடிந்திருக்கிறதா? பள்ளியில் 5 வருஷங்கள்

பயின்றுள்ள மாணவர்கட்கு இந்திய வைத்தியத்திலோ ஆலோபாதிக் வைத்தியத்திலோ எவ்வளவு தேர்ச்சி இருக்கின்றது? ஆலோபாதிக் ஆயுர்வேத வைத்தியங்களைப் பிணைக்காவிடில் உலகில் வைத்தியம் ஒன்றுமே உத்தமமாயிராது என்ற கொள்கைக்கு மூல புருஷரான, காப்டன் G. ஸ்ரீநிவாஸ மூர்த்தி அவர்கள் 'பிணைத்தல் அவசியம் ஸாத்தியம்' என்றெல்லாம் புத்தகம் புத்தகமாய் எழுதியிருக்கிறாரே தவிர, அவரால் இத்தனை வருஷ அநுபவத்திற்கு மேலும் ஆயுர்வேத ஆலோபாதிக் மூலதத்துவங்களையோ சிகித்ஸா முறைகளையோ ஏதாவதொரு அங்கத்தில் ஸமன்வயம் செய்து ஒரு சிறிய நூல் வெளியிட முடிந்திருக்கின்றதா? இல்லையே.

பிணைப்பு என்றால் என்ன? சிகித்ஸை செய்யுங்கால் வைத்தியன் ஆலோபாதிக் முறை மருந்துகளையும் ஆயுர்வேத முறை மருந்துகளையும் இஷ்டம்போல் ஸௌகர்யம் போல் கையாளுவதுதான் என்றால் இதற்காக மிகப் பிரயாசை வேண்டியதில்லை. சரியோ, தவறோ; இப்பொழுது அநேகமாய் இதுதான் புதிய ஸ்கூலில் படித்த வைத்தியர் சிகித்ஸையில் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்த முறை உண்மையில் மிகவும் இகழ்ச்சிக்குரியதே. முதலில் சாஸ்திரீய தத்துவங்களை ஸமன்வயம் செய்து பிறகு கார்ய முறைகளிலும் ஒன்றான சாஸ்திரீயமான இணைப்புதான் உண்மையான இணைப்பாகும்; அபிவிருத்தியுமாகும். இவ்விதம் முடிந்தால் செய்யவேண்டும். காப்டென் G. ஸ்ரீநிவாஸ மூர்த்தி அவர்கள்கூட சாஸ்திரீய ஸமன்வயம் ஒன்றும் செய்யவில்லை. அவருடைய கொள்கையின்படி 25 வருஷகாலம் நடத்தின இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் இஷ்டப்பட்ட பயனை அளிக்கவில்லை. விபரீதப் பயனையே வெகுவாக விளைவித்திருக்கிறது. ஆதலால் இந்தத் தவறுதலான கல்வித் திட்டத்தை இப்பொழுதாவது உடனே மாற்றிச் சீர்திருத்தம் செய்ய நமது கவர்ன்மெண்டார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இணைப்புப் பிணைப்புக்களில் சிந்தனை செலுத்தாமல் இந்திய வைத்திய சாஸ்திரத்தை அதன் சொந்த முறையில் எல்லாவிதத்திலும் அபிவிருத்தி

செய்வதே உத்தமமான முறையாகும். இதர வைத்திய சாஸ்திரங்களில் இருக்கும் விசேஷ நல்ல அம்சங்களை எந்த முறையில் ஸ்வீகாரம் செய்துகொள்ளவேண்டுமென்பதை நாம் பலதடவை சொல்லியிருக்கின்றோம்.

இந்திய வைத்தியப் புனருத்தாரணத்தில் அநேக கார்யங்கள் செய்யவேண்டியிருப்பினும் கல்வித்திட்டமே எல்லாவற்றிலும் மிக முக்கியமானது. கல்வித்திட்டத்தை நிர்ணயம் செய்யவும், பாடப் புத்தகங்களை நிர்மாணம் செய்யவும், ஸம்பூர்ண வஸதி பெற்ற ஆராய்ச்சிசாலை நல்லபடியாக உடனே ஆரம்பித்து நடத்தவேண்டும். எவ்வித ஆராய்ச்சிசாலை நடத்தப்பட வேண்டும் என்று ஒரு சிறிய மெமோரண்டம் தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் உபதலைவர் ஸ்ரீ. V. ஸுப்பிரமணிய அய்யர் அவர்களால் 25—7—49-ல் இந்திய வைத்திய டிரைக்டர் Dr, குருசாமி முதலியார் அவர்களிடம் நேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வேண்டிய விவரங்கள் கொடுக்கவும் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் தயாராயிருக்கிறது.

நமது மாகாண சர்க்கார் இந்திய வைத்தியத்தை அபிவிருத்தி செய்வதில் சோப்ராக் கமிட்டி யாதாஸ்தினுடையவும், அதன்படி நடத்தவேண்டுமென்றும் என்ற ஒரு சிறு கலப்பு வைத்திய சாரார்களுடைய அபிப்பிராயத்தை மட்டும் கவனித்துத் திருப்பவும் பழைய அபத்தத்தையே தொடர்ந்து நடத்திக்கொண்டு போகாமல், நல்ல ஸம்பிரதாய வழியில் பயின்ற தேசீய வைத்திய வித்வான்களை நன்ருகக் கலந்துகொண்டு ஒழுங்கான முறையில் உத்தமமான வழியைக் கடைப்பிடித்து நடக்கவேண்டியது அவசியம் என்று நமது மாகாண கவர்ன்மெண்டாரை மீண்டும் வற்புறுத்துகிறோம். வித்யாபிவிருத்திக்காகச் செலவழிக்கும் பணத்தைத் தகுந்த பயனளிக்கும் முறையில் உபயோகிக்க வேண்டியதவசியமல்லவா?

நேத்ரப்ரகாசிகை.

[G. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சாவூர்.]

(145-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன்பு 100 நேத்ர ரோகங்கள் உண்டாகின்றன என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அவைகளின் உத்பத்தி கூறப்படுகிறது.

இரண்டு இரப்பைகளிலும் 24 ரோகங்கள் உண்டாகின்றன. அவைகளின் பெயர்கள் :— துர்மாம்ஸம், ரக்த பூர்ணம், வக்ரரோமம், பக்ஷ்மாங்குரம், பூயஸ்ராவம், சங்க பில்லம். மாம்ஸபில்லம், ரக்தபில்லம், சர்மபில்லம், ஸூக்ஷ்ம பில்லம். சோஷபில்லம், ஸ்தூலபில்லம், ஆங்குரபில்லம், கிருமி பில்லம் என்று 14 ரோகங்கள். இவைகள் வைத்தியத்திற்கு ஸாத்யமாகும்.

ரோம நாசம், பக்ஷ்மவிரணம், பக்ஷ்மகண்டூ, பூயமிச்ரம் இந்த 4 ரோகங்களும் யாப்யம். இவைகள் திவ்ய ஒளஷதங்களினால் ஜயிக்கக் கூடியவை.

பக்ஷ்மவிருத்தி, கிருமிவிருத்தி, ரக்தவிருத்தி, ரோமவிருத்தி, பக்ஷ்ம சைலம், வல்மீகாங்குரம் இந்த 6 ரோகங்களும் அஸாத்யமென்று கருதப்படவேண்டும்.

ஆக பக்ஷ்ம ரோகங்கள் மொத்தம் 24.

சுக்ல ஸந்தியில் 9 ரோகங்கள் உண்டாகின்றன. அவைகளின் பெயர்கள்— அந்தச் சுக்லம், பஹிச் சுக்லம், அதஸ் ஸந்தி சுக்லம், ஊர்த்வ ஸந்தி சுக்லம், விருண சுக்லம், ரக்த சுக்லம், க்ஷய சுக்லம், சூல சுக்லம், சோஷ சுக்லம். இந்த 9 வியாதிகளும் ஆரம்பமாகும் பொழுது பால்யாவஸ்தையில் சிகிச்சை செய்தால் ஸாத்யமாகும். கொஞ்சம் தருணாவஸ்தையில் யாப்யம். பிறகு விருத்தகாலத்தில் அஸாத்தியம். ஸந்தியில் உண்டாகும் எல்லா ரோகங்களும் (சீக்

ரத்தில் வைத்தியம் செய்யாவிடில்) அஸாத்தியமாகவே முடியும். ஆனால் அஸாத்யஸாத்யம், அஸாத்யயாப்யம், அஸாத்யாஸாத்யம் என்ற பேதத்தைத் தெரிந்துகொண்டு, இளமையுடன் கூடியது, தருணாவஸ்தையுடன் கூடியது, நன்கு வளர்ந்தது என்கிற நிதானத்தையும் பார்த்துக் கொண்டு, காலத்தையும் அநுஸரித்து வைத்தியம் செய்ய வேண்டும். ரோகம் வரும்பொழுது பால்யம் வந்தவுடன் கௌமாரம், பிறகு விருத்தாவஸ்தை ஏற்படுகிறது. இது போதயனரின் மதம். (பாலன், கௌமாரன், யௌவனன், விருத்தன், அலஸன், மிருதன் என்றும் சிலர் பிரித்திருக்கிறார்கள்).

ச்வேத மண்டலத்தில் 13 வியாதிகள் உண்டாகின்றன. அவைகளின் பெயர்கள்— ரக்தபடலம், மாம்ஸபடலம், ஸர்ப்பபடலம், சர்மபடலம், த்விதளம், அங்குரம், தாது, பஹுளம், லகுதளம், விசாலம், ஹ்ருஸ்வம், கார்பாஸம்—இந்த ரோகங்கள் சஸ்த்ரம், ஔஷதம், தைலம் இவைகளால் ஸாத்யமாகும். இவைகள் ஜ்யோதி மத்திவரையில் படர்ந்து வந்தால் அஸாத்தியமாகும். (13 வியாதிகள் சொல்லி 12 தான் கிரந்தத்தில் காணப்படுகிறது.)

கிருஷ்ண மண்டலத்தில் 5 ரோகங்கள் உண்டாகின்றன.

அவைகளின் பெயர்கள்— ஹ்ருஸ்வ புஷ்பம், பஹி புஷ்பம், நீல புஷ்பம் இந்த மூன்றும் ஸாத்யம்.

புஷ்பகிலகம் இது யாப்யம். ஸிதபுத்புதம் இது அஸாத்யம்.

ஆக கிருஷ்ணமண்டல ரோகங்கள் 5.

ஷை ரோகங்கள் தவிர, சில கிருத்ரிமமான தோஷங்களினால் 22 வியாதிகள் உண்டாகின்றன. அவை பிறரால் ஏவப்பட்ட சூன்யங்களினாலும், கண்களில் போடும் மருந்துகளின் தோஷங்களினாலும், அபத்யத்தினாலும் உண்டாகின்றன. அவைகளின் பெயர்கள்— நீலபுத்புதம், அதிமாம்ஸம், குந்தம், அர்புதம், குகூணம், ஜ்யோதிச்சேதம்,

க்ரோதம், ரக்த மாம்ஸம், மஹாவேதம், தாஹசோஷம், மஸூரி புஷ்பம், யாமச்சேதம், தினச்சேதம், மாஸச்சேதம், மஹாஸ்ராவம், நேத்ரஸ்தம்பம், ச்வேத மேஹகம், குஹர மாம்ஸம். மஹாவிருத்தி, விஷாங்குரம், ரக்தபுத்புதம், மேதாவிருத்தி— இந்த ரோகங்கள் வராமல் தடுக்கவேண்டும். வந்துவிட்டால் அஸாத்யம்.

ஸர்வ நேத்ர ரோகங்கள் 20. அவைகளின் பெயர்கள்— ஜனனுந்தம், மரணுந்தம், ஜலஸ்ராவம், கபஸ்ராவம், ரக்த ஸ்ராவம், பூயஸ்ராவம், கிரஹண்யந்தம், ஸந்தியாந்தம் என்று 8 ரோகங்கள். இவை அஸாத்யம்.

நகுலாந்தம், திலாந்தம், நிசாந்தம், நக்தாந்தம், காமிலாந்தம், அபிஷ்யந்தம், ச்வேதாவரணம் இந்த 7 ரோகங்களும் யாப்யம்.

ஹம்ஸகோபம், கிருஷ்மகோபம், பைத்யகோபம், தூமாவரணம், ரக்தாவரணம், இந்த 5 ரோகங்களும் ஸாத்யம்.

ஆக ஸர்வ நேத்ர ரோகங்கள் 20.

ஜ்யோதிஸ்தானத்தில் 7 ரோகங்கள் உண்டாகின்றன. அவைகளின் பெயர்கள்— நீலம், திமிரம், மந்தாரம், திரிதோஷ காசம், ச்லேஷ்ம காசம், வாதகாசம், பித்தகாசம். இவற்றில் பித்தகாசம் ஒன்றைத் தவிர மற்றவை அஸாத்தியம். அந்த ஒன்றும் சஸ்த்ர சிகிச்சையினுல் தான் ஸாத்யம். மற்ற ஆறும் வரும்பொழுதே சிகிச்சையினுல் யாப்யம் எனக் கருதப்படுகிறது.

நேத்ர ரோகங்களில் 10 அவஸ்தைகள் இருக்கின்றன. அவற்றையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

1. சூலம்— (வேதனை). 2. மாம்ஸம் சிவத்தல். 3. பூயம் அதிகமாகுதல். 4. வெள்ளையாகுதல். 5. எரிச்சல் உண்டாகிப் பொங்குதல். 6. ஜ்யோதி குறைத்தலாகுதல். 7. உருண்டையாகக் காட்டுதல் (ஒப்புதல், வீங்குதல்).

8. எரித்தலாலுண்டாகும் துர்வாசனை ஏற்படுதல். 9. மணி உடைவது. 10. கண்ணின் நாசம்.

(தொடரும்.)

ரக்தஸம்ஹதி சிகித்ஸை.

[வைத்ய விசாரத. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.]

சில விசேஷ மருந்துகள்.

ஸர்ப்பகந்தா— சந்திரிகா: Rawolfia Serpantina என்ற லத்தீன் பெயருடன், நேபாள அடிவாரம், பீஹார், வங்காளம், நமதுமாகாணத்தில் திருநெல்வேலி ஜில்லா இவைகளில் பயிராகின்றது. தமிழில் சிலர் இதை கருடங் கிழங்கு எனக் கூறுகிறார்கள். வங்காளத்தில் இதை சாந் தர் என்றும், பீஹாரில் சந்தமரவா, தனமரவா, ஈசரகஜ, எனவும் காசியில் தவலபருவா எனவும் மராட்டி பாஷை யில் அடக ஈ எனவும் கூறுகின்றார்கள். இச்செடியில் வேர் மருந்தாக உபயோகப்படுத்தப் படுகின்றது.

இது பைத்திய மருந்தென கிராமங்களிடையே பிர ஸித்தி அடைந்து வருவதைக்கண்ட மஹாமஹோபாத்யாய கணநாத் ஸேன ஸரஸ்வதியும் டாக்டர் கார்த்திக சந்திர வஸுவும் இதை நவீன விக்ஞான ரீதியில் பரீக்ஷை செய்து இதன் குணங்களை பரிசீலனை செய்துள்ளார்கள். அவர் கள் தாம் இதை ரக்தஸம்ஹதியைக் குறைக்கும் ஔஷதம் எனக் கண்டுபிடித்தவர்கள்.

சந்திரிகா-ஸர்ப்பகந்தா— இதன் வேர் தகுந்த அள வில் கொடுக்க நல்ல தூக்கம் வருகின்றது. மனஸ்ஸின் குழப்பத்தையும் உன்மாதத்தையும் குறைக்கின்றது. ஹிருத யத்தின் வேகத்தைக் குறைத்து ரக்தவஹதமனிகளை விரி வடையச் செய்கின்றது. அதனால் ரக்தஸம்ஹதி குறை கின்றது. உன்மாத ரோகமுள்ளவன் பலவானாகவும் உத்

தேஜிதனுக (பரபரப்புள்ளவனுக)வுமிருந்தால் இதன் உபயோகத்தில் நல்ல லாபமுண்டு. ஸ்வபாவமாக துர்பலனும், மனதும் சரீரமும் சோர்வடைந்தவனும் இதை மிகவும் ஜாக்ரதையுடன் தான் உபயோகிக்க வேண்டும். சில துர்பலம், சோர்வுள்ள ரோகிகளுக்கு இதனுல் விசேஷ லாபமில்லை என்பதுடன் ரோகீ அதிக தௌர்பல்யமடைகின்ருன். பிரபல ஜ்வரங்களால் ஏற்படும் அரதி, ஆராட்பம், பிரலாபம், மோஹம் இவைகளில் இதை உபயோகிப்பதனுல் அத்தோஷங்கள் நீங்கி ஜ்வரத்தின் ஸந்நிபாதாவஸ்தையும் குறைந்து ஜ்வரம் வேகம் தணிந்து நல்ல தூக்கமும் வருகின்றது.

இதைத் தனியாக இடித்து வஸ்திரகாலனம் செய்து கொண்டு சூர்ணமாக உபயோகப் படுத்தலாம்.

உபயோக முறை :— ரக்தஸம்ஹதியைக் குறைக்க 5-10 யவ அளவு (கிரைன்), தூக்கம் வருவதற்காக 5-15 யவம். உன்மாதம், பிரபலமான அபதந்திரகம் (ஹிஸ்டீரியா) இவைகள் $\frac{1}{8}$-$\frac{1}{4}$ தோலா வரை. சோர்வு, ஹிருதயாவஸாதமுள்ளவனுக்கு இதைக் கொடுக்கும் பொழுது ஜாக்ரதையாக இருக்கவும். துர்பலமதிகமானுல் உடனே நிறுத்தி கஸ்தூரி பைரவம் போன்ற ஹிருதய பலகாரகமான மருந்துகளை உபயோகிக்கவும். இதைக் குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகமாக உபயோகப்படுத்தினுல் ஹிருதயம் சக்தி குறைந்து மோஹமுண்டாகி மரணபர்யந்தம் கெடுதி ஏற்படும்.

அனுபானம்— பால், தேன் கலந்த ஜலம், பன்னீர்.

மற்றெருரு முறை :— இதன் சூர்ணம் 16 யவம் முதல் $\frac{1}{4}$ தோலா, ஏலரிசி சூர்ணம் $\frac{1}{16}$ தோலா, மிளகு 6 யவம், பன்னீர் 2–4 அவுன்ஸ். இதை 3 மணி நேரம் ஊரவைத்து கரைத்து அதில் $\frac{1}{4}$—$\frac{1}{2}$ தோலா சர்க்கரை சேர்த்துக் கொடுக்க அநித்ரை, உன்மாதம், இவைகளில் நல்ல லாபம் கிடைக்கும்.

சந்திரிகா சூர்ணத்துடன் ரஸஸிந்தூரம் அல்லது மகரத்வஜம் 1யவம் வீதம் சேர்த்து சாப்பிடுவது உத்தமம்.

சந்திராவலேஹம் :- சதாவரீ, விதாரீ, பூசணி. சங்கபுஷ்பீ இவைகளின் சாறு வகைக்கு 256 தோலா. (சுமார் $1\frac{5}{8}$ படி) அ. சர்க்கரை 400 தோலா. மேற்படி சாறுகளில் சர்க்கரையைக் கரைத்து பாகு வைத்து லேஹ்ய பாகத்திற்கு வந்ததும் கீழ்க் குறிப்பிட்ட பிரக்ஷேப சூர்ணத்தைப் போட்டுக் கிளறி எடுக்கவும்.

ஏலரிசி 64 தோலா, லவங்கப்பட்டை. லவங்கப்பத்திரி சிறுநாகப்பூ, திராக்ஷை, வெண்சந்தனம், தாமரைப்பூ இதழ், நன்னாரி வேர்ப்பட்டை, கோரைக் கிழங்கு, பத்மகாஷ்டம் (ஹிமாலயத்திலிருந்து கிடைப்பது கிடைக்காவிடில் பதிமுகம்) விளாமிச்ச வேர், நெல்லிமுள்ளி, ஜடாமாம்ஸி, கிராம்பு வகைக்கு 4 தோலா, வம்சரோசனம் 16 தோலா, சந்திரிகா வேர் 16 தோலா. இவைகளின் வஸ்திரகாலிதமான சூர்ணம் போடவும். ஆறினபிறகு தேன் 64 தோலா போட்டு கிளறி வைக்கவும். சிலர் பாகு பதம் வந்தவுடன் நெய் 32 தோலா சேர்த்து பிறகு சூர்ணம் போட்டு கிளறியவுடன் தேன் 32 தோலா சேர்ப்பதும் வழக்கம்.

அளவு :- $\frac{1}{2}$—1 தோலா.

அனுபானம் :— சந்தனுத்யர்க்கம், கேதகி (தாழம்பூ) அர்க்கம், குலே காவ் ஜபான் அர்க்கம், பசும்பால் இவைகளில் ஏதாவதொன்று.

அதிக ரக்தஸம்ஹதி, அநித்ரை. உந்மாதம், தலைசுற்றுதல், ஹிஸ்டீரியா, கைகால் எரிச்சல் இவைகளில் மிகவும் சிறந்தது.

புதிய விஷ நாசினி.

முதல் ஆயுர்வேத தயாரிப்பு.

புது டில்லி, ஆக. 14.

ஐயோடின் குணங்களைக் கொண்டதும், ஆனால் அதன் விஷத் தன்மையில்லாததுமான "ஆயுர் தின்" என்னும் புதிய விஷநாசினியை கண்டுபிடித்திருப்பதாக டெராடூன் ஆயுர்வேதக் கல்லூரி கூறுகிறது.

முற்றிலும் ஆயுர்வேத முறைகளினால் தயாரிக்கப்படும் முதல் விஷ நாசினி "ஆயுர்தின்" தான் ஆகும் என்று கல்லூரி பிரின்ஸிபால் ஸ்ரீ. ஜே. என். பாகாண கூறினார்.

இம்மருந்துக்கு ஸ்ரீ. பாகாண ஏற்கனவே ஐ. மா. சர்க்கார் அங்கீகாரத்தை வாங்கியுள்ளார். மத்திய சர்க்கார் அங்கீகாரத்தைப்பெற முயற்சி செய்து வருகிறார்.

மேனாட்டு — இந்திய வைத்திய முறைகள்

அவசரப்பட்டு பிணைப்பது அபாயகரமானது.

டாக்டர் ராஜன் கருத்து.

சென்னை, ஆக. 6,

சுகாதார மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் இந்திய வைத்திய முறைகளின் அபிவிருத்திபற்றி ரேடியோவில் பேசுகையில் கூறியதாவது :—

" இந்திய வைத்திய முறைகளின் அபிவிருத்தி இம்மாகாணத்தில் பெருகியிருப்பது இத்துறையில் 1942-ம் வருஷத்தில் 30 ஆயிரம் ரூ. செலவிடப்பட்டது ; இப்போது நடைமுதல் வருஷத்தில் ஏழு லட்சத்துக்கும் அதிகமாக இருக்குமென்பதிலிருந்து தெரியவரும்.

ஏற்கனவே ஏற்பட்டுள்ள அபிவிருத்தி போற்றத்தக்கதாக இருப்பினும் அது கண்டு ஸர்க்கார் திருப்தி கொள்ளவில்லை, அதிகமாகப் பணம் செலவழிக்க முடியாமலிருப்பினும் மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களில் இறங்க சகல முயற்சிகளும் செய்ய ஸர்க்கார் விரும்புகிறார்கள். எனவே இந்திய வைத்தியக் கல்லூரி அபிவிருத்தி சம்பந்தமான திட்டத்துக்கும் மத்திய பார்மஸி ஒன்றை ஏற்படுத்தவும் உசிதமான இதர அபிவிருத்திகளைச் செய்யவும் சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். பணம் கைவசம் இருக்கும் போது இத்திட்டங்கள் அமுல் நடத்தப்படும்.

சந்திராவலேஹம் :- சதாவரீ, விதாரீ, பூசணி, சங்கபுஷ்பீ இவைகளின் சாறு வகைக்கு 256 தோலா. (சுமார் 1⅝ படி) அ. சர்க்கரை 400 தோலா. மேற்படி சாறுகளில் சர்க்கரையைக் கரைத்து பாகு வைத்து லேஹ்ய பாகத்திற்கு வந்ததும் கீழ்க் குறிப்பிட்ட பிரக்ஷேப சூர்ணத்தைப் போட்டுக் கிளறி எடுக்கவும்.

ஏலரிசி 64 தோலா, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி சிறுநாகப்பூ, திராக்ஷை, வெண்சந்தனம், தாமரைப்பூ இதழ், நன்னாரி வேர்ப்பட்டை, கோரைக் கிழங்கு, பத்மகாஷ்டம் (ஹிமாலயத்திலிருந்து கிடைப்பது கிடைக்காவிடில் பதிமுகம்) விளாமிச்ச வேர், நெல்லிமுள்ளி, ஜடாமாம்ஸி, கிராம்பு வகைக்கு 4 தோலா, வம்சரோசனம் 16 தோலா, சந்திரிகா வேர் 16 தோலா. இவைகளின் வஸ்திரகாலிதமான சூர்ணம் போடவும். ஆறினபிறகு தேன் 64 தோலா போட்டு கிளறி வைக்கவும். சிலர் பாகு பதம் வந்தவுடன் நெய் 32 தோலா சேர்த்து பிறகு சூர்ணம் போட்டு கிளறியவுடன் தேன் 32 தோலா சேர்ப்பதும் வழக்கம்.

அளவு :- ½—1 தோலா.

அனுபானம் :— சந்தனுத்யர்க்கம், கேதகி (தாழம்பூ) அர்க்கம், குலே காவ் ஜபான் அர்க்கம், பசும்பால் இவைகளில் ஏதாவதொன்று.

அதிக ரக்தஸம்ஹதி, அநித்ரை. உந்மாதம், தலைசுற்றுதல், ஹிஸ்டீரியா, கைகால் எரிச்சல் இவைகளில் மிகவும் சிறந்தது.

புதிய விஷ நாசினி.

முதல் ஆயுர்வேத தயாரிப்பு.

புது டில்லி, ஆக. 14.

ஐயோடின் குணங்களைக் கொண்டதும், ஆனால் அதன் விஷத் தன்மையில்லாததுமான "ஆயுர் தின்" என்னும் புதிய விஷநாசினியை கண்டுபிடித்திருப்பதாக டெராடூன் ஆயுர்வேதக் கல்லூரி கூறுகிறது.

முற்றிலும் ஆயுர்வேத முறைகளினால் தயாரிக்கப்படும் முதல் விஷ நாசினி "ஆயுர் தின்" தான் ஆகும் என்று கல்லூரி பிரின்ஸிபால் ஸ்ரீ. ஜே. என். பாகானு கூறினார்.

இம்மருந்துக்கு ஸ்ரீ. பாகானு ஏற்கனவே ஐ. மா. சர்க்கார் அங்கீகாரத்தை வாங்கியுள்ளார். மத்திய சர்க்கார் அங்கீகாரத்தைப்பெற முயற்சி செய்து வருகிறார்.

மேனாட்டு — இந்திய வைத்திய முறைகள்

அவசரப்பட்டு பிணைப்பது அபாயகரமானது.

டாக்டர் ராஜன் கருத்து.

சென்னை, ஆக. 6,

சுகாதார மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் இந்திய வைத்திய முறைகளின் அபிவிருத்திபற்றி ரேடியோவில் பேசுகையில் கூறியதாவது :—

" இந்திய வைத்திய முறைகளின் அபிவிருத்தி இம்மாகாணத்தில் பெருகியிருப்பது இத்துறையில் 1942-ம் வருஷத்தில் 30 ஆயிரம் ரூ. செலவிடப்பட்டது ; இப்போது நடைமுதல் வருஷத்தில் ஏழு லட்சத்துக்கும் அதிகமாக இருக்குமென்பதிலிருந்து தெரியவரும்.

ஏற்கனவே ஏற்பட்டுள்ள அபிவிருத்தி போற்றத்தக்கதாக இருப்பினும் அது கண்டு ஸர்க்கார் திருப்தி கொள்ளவில்லை, அதிகமாகப் பணம் செலவழிக்க முடியாமலிருப்பினும் மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களில் இறங்க சகல முயற்சிகளும் செய்ய ஸர்க்கார் விரும்புகிறார்கள். எனவே இந்திய வைத்தியக் கல்லூரி அபிவிருத்தி சம்பந்தமான திட்டத்துக்கும் மத்திய பார்மஸி ஒன்றை ஏற்படுத்தவும் உசிதமான இதர அபிவிருத்திகளைச் செய்யவும் சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். பணம் கைவசம் இருக்கும் போது இத்திட்டங்கள் அமுல் நடத்தப்படும்.

இந்தியாவில் பலர் உள்பட உலகம் முழுவதும் ஆங்கில வைத்திய முறையைப் பின்பற்றி வருகையில் அது சம்பந்தமான நவீன சாதனங்களையும், நூதன வசதிகளையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று எனக்குப் படுகிறது; அதே சமயத்தில் இந்திய வைத்திய முறையில் உள்ள அனுகூலமான அம்சங்களையும் நாம் உபயோகித்துக் கொள்ளவேண்டும். பல நூற்றுண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைக்கு ஒத்த வகையிலேயே இந்திய வைத்திய முறைகள் அமைக்கப்பட்டன; இப்போதோ காலமாறுதல் துரிதமாக ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஏற்ப இந்திய வைத்திய முறைகள் மாறுதலடைந்து வரவில்லை. ஆகவே நம் நாட்டு வைத்திய முறைகளில் மிகுந்த ஆராய்ச்சி தேவை. மேனுட்டு, இந்திய வைத்திய முறைகளை அவசரப்பட்டுப் பிணைப்பது அபாயகரமானது; ஏனெனில் இங்ஙனம் செய்வதால் தக்க யோக்யதையும் திறமையும் பரிமளிக்காது, "1000 பேர்களைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்பது பழமொழி; இது உண்மையாகும்படி நாம் விடமுடியாது. தேர்ந்த அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கூர்ந்து கவனித்துத் தான் பிரச்னைக்குப் பரிகாரம் காணவேண்டும்."

ஆயுர்வேத வைத்திய முறைக்கு புத்துயிர் கொடுக்க

கொச்சி ஆயுர்வேத மகாநாட்டில் தலைவர் யோஜனை.

திருச்சூர் ஆக. 14.

இங்கு நடைபெற்ற கொச்சி ஆயுர்வேதிக் மகாநாட்டில் வருடாந்தர கூட்டத்திற்குத் தலைமை வகித்த அஷ்ட வைத்தியர் பிரம்மஸ்ரீ நீலகண்டன் மூஸ் பேசுகையில் சுதந்திர இந்தியாவில் ஆயுர்வேத முறைக்கு ஏற்பட்டிருக்கும் முக்கியத்வத்தை எடுத்துக் கூறினர்.

நாட்டு வைத்திய முறைகளைச் சரியாக பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சோப்ராக் கமிட்டி அறிக்கை வற்புறுத்தியிருப்பதை அவர் கூட்டத்தில் தெரிவித்து ஆயுர்வேத முறைக்கு புத்துயிர் கொடுப்பதற்காக காந்திஜீ ஞாபகார்த்த நிதியின் பெரும்பாகத்தை உபயோகிக்கலாமென்றும் கூறினர்.

ஆயுர்வேத இலாகாவிற்கு நியமனங்கள் செய்வது பற்றி திருவாங்கூர், கொச்சி ஐக்கிய சமஸ்தான ஆயுர்வேத டிரெக்டருக்கு யோஜனை கூற 3 பிரபல ஆயுர்வேத வைத்தியர்கள் கொண்ட ஒரு கமிட்டியை இம்மகாநாடு நியமித்தது.

தஞ்சாவூர் இந்திய வைத்திய சபை.

22-8-49-ல் ஷெ சபையாரால் சென்னை அரசாங்க பிரதம மந்திரி கனம் ஸ்ரீ பி எஸ். குமாரசாமி ராஜா அவர்களுக்கு தஞ்சை அரண் மனை சரஸ்வதி மஹாலில் வரவேற்பு அளிக்கப்பட்டது. கனம் மந்திரி அவர்களை டாக்டர் வி. எஸ். பாண்டியா அவர்கள் வரவேற்றார். காரியதரிசி டாக்டர் எம். சங்கரவைத்தியர் அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தார். ஷெ பத்திரத்தில் சர்க்கார் உடனடியாக இந்திய வைத்தியத்திற்கு சோப்ரா கமிட்டியாரின் ரிபோர்ட்டுப் படி ஆவன செய்யவேண்டுமென்றும் ஆஸவ, அரிஷ்டங்களுக்கு மது விலக்குச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டுமென்றும், பிறநாடுகளிலிருந்து வரும் மருந்துகளை குறைத்து நம் நாட்டு மருந்துகளைக் கொண்டு நாடுபூராவுமுள்ள மருத்துவசாலைகளில் தகுதியுள்ள நாட்டு வைத்தியர்களை ஏற்படுத்தி வார்டுகளை நடத்தவேண்டுமென்றும் முக்கியமாகக் கோரப்பட்டது.

பிறகு சென்னை மத்திய போர்டில் இந்திய வைத்திய மெம்பராயிருக்கும் டாக்டர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமி அய்யர் அவர்கள் தாது கோஷ்டி சார்பில் கேட்டுக் கொண்டதாவது— தஞ்சையில் இந்திய வைத்திய பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதுடன் கூடுமான விரைவில் இந்திய மருந்துகளை விருத்தி செய்வதற்கு எல்லா வசதிகளும் சர்க்கார் செய்து தரவேண்டுமென்றும் சோப்ரா கமிட்டியார் ரிபோர்ட்டுபடி சீக்கிரமாகவே நாட்டு வைத்தியத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் கோரப்பட்டது.

கனம் மந்திரி அவர்கள் பதிலளிக்கையில் நாட்டு வைத்தியத்திற்கு சர்க்கார் வேண்டிய உதவிகள் செய்ய சித்தமாயிருப்பதாகவும் ஆனால் செலவு ஜாஸ்தி ஏற்படுமென்றும், இருந்தாலும் முக்கியமான உதவிகள் செய்ய முயற்சி நடக்கிறதென்றும் கூறினதுடன் இந்திய வைத்தியத்தில் தான் பார்சுவ வாதம் முதலிய நோய்களுக்கு தக்க மருந்துகள் உள்ளனவெனவும் மிகவும் பாராட்டி, இந்திய வைத்தியர்கள் வியாதியைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் இன்னமும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்.

காரியதரிசி வந்தனோபசாரம் கூறினார்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

தலைவர். ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய,
ஆத்ரேயாச்ரமம், தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி

பொதுக்கார்யதர்சி:
ஸ்ரீ. V. R. ஸுப்ரஹ்மண்ய அய்யர், "பாரத்வாஜ ஆச்ரமம்"
ஆண்டார் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

மண்டல ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் பொதுக்காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மண்டல அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 5
(ஜனவரி முதல் டிஸம்பர் வரை (Calender Year)

மண்டல அங்கத்தினர்களுக்கு மண்டலத்தின் பத்ரிகையான வைத்ய சந்த்ரிகை தனிக் கட்டணமின்றி அனுப்பப்பெறும்,

சந்தா அனுப்பவேண்டிய விலாஸம்:—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உப கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் உபகார்யதர்சிக்கு எழுதிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியர்,
ஆசிரியர்—"வைத்ய சந்திரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

குறிப்பு: சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் விஷயங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்ப வேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்த்ரியம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பிப் பெற வேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்பட வேண்டும்.

இரண்டு மூன்று தோஷங்களுடைய ஸம்ஸர்க ஸந்நிபாதங்களில் மூத்திரத்தின் நிறம் முதலியதைச் சொல்லுகிறுர். வாத பித்த பிரகோபத்தில் மலினமான ஜலம் போன்றும் உஷ்ணமாயும், வாதகபத்தில் வெளிராயும், நுரைபோன்றும், பித்தகபத்தில்—கலக்கமாயும் ரக்தவர்ணமாயும், திரிதோஷ ஸந்நிபாதத்தில் ஒன்றும் உருப்படி புரியாமல் எல்லாம் கலந்த நிறத்துடனும் கூடியிருக்கும். நாள்பட்ட ஜீர்ணஜ்வரத்தில் மஞ்சளாயும், சிவப்பாயுமிருக்கும்.

அஷ்ட திக்குகளில் பரவும் லக்ஷணம்—

पूर्वाशां वर्धते बिन्दुर्यदा शीघ्रं सुखी भवेत् ।
दक्षिणाशां ज्वरो ज्ञेयस्तथाऽऽरोग्यं क्रमाद्भवेत् ॥ ९६ ॥
उत्तरस्यां यदा बिन्दोः प्रसरः संप्रजायते ।
अरोगिता तदा नूनं पुरुषस्य न संशयः ॥ ९७ ॥
वारुण्यां प्रसरेद्बिन्दुः सुखारोग्यं तदादिशेत् ।
ऐशान्यां वर्धते बिन्दुर्ध्रुवं मासेन नश्यति ॥ ९८ ॥
आग्नेय्यां तु तथा ज्ञेयं नैर्ऋत्यां प्रसरेद्यदि ।
छिद्रितश्च भवेत् पश्चात् ध्रुवं मरणमेव च ॥ ९९ ॥
वायव्यां प्रसरेद्बिन्दुः सुधयाऽपि विनश्यति ।

மூத்ர பாத்திர மத்தியில் விடும் எண்ணெய் துளியானது கிழக்குத் திசை நோக்கிப் பரவ ஆரம்பித்தால் சீக்கிரத்தில் ஸுகமடைவான். தெற்கை நோக்கிப் பரவினுல் ஆரோக்கியம் காலக்கிரமத்தில் கிடைக்கும். வடக்கில் பரவினுல் ஆரோக்கியம் நிச்சய மேற்படும். மேற்கில் பரவினுலும் சௌக்கியமேற்படும். வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய இந்த நான்கு மூலைகளிலும் பரவல் ஏற்படின் சுமார் ஒரு மாதத்தில் மரணமே முடிவாகும்.

மரணக் குறிகளைக் காட்டும் மூத்திர பரீக்ஷை—

विकासितं हलं कूर्मं सैरिभाकारसंयुतम् ।
करण्डमण्डलं वापि शिरोहीननरं तथा ॥ १०० ॥

गात्रखण्डञ्च शस्त्रं च खड्गं मुशलपट्टिशम् ।
शरं च लगुडं चैव तथैव त्रिचतुष्पथम् ॥ १०१ ॥
बिन्दुरूपं नरो दृष्ट्वा न कुर्वीत क्रियां क्वचित् ।

மூத்திரத்தில் தைல பிந்து பரவும்பொழுது— கலப்பை, ஆமை, பசுமாடு, கரண்டாஞ்சிமிழ் வட்டம், தலையற்ற நரவடிவம் உடலுறுப்பு, வாள், ஆயுதம், உலக்கை, பட்டாக்கத்தி, அம்பு, குண்டாந்தடி முச்சந்தி, நாச்சந்தி இவைகளில் ஏதாவதொன்றின் உருவத்தைக் காட்டினால் அங்கு அந்த ரோகிக்கு மரணம் ஸம்பவிக்கும். சிகித்ஸை ஆரம்பிக்கக் கூடாது.

நற்குறிகளைக் காட்டும் மூத்திர லக்ஷணம்—

हंसकारण्डताडागं कमलं गजचामरम् ।
छत्रं वा तोरणं हर्म्यं सुपूर्णं दृश्यते यदि ॥ १०२ ॥
आरोग्यता ध्रुवं ज्ञेया तदा कुर्यात् परिक्रियाम् ।

அன்னப்பக்ஷி, சக்ரவாகப் பக்ஷி, குளம், தாமரை, யானை, வெண்சாமரம், குடை. தோரணம், உப்பரிகை இவை ஏதாவதொன்று நன்ருகத் தென்பட்டால் அந்நோயாளிக்கு ஆரோக்கியம் நிச்சயம் ஏற்படும்.

குல தோஷ பூதாவேசங்களைக் காட்டும் மூத்ரம்—

तैलबिन्दुर्यदा मूत्रे चालनी सदृशो भवेत् ॥ १०३ ॥
कुलदोषो ध्रुवं ज्ञेयः प्रेतदोषसमुद्भवः ।
नराकारं प्रजायेत किं वा स्यान्मस्तकद्वयम् ॥ १०४ ॥
भूतदोषं विजानीयात् भूतविद्यां तदाऽऽचरेत् ।

தைல பிந்துவானது சல்லடைக் கண்கள்போல் வட்டத்துடன் பரவினல் முன்னேரின் பிரேத தோஷத்தினல் ஏற்பட்ட குல தோஷக் கரும வியாதி யென்று அறியவேண்டும். இரண்டு தலைகள் போலவோ, மனிதன் உருவம் போலவோ கண்டால் பூத தோஷம் ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து பூத வித்யாப் பிரகாரம் பரிகாரம் செய்யவேண்டும்.

मञ्जिष्ठाभं धूम्रवर्णञ्च नीलं स्निग्धं मूत्रं वारितुल्यं च शीतम् ।

ज्ञात्वा चित्ते बुद्धिमान् मानुषाणां कुर्यात्त्वन्तर्भेषजं रोगिणां च ॥

மூத்திரமானது தனது இயற்கை நிறம் ரூபம் குருத்வம் இதிலிருந்து மாறி— மஞ்சிஷ்டைக் கஷாயம் போல் சிவந்து, அழுக்கடைந்து, நீலவர்ணமாய், எண்ணெய்ப் பசை மேலிட்டதாய், வெறும் தண்ணீர் போலானதாய், சீதளமாய் இவ்விதமேதாவது மூத்திரத்தில் விக்ருதி இருந்தால் அங்கு ரோகியின் உள் உடல் கூறு விக்ருதியை அடைந்துள்ளது என்று அந்த மூலகாரணத்தைநன்கு தீர்மானித்து உள்ளுக்கு மருந்து செய்ய வேண்டும்.

सर्पाकारं भवेद्वातात् छत्राकारं तु पित्ततः ।
मुक्ताकारं बलासात्स्यादेतन्मूत्रस्य लक्षणम् ॥ १०६ ॥

மற்றும் சிலருடைய அபிப்பிராயம்:— கோபமடைந்த தோஷங்களில் வாதத்தில் தைலபிந்து ஸர்ப்பம்போல் கோணலாயும், பித்தத்தில் குடை போல் மண்டலமாயும், கபத்தில் முத்துப் போல் உருண்டும் பரவும் என்று.

குறிப்பு:— மூத்திரத்தில் செய்யவேண்டிய பரீக்ஷை வழிகளில் யோகரத்நாகரத்தில் சொல்லியிருப்பது போல தைல பரீக்ஷை பிராசீன ஆயுர்வேத நூல்களில் காணவில்லை. பிரமேஹ ரோகங்களில் மூத்திரத்தின் பலவர்ணங்களும், வாதாதி தோஷ கோபங்களினால் ஏற்படும் மூத்திர வர்ண பேதங்கள் மட்டுமே பிராசீனக் கிரந்தங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் சித்தர்கள் நூலிலும், ஸம்ஸ்கிருதத்திலும் பிற்காலத்திய நூல்களிலுமே மூத்திர பரீக்ஷையில் இவ்வித விஸ்தாரம் காண்கிறது. யூனானி வைத்திய சாஸ்திரக் கிரந்தங்களில் மூத்ர பரீக்ஷை எல்லாவற்றிலும் அதிகமாக, மேல் நாட்டு ஆலோபாதிக் வைத்திய முறையைப் பார்க்கிலும் அதிகமாக விசதமாய் கூறப்பட்டிருக்கிறது. இன்றும் யூனானி ஹகீம்களில் பலர் அந்த ஸம்பிரதாயத்தை மறியாமல் அநுஷ்டிக்கின்றனர். தமிழ் நாட்டிலும் சரி; மற்றமாகாணத்திலும் சரி; இப்பொழுது நமது கிரந்தங்களில் கூறியபடி தைலபிந்து மூத்ர பரீக்ஷை செய்யும் ஆயுர்வேத வைத்தியரை ஸாதாரணமாய்க் காணமுடியாது. நானுமிதுவரை செய்ததில்லை. சீக்கிரத்தில் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். இன்று மூத்ர பரீக்ஷை செய்வதாயின் ஆயுர்வேத வைத்தியர்களும் மேல்நாட்டு முறையையே கையாளுகின்றனர். மேல்நாட்டு முறைப்படி செய்யப்படும் மூத்திர பரீக்ஷை ஆயுர்வேத முறைப்படி சிகித்ஸை செய்வதற்கு பூர்ணமாய் உபகாரம் செய்யமுடிவதில்லை. மூத்திரத்தில் சர்க்கரை இருக்கிறதென்று மேல்நாட்டுப் பரீக்ஷையினால் தீர்மானித்தால் ஒருவாறு ஓரளவு மதுமேகத்திற்கு சிகித்ஸை செய்து குண

மாக்க வழிகாட்டும். ஆனால் மேல்நாட்டு முறையின்படி இன்னும் ஸூக்ஷ்மமாக மூத்திரத்தில் கோளாறு செய்யும் விஷப் பூச்சிகளைக் கண்டுபிடித்தால் அங்கு மேல்நாட்டு வைத்தியர்கள் அக்கிநமி நாச காரியான ஔஷதப்பிரயோகம் (Sulphanilamid treatment or Penicilin முதலிய) செய்வார்கள். ஆயுர்வேத வைத்தியப்படி இங்கு வைத்தியம் செய்ய கிரந்தங்களில் உபதேசமில்லை. ஆதலால் மேல்நாட்டு முறைப்படி செய்யப்படும் மூத்திரப் பரீக்ஷை ஆயுர்வேத வைத்தியப்படி வைத்தியம் செய்யும் போது சிறிதும் பயனளிக்காது. ஆதலால் ஆயுர்வேத வைத்தியப்படி (இன்று அது இருக்கிறபடி) சிகித்ஸை செய்பவர் மூத்ர பரீக்ஷையில் பிரதானமாய் வாத பித்த கபங்களுடைய லிங்கங்களைக் கொண்டே நிச்சயித்துக் கொள்ளவேண்டும். இதில் திரிதோஷ லக்ஷணங்களைக் கவனித்து மூத்ராதி பரீக்ஷை செய்தால் தான் ஆயுர்வேதப்படி சிகித்ஸை செய்யமுடியும். அநுபவத்திலுமிது மிகவும் உபகாரமா யிருக்கிறது.

மூத்ர பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ मल परीक्षा ॥

रुद्रतन्त्रात्—

वातान्मले तु दृढता शुष्कता चापि जायते ।
पीतता जायते पित्तात् शुक्लता श्लेष्मतो भवेत् ॥ १०७ ॥
सन्निपाते च सर्वाणि लक्षणानि भवन्ति हि ।
त्रुटितं फेनिलं रूक्षं धूमलं वातकोपतः ॥ १०८ ॥
वातश्लेष्मविकारे च जायते कपिशं मलम् ।
बद्धं सुत्रुटितं पीतश्यामं पित्तानिलाद्भवेत् ॥ १०९ ॥
पीतश्वेतं श्लेष्मपित्तादीषत्सान्द्रं च पिच्छिलम् ।
श्यामं त्रुटितपीताभं बद्धश्वेतं त्रिदोषतः ॥ ११० ॥

மல பரீக்ஷை.

மலத்திலிருந்து சரீரத்தில் திரிதோஷங்களுடைய கோளாறுகளைக் கண்டுபிடிக்கும் வழியை உபதேசிக்கிறார்.

ருத்ரதந்திரம் என்ற நூலிலிருந்து சுருக்கம் சொல்லப்படுகிறது. மலம் கெட்டியாயும் பசையற்று உலர்ந்துமிருப்பின் வாத விகாரத்தையும், அதிக மஞ்சளாயிருப்பின் பித்த விகாரத்தையும், அதிக வெளிராயிருந்தால் கப விகாரத்தையும், இந்த எல்லாக்குறி

களும் கலந்திருப்பின் திரிதோஷ விகாரத்தையும் அறியவேண்டும் வாத சிலேத்தும த்வந்த்வத்தில் மிக அதிகமாக வாதகோபமிருந்தால் மலம் முடிச்சாகவும், நுரையுள்ளதும், ஆயினும் பசை குறைந்தும், புகைபோல் ஒரு அழுக்கு நிறமாயும் இருக்கும். அதே சிலேத்தும கோபம் மேலிட்டிருப்பின் ஒரு அழுக்கான வெண்மை நிறத்தைக் காட்டும். மலம் சிக்கலாயும், அதிக முடிச்சுகளுடன் மஞ்சள் கலந்த கறுப்பு நிறமுள்ளதாகவும் பித்த-வாதங்களுடைய கோபத்தில் ஆகிவிடும். சிலேத்தும-பித்தங்களுடைய கோபத்திலோ மஞ்சள் கலந்த வெண்ணிறமாயும், சிறிது இளகலாகவும், பிசுக்குள்ளதுமாயுமிருக்கும். முத்தோஷத்தில் கறுப்பு, வெளுப்பு, மஞ்சள் நிறங்கள் மலத்தில் கலந்தும் தனியாயும், அடிக்கடி மாறியும், சிக்கலாயும், கண்டங் கண்டமாயும் பலவகையாகவுமிருக்கும்.

दुर्गन्धः शीतलश्चैव विष्ठोत्सर्गो यदा भवेत् ।
तदा जीर्णं मलं वैद्यैर्दोषज्ञैः परिगण्यते ॥ ११० ॥

கழிக்கப்பட்ட உடன் மலம் அதற்கேற்ற ஒரு துர்நாற்றத்துடனும், குளிர்ந்து மிருப்பின் அது இயற்கையான— ஜீர்ணம் சரியான மலம் என்று அறியவும்.

कपिलं गुटियुक्तं च यदि वर्चोऽवलोक्यते ।
प्रक्षीणमलदोषेण दूषितः परिकथ्यते ॥ ११३ ॥
सितं महत्पूतिगन्धं मलं ज्ञेयं जलोदरे ।
श्यामं क्षये त्वामवति पीतं सकटिवेदनम् ॥ ११४ ॥

மலம் இயற்கையளவில் மிகவும் குறைந்து போனால் கறுத்தும் கோலிபோல் முடிச்சாகவும் ஆகும். ஜலோதர நோயில் வெளுப்பாயும், மிக துர்நாற்றமுடையதாயும் இருக்கும். க்ஷய ரோகத்தில் கறுத்தும், ஆமமுள்ள நிலையில் இடுப்பு வலியுடன் மஞ்சள் நிறமாயுமிருக்கும்.

अतिकृष्णं चातिशुभ्रमतिपीतं तथाऽरुणम् ।
मरणाय मलं, किन्तु भृशोष्णं मृत्यवे ध्रुवम् ॥ ११५ ॥

மலத்தின் நிறத்தில்— கறுப்பு, வெளுப்பு, மஞ்சள், சிவப்பு ஏதாவது அளவிற்கு மீறி மிக அதிகமாயிருந்தால் மரணம் வரை

யில் கொண்டுபோய் விடக்கூடியது. ஆனல் தாங்கமுடியாத உஷ்ணம் மலத்தில் கழிக்குங்கால் கண்டால், கண்டிப்பாய் மிருத்யு நெருங்கியுள்ளது.

வேறு நூல்களிருப்பதை ஸங்கிரஹம் செய்கிருர்.

अन्यच्च— वातस्य च मलं कृष्णं ततः पित्तस्य पीतविट् ।
रक्तवर्णं मलं किञ्चित् मलं श्वेतं कफोद्भवम् ॥ ११६ ॥
आमं वा श्लेष्मजं प्राहुर्मिलितं द्वन्द्वजं वदेत् ।
अपक्वं स्यादजीर्णे तु पक्वं स्वच्छमलं भवेत् ॥ ११७ ॥
अत्यग्नौ पिण्डितं शुष्कं मन्दाग्नौ तु द्रवीकृतम् ।
दुर्गन्धं चन्द्रिकायुक्तमसाध्यं मललक्षणम् ॥ ११८ ॥

மலம் வாதத்தினல் கறுத்தும், பித்தத்தினல் மஞ்சளாயும், ரக்தத்தினல் சிவந்தும், சிலேத்துமத்தினல் வெண்மையாகவு மிருக்கும். ஆமத்திலும் கபதோஷம் போல் வெண்மையாகவும் த்விதோஷ த்ரிதோஷங்களில் கலந்த கட்டியாக இருக்கும், மலம் பக்குவமாயிருந்தால் ஆகாரம் சரியாய் ஜீர்ணமாயிருக்கிறதென் றும், மலம் அபக்குவமாயிருப்பின் ஆகாரம் ஜீர்ணமாகவில்லை யென்றும் தெரிந்துகொள்ளவும். அக்நி தீபனம் அளவிற்கு அதிகமானல் மலம் உலர்ந்து கட்டியாகவும், மிக மந்தாக்னியில் மிக இளக்கமாயும் இருக்கும். மலத்தில் மயில் தோகையின் கண்கள் போன்று விசித்ர வர்ணங்களுடன் துர்கந்தமும் மேலிட் டிருப்பின் அந்நோயாளிக்கு சௌக்கியம் கிட்டுவதரிது.

குறிப்பு :— மல பரீக்ஷை இங்கு சொல்லப்பட்டதானது மூக்கிய மாய் திரிதோஷங்களுடைய விகாரங்களையும், அஜீர்ணத்தையும், அரிஷ்டங்களையும் ஓரளவிற்கு விவரணம் செய்கின்றது. மலபரீக்ஷை யில் இன்னம் விசேஷமாய் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்- அதிஸாரம், பிரவாஹிகா, கிரஹணீ, கிருமிரோகங்கள், விஷபேதி, காமிலா, பாண்டு, மூதலிய பல ரோகங்களில் இருக்கின்றன. அவை கள் அந்தந்தப் பிரகரணங்களில் சௌகர்யம் போல் விளக்கப் படும்.

மல பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ शब्द परीक्षा ॥ —குரல் பரீக்ஷை.

விகாரமடையாது இயற்கையிலிருக்கும் குரல் விசேஷங்களை இவன் இந்த தோஷப் பிரகிருதி பெற்றவன் என்று அறிந்து கொள்ளுவதற்கு உபதேசிக்கிறார்.

गुरुस्वरो भवेच्छ्लेष्मा स्फुटवक्ता च पित्तलः ।
उभाभ्यां रहितो वातः स्वरतश्चैव लक्षयेत् ॥ ११९ ॥

சிலேஷ்மப் பிரகிருதிக்காரனுடைய குரல் கனமுள்ளதாயும், பித்தப்பிரகிருதிக்காரனுக்கு மிக ஸ்பஷ்டமாயும், வாதப்பிரகிருதிக்காரனுக்கு குரல் ஸ்பஷ்டமில்லாததாயும், மெலிவுற்றும் இருக்கும்.

குறிப்பு :— வாதபித்த கபங்களுடைய பிரகோபத்தில் ஸ்வரம் இங்கு சுலோகத்தில் கூறியவாறு இருக்கும் என்று சிலர் பொருள் சொல்லுவது பொருந்தாது. கபப்பிரகோபத்தில் குரல் எழும்பாமல் அடைபட்டும், பித்த கோபத்தில் தடுமாறுதலும் ஏற்படுவதே காரணம்.

சப்த பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ स्पर्शपरीक्षा ॥ —தொடுகுறி அறிதல்.

पित्तरोगी भवेदुष्णो वातरोगी च शीतलः ।
श्लेष्मलः स भवेदार्द्रः स्पर्शतश्चैव लक्षयेत् ॥ १२० ॥

பித்தத்தின் சொந்த குணம் உஷ்ணம், வாதத்தின் சொந்த குணம் சீதம், சிலேஷ்மத்தின் சொந்த குணம் ஜலத்தால் நனைக்கப்பட்டதுபோல ஈரம். உடலில் கார்யமுகமாகக் காணும் இந்தக் குணங்களை ஸ்பர்சத்தால் அறிந்து ரோகங்களில் அந்தந்த தோஷத்தின் ஆதிக்யத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

குறிப்பு :— கபஜ்வரத்தில் உஷ்ண ஸ்பர்சத்தைக் கண்டு கபத்திற்கு ஆர்த்திர—ஈர—குணம் சாஸ்திரகாரர் கூறியது தவறுதல் என்று நினைத்து விடக்கூடாது. இயற்கையில் சீதளமான ஜலம் அக்னியினால் உஷ்ண உணர்ச்சியை அடைவது போலவே பித்தாக்நியினால் கபஜ்வரத்தில் சூடு ஏற்படுகிறது. இதனால் வாதகுணமும் விவரிக்கப்பட்டுள்ளது.

ஸ்பர்ச பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ रूप परीक्षा ॥ —ரூப பரீக்ஷை.

ரூபத்தினுல் விசேஷமாய் இவன் இந்த தோஷப் பிரகிருதியைச் சேர்ந்தவன் என்று எளிதில் அறிந்துகொள்ள முடியும். பிரகிருதி தோஷத்தை அறிந்துதான் வைத்தியம் செய்யவேண்டுமென்று இவ்விஷயத்தை இங்கு உபதேசிக்கின்ருர்.

वातप्रकृति लक्षणम्— வாதப்ரக்ருதி லக்ஷணம்.

विभुत्वादाशुकारित्वाद्बलित्वादन्यकोपनात् ।
स्वातन्त्र्याद्बहुरोगत्वाद्दोषाणां प्रबलोऽनिलः ॥ १२१ ॥

प्रायस्त एव पवनाध्युषिता मनुष्याः
दोषात्मकाः स्फुटितधूसरकेशगात्राः ।
शीतद्विषश्चलधृतिस्मृतिबुद्धिचेष्टा-
सौहार्ददृष्टिगतयोऽपि बहुप्रलापाः ॥ १२२ ॥

மூன்று தோஷங்களில் வாயுவே பலசாலீ, அதிக வியாபகமானது, சீக்கிரமாகக் கேடு விளைவிக்கும் சக்தியுள்ளது. மற்ற இரு தோஷங்களையும் கிளப்பி விடுவது, சுதந்திரமாய் அதிக நோய்களைச் செய்யவல்லது, வாதப் பிரகிருதியான மனிதர்கள் ஸாதாரணமாய் குற்றங்குறை செய்பவர்களாயும், குளிர்ச்சியில் வெறுப்புள்ளவர்களாயும், தைர்யம், நினைவு, அறிவு, செய்கை, நட்பு, பார்வை, நடை இவைகளில் ஒரு ஸ்திரமில்லாமல் சஞ்சலமாயுமிருப்பார்கள். இவைகள் அநேகமாய் மனஸ்ஸைப்பற்றிய லக்ஷணங்கள். बहुप्रलापाः— அதிகப் பேச்சுக்காரர்கள். இது வாக்கைப்பற்றிய லக்ஷணம். स्फुटितधूसरकेशगात्राः— தலைமயிர் அழுக்குப்படிந்தும், காத்திரம் வரண்டு வெடிப்புற்றும் இருக்கும். இது சரீரத்தைப் பற்றிய (காயிக) லக்ஷணங்கள். இவ்விதமே பித்த கபப் பிரகிருதி லக்ஷணங்களிலும் மானஸிக, வாசிக, காயிக லக்ஷணங்களைப் பிரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது.

पित्तप्रकृतिलक्षणम्— பித்தப்ரக்ருதி லக்ஷணம்.

पित्तं वह्निर्वह्निजं वा यदस्मात्पित्तोद्रिक्तस्तीक्ष्णतृष्णाबुभुक्षः ।
गौरोष्णाङ्गस्ताम्रहस्ताङ्घ्रिवक्त्रः शूरो मानी पिङ्गकेशोऽल्परोमा ॥

அக்னியே பித்தம் அல்லது அக்னிகார்யம் பித்தம். பித்தப் பிரகிருதியானவருக்கு பசி தாகம் மிகுதியாயிருக்கும். சரீரம் உஷ்ணமாயும், வெண்மையாயும், பாணி பாத முகங்கள்— சிவந்தும், உடல் ரோமம் குறைவாயும், தலைமயிர் சிறிது செம்பட்டையாயுமிருக்கும். நல்ல சூரனுயும் மானியாயுமிருப்பான்.

அருணகேராமிருத தைலம்.

(செவ்விளநீர் தைலம்)

[G. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்சாவூர்.]

[தஞ்சாவூர், ஸரஸ்வதி மஹால் புத்தகசாலையில் எல்லா சாஸ்திரங்களிலும் அபூர்வமான விஷயங்கள் காணப்படுகின்றன. 'ஆநந்த கந்தம்' என்னும் உயர்ந்த வைத்திய கிரந்தம் வேறு எவ்விடத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. அநேகவிதமான அழகான யோகங்களும் இவ்விடத்தில் தான் கிடைக்கிறது. அப்படிப்பட்ட யோகங்களில் சிலவற்றை வெளியிடுகிறேன்.]

'அருணகேராமிருதத் தைலம்' ஒரு கிரந்தத்திலும் இல்லை. இது அசுவினி தேவதைகள் செய்தது. இதன் மூலச்லோகம் கிரந்தத்திலும், இதற்கு மராத்தி பாஷையில் ஒரு வியாக்கியானமும் இருக்கிறது. இதன் தமிழ்மொழி பெயர்ப்பு பின்வருமாறு—

செவ்விளநீர் 2 மரக்கால், சிந்தில்சாறு 1 மரக்கால். முசுமுசுக்கை, பொன்னுங்கண்ணி, சிறுகீரை, கையாந்தகரை, நெய்ச்சட்டி பூண்டு, நெல்லிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, துளசி, பேய்ப்பீர்க்கு, கற்றாழை, கருநொச்சி, எலுமிச்சம் பழம், மஞ்சள், நார்த்தம் பழம், ஆதண்டை இவை ஒவ்வொன்றின் சாறு $\frac{1}{4}$ மரக்கால் எடுத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 2 மரக்கால், பசும் பால் 2 மரக்கால் கூட்டவும்.

சிற்றாமுட்டி, நெல்லிமுள்ளி, அதிமதுரம், விலாமிச்சை, சந்தனம், மிளகு, அகில் கட்டை, கோரைக் கிழங்கு, வில்வம், சிறுகீரை, நன்னாரி, மஞ்சள், மரமஞ்சள் இவை வகைக்கு 1 பலம் எடுத்து, இடித்து 8 மரக்கால் ஜலத்தில் போட்டு $\frac{1}{4}$ ஆகக் காய்ச்சவும். பிறகு கஷாயத்தை வடிக்கட்டவும்.

முன் சொன்ன சாறு வகைகள், பால், எண்ணெய், கஷாயம் எல்லாவற்றையும் ஒன்ருகக் கலக்கவும்.

திரிகடு, திரிபலே, சிற்ருமட்டி, பேராமட்டி, யானேக் குருந்தோட்டி, சாரணே, வெள்ளேச் சாரணே, சத்திச் சாரணே, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, ஏலம், நன்ஞரி, கோஷ்டம், தண்ணீர்விட்டான் கிழங்கு, சம்பங்கி, அமுக்குரா, கடுகு ரோகிணி, தேவதாரு, பூலான் கிழங்கு, ஸமுத்ராப் பச்சை, முல்லேப்பூ, நாகணம், விபூதிப் பச்சை, ஸாம்பிராணி, சிறுநாகப்பூ, இந்துப்பு, விலாமிச்சம் வேர், மலே வெட்டிவேர், கோரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளேயம், மருக்கொழுந்து, கதிர்ப்பச்சை, மகிழம்பூ, பாதிரிப்பூ, தும்பைப்பூ, மல்லிகைப்பூ, ஜவந்தி, நீலோத்பலம் செங்கழுநீர்ப்பூ, வெண்தாமரை, செந்தாமரை, நந்தியாவட்டை, இருவாக்ஷிப்பூ, தாழம்பூ, காக்கரட்டான் பூ, பவழமல்லிப்பூ, தங்க அரளிப்பூ, விஷ்ணுக்கிராந்திப் பூ, ஜாதிப்பூ இவற்றை இடித்துப் பசும் பாலில் அரைத்து கல்கமாகப் போட்டுக் காய்ச்சவும்.

பாத்ர பாகத்தில் பச்சைக்கர்ப்பூரம், கோரோசனே, குங்குமப்பூ, நாகணம், புனுகுசட்டம், நெரியலரிசிப்பால், கஸ்தூரி, சேர்த்துக்கொள்ளவும்.

(சில சரக்குகளுக்கு அளவு கொடுக்கப்படவில்லே. திரிகடு முதலியவை வகைக்கு $\frac{1}{4}$ பலமாகவும், பச்சைக்கர்ப்பூரம் முதலியவை வகை 1-க்கு விராகனெடை 1 வீதம் கூட்டுவது உசிதமென்று தோன்றுகிறது.)

இத்தைலத்தை உபயோகிக்கும் காலங்களில், நல்ல ஆகாரம் ஸேவிக்கவும். பகல் தூக்கம், புளிப்பு, மோர், பனி, சந்தனம், சந்த்ரக்ரஹணம், பெருங்காற்று, பெருந்தீ, சீதளமான ஆகாரம், ஸ்திரீ போகம், ஸாஹஸ காரியங்கள், மத்யங்கள் நீக்கவும்.

எல்லாவிதமான நேத்ர ரோகங்கள், சுக்லரோகங்கள், கண்ணில் விரணம், சீழ், நீர்சுரப்பு, ஸந்தி ரோகங்கள், வாத ரோகங்கள், கண்ணின் கருப்பு மண்டலத்தில் வெளுப்பு,

காசம், திமிரம், லிங்கநாசம், தூமகம், பித்தம், வாயு, கபம், விஷம், மந்திரம், தந்திரம் முதலியவைகளினுல் உண்டான ரோகங்கள், அநேகவிதமான தோஷங்களினுலுண்டான ஆந்தியத்துவம், கண்வலி, கண் எரிச்சல், துர்மாம்ஸ வளர்ச்சி, வீக்கம், படலம், வக்ரரோமம், ரஸம், பாஷாணம், முதலியவை சாப்பிட்ட தோஷத்தினுலுண்டான தலைவலி, தலைவாயு, கர்ண ரோகம், செவிடு, நெற்றிப்பக்கத்தில் வலி, தலைசுற்றல், அக்கினி மந்தம், அரோசகம், பிரமேகம், மூத்திர கிருச்ரம், அச்மரீ, வஸ்தியில் எரிச்சல், மூலச் சூடு, அர்சஸ், மலபந்தம், கைகால் எரிச்சல், அஸ்திகதஜ்வரம், ஸப்த தாதுகதஜ்வரம், சுக்லாசயம், எரிச்சல், இளைப்பு, ரக்தபித்தம், ஜலதோஷம், ராஜ யக்ஷ்மா முதலிய ரோகங்கள் நீங்கும்.

டைபாய்டு ஜ்வரம்

[வைத்ய விசாரத. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.]

ஸங்நிபாத ஜ்வரங்களில் அதிகமாக காணப்படுவது இது. பித்தவாத ஜ்வரமென நம்மிடையே அதிகமான பிரசார மிருந்தபோதிலும், இதில் ஏற்படும் ஸங்நிபாதம் நிலையற்றதாகவும் சிலசமயம் கபவாத பித்த ஸங்நிபாதத்துடன் வருவதாலும் இதை மேநாட்டினர் போல் எந்த ஆசயத்தில் வியாதி வருகின்றதோ அதை யொட்டிய பெயராகிய ஆந்திரிக ஜ்வரம் என்ற வியவகாரம் உள்ளது. காலை மாலையிலுள்ள ஸந்தாபத்தின் (Temperature) வேற்றுமையைக் கொண்டு ஸந்ததம் என்ற விஷமஜ்வரம் எனக்கருதுபவரும் உண்டு. ஆந்த்ரிக ஜ்வரம் என்ற பெயரே இதைச் சரியாகக் குறிப்பிடக் கூடியதால் அதை வியவகாரத்தில் வைத்துக் கொள்வோம்.

இது ஒட்டுவாரொட்டி. முக்கியமாக மலஜலம், வாந்தி எச்சில் மூலமாகப் பரவுகின்றது. சிறு குடலையும் அதைச் சுற்றியுள்ள ரஸக்கிரந்திகளையும் அதிகமாக

பாதித்துப் புண்ணுக்குகின்றது. இது பரவும் காலம் சுமார் 5 நாளிலிருந்து 3 மாதம் வரை எனக் கூறலாம்.

பசியின்மை, தசைகளில் வலி, முன் தலைவலி, குளிர், சிணுக்கு இருமல்— இவைகளுடன் ஜ்வரம் ஆரம்பிக்கின்றது. தூக்கம் ஸ்வப்னங்களால் தடைபடுகின்றது. நாக்கு காய்ந்து மேல் சுரசுரப்புடன் இருக்கும். முதல் 2–3 நாட்களுக்கு படுக்கையிலிருப்பதே நோயாளிக்கு சிரமமாயிருக்கும். மலமிளகியோ சிலசமயம் இறுகியோ போகும். ஜ்வரத்தின் தாபம் கிரமமாக ஏறும். காலையில் மாலையைவிட ஜ்வர தாபம் $1—1\frac{1}{2}$ டிகிரி குறையும். முதல் வார முடிவில் நோயாளியின் தோற்றத்தில் விசேஷம் நன்கு புலப்படும். முகம் கனத்தும் சிவந்து உப்பியும், வாய் உதடு காய்ந்தும் நாக்கில் மேல் நடுவில் வெள்ளையாக மாவுபோன்ற படலமேற்பட்டும், நாக்கின் வரம்புகள் கூருகவும் புண்பட்டும் சிவந்தும் காணப்படுகின்றது. வயிறு சிறிது பொருமலடைந்தும் யகிருத்தின் (Liver) கீழ் அமுக்கினுல் ஒரு களகள சப்தத்துடனும் காணும். மாம்ஸம் அல்லது அரிசி கழுவிய ஜலம் போல் வெளுத்தும் சிலசமயம் கறுத்தும் மலம் போகும். மற்ற ஜ்வரங்களைப் போல் ஜ்வரதாபத்திற் கேற்ப நாடி துடிப்பு அதிகமாவதில்லை. அத்துடன் நாடியின் வேகமும் பூர்ணமாக இருப்பதும் மற்ற ஜ்வரங்களைவிட இதில் குறைவு.

இரண்டாவது வார ஆரம்பத்தில் ஜ்வர தாபம் 103° லிருந்து 105° வரை காலை மாலைகளில் முன்கூறியபடி 1 டிகிரி :வித்யாஸத்துடன் காணப் படுகின்றது. சிறுநீர் நல்ல மஞ்சளாகவும், தோல் வரண்டு காய்ந்தும் காணும். நாவரட்சியும் தலைவலியும் முக்கியமான உபத்ரவங்கள். நாக்கு உலர்ந்து வெடித்து ரக்தம் கசிவதுமுண்டு. பல்களில் ஊத்தை படிவது, மலம் மஞ்சளாகவும் கருப்பாகவும் வெளிவருவது. தூக்க மின்மை, பிதற்றல், இவை விசேஷமானவை. முதல் வாரத்தில் ஏற்படாத அசதி இரண்டாம் வாரத்தில் நன்கு காணும்.

இவ்வாரத்தில் உண்டாகும் ஜ்வராதிக்யத்தாலும், சிறு குடல் புண்ணுகி பொத்து விடுவதாலும், அதனுல் ஏற்படும் ரக்தப் போக்கினுலும், அதனுல் விஷம் பரவி மயக்கம் முதலியவை வர ஆபத்துண்டாகலாம்.

மூன்ருவது வாரத்தில் சிறிது சிறிதாக ஜ்வரம் குறைவதும், ஜ்வர தாபத்தில் அதிகமான ஏற்றத் தாழ்வும், நாக்கு சுத்தமாகி பசி உண்டாவதும் வியாதி குணமாகி வருவதைக் காட்டும். காலையில் நார்மலிலிருக்கும் ஜ்வர தாபம் மாலை 100° வரை கூட ஏறும்.

சில கடுமையான வியாதிகளில் 3-வது வாரம் மிகவும் கவலைக்கிடமாக இருக்கும். ஹிருதய நாடித்துடிப்புகள் பல மிழந்தும், மார்பில் சளிக்கட்டு ஏற்பட்டும் கைகால்களில் உஷ்ணம் குறைந்தும், மலமூத்ரங்கள் சுய அறிவில்லாமலேயே வெளிப்படுவதும், பிதற்றல், அலற்றுதல், அங்குமிங்கும் புரண்டு படுத்தல், வாய் கிட்டி ஆகாரம் முதலியவைகள் செலுத்த முடியாமை இவை போன்ற ஜன்னி உபத்ரவங்கள் தோன்றியும் ஜ்வரம் குறைவதற்கு 2–3 வாரங்கள் அதிகமாகின்றது. அதனுல் வியாதி விடுபட்டும் ஆரோக்ய மடையும் காலம் நீண்டுவிடுகின்றது.

ஜ்வரம் குறைந்தபின் சிறிதளவு சிரமத்திலும் நாடித் துடிப்பு அதிகமாதலும், தாபம் அதிகமாதலும், அயர்வு ஏற்படுதலும் காணலாம். நடமாட பலம் உடனே ஏற்படாது. பசி அதிகமாகி ஆகாரம் செல்ல ஆரம்பித்தவுடன் சரீரத்தில் ரக்தமில்லாத் தோற்றமும் சீக்ரம் மறைகின்றது. மேல் தோல் மெல்லியதாக உரிவதும், தலைமயிர் கொட்டுவதும் நகத்தில் பள்ளம் விழுவதும் காணப்படும். சில சமயம் அதிகமாக உட்கார்ந்திருத்தல், கால்களில் பூசினுற் போல வீக்கமும் காணப்படும்.

(தொடரும்)

செய்து பாருங்கள்*

1. ஆமாரி சூர்ணம்.

இது பிரவாஹிகை (சீதபேதி)யில் ஆமாவஸ்தையில் (அஜீர்ண நிலையில்) சிறந்த ஔஷதம்.

சதகுப்பை— இளம் வறுவலாக வறுத்த சோம்பு, கடுக்காய்த் தோல், சுக்கு, வெடி உப்பு (வெண்மையானது) வகைக்கு 1 தோலா வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாலனம் செய்து உபயோகப் படுத்தவும். அளவு $\frac{1}{8}$–$\frac{1}{4}$ தோலா.

அனுபானம்— வென்னீர். பித்தத்திஞலுண்டாவதில் குளிர்ந்த ஜலம்.

2. அதஸ்யாதி லேபம்.

சுட்ட புண்களில் மிகுந்த நன்மை தரக்கூடியது, ஆளிவிதை எண்ணெ 40 தோலா, வெள்ளைக் குங்கிலியம் 10 தோலா, வேப்பிலை 20 தோலா.

எண்ணெயில் வேப்பிலையை நன்கு விழுதாக அரைத்துப் போட்டுக் காய்ச்சி தைல பாகத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு சூடான அந்த எண்ணெயில் வெள்ளை குங்கிலியத்தைப் (பொடி செய்து) போட்டு, தணலில் வைத்து வெள்ளைக் குங்கிலியம் கரைந்தவுடன் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். ஆறினவுடன் அதில் கால்படி குளிர்ந்த ஜலம் விட்டு நன்கு கடைந்து பிறகு ஜலத்தை வடிகட்டவும். இவ்விதம் 100 தடவை ஜலம் விட்டுக் கடைந்து அலம்ப நல்ல வெள்ளையான களிம்பு தயாராகும்.

இதைச் சுட்டபுண்களில் மேல் தடவிய வுடனே எரிச்சல் வலி அடங்கி புண்ணும் சீக்கிரமாக ஆறுகின்றது.

---

* இத்தலையங்கத்தின் கீழ் சில உயர்ந்த ஔஷத முறைகள் கொடுக்கப் படுகின்றன. இவை தென் வடநாட்டிலுள்ள பிரஸித்த வைத்தியர்களால் நல்ல குணம் தருபவைகளாக அனுபவத்தில் அறியப் பட்டவை. இவைகளைச் செய்து உபயோகித்துப் பாருங்கள். தங்களது அனுபவத்தையும் வைத்திய சந்திரிகைக்கு எழுதுங்கள். இம்முறைகளில் ஏதாவது விசேஷமாக கூட்டவோ குறைக்கவோ செய்தால் குணம் அதிகமாகும் என்ற அனுபவமோ யுக்தியோ இருந்தால் அதையும் தெரியப்படுத்துங்கள். சிறிய யோகங்களாக இருந்தும் இவை மிகவும் உயர்ந்தவை என்பது அனுபவத்தில் தாஞக விளங்கும்.

3. அர்சோக்ன தூமம்.

அர்சஸ் (மூலம்)ஸில் போடக்கூடிய புகை மருந்து.

கடற் தேங்காய் கொப்பரை, எட்டிக்கொட்டை, இவைகளை ஸமனிடை பெரும்படியாக சூர்ணம் செய்து கொண்டு தணலில் தூவி மூல முளையில் புகைபடும் படி செய்யவும். வலி குறைந்து உருவமும் சிறிதாகும்.

4. அர்சோவேதனுந்தகம்.

எரிச்சலுள்ள அர்சஸில் தடவக் களிம்பு.

சததௌத கிருதம் அல்லது அதஸ்யாதி லேபம் (3-வது யோகம்) 16 தோலா. சூடம் 2 தோலா, போதிகாஸத்வம் (மெந்தால்) 1 தோலா, (தைமால்) 1 தோலா. இவைகளில் சூடத்தையும்இரு ஸத்வங்களையும் ஒன்று சேர்க்க ஜலமாகிவிடும். அதை கிருதத்துடன் சேர்க்க.

இதை மூலமுளையில் தடவ வலி குறைந்து எரிச்சல் அடங்கி உருவத்தையும் சிறிதாக்குகின்றது.

5. அஸ்திஸம்ஹார தைலம்.

அடிபட்ட விரணங்களுக்குச் சிறந்தது.

நல்லெண்ணெய், 120 தோலா, ($\frac{3}{4}$ படி) பிரண்டையின் சார் 480 தோலா. (3 படி) பிரண்டையை நன்கரைத்த விழுது 30 தோலா. தைலபாக முறைப்படி காய்ச்சவும்.

இத்தைலம் அடிபட்ட விரணம் வீக்கம் இவைகளில் மேல் பூசுவதற்குச் சிறந்தது. ரக்தக்கட்டைக் கரைத்து வலியைப் போக்கும்.

6. லகு சியவனப்ராசம்

சிறந்த ரஸாயனம். மாணவர்களுக்கு மூளை பலத்தை அதிகப் படுத்துவது.

நெல்லிமுள்ளி 60 தோலா– அல்லது பச்சை நெல்லிக் கனி 120 தோலா. (நல்ல வளர்ந்த காய்களில் 120 எண்ணிக்கை) இவைகளை 2 படி ஜலத்தில் போட்டு கனிய வேக வைத்து வடிகட்டி விதை யகற்றி அம்மியிலரைத்து துணியில் தேய்த்து வெண்ணை போன்ற விழுது தயார் செய்து கொள்ளவும். அதை துணியில் கட்டித் தொங்கவிட்டு

ஜலத்தை வடிய விடவும். அவ்விழுதை ஒரு சேர் நல்ல நெய்யில் நன்கு ஜலம் போக வதக்கவும். பொன் வருவலாக வறுபட்டவுடன் அதில் நெல்லிக்காய் வேகவைத்த ஜலத்தை விட்டு அ. சர்க்கரை 4 வீசை போட்டு பாகு வைக்கவும். லேகிய பாகம் வந்தவுடன் ½ சேர் நெய் சேர்த்து கீழ்க் கண்ட சூர்ணங்களைச் சேர்க்கவும்.

மூங்கிலுப்பு 18 தோலா, திப்பிலி 4 தோலா, லவங்கப் பட்டை ½ தோலா, ஏலரிசி ½ தோலா, லவங்கபத்திரி ½ தோலா, சிறுநாகப்பூ ½ தோலா, இவைகளின் வஸ்திர காலனம் செய்த சூர்ணத்தைப் போட்டுக் கிளறி ஆறினவுடன் ½ சேர் தேன் போட்டுக் கிளறவும்.

ஸுகந்தமான லேகியம் தயாராகின்றது. பசி, மேதை, புஷ்டி அளிக்கும் சிறந்த ரஸாயனமாகின்றது.

7. உதும்பர ஸாரம்.

புண், கிரந்தி, விரணம்— இவைகளுக்கு களிம்பு.

அத்தி இலை 1 வீசை கொண்டுவந்து இடித்து 3 படி ஜலத்தில் ¾ படி மீதமாக கஷாயம் செய்து வடிகட்டிக் கொள்ளவும். பிழிந்த இலையை மறுபடியும் 1½ படி ஜலத்தில் போட்டு ¾ படி மீதமாக கஷாயம் செய்துகொள்ளவும். இவ்விரண்டு கஷாயங்களையும் ஒன்றாக்கி, மறுபடியும் எரிக்கவும். தேன் மாதிரி கஷாயம் கெட்டியானவுடன் இறக்கி அதில் 1 தோலா பொரித்த வெங்காரம் சேர்த்து கலக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இது விரணத்தைச் சுத்தி செய்து ஆற்றும் கிரந்தி சோதம் (Glandular swellings) வாதரக்தம், கட்டிகள் இவைகளில் சிறந்த மேற்பூச்சு மருந்து.

வேளைக்கு ⅛–¼ தோலா வீதம் 1–2 அவுன்ஸ் ஜலம் கலந்து உள்ளுக்குக் கொடுக்க, பிரதரம், அதிமூத்ரம், ரக்த மூத்ரம், இவைகளைக் குறைத்து மல மூத்ராசயங்களிலுள்ள புண்ணை ஆற்றுகின்றது.

⅛ தோலா உதும்பர ஸாரத்தை 48 அவுன்ஸ் சுத்த ஜலத்தில் கரைத்து பஞ்சினால் வடிகட்டி கண்ணில் தாரையாக விட கண்வலி, கண் சிகப்பு போகும். யோனியில் சொருகி வைத்து 4–5 மணி நேரம் கழித்து எடுத்து யோனியை அலம்பி விடவும். பிரதரத்திலும் இவ்விதம் சிகித்ஸை செய்வது நல்ல குணம் தரும். (தொடரும்)

श्लेष्मप्रकृतिलक्षणम्—சிலேத்துமப்ரக்ருதி லக்ஷணம்.

श्लेष्मा सोमः, श्लेष्मलस्तेन सौम्यो
गूढस्निग्धश्लिष्टसन्ध्यस्थिमांसः ।
क्षुत्तृट्शोकक्लेशधर्मैरतप्तो
बुद्ध्या युक्तः सात्विकः सत्यसन्धः ॥ १२४ ॥

கபம் முற்றிலும் ஸோமகுணம் பொருந்தியது. கபப்பிரகிருதி மனிதர் ஸௌம்யனுகவும் (குளிர்ந்த குணம்), நட்புத் தன்மை பெற்றவனுகவும், ஸத்தியஸந்தனுயும், பசி-தாகம்-சோகம்-கஷ்டம் முதலிய துன்பங்களினுல் கலக்கமடையாத ஸாத்விகமான மனே பலத்தையும் சரீர பலத்தையும் உடையவனுயுமிருப்பான். மழ மழப்புடன் அழகாய் திருடமாய் உருண்டு அமைந்த அஸ்திக்கூடு சதைகள் பொருந்தியவனுயுமிருப்பான்.

குறிப்பு :— கிரந்தகர்த்தா கபப் பிரகிருதிக்காரனை ஸாத்விக: என்று சொல்லியுள்ளது அநேக வித க்ஷமை, தைர்யம் போன்ற மனே பலம் மிகுந்தது என்று பொருள் கொள்ள்வேண்டும். ஸத்வ குணம் மிகுந்தவன் என்று பொருள் கொள்ளக்கூடாது. கபம்- தமோகுணம் மிகுந்தது, பித்தம்-ஸத்வ குணம் மிகுந்தது, வாயு— ரஜோ குணம் மிகுந்தது என்று பெரிய ஆயுர்வேதக் கிரந்தங்களிலும் இதர கீதை முதலிய சாஸ்திரங்களிலும் கூட தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

வாத பித்த கபங்களுடைய சப்தஸ்பர்ச ரூப லக்ஷணங்கள் முத லியவைகளை சரகாதி ஸம்ஹிதா கிரந்தங்களிலிருந்து அவசியம் நன் ருய் அறியவேண்டும்.

ரூப பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ दृक् परीक्षा ॥ —கண் பரீக்ஷை.

தோஷ ஸ்வரூபத்தை அறிவிக்கும் கண்கள்.

रूक्षा धूम्रा तथा रौद्रा चला चान्तर्ज्वलत्यपि ।
दृष्टिर्यदा तदा वातरोगं रोगविदो जगुः ॥ १२५ ॥
दीपद्विषि च सन्तप्तं पीतं पित्तेन लोचनम् ।
जलार्द्रं ज्योतिषा हीनं स्निग्धं मन्दं कफेन तत् ॥ १२६ ॥
द्वन्द्वदोषे भवेन्मिश्रं, तूर्णं तूर्णं विलोचनम् ।

श्यामवर्णं च निर्भुग्नं तन्द्रामोहसमन्वितम् ॥ १२७ ॥
रौद्रं च रक्तवर्णं च भवेच्चक्षुस्त्रिदोषतः ।

இங்கு கண் பரீக்ஷை என்பதால் கண்ணில் காணும் நோய்களுடைய பரீக்ஷை விதம் சொல்லப்படவில்லை. சரீரத்தில் பொதுவாக ஏற்படும் திரிதோஷ விகாரங்களிலும் முக்கியமாய் மரணக் குறிகளிலும் கண்களிலிருந்து கண்டுகொள்ளக் கூடிய சிற்சில முக்கிய விஷயங்கள் மட்டுமே இங்கு கூறப்பட்டுள்ளன. கண்ணைப்பற்றிய ரோகங்களுடைய பரீக்ஷைகள் மேலே தனி அதிகாரமாகச் சொல்லப்பட்டுள்ளன.

வாத விகாரம் சரீரத்தில் இருப்பின் கண் வரட்சியடைந்தும், அழுக்காயும், வெய்யிலில் அடிபட்டவருக்குப் போல் சிறிது சிவந்தும், உள்ளெரிச்சலும் கண்ணில் இருக்கும். பித்த தோஷம் சரீரத்தில் மேற்படின்— தீப வொளியைக் கண் வெறுக்கும், எரிச்சலும் மஞ்சள் வர்ணமும் கண்களில் ஏற்படும். கப விகாரத்தில் கண்களில் அதிக நீர்முட்டலும், பார்வைக் குறைவும், பசையடைதலும் மாந்தியமும் ஏற்படும். த்வந்த்வ தோஷங்களில் இரு தோஷங்களுடைய லக்ஷணங்கள் கலந்திருக்கும். திரிதோஷ ஸந்நிபாதங்களில் உடலில் சோர்வும், மூளையில் மயக்கமும் கூட இருந்துகொண்டு, கண்— கோளத்தில் விழுந்து, கருப்பு. சிவப்பு வெண்மை வர்ணங்கள் மாறி மாறியும் காட்டும்.

கண்களிலிருந்து அரிஷ்ட விக்ஞானம் விளக்குகின்றார்:—

एकं चक्षुर्यदा भीमं द्वितीयं मिलितं भवेत् ।
त्रिभिर्दिनैस्तदा रोगी स याति यममन्दिरम् ॥ १२८ ॥
ज्योतिर्विहीनं सहसा रोगिणो यस्य लोचनम् ।
ईषत्कृष्णं स नियतं प्रयाति यमशासनम् ॥ १२९ ॥
संरक्तं कृष्णवर्णं च रौद्रं च प्रेक्षते यदा ।
इति लिंगैर्विजानीयात् मृत्युरेव न संशयः ॥ १३० ॥
एकदृष्टिरचैतन्यो भ्रमन् स्फुरिततारकः ।
एकरात्रेण नियतं परलोकपथं व्रजेत् ॥ १३१ ॥

यामलात्—

शुष्कास्यः श्यामकोष्ठोऽप्यसितरदततिः शीतनासाप्रदेशः
शोणाक्षश्चैकनेत्रो लुलितकरपदः श्रोत्रपातित्ययुक्तः ।

शीतश्वासोऽथ चोष्णश्वसनसमुदयः शीतगात्रप्रकंपः
सोद्वेगो निष्प्रपञ्चः प्रभवति मनुजः सर्वथा मृत्युकाले ॥ १३२ ॥

ஒரு கண் பார்வைக்கு ஒரு பயங்கரத் தோற்றமுடையதாயும், இரண்டாவது கண் மூடிக்கொண்டுமிருக்கும் நிலை யேற்படின் அந்நோயாளி அநேகமாய் மூன்று தினங்களில் யமன் வீட்டிற்குச் செல்லுவான். நோயுற்றவனுக்கு இரு கண்களிலும் திடீரென்று பார்வை முற்றிலும் அழிந்து, ஒரு கறுப்பு நிறமும் கண்ணில் ஏற்படின் அவனும் யமன் வீடு சென்று விடுவான். ரோகிக்குப் பார்வையில் ரக்தவர்ணமாய் அல்லது கறுப்பு வர்ணமாய் ஏற்பட்டு, விழியும் பயங்கரமாயிருப்பின் சீக்கிரத்தில் மிருத்யு நெருங்குகின்றான் என்றறியவும். ஒரு விழியில் பார்வை யிழந்து, மற்ற விழியும் துடிப்புடன், பிரக்ஞை யிழந்து சுழன்று கொண்டிருக்கும் வியாதிஸ்தன் ஒரு நாளில் பரலோக வழியை நாடுவான்.

பால வைத்தியர்கள் நோயாளியின் கண்களில் காணும் கோளாறுகளை மட்டும் கண்டு, இவை மரணக் குறிகள் என்று மயங்கிவிடலாம். கண்களை மட்டும் கவனித்து முடிவு சொல்ல வியலாது. உடல் முற்றிலும் உற்றுக் கவனித்து விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக யாமள தந்திரத்திலிருந்து பொது அரிஷ்ட விக்ஞானத்தை விளக்குகின்றார். அதாவது—

வாய் உலர்ந்து, வயிறு கறுத்து, பற்களும் வெண்மை அழிந்து, மூக்கின் நுனி குளிர்ந்து, கண் சிவந்து, ஒரு கண் பார்வை யிழந்து அல்லது சலியாது ஒரே பார்வையுடன், கை கால்களைப் புரட்டிக் கொண்டு, காது கேழ்க்காமல், மூச்சுக் காற்றுக் குளிர்ந்து அல்லது உஷ்ணமாய் பெருமூச்சு வேகத்துடன் கண்டு, உடலில் நடுக்கலும் சீதளமும், எல்லாவற்றிலும் வெறுப்பும், உலக நினைவு இல்லாமலும் மரண காலத்தில் மனிதன் ஆகிறான்.

குறிப்பு :— இந்த சுலோகத்தின் அவதாரிகை நாம் செய்துள்ளபடி செய்யாவிடில் शोणाक्षश्चैकनेत्रः என்ற இரண்டு வார்த்தைகள் இந்த சுலோகத்திலிருப்பதற்காக நேத்ர பரீக்ஷாப் பிரகரணத்தில் சேர்த்துள்ளது பொருந்தாது. ஆதலால் எல்லாக் குறிகளும் கவனிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கிரந்த கர்த்தா வற்புறுத்தும் நோக்கத்துடன் இந்த சுலோகத்தை இங்கு படித்துள்ளார் என்று உரை கூறுவதே உசிதமாகும்.

கண் பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ आस्य परीक्षा ॥ —வாய் பரீக்ஷை.

वाते च मधुरास्यत्वं पित्ते च कटुकं तथा ।
मधुराम्लं कफे चैव सर्वलिङ्गं त्रिदोषजे ॥ १३३ ॥
अजीर्णे घृतपूर्णं स्यात् कषायं चाग्निमान्द्यके ।

உடலில் ஏற்படும் வாததோஷ விகாரத்தில் வாயில் இனிப்பும், பித்ததோஷ விகாரத்தில் வாயில் கசப்பும், கபதோஷ விகாரத்தில் வாயில் இனிப்பும் புளிப்பும், திரிதோஷ கோபத்தில் எல்லா ரஸக் குறிகளும் ஏற்படும். பொதுவாய் ஆகாரம் ஜீர்ணமாகாது. நோய் ஏற்படின் வாய் உரைந்த நெய் பூசியதுபோல் மாவுபடிந்தும், அக்னி மாந்தியத்தில் வாய் துவர்ப்பு ரஸத்துடனிருக்கும்.

குறிப்பு :— இங்கு 'அக்னி மாந்தியம்' என்பதால் அஜீர்ணத்தின் ஆரம்ப நிலையை வாயில் காணும் துவர்ப்பு ரஸத்தாலும், 'அஜீர்ணம்' என்பதால் அந்நோயின் பூர்ணுவஸ்தையும் அந்நிலையில் உரைந்த நெய்பூச்சு நாக்கில் ஏற்படும் என்பதும் தெரிந்துகொள்ள வேண்டும். இது பிரத்யக்ஷத்திற்கும் சாஸ்திர பரிபாஷைக்கு விரோதமில்லாத பொருளும் ஸமந்வயமும் ஆகும்.

வாய் பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ जिह्वापरीक्षा ॥ —நாக்குப் பரீக்ஷை.

जिह्वा शीता खरस्पर्शा स्फुटिता मारुतेऽधिके ।
रक्ता श्यामा भवेत् पित्ते कफे शुभ्राऽतिपिच्छिला ॥ १३४ ॥
मिश्रिते मिश्रिता ज्ञेया, सर्वलक्षणसंयुता ।
कृष्णा सकण्टका शुष्का सन्निपाताधिके तु सा ॥ १३५ ॥

நாக்கிலிருந்து வாதாதி தோஷங்களைக் கண்டு பிடிக்கும் வழி: நாக்கில் சுறசுறப்பு, குளிர்ச்சி, வெடிப்பு இருந்தால் வாயு தோஷம் மேலிட்டிருக்கும். சிவப்பு அல்லது கறுப்பு நிறமிருப்பின் பித்த தோஷம் மேலிட்டிருக்கும். வெண்மை நிறமும், கொழகொழப்பு மிருப்பின் சிலேத்துமம் ஓங்கியிருக்கும். இருவித நிறங்கள் கலந்திருப்பின் ஸம்ஸர்க தோஷமென்றறியவும். கறுத்து, உலர்ந்து முற்களேற்பட்டு, எல்லா தோஷங்களுடைய லக்ஷணங்களுடனும் கூடியிருப்பின் திரிதோஷ ஸந்நிபாதமென்று நிர்ணயம் செய்யவும்.

குறிப்பு ;— அச்சுப் புத்தகத்தில் रक्ता श्यामेति வாக்யத்திற்குப் பிறகு 'कृष्णा सकण्टका शुष्का सन्निपाताधिके तु सा। मिश्रिते मिश्रिता ज्ञेया सर्वलक्षणवर्जिता" என்ற பாடக் கிரமம் காண்கிறது. இது கைத்தவறுதலால் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று எண்ணி 3-வது 4-வது வாக்கியங்களை மாற்றி யமைத்து वर्जिता என்றதையும் संयुता என்று நான் திருத்தியுள்ளேன். இவ்வித திருத்த மில்லாவிடில் பொருள் பொருத்தமாகாதென்று எனதபிப்ராயம். பாடத்தை மாற்றுமல் பொருத்தமான பொருளை விசேஷமாய்ப் படித்தவர் சொன்னுல் ஏற்றுக்கொள்ள ஸித்தனுயிருக்கிறேன்.

கிரந்தகாரர்— வாய் பரீக்ஷை நாக்குப் பரீக்ஷை இரண்டையும் தனியாய் பிரிக்காமல் ஒரு அதிகரணத்தில் சொல்லியிருந்தால் அதிக உசிதமாயிருந்திருக்கும். வாய் பரீக்ஷையில் கூறப்பட்ட சுவையின் வேற்றுமைகள், எல்லாம் ரஸனேந்திரியத்திற்கு இருப்பிடமான நாவினுல் தான் உணரக் கூடியவை. 'வாய் கசக்கின்றது' என்று உலகில் சாதாரண வழக்கத்தில் இருப்பதையே சாஸ்திரத்திலும் சொல்லியுள்ளார் என்று ஸமாதானம் கூறவேண்டி யிருக்கிறது.

நாக்கு பரீக்ஷை முற்றிற்று.

॥ अथ कालज्ञानम् ॥

ரோகமில்லாதவருக்கும் ஆயுளின் முடிவை யறிய சில வழிகள்.

अभ्रैर्लक्षितलक्षणेन पयसा पूर्णेन्दुना भानुना
पूर्वादक्षिणपश्चिमोत्तरदिशं षट्त्रिद्विमासैककम ।
छिद्रं प यति चेत्तदा दशदिनं धूमाकृतिं पञ्चमे
ज्वालां पश्यति सद्य एव मरणं कालोचितज्ञानिनाम् ॥ १३६ ॥

இந்த சுலோகத்தின் பொருள் எனக்கு ஸ்பஷ்டமாய் விளங்கவில்லை. காரணம் அன்வயம் சரியாக ஆகவில்லை. பெரியோரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்த பண்டிதர் எனக்கு எழுதியனுப்ப வேண்டுகிறேன். பொதுக் கருத்து—

மேகம், கடல், பூர்ண சந்திரன், ஸூர்யன், நான்கு திசைகள் இவைகளில்— ஒருவன் ஒரு துவாரமிருப்பது போல் கண்டால் பத்து தினங்களிலும், புகை ரூபம் கண்டால் ஐந்து நாட்களிலும், நெருப்பு ஜ்வாலை போல் கண்டால் வெகு சீக்கிரத்திலும் மரணமடைவான்.

अरुन्धतीं ध्रुवञ्चैव विष्णोस्त्रीणि पदानि च ।
आयुर्हीना न पश्यन्ति चतुर्थं मातृमण्डलम् ॥ १३७ ॥
अरुन्धती भवेज्जिह्वा ध्रुवो नासाग्रमेव च ।
विष्णुस्तु भ्रूद्वयोर्मध्ये भ्रूद्वयं मातृमण्डलम् ॥ १३८ ॥
नासाग्रं भ्रूयुगं जिह्वां मुखञ्चैव न पश्यति ।
कर्णघोषं न जानाति स गच्छेत् यममन्दिरम् ॥ १३९ ॥
नव भ्रूः पञ्च चक्षुश्च सप्त कर्णस्त्रिनासिका ।
जिह्वाञ्च दिनमेकन्तु कालचिह्नं दिने दिने ॥ १४० ॥

வானத்தில் அருந்ததி நக்ஷத்ரம், துருவம், விஷ்ணுபாதங்கள், மாதுருமண்டலம் இவைகள் எவனுக்குக் கண்ணினல் பார்க்க முடியவில்லையோ அவனுக்கு ஆயுஸ் சீக்கிரம் நசித்துவிடும். சரீரத்திலுமிவ்வாறுதான். அதாவது— நாக்கே அருந்ததி, மூக்கின் நுனியே துருவனுகும், இருபுருவங்களுடைய மத்தியப் பிரதேசமே விஷ்ணு ஸ்தானமாகும், இரண்டு புருவங்களே மாத்ருமண்டலமாகும், ஸ்வசரீரத்தில்— மூக்கின் நுனி, இரண்டு புருவங்கள், நாக்கு, முகம் இவைகளைப் பார்த்து அறியக் கூடியவைகளை அறியக் கூடாமலானல் அவனுக்கு மரணம் சீக்கிரத்திலேற்படும். காது துவாரங்களைக் கைகளால் அடைத்துக் கொண்டு உள்ளூரக் கவனித்தால் ஒருவித ஒலியுண்டாகும். இவ்வொலி அறியப்படாவிடில் சீக்கிரத்தில் உயிரிழப்பான். இதிலும் விசேஷமென்ன வெனில், புருவங்கள் தெரியாவிடில் சுமார் ஒன்பது நாட்களிலும், கண்கள் தெரியாவிடில் ஐந்து நாட்களிலும், காதொலி கேழ்க்காவிடில் ஏழு நாட்களிலும், மூக்கின் நுனி தெரியாவிடில் மூன்று நாட்களிலும், நாக்குத் தெரியாவிடில் ஒரு நாளில் மரணம் ஸம்பவிக்கலாம் என்று கால நுட்பமறிந்தவர் கூறுவர்.

மற்றும் அரிஷ்ட லக்ஷணங்கள்.

अकस्माच्च भवेत् स्थूलो ह्यकस्माच्च कृशो भवेत् ।
अकस्मादन्यथाभावः षण्मासैश्च विनश्यति ॥ १४१ ॥
रसनायां कृष्णभावो मुखं कुङ्कुमसन्निभम् ।
जिह्वा स्वल्पखरस्पर्शा दुर्लभं तस्य जीवितम् ॥ १४२ ॥

स्वेदो ललाटे हिमवन्नरस्य शीतार्दितस्यापि सुपिच्छिलस्य ।
कण्ठे स्थितो यस्य न याति वक्षो नूनं यमस्यैति गृहं स मर्त्यः ॥

रात्रौ दाहोऽभितपति दिवा जायते शीतलत्वं
कण्ठे श्लेष्मा विरसवदनं कुङ्कुमाकारनेत्रे ।
जिह्वा कृष्णा वहति च सदा स्थूलसूक्ष्मा च नाडी
तद्भैषज्यं स्मरणमधुना रामरामेति नाम्नः ॥ १४३ ॥

இளைத்த மனிதன் விசேஷ காரணம் தெரியாமல் திடீரென்று பெருத்தலும், பெருத்தவனவ்வாறே இளைத்தலும், அவனுக்கு ஆறுமாதகாலத்தில் ஆயுள் பிரியலாம். காரணமறியாமல் உடலில் ஏற்படும் திடீர் மாறுதல் மரணக்குறியாகும். நாக்கில் சுறசுறப்புடன் கறுப்பு நிறம், வாயில் அல்லது முகத்தில் மிகச் சிவந்தநிறம் வந்தால் ஆயுஸ் அரிதே. ரோகியானவன் சைத்தியத்தினுல் பீடிக்கப்பட்டு, பசையுடன் கூடிய வேர்வை நெற்றியில் பனித்துளிகள் போல் ஏற்பட்டு, ஜலம் தொண்டையிலிருந்து கொண்டு உள்ளே வயிற்றுக்குச் செல்லாமல் அவஸ்தையேற்படின் அவன் யமன் வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கிருன் என்று அறியவும். மேலும்— இயற்கையில் தாபமில்லாத ராத்ரி காலத்தில் உடலில் எரிச்சல், இயற்கை உஷ்ணமுள்ள பகல் வேளையில் உடலில் குளிர் ஏற்படினும், கண்டத்தில் கபம் கட்டிக்கொண்டு, வாய் உலர்ந்து, சுவை யிழந்து, கண்கள் சிவந்து, நாவு கறுத்து, நாடி நடையும் மெதுவாயும் வேகமாயும் மாறி நடந்தால் இப்பேற்பட்ட ஸமயத்தில் மருந்து 'ராம ராம' என்ற பகவந்நாமோச்சாரணம் தவிர வேறில்லை.

ஸாத்ய லக்ஷணம்.

सौम्या दृष्टिर्वदति विमलं हस्तपादौ सदोष्णौ
स्वल्पो दाहः सुरसवदनं कोमला यस्य जिह्वा ।
नासाश्वासो वहति सरलः स्वेदहीनो ज्वरोऽसौ
साध्यो रोगी भवति नियतं वैद्यभैषज्ययोग्यः ॥ १४४ ॥

விகாரமற்ற பார்வை, தெளிவான பேச்சு, கை கால்களில் எப்பொழுதும் உஷ்ணம், எரிச்சல் குறைவு, மிருதுவான சுவையறியும் நாக்கு, உலர்ந்து போகாத வாய், எளிதாய் மூக்கின் வழியாக நடக்கும் மூச்சுக் காற்று, விசேஷ வியர்வையில்லாமை— இந்த

லக்ஷணங்களெல்லாம் கூடியிருக்கும் நோயாளி சௌக்யமடைவான். வைத்தியன் தைர்யமாய் மருந்து கொடுக்கலாம்.

ஆயுளைப் பற்றிய விவரம் முற்றிற்று.

பூமியின் பேதத்தால் வாதாதி தோஷங்களை உபதேசிக்கிறார்.

॥ अथ देशाः ॥

देशोऽल्पवारिद्रुनगो जांगलः स्वल्परोगदः ।
अनूपो विपरीतोऽस्मात् समः साधारणः स्मृतः ॥ १४५ ॥
जांगलं वातभूयिष्ठमनूपं तु कफोल्बणम् ।
साधारणं सममलं त्रिधा भूदेशमादिशेत् ॥ १४६ ॥
देशः प्रचुरपानीयो बहुवृक्षसमाकुलः ।

मतान्तरे—

बहुवातकफव्याधिरनूप इति कथ्यते ॥ १४७ ॥
स्वल्पोदकः स्वल्पवृक्षो बहुपित्तासृगामयः ।
कथ्यते जांगलो देशस्ताभ्यां साधारणः परः ॥ १४८ ॥

தேசங்கள்— ஜலம், விருக்ஷம், பர்வதம் இவைகள் குறைவாயுள்ள பிரதேசம் ஜாங்கல தேசமெனப்படும். இங்கு வியாதிகள் மிகக் குறைவாகவே யிருக்கும். ஜலம் முதலிய நிறைந்துள்ள பிரதேசம் அநூப தேசமெனப்படும். இங்கு நோய்களதிகமேற்படும். ஜாங்கல பூமியில் வாதவிகாரங்களும், அநூபதேசத்தில் கபவிகாரங்களும் மிகுந்திருக்கும். இரண்டும் கலந்த பிரதேசங்கள் ஸம தேசமெனப்படும். இங்கு தோஷங்களும் ஸமநிலையிலிருக்கும்,

வேறொரு பக்ஷத்தில்—

வாரியும், தருக்களும் மிக மிகுந்துள்ள பிரதேசம் 'அநூப' மெனப்படும். வாத கப நோய்கள் அநூப நாட்டில் மிகுதியாய்க் காணும். வாரி தருக்கள் குறைந்துள்ள நாடு ஜாங்கலமெனப்படும். ஜாங்கல நாட்டில், பித்தம்— ரக்தத்தின் நோய்கள் வெகுவாய் காணும். நீர்- மரங்கள் ஸமமாயிருந்தால் ஸாதாரண தேசமெனப்படும். ரக்தம், த்ரிதோஷங்கள் ஸமநிலையிலிருக்கும்.

குறிப்பு :— தேசபரீக்ஷை ரோக தோஷ நிர்ணயத்திலும், சிகித்ஸையிலும் மிகவும் உபகாரம் செய்யவல்லது. அநூபதேசத்தில்

"மஹா பிரதாப லங்கேச்வர ரஸம்"

[G. ஸ்ரீநிவாஸய்யங்கார், தஞ்ஜாவூர்.]

கடந்த ஸஞ்சிகையில் எழுதிய "அருணகேசாமிருதத் தைலத்தை"த் தயாரிப்பதில் ஆயுர்வேத வித்வான்களுக்கு யாதொரு சிரமமு மில்லை. உபயோகிப்பதிலும் கஷ்டமில்லை. ஆனால் ஸரஸ்வதி மஹாலிலுள்ள சில ரஸ ஔஷதங்களைத் தயாரிப்பதில் சிரமம் இருக்கிறது. உபயோகிப்பதற்கும் பயமாகவிருக்கிறது.

அப்படிப்பட்ட மருந்துகளில் "மஹாபிரதாப லங்கேச்வர ரஸம்" ஒன்று. இதை ஏன் பிரசுரிக்கவேண்டும் என்று கேட்கலாம்? வைத்திய சந்திரிகையைப் படிக்கும், ஆயுர்வேத ஸாகர பாரங்கதர்கள் இப்படிப்பட்ட ரஸ மருந்துகளில் தங்களது அனுபவத்தையும் அபிப்பிராயத்தையும் எழுதவேண்டுமென்பதற்காகவே எழுதுகிறேன்.

சில மருந்துகள் கடுமையாகத் தோன்றினாலும் எழுதியிருக்கும் ஏட்டுப் பிரதியில் அதை உபயோகித்ததாகவும் நல்ல குணம் ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, விஷவைத்தியத்தைப்பற்றி எழுதியிருக்கும் ஒரு சுவடியில் பாம்புகடிக்கு ஒரு எண்ணெய் முறை எழுதப்பட்டிருக்கிறது. அது ஒரு உயர்ந்த ஔஷதமாகவும், அதன் குணத்தைப்பற்றி சந்தேகம் உண்டானால் ஒரு பாம்பைக் கொண்டு ஒரு கோழியைக் கடிக்கும்படி செய்து மயக்கம் உண்டானதும் ஷை எண்ணெயை கோழியின் வாயில் தடவினால், சிறிது நேரங்கழித்து கோழிக்குப் பிரக்ஞை உண்டாகிப் பிழைக்குமென்று எழுதப்பட்டிருக்கிறது. (இந்த எண்ணெயை நான் தயாரித்ததில்லை).

"மஹாபிரதாப லங்கேச்வர ரஸத்தை" அப்படியாகக் கையாண்டு அதன் குணத்தைப் பரீக்ஷை செய்து எழுதியதாகத் தெரியவில்லை. இந்த மருந்து கிரந்த ரூபமான ச்லோகத்தில் இருக்கிறது. இதில் சில பதார்த்தங்களின் தமிழ்பெயர், கொடுக்கப்பட்ட அளவுகளின் திட்டம் சரியானபடி தெரியவில்லை. அந்த இடங்களில் ஸம்ஸ்கிருத

பதத்தையே உபயோகித்திருக்கிறேன். ஆயுர்வேத பண்டி தர்கள் இதைத் தயாரித்து நோயாளிக்குக் கொடுத்துப் பரீக்ஷை செய்யவேண்டாம். அவர்கள் இப்படிப்பட்ட சர்ப்ப விஷம் சேர்ந்த மருந்துகள் தயாரித்துக் கொடுத்து அனுபவம் உண்டா என்பது தெரியவேண்டும். அல்லது இந்த மருந்தைத் தயாரித்து கோழி முதலிய ஜீவன்களுக் குக் கொடுத்து அதில் உண்டாகும் குணத்தைத் தெரிந்து கொண்டு பிறகு மானிடர்களுக்கு உபயோகிக்கலாமா?

இந்த 'மஹா பிரதாப லங்கேச்வர ரஸம்' ஸந்நிபாத ஜ்வரத்தில் பிரக்ஞை இழந்து அஸாத்திய மென்று கருதப் படும் நிலைமையில் உபயோகிக்கும்படியாகச் சொல்லப்பட் டிருக்கிறது.

ரஸம் 1 பலம், கந்தகம் 2 பலம் இவற்றை ஒன்று சேர்த்து கல்வத்தில் போட்டு ஒருநாள் அரைக்கவும். லிங் கம், மஹிஷாக்ஷிகுக்குலு, ஹ்ருத்பர்ணீ வகைக்கு 1 பலம், திரிகடு 3 கத்யாணம், கடுக்காய் 6 கத்யாணம், வசம்பு, கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், அமுக்குரு, கொடுவேலி, பச்சிலை, சிறுநாகப்பூ வகைக்கு 1 கர்ஷம், நாபி 1 பலம், சிருங்கி (விஷம்) 1 கத்யாணம் இவற்றைச் சூர்ணம் செய்து முன் ரஸ கந்தகங்களுடன் 3 நாள் அரைத்து கரிசலாங் கண்ணி, வல்லாரை, ஜ்வாலா மூலி, முன்னைச்சாறு, திரிகடு, கஷாயம் இவைகளில் 7 நாள் பாவனை செய்யவும். பிறகு ஆடு, மீன், கருநாகம், இவைகளின் பித்தும் நாகப்பாம்பு விஷம் (அளவு கொடுக்கப்படவில்லை) புருப்பித்து, மான் பித்து இவைகளால் அரைத்து ஒரு உருண்டையாக மருந் தை எடுத்து, ஒரு தாம்பிர ஸம்புடம் எடுத்து அதில் நாபிச் சூர்ணம் போட்டு அதன் மேல் மருந்தை வைத்து மேலும் நாபிச்சூர்ணம் சேர்த்து, ஸம்புடத்தை மூடி அதை அடுப் பில் வைத்து (வாலுகா யந்திரத்தில் வைப்பது நலமென்று தோன்றுகிறது) மந்தாக்கினியால் 2 யாமம் எரித்து, ஆறிய பிறகு இறக்கி மருந்தை எடுத்து கல்வத்தில் வைத்து இஞ்சிச் சாற்றுல் அரைத்து அரிசி எடை அளவில் மாத் திரை செய்து நன்றாய்க் காய்ந்த பிறகு பத்திரப்படுத்தி

வைக்கவும். (சீதம், வாதம் இல்லாத இடத்தில் வைக்க வேண்டும்).

ஸந்நிபாத ஜ்வரம் கடுமையாக இருந்து பிரஞ்ஞை இழந்திருக்கும் காலத்தில் இந்த மாத்திரையை இஞ்சிச் சாற்றிலரைத்துக் கொடுக்க வேண்டும். பல்கிட்டி, மருந்து வாய் வழியாகச் செலுத்த முடியாதபடி இருந்தால், ஊசியால் பிரம்மத்வாரம், லிங்கம், நெற்றிப்பொட்டு இந்த இடங்களில் கீறி, மருந்தை இஞ்சிச்சாறு விட்டு அரைத்து அரை நாழிகை தேய்க்கவும். கண் திறக்கும், காது கேட்கும். பல் திறக்க முடியும், பிரஞ்ஞை வரும். மறுபடியும் ஒரு அரிசி எடை மருந்து இஞ்சிச் சாற்றுடன் கொடுக்கவும். பிறகு பயற்றங் கஞ்சி கொடுக்கவும். வமனம் ஆனல் நோயாளி பிழைப்பான். வமனம் ஆகாவிடில் இறப்பான். வமனம் ஆனவுடன் மேலே தண்ணீர் (குளிர்ந்த ஜலம்) ஊற்றவும். ஸ்வபாவமான சீதம் வந்த பிறகு தயிர் அன்னம் சர்க்கரையுடன் உட்கொள்ளச் சொல்லவும். 4 கடிகையில் ஸந்நிபாதம் மறுபடியும் திரும்பும். அப்பொழுது வெற்றிலைச் சாற்றில் 1 மாத்திரை கொடுக்கவும். உபத்ரவம் உண்டானல் வமனம் செய்விக்கவும். தயிருடன் சர்க்ரை சேர்த்தும், பாலும் கொடுக்கவும். பால் கஞ்சி கொடுக்கவும். குளிர்ந்த ஜல ஸ்நானம், சந்தனம் தேஹம் முழுவதும் பூசுதல், தலையில் ஈரத்துணி கட்டி வைத்தல் முதலியவை முக்கியமாகச் செய்யவேண்டியது.

டைபாய்டு ஜ்வரம்

[வைத்ய விசாரத. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.]

(181-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் வருகையிலும் வியாதியின் அவஸ்தையிலும் ஒரே விதமாகக் காணப் படுவதில்லை.

சிலருக்கு வியாதியின் வருகையே— அதிகமான ஜ்வரம், ஸந்திகளில் வலி, வாந்தி இவைகளுடன் ஏற்பட்டு

பிதற்றல் ஏற்பட்டு இரண்டாவது வாரத்தில் ஆபத்து ஏற்படுகின்றது. சிலசமயம், ஸாதாரண தசைக்கும் மாறுகின்றது.

சிலசமயம் கபத்தினுல் சுவாஸாசயம் நிரம்பி ச்வஸனக ஸந்நிபாதஜ்வர (நிமோனியா) மாக ஆரம்பித்து ச்வஸனக ஜ்வரத்தின் வேகம் அடங்கியவுடன் இதன் தோற்றம் புலப்படும்.

விசேஷ லக்ஷணங்கள்.

1. ரக்தக் கசிவு: தோஷபாகமானபிறகு தாது பாகமாரம்பித்தவுடன்– அதாவது இரண்டாவது வாரக்கடைசியில் குடலில் ஏற்படும் புண்களில் குடல் பொத்து அதனுல் ரக்தம் வெளிப்படுவது உண்டு. ரக்தம் அதிகமாக வெளிவருவதில் திடீரென தாபம் குறைதலும், மயக்கம், நாடித்துடிப்பு அதிகமாதல், மண்ணீரல் சுருங்குதல், இவை ஏற்படுகின்றது.

கல்லீரலின் கீழ் இடுப்பிலும் பிறகு மேல் வலதுபக்கத்தினடியில் குத்துவலியும், நடுக்கமும். அவ்விடத்தில் பிருதுவும், அவ்விடத்திய தசைகளை அசைக்க முடியாமையும், அசைத்தால் வலி அதிகமாகுதலும் குடலிலிருந்து ரக்தக் கசிவு ஆரம்பமாவதற்கு அறிகுறிகள். சிலசமயம் திடீரென தாபம் குறைதலும் அதிகமாகுதலும் காணப்படும். சிலசமயம் இம்மாறுதல் ஏற்படாது நாடித்துடிப்பும் சுவாஸமும் எண்ணிக்கையில் அதிகமாகும். இக்காலத்தில் அடிக்கடி நீர் கடுப்புடன் வெளிவரும். முதல் தடவை கசிவு ஏற்பட்டு அதனுலுண்டாகும் களைப்பு நோயாளிக்கு தீரும் பொழுது வியாதியின் கடுமை குறைந்து விட்டதாகத் தோன்றினுலும், சில மணி நேரத்தில் கசிவு ஏற்படுவதும் முன்னைவிட தேகநிலை சீர்கெடுவதும் காணலாம். இந்நிலையில் உடன் சஸ்திர சிகித்ஸை அவசியமாகின்றது.

2. காஸம்: இந்நோயில் சாதாரணமாக க்ஷுத்ர காஸம் (சிறுக்கிருமல்) ஏற்படும். சிற்சிலருக்கு மட்டும் இரண்டாவது வாரக் கடைசியிலும் மூன்ருவது வாரத்தி

லும் கபத்தின் ஸந்நிபாதத்தில் ச்வஸனக ஜ்வரம் ஏற்படுவதுண்டு. அங்நிலைமை, சாதாரணமான க்ஷுத்ர காஸமிருப்பதாலும், கோழைக்கட்டு- கபக்கட்டு துப்புதலில்லாததாலும் ஆரம்பகாலத்தில் கவனிக்கப்படாமல் போகலாம்.

தொண்டை, உதடு இவைகளில் புண் ஏற்படுவதால் கரகரத்த பேச்சும், எச்சில் கூட்டி விழுங்குவதும் அப்பொழுது லேசாக வலி ஏற்படுவதும் சத்தமில்லாது புகைந்து இருமுவதும் ஏற்படும்.

நீர் தாராளமாகப் பிரிவது கஷ்டம். பிதற்றல் அனேகமாக ஏற்படுகின்றது. வியாதியின் கடுமை அதிகமாக ஆக இதுவும் அதிகமாகும். சிறிது மனக்கலக்கமும் பிராந்தியும் காணும். சிலருக்கு காது மந்தமாகும். காதில் சீழ் வருதலுமுண்டு. தூக்கம் அடிக்கடி தடைபடும்.

சிகித்ஸை.

கூடியவரை நோயாளியைத் தனித்து வைப்பதே நல்லது. எல்லா வியாதிக்குமுள்ளது போல் இதிலும், படுக்கை நீர் மலம் புரியுமிடம். நோயாளியின் துணி, போன்றவைகள் மிகவும் சுத்தமாகக் காப்பாற்றப்பட வேண்டும். இவைகளில் சேரும் அழுக்கே மற்றவர்களுக்கு வியாதியைப் பரப்பும்.

கூடப் பழகுபவர்களுக்கு ஆண்டி டைபாய்டு இனுகுலேஷன் செய்வது இக்காலத்து வைத்தியர்களின் ஸம்பிரதாயம். மருந்து- ஆகாரம் முதலியவை கொடுத்த பின்னும், பஸ்தி— மலசுத்தி செய்த பின்னும் கைகால்களை நன்கு கழுவுவதும், பஸ்தியந்திரம்— தர்மாமீடர், ஆகாரம் கொடுக்கும் பாத்திரம் முதலியவைகளை நன்கு சுத்தம் செய்வதும் இன்றியமையாதவை. இது எல்லா வியாதிகளுக்கும் பொதுவானதாயிருந்தாலும் இதுபோன்ற ஒட்டுவாரொட்டி வியாதிகளில் மிகவும் கவனிக்கப்படவேண்டியது.

தோஷபாகம்— ஏற்படும் வரை காத்திருந்து தற்காலத்திலுள்ள சிரமமான உபத்ரவத்திற்கு சமனம் செய்வ

தும் தகுந்த சுச்ரூஷையும் தான் இதற்கு ஆரம்பகாலத்தி லுள்ள வைத்யம். தலைமயிரைக் கோதி பக்கவாட்டில் முடிவது, மலமூத்ரங்கள் விட படுக்கையிலேயே ஏற்பாடு செய்தல், படுக்கையில் மேடு பள்ளமில்லாமல் நல்ல ஓய்வு டன் படுத்திருக்கச் செய்தல், ஒவ்வொரு தடவையும் ஆகா ரத்திற்குப் பின் வாயைக் கொப்பளிக்கச் செய்வது. தினம் 2–3 தடவை உப்புத் தண்ணீர் விட்டு வாயைக் கொப்பளிக் கச் செய்வது, ஒரு நாளில் 2-3 தடவை படுக்கையின் நிலையைச் சற்று மாற்றுதல், (தலைப் பக்கத்தைச் சற்றுத் தூக்கி வைப்பதும், இடுப்பிற்கு மேற்பாகத்தை சற்று தூக்கி வைப்பதும், ஸமமாக படுக்க வைத்தலும்—) தின மும் மெல்லிய துணியை வென்னீரில் நனைத்துப் பிழிந்து சூடாக இருக்கும் நிலையிலேயே உடம்பை மெதுவாகத் துடைத்து விடுதல், ஜ்வரம் அதிகமாக இருக்கும்பொழுது அதிகமான தாபத்தைக் குறைக்க தலையில் பனிக்கட்டி வைத்தல் இதுபோன்ற சுச்ரூஷைகள் தகுந்தவர்களைக் கொண்டு செய்விக்கப்பட வேண்டும்.

செய்து பாருங்கள்

(182-ம் பக்கத் தொடர்ச்சி)

8. ஹிங்கு கற்பூர வடீ.

மார்பில் கபக்கட்டிற்கும் ஜன்னியிலும் சிறந்த ஔஷதம்.

நெய்யில் லேசாக வறுத்த உயர்ந்த பெருங்காயம் 7 தோலா, பச்சைக்கற்பூரம் 8 தோலா, கஸ்தூரி 1 தோலா இவைகளைச் சேர்த்து அரைக்க மெழுகு போன்ருகும். இதை 1-2 யவ அளவிற்கு மாத்திரை உருட்டிக் கொள்ள வும். அரைக்க சிரமமிருந்தால் சிறிது தேன் சேர்த்து அரைக்கவும்.

அளவு 1 மாத்திரை— தேன் அல்லது இஞ்சிச் சாறு டன் கொடுக்கவும்.

ஜ்வரம் அல்லது மற்ற வியாதிகளில், ஸந்நிபாத (ஜன்னி) லக்ஷணம் தோன்றியவுடனேயே ஹிங்கு கற்பூர வடி கொடுக்கலாம். நாடியின் வேகம் தளர்ந்து, கைகால் உதருதல், துணியை விட்டெறிதல், உட்காருதல் எழுந்து ஓடுதல், பிதற்றல், முதலிய ஸந்நிபாதாவஸ்தைகளை உடனே குறைக்கின்றது. ச்வஸனகஜ்வரத்தில் (நியுமோனியா) மார்பில் இருக்கும் கபக்கட்டை இளக்கி வெளிக் கொண்டு வருவதில் நிகரற்றது. கபத்தின் துர்கந்தத்தை அகற்றி அதிலுள்ள கிருமிகளையும் கொல்லுகின்றது. சுவாஸ (ஆஸ்த்மா) ரோகத்தில் கபத்தின் உபத்ரவத்தைக் குறைக்கின்றது.*

9. க்ஷார ராஜம்.

பனம் பூவின் சாம்பல் 10 தோலா, யவக்ஷாரம் 10 தோலா, கந்தக வெடி உப்பு 5 தோலா, சத்திச்சாரம் 10 தோலா, சோழி பஸ்மம் 5 தோலா இவைகளை சூர்ணம் செய்து கொள்ளவும்.

வயிற்று வலி, வயிற்று உப்புசம், பொருமல், அஜீர்ணம் இவைகளில் நல்லது.

அளவு $\frac{1}{16}$—$\frac{1}{8}$ தோலா, எலுமிச்சம்பழ ஷர்பத்துடன் சாப்பிடவும்.

குறிப்பு:— இதில் காணப்படும் யவக்ஷாரம் என்பதற்கு, நமது நாட்டில் கிடைக்கும் யவச்சாரத்திற்கு பதிலாக— யவை தானியத்தின் தாள்களிலிருந்தும் தயாராகும் அஸல் யவக்ஷாரம் உபயோகிப்பது உத்தமம். இது சூர்ஜி வல்லபதாஸ், ஸ்வதேசி பஜார் வீட், பம்பாய் என்ற விலாஸத்தில் கிடைக்கின்றது.

---

*இம்மருந்தில் உபயோகப் படுத்தப்படும் பெருங்காயம் கஸ்தூரி இவைகளைப் பொருத்திருக்கிறது இம்மருந்தின் குணாதிசயங்கள் எல்லாம். அதனால் இதில் உபயோகப் படுத்தப்படும் பெருங்காயம் நவ சாலபெருங்காயம் என வடதேசத்தில் பிரஸித்தி பெற்ற பெருங்காயத்தையே உபயோகிப்பது நலம். இப்பெருங்காயம்— சூர்ஜிவல்லபதாஸ், ஸ்வதேசி பஜார் வீட், கால்பாதேவி ரோடு, பம்பாய் என்ற விடத்தில் நல்லதாகக் கிடைக்கின்றது. நமது தேசத்தில் கிடைக்கும் பால் பெருங்காயம்— மற்ற பெருங்காயங்களில் கலப்பு அதிகமாக இருப்பதாலும், பெருங்காயத்தின் ஸ்வபாவமான காரப்பு குறைவாக இருத்தலாலும் அதைச் சேர்த்தால் பூர்ண குணமளிக்காது.

10. காமதுகா சூர்ணம்.

சுத்தமான பூங்காவியை நன்ருகப் பொடி செய்து கொண்டு நெல்லிக்காய் சாற்ருல் 7 தடவை பாவனே செய்யவும். ஒவ்வொரு பாவனே முடிந்தவுடனும் காயவைக்கவும். பிறகுதான் மறுபடியும் சாறுவிட்டு பாவனே செய்ய வேண்டும்.

6 யவ அளவிலிருந்து $\frac{1}{8}$ தோலா வரை கழுநீர், அருகம்பில் ஸ்வரஸம், இவைகளுடன் கொடுக்கவும்.

பிரதரம், ரக்தபேதி முதலியவைகளில் ரக்தத்தை நிறுத்துகின்றது.

11. குமார்யாதி த்ரவம்.

கற்ருழைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வெற்றிலேச் சாறு, இஞ்சிச் சாறு, துளஸிச்சாறு இவை வகைக்கு 10 அவுன்ஸ், இவைகளே ஒன்ருகக் கலந்து கொண்டு அதில் இந்துப்பு, வெடியுப்பு, கந்தக வெடியுப்பு, சோற்றுப்பு, வளேயலுப்பு, சுத்த பெருங்காயம், இவை வகைக்கு $2\frac{1}{2}$ தோலா, வாய்விடங்கம், திப்பிலி, சுக்கு வகைக்கு $1\frac{1}{2}$ தோலா சூர்ணம் செய்து போட்டு, ஒரு கிளாஸ் ஜாடியில் போட்டு மூடி, வெயிலில் 41 நாள் வைத்து மூடி, தினமும் குலுக்கிக் கொண்டே இருக்கவும். பிறகு அதை வடிகட்டி உபயோகிக்கவும்.

நல்ல ஜீர்ணகாரி, ஈரல் குலேக் கட்டி உள்ள குழந்தைகளுக்கு நல்ல டானிக். $\frac{1}{8}$—$\frac{1}{4}$ அவுன்ஸ் ஜலத்துடன் கலந்து கொடுக்கவும்.

12. கற்பூர சிலாதி மிச்ரணம்.

கற்பூர சிலாசத்து பஸ்மம் 8 தோலா, ரஸாதிவடீ 2 தோலா, ஜஹரமோஹரா பிஷ்டீ 2 தோலா— இவைகளே நன்கரைத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு 8–16 யவம். அனுபானம்— குளிர்ந்த ஜலம். பொரிக்கஞ்சி தெளிவு, அல்லது ஏதாவது ஜ்வர கஷாயம். ஒரு நாளில் 4–5 தடவை.

எல்லா ஜ்வரங்களிலும் ஜ்வரத்தின் தாபம், வேகம், எரிச்சல், தாகம், வாந்தி, தலைவலி—ஆகிய ஜ்வரக் குறிகளைக் குறைக்கவும். விஷமஜ்வரங்களில் ஜ்வரமதிகமாக அடிக்கும் பொழுது வேகத்தைக் குறைக்கவும், கொடுக்கப்படுகின்றது. உஷ்ணத்தில் மலம் கொதித்து அஜீர்ணமாக வெளிப்போகுமிடத்தும் நீர்த்தாரை கடுத்து நீர் வெளிவருமிடத்தும் பித்தத்தால் ஹிருதயத்தில் படபடப்பு, மயக்கம், வாந்தி ஏற்படுமிடத்தும் மிகவும் குணம் தருகின்றது. பிரவாஹிகையில் (வயிற்றுக் கடுப்பில்) வயிற்றுப் புண்ணை ஆற்றிக் கடுப்பைக் குறைக்கின்றது.

13. கற்பூர சிலா பஸ்மம்.

அரை வீசை கற்பூர சிலாசத்தை சிறிய துகள்களாக உடைத்து அரிசி கழுவிய ஜலத்தில் மூன்று நாள் ஊற வைத்து, அலம்பி வென்னீரில் போட்டு ஒரு மணி நேரம் கொதிக்கவைத்து காயவைத்து ஒரு சிறிய மட்குடுவையில் போட்டு நடுநடுவே கற்றாழையை தோல் நீக்கி சிறு துண்டங்களாக்கிப் போட்டுப் பிசிறி, வாய்மூடி சீலைமண்ணிட்டு ஒரு கஜபுடம் போடவும். தானாக ஆறியவுடன் எடுத்து வேப்பிலை கஷாயத்தில் ஒரு நாள் அரைத்து வில்லை தட்டி ஒரு கஜபுடம் போடவும். சுத்தமான பஸ்மமாகின்றது.

14. ஜஹர மோஹரா பிஷ்டி.

ஜஹரமோஹரா கதாய் என்ற யூனானிச் சரக்கு (கல் வகையை சேர்ந்தது) வெளுப்பானது. சிறிது மஞ்சளும் பச்சையும் கலந்தது. நல்ல ஹிருதய பலகாரியும், மூளைக்கு பலமளிப்பதும், வாந்தியைக் குறைப்பதும் விஷத்தை அகற்றுவதும் இதன் முக்ய குணங்கள்.

இதை ஜலத்தினால் அலம்பிக் காயவைத்து இடித்துத் தூள் செய்து துணியில் தேய்த்து வடிகட்டிக் கொள்ளவும். பிறகு கல்வத்திலிட்டு சந்தனுத்யர்க்கம்— அல்லது பன்னீர் விட்டரைத்து மைபோலானவுடன் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

15. ரஸாதி வடீ.

யோகரத்னுகரத்தில் உள்ளது.

சுத்த ரஸம், கந்தகம், பச்சைக்கற்பூரம், வெண் சந்தனம், ஜடாமாம்ஸி, வெட்டிவேர், விலாமுச்சம் வேர், கோரைக்கிழங்கு, ஏலரிசி, கடற் தேங்காய் கொப்பரை, இவை ஸமனிடை எடுத்து ஜலம் விட்டரைத்து 4 யவமள வுள்ள மாத்திரை செய்து கொள்ளவும். நிழலில் காய வைத்து சூர்ணமாகவும் உபயோகப்படுத்தலாம்.

16. சந்தனுத்யர்க்கம்.

நல்ல சந்தனத்தூள், ரோஜாப்பூ இதழ், தாழம்பூ மடல், அதன் கேஸரம், தாமரைப்பூ, பன்னீர்ப்பூ இவை கள் வகைக்கு 6 தோலா வீதம் எடுத்து 2 படி ஜலம் விட்டு அர்க்க யந்திரத்திலிட்டு அர்க்கம் எடுக்கவும். சுமார் 1 படி தேறியவுடன் அர்க்கமெடுப்பதை நிறுத்திவிடவும்.

இவ்வர்க்கம், முத்து, பவழம், சிப்பி போன்றவைகளை பிஷ்டி செய்வதற்கும், பித்தத்தினுல் உண்டாகும் வியாதி களில் ரஸ ஔஷதங்களுக்கு அனுபானமாகக் கொடுப்ப தற்கும் மிகவும் சிறந்ததாக கையாளப் படுகின்றது. பன் னீர் போன்ற ஸுகந்த முடையது. அளவு $\frac{1}{4}$—$\frac{1}{2}$ அவுன்ஸ்.

17. மற்ருெரு சந்தனுத்யர்க்கம்.

வெண் சந்தனத் தூள், செஞ்சந்தனத் தூள், சீந்திற் கொடி, பர்படகம், மல்லி, வேப்பம் பட்டை, பத்மகாஷ் டம், விலாமுச்சம் வேர், காட்டு நிலவேம்பு, பேரேலம் வகைக்கு 1 தோலா. ஜலம் முக்கால் படி விட்டு 12 மணி நேரம் ஊறவைத்து முன்போல் அர்க்கம் எடுக்கவும்.

அளவு 1—2 அவுன்ஸ். பித்தத்தினுல் ஏற்படும் எரிச் சல், தலை சுற்றல், அதிகமான நாவரட்சி இவைகளில் மிகச் சிறந்தது.

18. க்ரகணீ யோகம்.

சுத்த லிங்கம் 20 தோலா, சேங்கொட்டை 60 தோலா, விளக்கெண்ணை 60 தோலா, பசு நெய் 60 தோலா, தேன் 30 தோலா.

20 தோலா லிங்கத்தை சுமார் 20–25 துண்டுகளாக்கிக் கொள்ளவும். சேங்கொட்டையை இரண்டாகப் பிளந்து கொள்ளவும். எல்லாவற்றையும் இரும்புச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரிக்கவும். சுமார் 3-ல் ஒரு பாகம் எரிந்தும் இரும்பு சட்டியிலுள்ள திரவ்யம் தானுகவே பற்றிக்கொள்ளாவிட்டால் மெள்ள ஒரு குச்சியில் நெருப்பை பற்றவைத்து அதில் காட்ட பற்றி எரியும். உடனே அடுப்பு தணலைக் குறைத்து விடவும். தானுக ஆறியவுடன் லிங்கத்துண்டுகளை எடுத்துப் பொடி செய்து அதில் ஜாதிபத்ரி, ஜாதிக்காய், கிராம்பு இவைகளின் சூர்ணம் வகைக்கு 20 தோலா சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளவும்.

கவனிக்கவும்— சேங்கொட்டை சேர்ந்திருப்பதால் அடுப்பில் வைத்து எரிக்கும் பொழுது ஏற்படும் புகை பலருக்கு ஒத்துக்கொள்ளாது. அதனுல் முகம் கைகால்களில் வீக்கம் ஏற்படும், நீர் கசியும். அதனுல் அப்புகை ஏற்படாதவாறு தூர நின்றே மருந்து தயார் செய்யவேண்டும். அவ்விதம் வீக்கம் தினவு ஏற்பட்டால் உப்பில்லாமல் ஆகாரம் சாப்பிடுவதும், திரிபலா கஷாயம், இளநீர், தேங்காய்ப் பால், இவைகளைச் சாப்பிடுவதும் கோழிமுட்டை அடித்து சாப்பிடுவதும், வேப்பிலை கரைத்து பூசுவதும் தகுந்த பரிகாரமாகும்.

அளவு— 2–4 யவங்கள். கிரஹணி கழிச்சலில் மிகுந்த உதவியளிக்கின்றது.

அனுபானம்— தயிரைத் துணியில் கட்டி ஜலமகற்றிக் கெட்டியானவுடன் அத்தயிரில் குழைத்துச் சாப்பிடவும். முன் கூறியபடி தயார் செய்த தயிர்தான் ஆகாரம். தனியாக ஜலம் சாப்பிடக் கூடாது. அதிகமாக தாகம் துன்புறுத்தினுல் நல்ல மாதுளம் பழத்தின் முத்துகளை வாயிலடக்கிக் கொள்ளவும்.

(தொடரும்.)

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

அறிக்கை.

இதுகாறும் நம் வைத்திய சந்திரிகையையும், தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தையும் ஆதரித்து வந்த சந்திரிகை அங்கத்தினர்களுக்கு மண்டலம் நன்றியைத் தெரிவிக்கிறது. V. P. P. மூலமாகவும், மணியார்டர் மூலமாகவும் வந்த சந்தா துகை 1949-ஆடு டிஸம்பர்-மீ 31உயுடன் முடிவடைகிறது. இத்துடன் அனுப்பியுள்ள விண்ணப்ப நமூனுவை பூர்த்தி செய்து சந்தா துகை ரூபாய் ஐந்துடன் 1950-ஆடு ஜனவரி-மீ த்திற்குள் புதிய வருஷச் சந்தாவை அனுப்புமாறு கோரப்படுகிறது. விண்ணப்ப பாரத்தை பூர்த்தி செய்து அனுப்பாதவர்கள், மெம்பர்களாகக் கருதப்படமாட்டார்கள். அவர்களுக்கு ஓட்டுரிமையும் கிடையாது. ஆகையால் விண்ணப்ப பாரத்தை பூர்த்தி செய்து, பொதுக் கார்யதர்சி— தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், பாரத்வாஜ ஆச்ரமம், ஆண்டார் வீதி, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி என்ற விலாஸத்துக்கு அனுப்பி, சந்தா துகை ரூ. 5/-ம், ஷை விலாஸத்திற்கே மணியார்டர் செய்து மண்டலத்தின் அங்கத்தினராகி மண்டலம் வலிவுறும்படி ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மண்டல அங்கத்தினர் அனைவர்க்கும் வைத்திய சந்த்ரிகை என்ற பத்திரிகை ப்ரத்தியேகமான சந்தா இல்லாமலேயே அனுப்பப் பெறும்.

இப்படிக்கு,
V. R. ஸுப்ரமண்ய அய்யர்,
பொதுக் கார்யதர்சி.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

அங்கத்தினர் விண்ணப்பம்.

பொதுக் காரியதரிசி,
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

ஐயா!

என்னை, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன். மேற்படி மஹாமண்டலத்தின் விதி நியமங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன். இத்துடன் எனது வருஷத்திய அங்கத்தினர் கட்டணமாக ரூபாய் ஐந்து அனுப்பியிருக்கிறேன்.* [எனது வருஷத்திய அங்கத்தினர் கட்டணத்தை வைத்ய சந்திரிகையை வி. பி. பி. மூலமனுப்பிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.]*

தங்கள் உண்மையுள்ள

கையெழுத்து.

பெயர் ______________________________

யோக்யதாம்சம் ______________________________

விலாஸம் ______________________________

____

---

* ஸம்பந்தமில்லாததை அடித்துவிடவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

ஸ்தாயி ஸமிதிக் கூட்டம்.

1949-ஹு அக்டோபர்-மீ 30௳ ஷி மண்டலத்தின் ஸ்தாயி ஸமிதிக் கூட்டம். மண்டலத்தலைவர். ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில், திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. தஞ்சை, சேலம் ஜில்லாக்களிலிருந்து கமிட்டி மெம்பர்கள் வந்திருந்தார்கள். சென்னையில் நடக்கும் 16-வது மஹாஸம்மேளனத்திற்கு மண்டல அங்கத்தினர்களிடமிருந்து வந்த தலைவர் தேர்தல் அபிப்பிராயக் கடிதங்கள் பிரகாரம் 59 பெயர்கள் தலைவர் பதவிக்குக் குறிக்கப்பட்டிருக்கின்றனர், இவர்களில் கீழ்க்கண்ட பிரகாரம் அதிகம் வோட்டுகள் பெற்ற ஐந்து பெயர்களாவன.

1	ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள், தென்னூர், திருச்சி.	68	வோட்டுகள்
2	,, V. சுப்ரமண்ய அய்யர் அவர்கள். M. C A. ஸ்ரீரங்கம்.	49	,,
3	,, வைத்யரத்ன M. துரைஸாமி அய்யங்கார் அவர்கள், சென்னை.	37	,,
4	,, Dr. A. லக்ஷ்மீபதி அவர்கள், B. A. M. B. C. M. சென்னை.	35	,,
5	,, P. S. ராமசர்மா அவர்கள், கரூர்.	35	,,

மேற்கண்ட ஐந்து பெயர்களை சென்னை வரவேற்புச் சங்கத்தினருக்கு சிபாரிசு செய்து இந்த ஐவருக்குள் யாராவது ஒருவரை 16-வது ஸம்மேளனத்துக்குத் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மண்டலத்தின் நியமாவளியை அச்சடித்து பிரசுரம் செய்ய மண்டலத் தலைவர் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள். பொதுக் காரியதர்சி, ஸ்ரீ V. R. ஸுப்ரமண்ய அய்யர் இவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

பாரத்வாஜ ஆச்ரமம்,
ஆண்டார் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சி.
1—11—49

V. R. ஸுப்ரமண்ய அய்யர்,
பொதுக் கார்யதர்சி.

உ

ஸ்ரீ தந்வந்தரயே நம:

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் உற்பத்தியும் அதன் நோக்கங்களும்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றி தமது ஆக்ஷியைத் துவக்கி சிறிது காலம் சென்றபிறகு எல்லா வைத்யங்களுக்கும் தாயாய் விளங்கி வந்த நமது புராதன ஆயுர்வேத வைத்யமானது ராஜாங்க ஆதரவு இன்றியும் பொதுஜன ஆதரவு குன்றியும் க்ஷீணித்து வந்ததை சில வித்வான்கள் உணர்ந்தனர். ஆயுர்வேத முன்னேற்றத்தைக் கருதி 1907-ம் வருஷத்தில் பஞ்சவடியில் (நாஸிக்) பல வித்வான்கள் கூடி ஒரு மஹாமண்டலம் ஒன்று ஏற்படுத்தி வருஷந்தோறும் ஸம்மேளனம் நடத்தி வைத்ய ஸித்தாந்தம், சர்ச்சை முதலியன செய்து பல மாகாணங்களில் பல சாகைகளேயும் ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். அவ்வாறு அகில இந்தியாவிற்காக பாடுபடும் ஸபையின் பெயர். "நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலம்" என்றும், ஆயுர்வேத வித்யையை மாணுக்கர்களுக்கு போதிக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கும் ஸபைக்கு "நிகில பாரத ஆயுர்வேத வித்யா பீடம்" என்றும் பெயருடன் ஆரம்பித்தார்கள். அதே நோக்கத்துடன் இந்தியாவின் இதர பாகங்களிலும் ப்ராதாந்ய பாஷைகளில் ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 1916-வது வருஷம் பூனுவில் நடந்த நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 8-வது ஸம்மேளனத்திற்கு கொச்சி ஸமஸ்தான மஹாராஜா ஸ்ரீ ராமவர்மா அவர்கள் தலைமை வஹித்த பொழுது நடந்த தீர்மானத்தின் படி திராவிட தேசத்திற்கென ஏற்பட்ட ஸபையே "த்ராவிட ஆயுர்வேத மஹாமண்டலம்" என்று பெயர் வைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

திராவிட தேசமாகிய தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு இந் நான்கில் ஒன்றான தமிழ் தேசத்தில் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் என்று தனிப்பட்ட முறையில் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் மற்ற பாஷா வாரியான தேசங்களில் தனித்தனியே மண்டலங்கள் ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தப்படும் ஸம்மேளனத்திற்கு தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம் எனப் பெயர். இம்மண்டலத்தின் நோக்கம்: தென் இந்தியாவிலுள்ள பற்பல ஆயுர்வேத சங்கங்களை இத்துடன் ஒன்று சேர்த்து வைத்யர்களிடமுள்ள ப்ரத்யக்ஷ அனுபவங்களை சேகரித்து வைத்யர்களை சாஸ்திரீயமாய் வைத்யம் செய்வித்தல் முதலியன.

திருச்சி ஆயுர்வேத ஸபை

இதன் வார்ஷிகோத்ஸவம் *12—11—49*-சனிக்கிழமை யன்று கரூரில் முனிஸிபல் எலிமெண்டரி ஸ்கூலில் காலை 8-30 மணிக்கு கோட்டக்கல் ஆரிய வைத்யசாலைத் தலைவர் **ஸ்ரீ P. M. மாதவ வாரியர்** அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றது. ஸ்ரீ பண்டித S. நாராயணய்யங்கார், மதுரை, ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரிகள், திருச்சி, ஸ்ரீ G ஸுப்பைய வைத்தியர், கும்பகோணம்— இவர்கள் அரிய உபன்யாஸங்கள் செய்வார்கள்.

தங்களது வரவு வேண்டப்படுகின்றது.

வரவேற்பாளர்: பண்டித- P. S. ராமசர்மா.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ. காரியதர்சீ.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம் நடந்த விபரம்.

ஸம்மேளனம்	நடந்த வருஷம்	இடம்	தலைவர்	கார்யதர்சி
1	1918	சென்னை	ஜஸ்டிஸ். ஸ்ரீ சேஷகிரி அய்யர்	ஸ்ரீ கோபாலாசார்யுலு
2	1919	திருவனந்திரபுரம்	ஸ்ரீ கோபாலாசார்யுலு	,, K. A. வெங்கடாசல சாஸ்திரிகள்
3	1921	காஞ்சீபுரம்	,, K. G. நடேச சாஸ்திரிகள்	,,
4	1922	கணியூர் (கோவை)	,, வெங்கடாசல சாஸ்திரிகள்	,, G. ஸுப்ரமண்ய சர்மா
5	1923	திருச்சி	,, S. நாராயண அய்யங்கார்	,, D. நாராயண அய்யர்
6	1934	திருச்சி	,, M. துரைஸ்வாமி அய்யங்கார்	,, V. ஸுப்ரமண்ய அய்யர்
7	1935	ஸ்ரீரங்கம்	,, பரத சாஸ்திரிகள்	,,
8	1936	கூத்தாநல்லூர் (தஞ்சை)	,, N. மாதவமேனன்	,,
9	1939	மதுரை	,, A. லக்ஷ்மீபதி	,, V. B. நடராஜ சாஸ்திரி
10	1940	சென்னை	,, M. V. சாஸ்திரிகள்	,,
11	1941	திருச்சி	,, S. நாராயண அய்யங்கார்	,, V. ஸுப்ரமண்ய அய்யர்
12	1945	கரூர்	,, G. ஸ்ரீனிவாஸ மூர்த்தி	,, P. S. ராமசர்மா
13	1946	மதுரை	,, V. B. நடராஜ சாஸ்திரி	,,
14	1947	சிதம்பரம்	,, M. துரைஸ்வாமி அய்யங்கார்	,, T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி
15	1948	கும்பகோணம்	,, V. B. நடராஜ சாஸ்திரி	,, V. R. சுப்ரமண்ய அய்யர்

உ

ஸ்ரீ மணேசாய நம: ।

பதினைந்தாவது
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்,
கும்பகோணம்.

1948, அக்டோபர், 3, ஞாயிறு.

தலைவர்: திருச்சிராப்பள்ளி நிவாஸி

ஸ்ரீ. வா. பா. நடராஜ சாஸ்த்ரீ

ஆயுர்வேதாசார்ய, வைத்திய விசாரத, வைத்யவாசஸ்பதி

அவர்களுடைய

அக்கிராஸனப் பிரஸங்கம்.

शङ्करं शंकराचार्यं आत्रेयादिमहामुनीन् ।
आयुर्वेदगुरून् वन्दे सभ्यांश्चात्र भिषक्तमान् ॥

மெய்யன்பர்களே! வைத்திய ஸஹோதரர்களே!!

இது போன்ற ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தில் அக்கிராஸனப் பதவி வகிக்க ஏதாவதொரு யோக்கியதாம்சம் பெற்றிருக்கவேண்டும். ஒன்று— ஆயுர்வேத சாஸ்திரத்தில் விசேஷ நிபுணத்துவம் பெற்று, ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு, சாஸ்திர தத்துவங்களை விளக்கும் வழியில் ஸேவை புரிந்திருக்கவேண்டும். மற்றது— லௌகிக ரீதியாக அதிகாரிகளிட-மும் பொது ஜனங்களிடமும் ஆயுர்வேதப் பிரசார வேலை திறமாய் செய்திருந்திருக்க வேண்டும். நான் ஆயுர்வேத உலகிற்கு ஒரு விதத்திலும் விசேஷ ஸேவை புரியாதிருந்தும், தாங்கள் திரும்பவும் ஒரு வருஷகால இடைக்குப் பிறகு, ஆயுர்வேத மஹாமண்டலத்தினுடைய பூஜ்யமான அக்கிராஸனப் பதவி கௌரவத்தை எனக்கு அளித்ததிற்குக் காரணம் தாங்கள் என் மீது கொண்டுள்ள அவ்யாஜ கருணையே யாகும். தங்களுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும், தாங்கள் எனக்கு அளித்துள்ள கௌரவத்திற்கும் உபசாரங்கட்கும், எனது கிரு

தஜ்ஞதையைத் தங்களுக்குத் தெரிவிக்க நான் விரும்பும் பொழுது, என் சித்தத்தில் ஏற்படும் உணர்ச்சியை உள்ள படி உரைக்க, உண்மையில் எனக்கு வார்த்தைகள் தெரிய வில்லை. ஆதலால் நான் எனது கிருதஜ்ஞதையை மன மார்ந்த நமஸ்காரத்தினாலேயே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நமது நாட்டில் ஆயுர்வேதத்திற்காகச் செய்யவேண்டிய கார்யங்கள் எத்தனை பெரியவை? அக்கி ராஸனத்தில் உட்கார்ந்திருக்கும் எனக்கு சக்தி எவ்வளவு? என்று ஒரு க்ஷணம் கவனித்தால், அந்தரம் மேருவும் கடுகுமாயுள்ளது ஆதலால் பெரியோர்களே! ஏதோ அன்பினால் மண்டலத்தின் தலைமை ஸ்தானத்திற் குத் தாங்கள் என்னை உயர்த்தி வைத்தபோதிலும், ஒருவித சக்தியுமற்ற எனக்கு மண்டலத்தினுடைய லக்ஷ்யங்களைப் பூர்த்தி செய்ய தங்களுடைய அன்பும் ஆதரவும் ஒற்று மைப்புமே அடைக்கலம்.

சோகம்

எந்த உத்தம புருஷனால் இந்த திராவிட ஆயுர்வேத மஹாமண்டலம் ஆதியில் ஸ்தாபிக்கப் பட்டதோ, எவரு டைய அருமை உழைப்பினால் இந்தமண்டலம் அந்நாளில் வளர்க்கப்பட்டதோ, அந்த மஹான் பிரம்ஹஸ்ரீ மைலாப் பூர் K. G. நடேசசாஸ்திரிகள் அவர்களுடைய சென்ற 9—7—47-ல் கைலாஸப் பிராப்தியால் நமது மண்டலத்திற் கும் ஆயுர்வேத உலகிற்கும் ஏற்பட்ட நஷ்டம் மதிப்பிற்கு அடங்கக் கூடியதல்ல. வைத்திய சந்திரிகை 1947 ஆகஸ்டு ஸஞ்சிகையில் பிரம்ஹஸ்ரீ K. G. நடேசசாஸ்திரிகளுடைய மறைவு என்ற தலைப்புடன் வெளியான கட்டுரையில், கடைசி பாகத்தில் கேட்டுக்கொண்டபடிக்கு, ஸ்ரீ நடேச சாஸ்திரிகளவர்களால் இயற்றப்பட்ட கிரந்தங்களை அச் சடித்துப் பிரசுரம் செய்ய நமது மண்டலம் சிரத்தை எடுத் துக்கொள்ள வேண்டியது அவசியக் கடமையாகும்.

மஹாத்மா காந்தியவர்களின் வீரஸ்வர்க்காரோகணத் தால் நமது பாரத வர்ஷத்திற்குப் பொதுவில் எல்லாவிதத்

திலும் பெரும் நஷ்டமென்று எல்லோரும் பொதுவில் தூக்கப் படுகின்றனர். இந்தியக் கலைகளுக்கு ஸ்ரீ காந்தியடிகளின் மரணத்தினால் மகத்தான நஷ்டமே. ஸ்வராஜ்ய ஸித்திக்குப் பின்பும் இன்னமும் பல ஆண்டுகள் ஸ்ரீ காந்தியவர்கள் ஜீவித்துக் கொண்டிருப்பின், பாரத வருஷத்தின் பிராசீன வித்யைகளுக்குப் புனருத்தாரணம் ஏற்படுவது மிக எளிதாகலாம். தேச விடுதலைக்காக உழைத்த தலைவர்களிடையே காந்தி மஹான் ஒருவரே இந்தியாவில் ராமராஜ்யமேற்பட வேண்டுமென்றும், பாரத தேசத்தின் புராதனக் கலைகளும் ஆசாரங்களும் பண்பாடுகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்றும் மனதார எண்ணிக்கொண்டிருந்தார். மற்றவர்கள் அநேகமாக யாவரும் இந்தியாவின் அபிவிருத்தித் துறைகளில் வெளிநாடுகளையே பின்பற்றும் மனப்பான்மை படைத்தவர்கள். இவர்களைத் திருப்பி பாரத தேசத்தின் பண்பாட்டில் கொண்டுவர ஸ்ரீ காந்தி போன்ற நேதாக்களால் தான் ஸாத்தியமாகக் கூடியது.

ஸம்மேளனத்தின் நோக்கம்.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் திறமை பெற அத்யயனம், அத்யாபனம், தத்வித்ய ஸம்பாஷா என்று மூன்று உபாயங்கள் உண்டு. மூன்றாவதான தத்வித்ய ஸம்பாஷா பரீக்ஷத் நடத்துவதற்காகவே, பிராசீன காலத்தில் சாஸ்திர கர்த்தாக்களான மஹரிஷிகளுடைய ஸம்மேளனங்கள் அடிக்கடி நடந்தன. இப்பொழுதும் மேல்நாட்டு வைஜ்ஞானிகர்களுடைய ஸம்மேளனங்கள் நடைபெறுகின்றன. தற்சமயம் காலதேச வர்த்தமானங்களுடைய மாறுதல்களினால் ஆயுர்வேதத்தின் நிலையும் வெகுவாக மாறிவிட்டது. ஆதலால் ஸம்மேளனத்தின் நோக்கத்திலும் மாறுபாடுகள் அவசியமாகிவிட்டன. அர்த்தசாஸ்திரப் பகுதியில் அதாவது ஆயுர்வேதத்தினுடைய அபிவிருத்திக்காக அவசியமான அரசியல் விஷயங்களைப் பற்றி சிந்தனை புரிவதும், திட்டங்களை அதிகாரிகளிடம் ஸமர்ப்பிப்பதும், பயன்களை யாசிப்பதுமே முன்பு முக்கியமான அலுவல்களாயின. இப்பொழுது ஆயுர்வேதத்திற்குப் புதிய சகாப்த மாரம்பமாகியுள்ளது. நமது பாரத தேசத்திற்கு ஸம்பூர்ண சுதந்

தர பாக்கிய மேற்பட்டு விட்டது. முன்பு கேவலம் ஸ்வப்னத்திலும், மனோரதத்திலும், வாய்வார்த்தையிலும் விளையாடின ஆயுர்வேதாபிவிருத்திகள் எல்லாம் இப்பொழுது நம்முடைய ஜனநாயக அரசாட்சி ஏற்பட்டுள்ளதால், வாஸ்தவமாக உருவாகி விடுவதற்குப் பூர்ணமான ஸௌகர்ய காலம் வந்துவிட்டதென்று நாமடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அந்நியருடைய அரசாட்சியில் ஆயுர்வேதம் அபிவிருத்தி பெற ஆதரவு பெறுததில் ஆச்சரியமென்ன ? இப்பொழுது நமக்கு ஸ்வராஜ்யம் ஸித்தித்த பிறகு ஆயுர்வேதாபிவிருத்தி செய்யத் திட்டங்களை வகுப்பதே இன்றைய ஸம்மேளனத்தின் முக்கிய கார்யமாக எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. ஆனால் வித்வான்கள் ஸம்சயங்களை விளக்கி சாஸ்திர விஷயங்களை சர்ச்சை செய்து நிர்ணயம் செய்தல் என்ற தத்வித்ய ஸம்பாஷா பரிஷத் கார்யந்தான் ஸம்மேளனத்தின் நிரந்தரமான நோக்கமாக இருக்கவேண்டியது. வைஜ்ஞானிகர்கள் அரசியல் அர்த்தசாஸ்திரத்திலும் ஈடுபடவேண்டிய அவசியம் எப்பொழுதுமிருந்தால் சாஸ்திராபிவிருத்தியாவது எங்ஙனம்? நமக்கு ஸ்வதந்த்ர ராஜ்ய மேற்பட்டு விட்டதால் இனிமேல் சீக்கிரத்தில் பண்டிதர்கள் நிர்விசாரமாய் சாஸ்திராபிவிருத்தியில் ஈடுபடும் ஸௌகர்யம் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

உண்மை சுதந்திரம் கிடைத்ததா ?

என்ற இந்த விஷயம் சிந்தனை செய்யவேண்டியதாயிருக்கின்றது. இந்தியாவில் சுதந்திரம் ஏற்பட்ட பிறகு பஞ்சமும் உள்நாட்டுக் கலகமும் பீதியும் அதிகமாகிவிட்டபோதிலும் இவை அரசாட்சி மாறுதலில் ஸகஜமாய் ஏற்படக் கூடியவை. காலக்கிரமத்தில் அமைதியும் ஸுபிக்ஷமும் ஸுகமும் ஏற்பட ஸந்தேஹமில்லை. இப்பொழுது நமது தேசத்தில் பொருளாதாரத் துறையிலும் மற்றவைகளிலும் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்குக் காரணமாயிருந்த அந்நிய ஆட்சி விலகிவிட்டதால் எல்லாவித ஸௌக்கியமும் அளிக்கும் ஸ்வதந்திரம் ஸித்தித்துவிட்டது என்றே பொதுவாய் ஜனங்கள் கருதுகின்றனர். ஆனால்

சில விவேகிகளின் கருத்து வேருக இருக்கின்றது. அதாவது— பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷார் இந்தியாவிற்கு இழைத்த தீங்கு மிகப் பெரியதல்ல, புதிதுமல்ல. பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்புக்கு முன்பும் நமது நாடு மகம்மதியரால் பலதடவை ஆக்கிரமிக்கப்பட்டது. இந்தியாவின் பழைய ராஜாக்களும் பரஸ்பரம் மாத்ஸர்யத்தினுல் யுத்தம் புரிந்து கொண்டுதானிருந்தனர்.

தேசத்தின் மன்னர்கள் மாறுவதும், சண்டைகளேற்படுவதும், துர்பிக்ஷம் தொடருவதும் எத்தனையோ ஆவிருத்திகள் இதற்கு முன்பும் நடந்திருக்கின்றன. ஆனுல் முன்பு பாரத தேசத்தில் அரசாட்சி மாறுபாடுகளால் விளைந்த கஷ்டங்களுக்கும், இன்று பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவில் விளைந்துள்ள கஷ்டங்களுக்கும் மகத்தான வித்யாஸமுண்டு. என்னவெனில், முன்பு ஏற்பட்ட அரசாட்சி மாறுதல்களினுல் நமது பாரத தேசத்தின் மக்களுடைய மனதில் ஒரு மாறுபாடும் உண்டாகவில்லை. ஸ்வதர்மத்திலும், வித்யைகளிலும், பண்பாடுகளிலும், கலைகளிலும், ஆசாரங்களிலும் பக்தி, சிரத்தை, மதிப்பு, சாமர்த்தியம் ஒன்றும் நமது ஜனங்களுக்குக் குறையவே யில்லை; வளர்ந்துகொண்டேதான் வந்தது. ஆங்கிலேய அரசாட்சி என்ன விளைவித்து விட்டது என்று கவனியுங்கள். பாரத தேசத்தின் ஹிருதயத்தையே முற்றிலும் கெடுத்து பிரிட்டிஷாருக்கு நித்தியம் அடிமையாக இருக்கும்படிக்கு அடித்துவிட்டது. நம்முடைய மூதாதைகள் மூடர்; கலாசாரங்கள், பண்பாடுகள் யாவும் மூட நம்பிக்கை; வித்யைகள் எல்லாம் பயனற்றவை; விஜ்ஞானத்திற்கு வெளிப்பட்டவை; பிரிட்டிஷ் ராஜ்ய மேற்படாதிருந்திருந்தால் பாரத தேசத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஸௌகர்யமோ, ஞானமோ, மறுமலர்ச்சியோ ஒன்றும் கிடைத்திருக்க முடியாது. நமது நாட்டிற்கு இனிமேலும் எந்தவித நல்ல கார்யமும், வளர்ச்சியும் பிரிட்டிஷாரின் உதவியும் தயையுமின்றி ஒன்றுமே நடத்த முடியாது என்று இந்தியர்களே தங்களைப் பேதைகளாகவும் அடிமைகளாகவும் என்றென்றைக்கும் எண்ணும்படியாக ஹிருதயத்தையே மாற்றிவிட்டனர். நமது நாட்டில் பாமர மக்களுடைய ஹிருதயத்தைப் பார்

க்கிலும் படித்தவர்களுடைய ஹிருதயமே மேல்நாட்டிற்கு அதிகமடிமையாகிவிட்டது. அதிகம் வளர்ப்பானேன்! ஆங்கிலேயர்களுடைய அரசாட்சி அஸ்தமித்துப் போன பிறகுங்கூட நாம் நம்மிந்தியாவில் அந்த இங்கிலீஷ் பாஷை யில்லாமல் காலக்ஷேபம் செய்யவே முடியாது; இங்கிலீஷ் பாஷை இங்கு ஸ்திரமாக இருந்துதானுக வேண்டும் என்று நாமே நிச்சயமாக எண்ணி அதன் வளர்ச்சிக்கும் பாடுபடும் படியாகவும், நமது புராதன வித்யைகளில் வெறுப்பும் ஏற் படும் படியான ஓர் அரிய சூழ்நிலையை ஆங்கிலேய அர சாட்சி இந்தியாவில் நிலை நிறுத்திவிட்டது.

ஆதலால் இங்க்லீஷ்காரருடைய ஆக்கிரமிப்பினுல் இந் தியா தேசத்திற்கு பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட நாசத்தைப் பார்க்கிலும் ஸகல மேதாவிகளுட்பட ஸகல ஜனங்களுடையவும், ஹிருதயத்தைக் கெடுத்துக் கொள்ளை யடித்து விட்டதே சீர்திருத்த முடியாத பெரும் நஷ்டமா கும். ஹிருதயம் கெட்டுவிட்டால் வேறெது இருந்து என் னப் பிரயோஜனம்? ஹ்ருதயமே ஆத்மஸ்தானம். ஆத்மா அழிந்த உடல் தான்! ஆகவே நமது தேசத்திற்கு வெளிப் படையாக பொருள் முதலிய விஷயங்களில் சுதந்திரம் கிடைத்திருந்த போதிலும், மானஸிக விடுதலையும் ஆன்மீக விடுதலையும் சிறிது மேற்படவில்லை. உயிரில்லா உடலுக்கு அளிக்கப்படும் ஆபரணங்கள் போன்று மேல்நாட்டு நாகரீக விஷத்தினுல் மூர்ச்சையுற்று தன்னுடைய வைதிக சாஸ் திரங்களை அறிய முடியாத ஹிருதயத்துடன், ஜனங்களாகி விட்டபொழுது மற்றப்படி எவ்வளவு வெளி சுகங்களுக்கு ஸௌகர்யமேற்படக் கூடிய ஸ்வதந்திர ராஜ்யம் கிடைப் பினும் என்ன பிரயோஜனம்? ஆதலால் நமக்கு இன்னும் உண்மை ஸ்வதந்திரம் கிடைக்கவில்லை. சமீபத்தில் கிடைக்கும் அறிகுறியையும் காணேம் என்று கூறு கின்றனர்.

இன்றைய சூழ்நிலையும் நமது கடமையும்.

மத்யசர்க்கார் உண்மை சுதந்திரம் இந்தியாவில் இன்னும் ஏற்படவில்லையென்ற மேற்கூறிய வாதம் நமது ஆயுர்வே

த்தைப் பற்றிய வரையில் முற்றிலுமுண்மையே. நமது மக்களின் பிரதிநிதிகளான இப்பொழுதுள்ள அதிகாரிகள் நம் மக்களுடைய ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்ய. வெள்ளைக்காரர்களுடைய தேசத்தையும், ஆசரணைகளை யும், முகத்தையும், படிப்புகளையும் மட்டுமே பார்க்கப் பிரியப் படுகின்றனர். இந்திய ஸ்வதேச முறையில் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்ய என்ன வழிகள் இருக்கின்றன என்பதையும் கூட கவனிப்போம் என்ற எண்ணம் அரசாங்கத்தாருக்கு திடமாய் உதிக்கவேயில்லை. சில ஆயுர்வேதாபிமானிகளுடைய தொந்தரவு பொறுக்காமல் ஆயுர்வேதாபிவிருத்தியைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை மத்ய சர்க்கார் ஏற்படுத்தியுள்ளது. இக்காலத்திய ராஜ்ய நிர்வாக முறையில் அதிகாரிகள் தங்களுக்கு விருப்பமில்லாத விஷயங்களைக் காலாந்தரத்திற்கு ஒத்திப் போடவும், பொதுமக்களின் கண்களைத் துடைக்கவும் ஒவ்வொரு பரிசீலனைக் கமிட்டியை ஏற்படுத்திவிட்டு, அதன் மூலம் விவாதங்கள் தொடராமல் பார்த்துக்கொள்ளுவதே வழக்கமாகிவிட்டது.

கவர்ன்மெண்டுக்கு நமது பாரத தேசத்தின் சொந்த வைத்திய சாஸ்திரமான ஆயுர்வேதத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று அந்தரங்க அபிமானமிருப்பின் இந்தக் கமிட்டியெல்லாம் எதற்காக? **कर्मानुसार इतिकं प्रति वञ्चनेयम्** என்று ஈசுவரனைக் கேட்டார் தீக்ஷித கவி. இந்தக் கமிட்டி ஊர் சுற்றி யாதாஸ்து ஸமர்ப்பிக்க பொதுஜன சர்க்காரின் நிதியிலிருந்து செலவாகும் தொகையினால் 'செய்யவேண்டுமென்ற விருப்பமிருப்பின்' ஆயுர்வேத புனருத்தாரணத்திற்கு அவசியமான அநேக கார்யங்களில் பாடபுத்தகம் எழுதுவது போன்ற ஏதாவதொரு நற்கார்யம் செய்து முடித்துவிட முடியும். ஒருக்கால் சர்க்காரின் நிர்வாஹ மாமூல்படி கமிட்டி அவசியமாயின் ஆயுர்வேதத்தைப் பரிசீலனை செய்ய, ஆயுர்வேத மறிந்தவர்களைக் கொண்டுள்ள கமிட்டி நியமனம் செய்வதா? ஆயுர்வேத மறியாதவரைத் தலைமையில் வைத்துக் கமிட்டியமைப்பது உசிதமா? கமிட்டியின் தலைவர் ஸ்ரீ ராமநாத

சோப்ரா, சீமைக்குச் சென்று ஆலோபாதிக் வைத்தியத்தில் பெரிய பட்டம் பெற்றவர். மற்ற அங்கத்தினர்களும் ஆலோபாதிக் வைத்திய சாஸ்திரத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்களே. ஸம்பிரதாய சுத்தியுடன் ஆயுர்வேதமறிந்த வைத்தியர் ஒருவர்கூட இக் கமிட்டியில் இடம் பெறவில்லை. ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற அந்தரங்கமிருந்தால்தானே ஆயுர்வேதம் பயின்ற வைத்தியர்களைச் சேர்த்துக் கமிட்டி யமைக்க எண்ணம் தோன்றும்!

நமது ஆயுர்வேத மகாமண்டலத்தின் சார்பிலும் சோப்ரா கமிட்டிக்கு அபிப்பிராயம் அளிக்கப்பட்டது. சோப்ராக் கமிட்டி சுற்றுப் பிரயாணத்தை முடித்துவிட்டு யாதாஸ்து தயாரிக்க ஸிம்லா பர்வதத்தினுடைய சீதளமான சிகரத்தில் இப்பொழுது வீற்றிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் தனது யாதாஸ்தை மத்ய சர்க்காருக்கு அளிக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆயுர்வேதத்தினுடைய ஸமீபத்தில் வருங்காலத்திய அந்தஸ்து பூராவும் இப்பொழுது சோப்ராவின் பேனா முனையில் நிற்கின்றது.

நமது சென்னைமாகாணத்தில்,

ஜன நாயகமான காங்கிரஸ் ராஜ்யம், இந்தியாவிற்குப் பூர்ண சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே 1946 ஏப்ரல் மாதத்திலேயே ஏற்பட்டது. இன்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. முதல் மந்திரி சபையின் ஆரோக்கிய மந்திரி ஸ்ரீமதி ருக்மணீ லக்ஷ்மீபதி அம்மாள் ஆயுர்வேதாபிவிருத்தித் துறையில் ஆரம்ப சூரத்தனத்தை வெகு ஆடம்பரமாகக் காட்டினார். அவரிட்ட பல திட்டங்களில் கவர்ன்மெண்டு இந்தியன் மெடிகல் ஸ்கூல், காலேஜாக உயர்த்தப்பட்டதென்ற ஒரம்சம் தவிர வேறெந்தக் காரியமும் ஆயுர்வேத விஷயமாய் பின் தொடர்ந்த காங்கிரஸ் மந்திரிஸபையால் இன்றுவரை ஒன்றும் செய்யப்படவில்லை. ஸ்கூலைக் காலேஜாகப் பெயர் கௌரவத்திற்கு உயர்த்தினார்களே தவிர, மாணவர்களுக்குக் காலேஜ் படிப்புக்கு வேண்டிய அதிக ஸௌகர்யங்களை ஆயுர்வேத சாஸ்

திர ரீதியில் இதுகாறும் ஒன்றுமே செய்து கொடுக்க வில்லை. ஆயுர்வேத ஆராய்ச்சி சாலைக்கு ஆட்கள் தேடும் வேலையில், ஸ்பெஷல் ஆபீஸர் மும்மரமாய் ஈடுபட்டிருக் கிறார் (Actively engaged—'Hindu') என்று ஒரு நாள் சட்டசபைக் கேள்வி சமயத்தில் ஆரோக்கிய மந்திரி பதில் சொன்னது தவிர, ஆராய்ச்சி சாலையைப் பற்றி ஒரு வார்த் தையும் கேள்விப்படவில்லை. பிரகாசம் மந்திரி ஆட்சி நாளில் ஆயுர்வேதத்திற்காக அந்த ஆண்டுக்கு ஒதுக்கப் பட்ட ஐந்து லக்ஷம் ரூபாய்கள் ஆயுர்வேத விஷயத்தில் அந்தரங்க அபிமான மின்மையால் வேறு வியாஜத்தினல் பலிதத்தில் ஆயுர்வேதத்திற்கு விநியோகம் ஆகாமல் காங் கிரஸ் மந்திரிசபை செய்துவிட்டது. இந்திய வைத்திய ஸெண்டிரல் போர்டின், புதிய அமைப்பையும் தேர்தலை யும் பற்றி ஒன்றுமறிய முடியவில்லை. இன்றுள்ள சென் னைக் காங்கிரஸ் மந்திரி சபையின் இதர கார்ய நிர்வாஹ சாதுர்யத்தைப் பற்றிப் பேச இங்கு இடமில்லை. ஆயுர் வேதத்தைப் பற்றிய வரையில் மந்திரிஸபை மிகவும் உதா ஸீனமாக இருப்பது பிரத்யக்ஷம். ஜனநாயக ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் முடிந்தும், ஆயுர்வேதத்திற்கு முன் பிருந்ததைவிட அதிக ஆதரவு இனிமேலாவது ஸமீபத்தில் ஏற்படலாம் என்ற அறிகுறியையும் காணேம். ஆயுர் வேதத்திற்கு உபகாரமளிக்காவிடினும் பாதகமாவது செய் யாமலிருக்க வேண்டாமா? ஆஸவாரிஷ்டங்களை மது விலக்குச் சட்டத்தில் சேர்த்துவிட்டு, அதனுல் ஆயுர்வேத வைத்யர்களுக்கு சிகித்ஸைத் துறையில் இழைக்கும் தொந் தரவுகளைச் சொல்லிமுடியாது.

மற்ற மாகாணங்கள்.

வட இந்திய மாகாணங்களின் சர்க்கார் ஆயுர்வேத விஷயத்தில் நமது சென்னை மாகாணத்தையே அநேகமாய் அநுஸரித்து, இங்கு செய்வதைப் பாராட்டி, இதுபோ லவே நடத்த விரும்புகின்றனர். பம்பாய் மாகாணத்தி லும் ஐக்கிய மாகாணத்திலும் சர்க்காரால் ஆயுர்வேதாபி விருத்திக்குப் பரிசீலனைக் கமிட்டிகள் நிறுவப்பட்டு வெகு காலம் கடந்துவிட்டது. ஐக்கிய மாகாணத்தின் கமிட்டி

யால் தயாரிக்கப்பட்டிருக்கும் சரமாரியான பிரச்னங்கள் ஒரு பெரிய புஸ்தகமாகவே இருக்கிறது. இதெல்லாம் வீண் ஆடம்பரம். வைத்தியர்களிடமிருந்து அபிப்பிராயம் சேக ரிக்க சர்க்காரால் தொகுக்கப்பட்ட கேள்விகளைக் கவனித் தால் இந்த சர்க்காருக்கு ஆயுர்வேதத்தைப் பற்றிய ஒரு ஞானம் அதன் பரிஸ்திதி கவனம் ஒன்றும் சிறிது மிருப் பதாகத் தோற்றவே யில்லை. அமெரிக்காவிலும் இங்கிலாந் திலும் வைத்திய இலாகாவில் இருக்கும் சட்ட திட்டங்களை யும் ஆசரணைகளையும் மனப்பாடம் செய்துகொண்டு அதை யநுஸரித்துக் கேள்விகளை ஆயுர்வேதத்திற்கும் விடுக்கின் றனர். கமிட்டிக்குத் தலைவராக ஆங்கில வைத்தியரைப் போடுவதோடில்லாது, ஆயுர்வேதாபிவிருத்தி எவ்விதம் செய்யவேண்டுமென்று ஆலோசாதிக் வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களை அதிகமாக நாடிக் கேட்கின்றனர். இதெல்லாம் சர்க்காருக்கு ஆயுர்வேதத்திலிருக்கும் மனப் பான்மையை ஸ்பஷ்டமாக்க வில்லையா?

காரண மென்ன?

இப்பொழுது அரசாளும் நமது தேசத்தலைவர்கள் தேசபக்தி நிரம்பியவர்கள், தாய்நாடு விடுதலைக்காக விசேஷ தியாகம் புரிந்தவர்களே. இவர்களுக்கு இந்திய வைத்திய முறைகளில் அபிமானமும் ஆதரவும் ஏற்படாமலிருப்பதற் குக் காரணமென்ன? நாம் முக்கியமாய் இதைப் பரீக்ஷித்து நிதானித்து, அகற்றவேண்டும்.

ஆயுர்வேதம் மக்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்ற வும் பிணிகளை யகற்றவும் போதியதா யில்லாது ஊனமாக இருப்பதே ஆயுர்வேதத்தில் தலைவர்களுக்கு ஆதரவின் மைக்குக் காரணம் என்று அவஸரக்காரர்கள் ஆலோசனை யின்றி உத்தரமளிப்பார்கள். அது சுத்தப் பிழை. பின் என்ன? நமது தலைவர்களுக்கு ஆங்கிலேய நாகரீகத்தில் ஊறியிருக்கும் மோகமே காரணம்; வேறல்ல.

இன்று அரசாட்சி புரியும் நமது தேசத் தலைவர் களுக்குத் தாய்நாட்டின் விடுதலைக்காக பக்தியும் பிரீதியும் நிறைந்திருப்பினும் தங்கள் தேசத்திற்குச் சொந்தமான

சாஸ்திரங்கள், தர்மங்கள், கலைகள் இவைகளில் சிறிதளவாவது பரிசயம் பெறவும் ஸந்தர்ப்பம் வாய்க்காது, இவர்கள் அக்ஷராப்பியாஸம் முதல் விதேசியப் படிப்புகளிலும், பண்பாடுகளிலும் ஈடுபட்டு உழலும்படியாகிவிட்டது. விதேசியர்களால் அநுபவிக்கப்படும் உயர்போகமும், நம் நாட்டினரின் கஷ்டாநுபவமும், நமது தேசத்தின் ஐசுவர்யம் பிறரால் கொள்ளையடிக்கப் படுவதையும் பார்த்து சகிக்காமல், நமது இந்தியாவிற்குச் சுதந்திரம் வேண்டுமென்று இவர்கள் போர் புரிந்து சுதந்திரம் பெற்றார்களே தவிர, பாரத வருஷத்தின் தர்மங்களிலும் விஞ்ஞானங்களிலும் பெரிய அழிவு ஏற்பட்டு விட்டதைக் கவனித்துப் பொறுக்காமல், பாரதீய விஞ்ஞானங்களையும் தர்மங்களையும் திரும்பி நிலைநாட்ட வேண்டுமென்ற ஆர்வத்துடன் இவர்கள் சுதந்திரப் போர் புரியவில்லை. பாரதீய தர்சனங்களில் இவர்களுக்குப் பரிசய மேற்படாமல், விதேசிய தர்சனங்களில் பழக்க மதிகமாகி, பதவியும் வந்துவிட்டதால் பாரதீய தர்சனங்களில் தலைவர்களுக்குப் பிரியமில்லாதது மட்டுமில்லை; துவேஷமும் வளர்ந்துள்ளது. அரசாங்கத்தாருக்கு ஆயுர்வேதத்தில் மட்டுமா அநுராகமில்லை? புராதனமான இந்தியாவின் எந்த சாஸ்த்திரத்தில் எந்தக் கலையில் தான் இவர்களுக்கு அந்தரங்கப் பிரியமோ, ஆதரவோ இருக்கின்றது? இதற்கெல்லாம் மூலகாரணம் பிரிட்டிஷ் அரசாட்சியில் ஆங்கிலேயர்களால் நம்மவர்களுடைய ஹ்ருதய பூமியில் நடப்பட்ட மேல்நாட்டு நாகரிக விஷ விருக்ஷம் தழைத்திருப்பதே என்று மேலே நிரூபித்துள்ளோம்.

நமது கடமை.

நமது இந்தியாவிற்கு விதேசிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற எவ்விதம் தவங்கள் புரிந்தோமோ, அவ்விதம் நமது தேசத் தலைவர்கட்கும் அதிகாரிகட்கும் பொது ஜனங்கள் யாவருக்கும் ஹிருதயத்தில் ஊறிக் கிடக்கும் ஆங்கிலேய நாகரீக மோஹம் ஒழிந்து, நமது பாரத தேசத்தின் தர்மத்திலும், விஞ்ஞானங்களிலும், கலாசாரங்களிலும் ஆதரவும், அநுராகமும், ஞானமும், சாமர்த்தியமும் பூர்ணமாய் உண்டாவதற்குத் தகுந்தபடி பலவிதத்திலும்

தவம் புரியவேண்டும். ஆயுர்வேத வைத்தியர்கள் இக் காரியத்தைக் கவனித்து நடத்தாமல் ' தேசத்திற்கு சுதந் திரம் வந்துவிட்டது ; இனி தானுகவே சுதேச வைத்திய சாஸ்திரம் அபிவிருத்தியாகிவிடும்" என்று பேசாமல் உதா ஸீனர்களா யிருந்தால் நமது ஆயுர்வேத சாஸ்திரத்திற்கு உசிதமான ஆதரவும் யதார்த்தமான அபிவிருத்தியும் இந் தியாவில் திரும்ப ஏற்படலாமென்று எதிர்பார்க்கவே முடி யாது. இந்த முக்கியமான காரியம் ஆயுர்வேத தர்சனக்காரர் களால் மட்டும் தனிமையில் செய்யக்கூடியதல்ல. ஆயுர் வேதத்திற்கும் மூலமான வைதிக தர்சனக்காரர்கள் எல் லோரும் சேர்ந்தும் தனிமையாகவும் செய்யவேண்டியது. ஆயினும் ஆயுர்வேதம் கைமேல் பலனளிக்கும் சாஸ்திர மானதால் சீக்கிரத்தில், ஸுலபமாய் பொதுஜனங்களிடம் விசுவாஸத்தை ஆயுர்வேத பண்டிதர்கள் தான் உண்டு பண்ணமுடியும்.

சரி ; ஆயுர்வேதத்தின் அருமைபெருமைகளை அதிகாரி கட்கும், ஜனங்களுக்கும் பிரத்யக்ஷமாய் எடுத்துக்காண்பித் தால்தான் அதிகாரிகளுடையவும் ஜனங்களுடையவும் ஹிருதயத்தில் ஊறியிருக்கும் ஆங்கிலேய மோஹ மயக்கம் தெளிந்து ஆயுர்வேதத்தில் ஆதரவு ஏற்படுமென்பது சரி. ஆனல் அவ்விதம் ஆயுர்வேதத்தின் பெருமையைப் பிரத் தியக்ஷமாக எடுத்து நிரூபணம் செய்ய நமக்கு என்ன சாதனமிருக்கின்றது? ஒருவித ஸௌகர்யமு மில்லாமல் எப்படி எடுத்துக்காட்ட இயலும்? முறைப்படி ஆயுர் வேதம் படிக்கவே ஸௌகர்யம் போதியதில்லையே? ஆத லால் அருமையை வெளிப்படுத்த அரசாங்கத்தின் உதவி யின்றி ஸாத்தியமில்லையே? வாஸ்தவம் ; இது அந்நியோந் நியாசிரயமான கார்யமே; கடினமே ; ஆயினும் அவசியம் செய்துதானுகவேண்டி யிருக்கிறது. இந்தச் சூழல் நிலை யில் நாம் ஆயுர்வைதிகர்கள் எனக்குத் தோன்றுவதில் அநுஷ்டிக்க வேண்டியவை பற்பல உபாயங்கள்.

ஒற்றுமை.

ஆயுர்வேத வைத்தியர்கள் அனைவரும் உலகத்திற்கு பரம உபகாரமான தங்களுடைய சாஸ்திரத்தின் அபி

விருத்திக்கும் நாம் அவசியம் பாடுபட்டே ஆகவேண்டும் என்று விருதம் பூணவேண்டும். நாமெல்லோரும் தன் தன் வருமான வளர்ச்சிக்கு எவ்விதம் அல்லும் பகலும் அலைகின்ருேமோ, அவ்விதம் நமக்கு அன்னமளிக்கும் ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்கு அனவரதம் கார்யஞ் செய்யாவிடினும் நமது காலத்திலும், வருமானத் திரவியத்திலும் ஓரளவாவது ஆயுர்வேதாபிவிருத்திக்காக ஒதுக்கித் திட்டமாக அவைகளைச் செலவழிக்காவிடில், நம்மைப் பார்க்கிலும் ஆயுர்வேதத்திற்குத் தீங்கிழைப்பவர் வேருருவர் இல்லை என்று சொல்லவும் வேண்டுமா? தேசீய வைத்தியர்கள் அனைவரும் ஒருமனப்படவேண்டும். லக்ஷ்யத்தில் மட்டும் ஒருமனப்பட்டால் போதாது. லக்ஷ்யத்தை அடையும் உபாயங்களிலும் ஒற்றுமை யிருந்தால் தான் ஸங்க சக்திக்கு உண்மையான சக்தி இருக்கமுடியும். இதில் நான் அதிகம் விஸ்தரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. சித்தம், ஆயுர்வேதம், பழைய படிப்பு, புதுப்படிப்பு A. B. ரிஜிஸ்டர் வகுப்பு, சுத்தம், மிச்ரம், இது போன்றும் இன்னும் ஜாதி மத தேசவாரி போன்ற எத்தனைவித பேதங்களுக்கு இடமிருப்பினும், அவைகளை ஒன்றையும் ஸமூக விஷயத்தில் சிறிதும் பாராட்டாமல், ஆயுர்வேத வைத்தியர்கள் என்று ஒரு பொதுவான ஸமூஹ மனேபாவத்துடன் நாம் ஆயுர்வேதாபிவிருத்தி என்ற லக்ஷ்ய பூர்த்திக்குப் பாடு படவேண்டும்.

அரசியலிலும் ஸமூக ஸேவையிலும் ஈடுபடுதல்.

ஜனநாயக ராஜ்யமேற்பட்ட பின்பு ஆயுர்வேத வைத்தியர்கள் அரசியல் நிர்வாஹம் செய்யும் அதிகாரிகட்கு ஆலோசனை சொல்லும் எல்லா ஸபைகளிலும் அங்கத்தினராக இருந்தால் தான், ஏனைய அங்கத்தினர்களுடைய ஹிருதயத்தில் ஆயுர்வேதத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டியதின் கடமையை நன்ருகச் செய்யமுடியும். ஆதலால் கிராமப் பஞ்சாயத்து ஸபை முதல் மத்ய சர்க்கார் மஹா சட்டஸபை முடிய எல்லாவற்றிலும் நமது வைத்தியர்கள் தாங்களும் முடிந்தவரை அதிக ஸ்தானங்கள் பெற முயல வேண்டும். ஆயுர்வேதாபிமானம் வாய்ந்தவருக்கு ஸ்தா

னம் கிடைப்பதில் பூர்ண உதவியளிக்கவேண்டும். ஸபைகளில் பதவி பெற்ற பின்பு இவ்வங்கத்தினர்கள் பொது ஜனங்களுடைய தேவையை அறிய மறந்துவிடுவதும், சுய நலத்திலீடு படுவதும், ஸகஜமாய் விட்டது. ஆதலால் நாம் தேர்ந்தெடுத்தனுப்பிய அங்கத்தினர்களுக்கு ஆயுர் வேதத்தைப் பற்றிய பொறுப்பை அடிக்கடி எடுத்து நினைவு உண்டுபண்ணிக் கொண்டே இருக்கவேண்டியது மவசியம்.

ஸமூகத்திற்குப் பொதுப்படையான கஷ்டங்கள் நேர்ந்தபொழுது, உதாரணமாக, தேசத்தில் இப்போது ஏற்பட்டுள்ள வகுப்பு யுத்தத்தால் அகதியானவர்கள், கொள்ளைநோய்கள் பஞ்சம் முதலியவைகளால் பீடிதர்— இவர்களுக்கு ஆயுர்வேத வைத்தியர்கள் தானாகவே முன் வந்து பிரயோஜனத்தை எதிர்பாராமல் சிகித்ஸைத் தொண்டு புரியவேண்டும். அகதிகளுக்கு சிகித்ஸை செய்ய ஔஷதங்களைத் தன் கையிலிருந்து செலவழிக்க சக்தியில்லாத வைத்தியர்கள், சரீர ஸேவை புரியத் தயாராக முன் வந்தால், பணக்காரரான தார்மிகர்கள் ஔஷதச் செலவுக்குக் கண்டிப்பாய் உதவி செய்வார்கள். ஸாதாரண காலத்திலும் பணக்காரர்களைக் கொண்டு தர்மவைத்திய சாலைகளை ஏற்படுத்தச் சொல்லி அவைகளில் ஸௌகர்ய முள்ள வைத்தியர்கள் சில நாழிகைகள் தர்மவைத்திய உதவி செய்யவேண்டும்.

ஆயுர்வேதத்தின் மகத்துவத்தைப் பிரகாசம் செய்ய ஸாதனங்கள் பூர்ணமாக இல்லையென்பது உண்மையே. ஆயினும் இப்பொழுது மிகக் குறைவாயினும் எவ்வளவு ஸாதனங்கள் அவரவர்கள் வசத்தில் இருக்கின்றனவோ அவைகளைக்கொண்டு இயன்றவரை ஆயுர்வேதத்தின் அருமைப் பிரயோஜனங்களை பரீக்ஷைகளுடனும், கணக்குகளுடனும் (Statistics) பொது ஜனங்களுக்குத் தெரியப் படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். தகுந்த ஸௌகர்யம் இல்லாமலே ஆயுர்வேதத்தினுல் இவ்வளவு பிரயோஜனம் ஸமூகத்திற்குக் கிடைப்பின், பூர்ண ஸௌகர்யம் இருந்தால் ஆயுர்வேதத்தினுல் அடையக்கூடிய ஆரோக்கிய

லாபம் வேறெந்த வைத்திய முறையினாலும் பெறமுடியாது என்று பொதுஜனங்கள் உணரும்படி செய்யவேண்டும்.

ஸாதனங்களை ஸம்பாதித்தல்

நமது நாட்டிற்கு ஆரோக்கிய உதவிக்குப் பிறர் அபேக்ஷையின்றி சிகித்ஸா சாஸ்திரத்தில் பூர்ண சுதந்திரம் பெற ஆயுர்வேதத்தை அநுஷ்டித்து அபிவிருத்தி செய்தால்தான் முடியும் என்றும், ஆயுர்வேதமில்லாமல் மேல்நாட்டு வைத்தியமுறையினால் மட்டும் இந்தியாவில் ஆரோக்கிய ரக்ஷணை செய்ய ஸாத்திய மாகாதென்றும் சபதம் கூறி, ஆனால் இன்றைய தினத்தில் இருக்கும் ஆயுர்வேதத்தினால் முடியாது; அதற்குத் தேவையான ஸௌகர்யங்களைச் செய்த பின்பே முடியும்; ஆதலால் ஆயுர்வேதாபிவிருத்திக்குச் செய்யவேண்டிய ஸௌகர்யங்களை அரசாங்கத்தில் உடனே செய்யும்படிக்குச் செய்யவேண்டும். 'ஆயுர்வேதாபிவிருத்திக்கு வேண்டிய உதவி செய்யுங்கள்' என்று நாம் அரசாங்கத்தாரிடமோ, தர்மப் பிரபுக்களிடமோ கேழ்க்கும்போது நாம் இந்த உண்மைகளை உரைக்கவேண்டும். ஆயுர்வேதத்தை அநுஷ்டிப்பதும், அபிவிருத்தி செய்வதும்— ஆயுர்வேதம் ஸ்வதேசீயம் என்பதற்காக அல்ல; ஆயுர்வேத மருந்துகள் மலிவு என்பதற்காக அல்ல, ஆயுர்வேத முறையே இன்னும் அதிகமான ஜன ஸங்கியைக்கு வைத்திய உதவி யளிக்கிறது என்பது மல்ல; இந்தக் குணங்களெல்லாம் ஆயுர்வேதத்தில் ஒருங்கு சேர்ந்திருக்கின்றனவே தவிர, இவைகளால் மட்டும் ஆயுர்வேதத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உபதேசிப்பது உசிதமல்ல. ஆயுர்வேதத்தில் எவ்வளவு குறைகள் இருந்தாலும் சரி; அது நமது முன்னோர்களால் நமக்குக் கொடுத்த ஸொத்து என்ற ஒரு துரபிமானத்தினால் நாம் ஆயுர்வேதத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லவில்லை. உயிரைக் காப்பாற்றும் கார்யமான ஒரு சாஸ்திரத்தில், அதற்குவேண்டிய ஞானத்தில் நம்முடையது, பிறருடையது என்றுண்டா? பின் எதற்காக ஆயுர்வேதம் வேண்டும் எனில்— ஆயுர்வேதமே வைஞ்ஞானிக தத்துவப்படிக்கு எல்லாவற்றிலும் சிறந்த

வைத்திய முறை; என்றும் மாருத அடிப்படை தத்துவங்களை அறிந்த உயர் முறை ஆயுர்வேதமே; சீக்கிரத்தில் நோய்களை அகற்றுவதும் ஸ்திரமாக நோய்களை அகற்றுவதும் ஆயுர்வேதமே; ஒரு வியாதியைப் போக்கி மற்ற வியாதி உபாதியை உண்டாக்காமல் செய்வதும், மனஸ், சரீரம் இரண்டிற்கும் தூய்மை கொடுப்பதும் ஆயுர்வேதமே. உலகில் இதுவரை மற்ற வைத்திய சாஸ்திரங்களில் இல்லாத அபூர்வமான இக்குணங்கள் ஆயுர்வேதத்தில்தான் நிறைந்திருக்கின்றன என்ற காரணங்கள் கொண்டே ஆயுர்வேதத்தை எடுத்துக்கொள்ள நாம் சொல்லுகின்றோம். ஆயுர்வேதத்தைக் கைவிட்டால் உலகினருக்குப் பெரும் நஷ்டம். அந்த நஷ்டமடையக் கூடாது என்றுதான் சொல்லுகிறோம். ஆயுர்வேதாபிமானம் அகாரணமாயில்லை.

மேலும் நாம் வாக்குறுதி செய்யவேண்டும். ஆயுர்வேதாபிவிருத்திக்கு அவசியமான ஸாதன ஸம்பத்துக்களை நாம் கோறுகிறபடிக்குப் பரிபூர்ணமாய் அளித்துவிட்டால், அதிலிருந்து இருபத்தைந்து வருஷங்களுக்குள் ஆயுர்வேதத்திற்கு நாங்கள் சொல்லும் அருமை மகத்துவங்களைப் பிரத்யக்ஷத்தில் காட்டி விடுகின்றோம். வெளி தேசத்து வைஞ்ஞானிகர்களுடைய ஸகலவித பரீக்ஷையிலும் ஆயுர்வேதம் தேறியுள்ளது என்றும் நிரூபித்து விடுகின்றோம். இருபத்தைந்து வருஷங்களுக்குள் ஆயுர்வேதத்தின் விஜ்ஞானத் தன்மையை நாங்கள் நிலைநாட்ட முடியாவிடில் ஆயுர்வேதத்தை வேரற ஒழித்துவிடும் கார்யத்தை நாங்களே செய்து விடுகின்றோம். ஆதலால் ஆயுர்வேதாபிவிருத்திக்கு வேண்டிய சாதனங்களைச் செய்து கொடுங்கள் என்று சபதத்துடன் நாம் அவைகளைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஜன நாயக ராஜ்யத்தில் நாட்டிற்கு நன்மை புரிய, ஆயுர்வேதத்திற்கு வேண்டியதைச் செய்து கொடுக்கச் சர்க்காரிடம் கேட்பதற்கு நமக்கு உரிமையுண்டு. ஆயுர்வேதாபிவிருத்திக்காக ஒரு கார்யமும் செய்யாமல், ஒரு வஸ்தியும் கொடுக்காமல், ஆயுர்வேதத்தை ஒரு அக்ஷரமும் அறிந்து கொள்ளாமல், ஆயுர்வேதம் மக்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றவும் பிணிகளைப் போக்கவும்

போதியதாயில்லை என்று அபிப்பிராயம் கூறுவது பொறுப்பாளிகளுக்கும், விவேகமுடையவர்களுக்கும் சரியானதல்ல.

அடுத்தபடி நாம் ஆலோசிக்கவேண்டியது ஆயுர்வேதாபிவிருத்திக்கு என்னென்ன உதவி தேவை? எவ்விதம் அபிவிருத்தி செய்வது என்று. என்னவித உதவி தேவை என்ற கேள்விக்குப் பதில் இயம்புவது மிக எளிது. இப்பொழுது இந்தியாவில் மேல்நாட்டு வைத்திய முறையில் எவ்வளவு கார்யம் செய்யப்படுகின்றதோ அவ்வளவும் அணு குறையாமல் ஆயுர்வேதத்திற்கும் செய்ய வேண்டும். கல்லூரிகள், ஆரோக்கியசாலைகள், ஆராய்ச்சி சாலைகள், வைத்தியர்களுடைய அந்தஸ்து எல்லாம் ஆலோபாதிக்கு விஷயத்தில் போல சமமாயிருக்க வேண்டும். இதில் மதபேதமிருக்க இடமில்லை. உதவி பூர்த்தியாய் கிடைத்துவிட்டால் ஆயுர்வேதத்திற்கு அதன் சாஸ்திரீய முறையில் செய்யவேண்டிய அபிவிருத்திக் கிரமம் என்ன? எப்படி? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது மிக சிரமம். இதில் அபிப்பிராய பேதங்கள் அதிகமாக இருக்கும். இதனிடையில்,

ஒரே வைத்திய சாஸ்திரம்

என்றொரு புதிய வாதம் சென்ற சில ஆண்டுகளாக இந்தியாவிலிருக்கும் வைத்திய சாஸ்திர சீர்திருத்தக்காரர்களால் பெரிதும் பேசப்படுகிறதை யாவரும் அறிவார்கள். அதையும் பற்றி நாம் அவசியம் ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. அந்த விசாரத்திலேயே ஆயுர்வேதத்தின் சாஸ்திரீயமான அபிவிருத்தியின் கிரமம் ஆராய்ந்து பார்த்தல் அதிக நன்றாயிருக்கும். வெளிதேசங்களில் முற்றிலுமே ஆலோபாதிக் என்ற ஒரே வைத்திய முறையே வியாபகமாயிருக்கிறபடியால் வெளிநாடுகளில் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை. நமது இந்தியாவில் பல்வேறு ஜாதி மத பேதங்கள் இருப்பது போல, வைத்திய முறைகளும் பல இருக்கின்றன. ஆயுர்வேதம், ஸித்தம், யூனானி, ஆலோபாதிக் என்று முக்கியமாய் நான்குவித வைத்தியங்களிங்குள. ஆதலால்

இந்தியாவில்தான் ஒரே வைத்திய சாஸ்திரப் பிரச்னை எழுகின்றது,

ஆலோபாதிக் வைத்தியம் பயின்ற இந்தியர்கள்.

வைத்திய சாஸ்திர சீர்திருத்தம் செய்யவேண்டியதில் உலகத்தோடு ஒட்டி வைத்திய சாஸ்திரம் இந்தியாவிலிருக்கவேண்டும். உலகம் பூராவும் வியாபகமாயுள்ளது ஆலோபாதிக் வைத்தியம். ஆகவே இந்தியாவிலும் பூராவாக ஆலோபாதிக் வைத்தியமுறை தான் இருத்தல் உசிதம். வேறு ஒரு முறையும் விஞ்ஞான ஸம்மதமாகாததால் இந்தியாவிலிருப்பது ஆபத்து; அவைகளை ஒழித்தும் விடவேண்டும். அவைஞ்ஞானிகமான மருத்துவத்தை மக்களுக்கு வழங்குவதைப் பார்க்கிலும் அநீதி வேறு யாது? மேல்நாட்டு சாஸ்திரப்படி இந்தியாவில் இருக்கும் வைத்தியங்களைப் பரீக்ஷித்துப் பார்த்து அவைகளில் ஏதாகிலும் உபயோகமான ஔஷத முறைகள் கிடைப்பின் அவைகளை நவீன வைத்திய முறையில் சேர்த்துக்கொண்டு விடலாம். நான்கு வைத்திய முறைகளுக்கும் தனியே கலாசாலைகள், ஆரோக்கிய சாலைகள், ஆராய்ச்சி சாலைகள் ஆகிய எல்லா சாதனங்களையும் ஏழை இந்தியாவில் செய்வதுமஸாத்தியம். ஆதலால் ஆலோபாதிக் வைத்தியத்தோடு இந்திய வைத்திய முறைகளையும் ஒன்று சேர்த்துவிட்டால் இந்தியா வெளி உலக விஞ்ஞானங்களோடு இணைக்கப்படும். இந்தியாவில் பல வைத்திய முறைகளுக்குச் செய்யவேண்டிய வீண் திரவிய விரயம் தவிர்க்கப்படும். இந்தியர் யாவர்க்கும் வைஞ்ஞானிக சிகித்ஸை யுதவி நன்கு கிடைக்கும். வேறு வைத்திய முறை தனியாக ஒன்று இருந்தால்தானே ஜனங்களதை நாட முடியும் என்று உட் கருத்து. இந்த சீர்திருத்தக்காரர்கள் ஆங்கில வைத்தியம் தவிர வேறு ஒரு வைத்தியமும் உலகில் இருக்கக் கூடாதென்று சொல்லி, பிரகாசமாய் ஆயுர்வேதம் முதலிய வைத்யத்தை அழித்துவிட வேண்டுமென்ற கக்ஷிக்காரர்கள். மற்றொருவகை சீர்திருத்தக்காரர்கள் இந்திய வைத்தியங்கள் ஆங்கில வைத்தியம் எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டுமென்று மனோபாவமுள்ளவர்கள். ஆயுர்

வேதத்துடன் ஆலோபாதிக் வைத்தியத்தையும் சேர்த்து மாணவர்களுக்குக் கற்பித்து விட்டால் காலாந்தரத்தில் எல்லாம் ஒரே வைத்திய முறையாகிவிடும் ஆயுர்வேதம் முதலிய வைத்தியங்கள் அழியாது. எவ்வாறு நேற்று வெளியாருடையதா யிருந்த யுனானி வைத்தியம் இன்று ஆயுர்வேதத்துடன் கலந்துவிட்டதோ, அவ்வாறே இன்று வேருக நிற்கும் மேல்நாட்டு வைத்திய முறையும் ஆயுர் வேதத்துடன் கலந்து ஒன்ருகி விடும். இந்த 'அடிப்படை யோஜனையின் மேல்தான் சென்னை சர்க்கார் இந்திய வைத் திய க் கல்லூரி ஆரம்பம் முதல் இதுவரையில் ஆயுர்வேதம் ஆலோபாதிக் இரண்டையும் தனித் தனியே பாடமுறை களில் அமைத்துக் கற்பிக்கின்றது. இந்த வழியே மிகவும் சிலாக்கியமான தென்று மற்ற மாகாணத்திய ஆயுர்வேதக் கல்லூரிகளும் அநேகமாக எல்லாம் சென்னை சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியையே பாடக் கிரமத்தில் பின் பற்றத் தலைப்பட்டுள்ளனர். ஆனல் வித்யாஸம் வரு மாறு:—

சென்னை மாகாணத்தில் மூன்றுவித இந்திய வைத் தியங்கள். மற்ற மாகாணங்களில் ஆயுர்வேதம், யுனானி இரண்டுதான். இதில் ஒரு ஆச்சரியமென்னவெனில், இந்திய வைத்தியங்கள் ஒவ்வொன்றும் தனித் தனியே தான் ஆங்கில வைத்தியத்துடன் கற்பிக்கப் படுகின்றது. அதாவது ஆயுர்வேதமும் ஆலோபாதிக்கும், ஸித்தமும் ஆலோபாதிக்கும், யூனனியும் ஆலோபாதிக்குமாக சேர்க் கப்பட்டிருக்கிறது பாட முறையில். ஸித்த ஆயுர்வேத யூனனி முறைகள் இந்திய வைத்திய மென்று கூறப் படுகின்றன. இவைகள் மூன்றையும் சேர்த்துப் பாடம் கற்பிக்கும் எண்ணமே ஏற்படவில்லை என்பதே. இந்தப் பாடக் கிரமத்திலிருக்கும் குணதோஷங்களை விசா ரிப்போம். இந்திய வைத்தியங்கள் என்று அழைக்கப் படும் சித்த யுனானி ஆயுர்வேத முறைகள் ஒன்றுபட்டவை களா? வேறுபட்டவைகளா? ஒன்றுபட்டவைகளாயின் தனித்தனி பாடக்கிரமங்கள் தேவையில்லை. தனிப்பட்ட வைகளாயின் முற்றிலும் தனிப்பட்டவைகளா? சில அம்

சங்களில் மட்டும் தனிப்பட்டவைகளா? எவ்விதமிருப்பினும் இவைகளை ஏன் ஒன்று சேர்க்கவில்லை? இந்திய தேசிய வைத்தியத்துடன் விதேசிய வைத்தியத்தை ஒன்று சேர்க்கப் பிரயத்தினப்படுதல் உசிதமாகும்; கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக சென்னை சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியில் இந்திய வைத்தியங்களும் இங்கிலீஷ் வைத்தியமும் மாணவர்களுக்குக் கற்பிக்கப் படுகின்றதே; இந்த முறையைக் கையாண்டதில் எதிர் பார்த்த பலன் கிடைத்ததா? இந்திய வைத்தியங்களும் சேர்ந்து ஒன்றாகவில்லை. இங்கிலீஷ் வைத்தியமும் இந்திய வைத்தியத்துடன் உறவு பெறவில்லை. இந்த நான்கு சாஸ்திரங்களும் இந்தக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்பு எவ்விதம் இருந்தனவோ, அவ்விதம் இன்றும் தனியாகவே நிற்கின்றன. யுனானி ஆயுர்வேதத்துடன் ஒன்றாகிவிட்டாற்போல் ஆங்கில வைத்யமும் ஆயுர்வேதத்துடன் கலந்து ஒன்றாகி விடுமென்று சொல்லுவது ஆதாரமற்றது. பிரத்யக்ஷ விரோதம். சிற்சில திரவியங்களுடைய பிரயோகங்கள் ஆயுர்வேத யுனானிகளில் பொதுவாக இருப்பது பற்றி இவைகள் ஒன்றாகி விட்டன என்று சொல்லுவது தகாது. அவ்விதம் பார்த்தால் ஆங்கில வைத்தியம் ஆயுர்வேதம் இரண்டுக்கும் பொதுவாக பல திரவியங்கள் உபயோகத்திலிருக்கின்றன. உண்மையில் இரு முறைகளுடைய ஒற்றுமை என்பது திரவியங்களை வைத்துச் சொல்லக்கூடாது. பாஷையை யிட்டும் சொல்லக் கூடாது. ஒற்றுமை வேற்றுமை சிகித்ஸா யுக்தியை நிர்ணயிக்கும் சாஸ்த்ரீய ஸமயங்களைக் கொண்டு தான் சொல்ல வேண்டும். இந்த திருஷ்டியில் பார்க்கும் போது ஸித்த வைத்தியமும் ஆயுர்வேத வைத்தியமும் இரண்டும் ஒன்றே. பாஷை பேதம் விஷய பேதமாகாது. இவ்விதம் ஸ்வபாவத்தில் ஒன்றாய் இருக்கும் வைத்திய சாஸ்த்ரம் கூட கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கல்லூரியில் இன்னமும் தனியாகவே கற்பிக்கப் படுகின்றது; சேரவில்லை. ஆகவே, இரண்டாவது வைத்திய சாஸ்த்ர சீர்திருத்தக்காரர்கள் எல்லா வைத்திய சாஸ்திரமும் காலாந்தரத்தில் ஒன்றாக ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கல்லூ

ரியில் சென்ற வழி பயன் தரக் கூடியதாகவில்லை என்று தெரிந்து கொள்ள முடிந்தது. எதிர்பார்த்த பயன் கிடைக்காததுடன் சில விபரீதங்களும் விளைந்தன. மாணவர்களுக்கு ஆயுர்வேதத்தையும் ஆலோபாதிக் வைத்யத்தையும் அப்படி அப்படியே சொல்லிக் கொடுத்ததில் அவர்களுக்கு வித்யார்த்தி நிலையில் தானாக மேற்படி இரண்டு சாஸ்த்ரங்களையும் ஸமந்வயம் செய்ய சக்தியில்லாததால், (இந்த ஸமந்வய சக்தி பிரபல பண்டிதர்களுக்கே அரிதாயிருக்கின்றது.) ஆயுர்வேதத்தில் அபிமானம் மிகக் குறைந்து, காலத்தின் பிரவாஹ சக்தியை அநுஸரித்து மாணவர்களுடைய ஹிருதயம் ஆங்கிலேய வைத்தியத்திலேயே இழுக்கப்பட்டு விடுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளாக நடத்திய பாடக்ரமத்தில் பையன்களுக்கு ஆயுர்வேத சாஸ்த்ரீய விஷயங்களில் முன்னைக் காட்டிலும் இப்போது ஏதாகிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கின்றதா என்று யோஜித்துப் பார்த்தோமாகில் ஒன்றுமில்லை. நமது நாட்டில் பொதுவாக வைத்திய உதவி பெருக இக் கலாசாலை உதவி புரிந்தாலும் ஆயுர்வேத சாஸ்த்ராபிவிருத்திக்காக ஏற்படுத்தப் பட்டதின் பிரதான லக்ஷ்யம் இன்னும் ஸித்திக்கவில்லை. இதற்குக் காரணம் ஆராய்ச்சிகள் செய்யப் போதிய வஸதியளிக்கப்பட வில்லை என்பது ஒரு பக்கமிருப்பினும், கல்வித் திட்டத்தில் அடிப்படையில் ஏற்பட்ட தவறுதல்தான் முக்கியமானதென்று நான் எண்ணுகின்றேன். ஆதலால் கவர்ன்மெண்டு இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்திய பாடத்திட்டங்களை மாணவர்களுக்கு ஆயுர்வேதத்தில் ஞானமும், சாமர்த்தியமும், அபிருசியும் ஸம்பூர்ணமாய் ஏற்படும்படியாக மாற்றி யமைக்க வேண்டியது மிக அவசியம்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைத் தெளிவாக்க விரும்புகின்றேன். கவர்ன்மெண்டு இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தை தமிழ் நாடு ஆயுர்வேத மகா மண்டலம் விரோத மனப் பான்மையோடு எப்போதும் அதிகமாய்க் கண்டிக்கின்றது என்றும், இது ஒற்றுமையைக் குலைக்கின்றது என்றும் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த சில ப்ரமுகர்கள் எண்ணுகின்றதை நானறிவேன். இவ்விதம் அவர்கள்

எண்ணுவதற்கு ஆதாரமேயில்லை. இப்பொழுது நான் மேற்படி கல்லூரியின் பாடத் திட்டத்தின் மாறுதலின் ஆவசியகதையைக் கூறியுள்ளதால் நான் அந்தப் பள்ளிக்கூடத்தை விரோதத்துடன் தாக்குகிறேன் என்று எப்படி எண்ணம் கொள்ளலாம்? அப் பள்ளிக்கூடத்தில் இருக்கும் இன்னின்ன தோஷங்களை விலக்க வேண்டும்; இந்த குணங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்லுவதில் எனக்கு அப் பள்ளியிலிருக்கும் ஆதரவும், அபிமானமும் தான் வியக்தமாகும். பள்ளிக்கூட நிர்வாஹிகளோ, ஆசிரியர்களோ தங்களுடைய அபிப்பிராயத்துக்கு சிறிது மாறுபட்டவர்களை அப் பள்ளிக்கூடத்தில் அபிமானமற்றவர்கள் என்று நினைத்து விடக் கூடாது என்பதே எனது கோரிக்கை. நிற்க.

உலகம் பூராவும் ஒரே வைத்திய சாஸ்த்ரமாய் அமைக்கப் படவேண்டுமென்ற சீர்திருத்தத்தை நானும் பூர்ணமாய் ஆமோதிக்கின்றேன். ஆனால் எந்த வைத்தியம் எந்த பிரகாரத்தில் உலகில் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்பதில் தான் எனது அபிப்பிராயம் வேறு. முதலில் சொல்லியவர் ஆலோபாதிக் வைத்தியந்தான் வைக்ஞானிக புஷ்டியுள்ளது. அதே உலகில் எங்கும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றார். ஆயுர்வேதமே விஞ்ஞானத்திற் சிறந்தது; பாரத தேசத்தின் ஆயுர்வேதமே உலகம் பூராவும் பிரதிஷ்டையாக வேண்டும் என்று நான் கூறுகின்றேன். இதெல்லாம் ஆக்கிரஹ வசத்தினால் கிளம்பும் விதண்டாவாதங்களாகும். ஸத்தியமாக இந்தியாவின் இன்றைய சூழ்நிலையை நிதானித்துப் பேசுவோமாகில் உலகம் பூராவாக ஒரே வைத்திய சாஸ்திரம் நிறுவுவதைப்பற்றிச் சிந்தனை செய்தல் அஸம்பாவிதமான ஸாகஸச் செயலாகும். இப்போது இந்தப் பிரயத்தினத்திற்கு நாம் ஆரம்பித்தால் ஆயுர்வேதம் அழிவது நிச்சயம். ஆயுர்வேதத்தின் விஞ்ஞானத் தன்மைக் குறைவால் அழியும் என்ற பீதியில்லை; அரசியல் அவலம்பம் இல்லாததால் தான் ஆயுர்வேதம் அழிந்துவிடும் என்று கூறுகின்றேன். ஆயுர்வேதத்திற்கு அரசியல் ஆதரவு பூர்ணமாய் கிடைத்து, அதன் விஞ்ஞானப் பெரு

வேதத்தில் இருக்கும் குறைவுகளை அகற்றி, தேவையாயிருக்கும் அம்சங்களில் இதர வைத்தியப் பிரயோகங்களைச் சேர்த்துப் பூர்த்தி செய்து, ஆதிகாலத்தில் ஆயுர்வேதம் நமது நாட்டில் இருந்தது போல், இன்றைக்கும், நாளைக்கும், இதர வைத்திய சாஸ்திரங்களுடைய ஸகாயமின்றியே, சுதந்தரமாக மக்களுக்குத் தேவையானபடி எல்லாவித மருத்துவ உதவியும் ஆயுர்வேதம் தனிச்சிறப்புடனளிக்க வல்லதாகச் செய்துவிட வேண்டும். இது எளிது. உத்தமம். இக்காரியம் பூர்த்தியாகும் வரை ஆலோபாதிக் வைத்தியத்தை இந்தியாவில் சிறிதுகாலம் காப்பாற்ற வேண்டியதவசியமே யாகும். இந்தியாவில் ஆலோபாதிக் வைத்திய மொன்றினாலேயே பூர்த்தியான வைத்திய உதவி அளித்துவிடத் திட்டம் போடுவது அறியாமையே யாகும்.

ஆயுர்வேதக் குறைவுகளை அகற்றும் வழி.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் இருக்கும் குறைவுகளைப் பூர்த்தி செய்யவேண்டி, ஆயுர்வேத கலாசாலையில் பயிலும் மாணவர்களுக்கு ஆலோபாதிக் வைத்திய சாஸ்திரத்தை அப்படியே போதித்து விடுவதால் ஒருக்காலும் ஆயுர்வேதத்தின் குறைவு விலகினதாக ஆகாது. சர்க்கார் இந்திய வைத்தியக் கல்லூரியில் 25 வருஷ பாட அநுபவம் இதை நிச்சயமாக்கிவிட்டது. பின் என்ன வழி பின்பற்ற வேண்டும்? எல்லா விதப் பயன்களையும் அடையும்படியான ஒரு வழியை விமர்சித்துக் கூறுகிறேன். கேளுங்கள்.

ஆயுர்வேதாபிவிருத்திக்கு அதன் கல்வித் திட்டமே மிகப் பிரதானம். முதன் முதலில் விஷய வாரியாகப் பாடக் கிரந்தங்கள் நல்ல பண்டிதர்களைக் கொண்டு எழுதப்படவேண்டும். ஆயுர்வேதத்திற்கு மொத்தம் 5—6 புஸ்தகங்கள் தானிருக்கின்றன என்று சிலர் கூறும் அவதூறு கூறுபவருடைய பைத்தியத்தையே அறிவிக்கின்றது. வேதங்களிலும், வேதாங்கங்களிலும், ஸ்மிருதி, இதிகாஸ புராணங்களிலும் கூட ஆயுர்வேதோபதேசம் ஆங்காங்கு வாரி இறைந்து கிடக்கின்றது. அவைகளிலும் சரக

சுச்ருதாதி ஸம்ஹிதாக் கிரந்தங்களிலும், நிபந்தக் கிரந்தங்களிலும் இருக்கும் விஷயங்களை வகுத்துக் கிரந்தங்கள் தனித் தனியே முதலில் எழுதி விடவேண்டும். என்ன பாஷையில் என்ற கேள்வி இக்காலத்தில் உடனே எழும். முதல் மூலக் கிரந்தங்கள் யாவும் முதலில் ஸம்ஸ்கிருதத்தில் தான் எழுதப்பட வேண்டும். பின்பு பிராந்தீய பாஷைகளில் மொழிபெயர்க்கப் படலாம். இக்காலத்தில் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் வெவ்வேறு பொது பாஷையைப் பற்றி வியவகாரம் பண்ணிக் கொண்டிருந்தபோதிலும் ஆயுர்வேதத்தைப் பற்றிய வரையில் இந்தியா பூராவும் பொதுவாயிருக்கும் பாஷை சுத்த ஸம்ஸ்கிருதமே. ஸம்ஸ்கிருதத்தில் தான் பிராசீனக் கிரந்தங்களும் பிரதானமாயிருக்கின்றன. ஸம்ஸ்கிருத ஞானமின்றி ஆயுர்வேதமென்ன; அதன் மூலாதார சாஸ்திர மென்ன— இரண்டும் சிறிதுமறியவே முடியாது. ஆதலால் ஸம்ஸ்கிருதமே ஆயுர்வேதத்தின் பாஷை.

விஷய வாரியாக எழுதப்பட்ட ஆயுர்வேதக் கிரந்தங்கள் தகுந்த கர்மாப்பியாஸவஸதியுடன் கலாசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டும். அந்தந்த விஷயங்களில் ஆயுர்வேதத்தில் தேர்ச்சி பெற்ற வைத்திய பண்டிதர்கள் மேல்கொண்டு ஆராய்ச்சி செய்து இதே விஷயத்தில் மற்ற வைத்திய சாஸ்திரக்காரர்கள் சொல்லியுள்ளதைத் தெரிந்துகொண்டு அவைகளை ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்குப் பரீக்ஷைகள் செய்து உபகாரமானதாக யிருப்பின் அந்தப் புதிய விஷயங்களை ஆயுர்வேத பரிபாஷாப் பிரகாரம் கிரந்தங்கள் எழுதி ஆயுர்வேதத்தில் சேர்த்து பிறகு அதைப் பள்ளிக்கூடத்தில் மாணவருக்குக் கற்பிக்கவேண்டும். இவ்விதம் செய்வதில் ஆயுர்வேத பண்டிதர்கள் ஸித்தவைத்தியம், யுனானி, ஆலோபாதிக், ஹோமியோபாதிக் எல்லாவற்றிலு மிருப்பதை யெல்லம் பரீக்ஷித்துப் பிரயோஜனமானதை எடுத்துக்கொண்டு விட்டால் இந்தியாவில் ஒரே வைத்தியம் வெகு சீக்கிரத்தில் நிலைத்துவிடும். ஆயுர்வேத சித்தாந்தப்படிக்கு பரீக்ஷை செய்யாமலும், ஆயுர்வேத பரிபாஷையில் ஸம்ஸ்கிருதத்தில் எழுதாமலும் வேறு பாஷை

மையால் ஸ்தாபித்த பிறகுதான் மற்றதை யோஜிக்கவேண்டும். வெளி தேசத்தைப் பற்றி விசாரம் நமக்கு இப்போது வேண்டாம். நமது பாரத வருஷத்தில் இப்பொழுது வைத்திய சாஸ்திரம் எவ்விதம் அமைக்கப் பெற்றால் உத்தமமென்று ஆலோசித்து நடத்துவதே நமது முதற் கடமை. ஆயுர்வேதம் விஞ்ஞானப் பெருமை எவ்வளவு பெற்றிருந்தாலும் இன்றைக்கு அதன் பிரயோக சாமர்த்தியம் மிகவும் குறைந்துள்ளது. தனி ஆயுர்வேதத்தால் இப்பொழுது மக்களுக்கு சில அவசியமான மருத்துவ உதவி பூர்த்தியாக அளிக்கமுடியாது. ஆலோபாதிக் வைத்தியத்தின் விஞ்ஞானத் தன்மை சஞ்சலமாய் மாறிக் கொண்டிருந்தாலும் பிரயோக ஸௌகர்யத்தை விரிவாகப் பெற்றுள்ளதால், ஆயுர்வேதத்தால் முடியாத சில அம்சங்களில் வைத்திய உதவி மக்களுக்குக் கொடுக்கவல்லதா யிருக்கின்றது. இவ்விதமிருப்பினும் இந்தியாவின் ஜனத்தொகையில் 15–20 சத விகித மனிதருக்குக் கூட ஆலோபாதிக் வைத்தியம் கிடைக்கப் பண்ணமுடியவில்லை. ஆயுர்வேதமே இன்றைக்கும் 80—85 சதவிகித ஜன ஸமுதாயத்திற்கு மருத்துவ உதவி கொடுக்கின்றது. இந்த நிலையில் உலக வைத்திய சீர்திருத்தக்காரர்கள் இந்தியாவில் ஆயுர்வேதத்தை ஆதரிக்கக் கூடாதென்று நினைத்தாலும், ஆயுர்வேத பக்தர்கள் இந்தியாவில் ஆயுர்வேதந்தவிர ஆங்கில வைத்தியக்காற்றே வீசக்கூடாது என்று நினைத்தாலும் தேச க்ஷேமத்தை யுத்தேசித்து இரண்டும் பிசகேயாகும்.

ஆனால் ஏழை இந்தியாவில் பலவித வைத்தியங்களை வளர்க்கப் பணமில்லை. ஒரே வைத்தியமா யிருந்தால் நன்ருய் வளர்க்க முடியும். மக்களுக்கும் அதிக ஸௌகர்யம். இந்நிலையில் செய்யப்பட வேண்டியதென்னவென்று நிச்சயிப்பது சிரமமில்லை. ஆயுர்வேதமே இன்றைக்கும் இந்தியாவில் பெரும்பாலோருக்கு வைத்திய உதவி கொடுத்துக் கொண்டிருப்பதாலும், விஞ்ஞானத் தன்மையிலும் ஆயுர்வேதமே ஆலோபாதிக்கைப் பார்க்கிலும் சிறந்ததானதாலும், ஆயுர்வேதத்தையே அதன் தாய் நாடாகிய இந்தியாவில் ஸ்திரமாய்ப் பிரதிஷ்டை செய்ய வேண்டியது. ஆயுர்

யில் வேறு கொள்கையில் உள்ளதை ஆயுர்வேதக்காரன் பயின்ருல் ஒரு பிரயோஜனமுமில்லை. அந்நிய விஷயங்கள் எதையுமே ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்கு ஸமந்வயம் செய்யப்படாத நிலையில் வித்யார்த்தி நிலையி லிருப்பவனுக்குச் சொன்னுல் வியாகுலமும், வியாமோஹமும்தான் ஏற்படும்.

ஆயுர்வேத பரிபாஷைப்படிக்கு சித்த வைத்தியத்தையும் யுனுனியையும் எளிதில் எழுதிவிடலாம். ஆலோபாதிக் வைத்தியத்தையும், ஹோமியோ வைத்தியத்தையும் ஆயுர்வேதரீதியில் ஸமந்வயம் செய்வதும் எழுதுவதும் அசாத்தியமான கார்யம். ஏன் எனில், ஆலோபாதிக் வைத்தியமானது Basic sciences என்று சொல்லப்படும் தனியான மூலாதார தர்சனங்கள் அதாவது Physics, Chemistry, Natural science, Mathematics இவைகளுடைய தத்துவ விசேஷங்களின் மேல் ஸ்தாபிக்கப் பட்டு அந்த பரிபாஷையில் எழுதப்பட்ட சாஸ்திரம்; ஆயுர்வேதத்திற்கு அவை போன்ற தனியாக மூலாதார தர்சனமில்லை; ஆகவே ஆலோபாதிக் சாஸ்திரத்தை ஆயுர்வேதப்படி எழுதமுடியாது. இந்தப் பூர்வபக்ஷம் பாரதீய தர்சனங்களுடையவும் கலைகளுடையவும் மகத்துவத்தைப் பற்றி சிறிதும் அறியாததையே காட்டுகின்றது. உலகில் இன்றைய தினத்தில் எவ்வளவு சாஸ்திரங்களும் கலைகளு மிருக்கின்றனவோ, அவைகள் யாவற்றுக்கும் பீஜரூபமான மூலம் அல்பமான அளவிலாவது நமது ஆரிய தேசத்தின் பிராசீன வித்யைகளில் இல்லாமலில்லை யென்று நிச்சயமாகச் சொல்லலாம். இங்கு ஸூத்ரரூபமாய் காணப்படும் சாஸ்திரங்களுக்கு விசேஷ வியாக்கியான ரூபங்களாகவே நவீன விஞ்ஞானங்களின் ஆராய்ச்சி முடிவாகின்றது. ஆதலால் இன்று உலகிலிருக்கும் நவீன தர்சனங்கள் எல்லாவற்றையும் ஆரியர்களுடைய அந்தந்த தர்சனப் பிரிவுகளில் விஸ்தாரப் படுத்தி கிரந்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதுவது மிகக் கஷ்டமான கார்யமல்ல. ஸம்ஸ்கிருத பாஷையிலும், ஆர்ய தர்சனங்களிலும் பாண்டித்யம் பெற்றவர்கள், ஆங்கிலபாஷையையும் அதிலுள்ள தர்சனங்களையும் அப்ய

சித்து அந்த வித்வான்களுடனும் கலந்து சிரமம் எடுத்துக் கொண்டால் மூலாதார தர்சனங்களையும் நமது சாஸ்திரத்தில் சேர்த்துக் கிரந்தங்கள் எழுதியாகிவிடும்.

வாஸ்தவத்தில், ஆயுர்வேதத்திற்கு சாஸ்திரீயமான அபிவிருத்தி அதன் மூலாதார தர்சனத்திற்கே வசமானது. பாரத வர்ஷத்தில் முன்பே யிருக்கும் மூலாதார தர்சனங்களிலும் அவசியமான அபிவிருத்திகளை நவீன விஞ்ஞானங்களிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதே. ஆனால் நான் மேலே ஆயுர்வேத விஷயத்தில் கூறியபடிக்கு அந்தந்த மூல தர்சனங்களிலும் நவீன தர்சனங்களை ஜீர்ணம் செய்து கொள்ளவேண்டும். இல்லாவிடில் விபரீதமே விளையும். பாரதீய பிராசீன தர்சனங்களும், கலைகளும், நவீன தர்சனங்களையும், கலைகளையும் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டால்தான் இந்தியாவிற்கு அடைந்த சுதந்திரம் எல்லா விதத்திலும் நிலைக்கும்; இல்லாவிடில் பிறருக்கு இந்தியா என்றைக்குமே அடிமையாக இருக்கவேண்டி வரலாம்.

இவ்விதம் ஆயுர்வேத சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்வதே யதார்த்த அபிவிருத்தியாகும். சாசுவதமான அபிவிருத்தி வளர்ந்துகொண்டே போகும். ஆதிநாளில் ஆர்ய தேசம் எவ்விதம் உலகிற்கு ஆசார்யனாக விளங்கிற்றோ, அவ்விதம் திரும்பவும் விளங்க முடியும்.

ஆயுர்வேதத்தைப் புனருத்தாரணம் செய்யும் விஷயத்தில் இப்பொழுது நமது இந்தியாவில் பொதுமக்கள், அரசாங்கம், அதிலும் சென்னைமாகாண அரசாங்கம், அதிலும் நமது தமிழ்நாடு இவைகளுடைய மனப்பான்மையைக் கவனித்தால் ஆயுர்வேதத்திற்கு யதார்த்தமான உத்தாரணம் ஏற்படுமாவென்று நான் ஸந்தியத்தில் மிக மிக பயப்படுகின்றேன். ஆதலால் ஆயுர்வேதம் உண்மையான அபிவிருத்தி அடையும்படி செய்ய ஆயுர்வைதிகர்கள் நாம் உண்மையுடனும் ஒற்றுமையுடனும் எப்பொழுதும் முயற்சியுடையவர்களாக இருக்கவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்.

பெரியோர்களே !

இப்போதைய கால நிலை, ஆயுர்வேதத்தின் சாஸ்திரீய மான அபிவிருத்திப் பிரகாரங்கள், நமது கடமை இவை களில் எனது சிறிய புத்தியில் பட்டதைத் தங்கள் முன் னிலையில் தெரிவித்துள்ளேன். மேற்கொண்டு தாங்கள் உசிதாநுசிதத்தை ஆலோசித்து நாம் செய்யவேண்டிய கார்யத் திட்டங்களை வகுத்துக் கட்டளையிடும் கார்யங் களில் என்னாலியன்ற ஊழியம் புரிகின்றேன்.

ஆயுர்வேதத்திற்கு ஸேவைபுரிய எனக்கு ஸந்தர்ப்ப மளித்து என்னை தந்யனாகச் செய்துள்ள உங்கள் எல்லோ ருக்கும் என் கிருதக்ஞதையை திரும்பவும் நமஸ்காரத்தி னால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

भिषजां साधुवृत्तानां भद्रमागमशालिनाम् ।
अभ्यस्तकर्मणां भद्रं भद्रं भद्राभिलाषिणाम् ॥

शिवार्पणमस्तु ।

ஸ்ரீவிலாஸம் பிரஸ், ஸ்ரீரங்கம்.

உ

15-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம், கும்பகோணம்.

3—10—48 & 4—10—48.

வரவேற்புக்கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் K. Rm. சிங்காரம் செட்டியார் அவர்களின் வரவேற்புரை.

தமிழ் நாட்டில் அறிவையும், பற்பல கலைகளையும் பரப்புவதில் பிரஸித்திபெற்ற ஸ்தலங்களில் சிறந்தது இந்த நகரம்.

மேதையையும், நுண்ணறிவையும் செழித்தோங்கச் செய்யும் காவிரியாற்றின் பிரபாவம் இந்நகரில் நன்கு வெளித்தோன்றி உலகமெங்கும் மேதாவிகளெனப் போற்றப்பட்ட பல அரிய மாபெருந் தலைவர்களை நமக்கு ஈந்தது இந்தப் புண்யஸ்தலம்.

மற்றும் நமது ஹிந்துமதத்தின் புராதன சின்னங்களும், என்றும் குன்றாத தேஜஸ்ஸுடன் விளங்கும் எண்ணுதற்கரிய பல தேவாலயங்களால் பிரஸித்தி பெற்றது இந்நகரம். பழம் பெருங் கலைகளுக்கு உறைவிடமான இந்நகரில் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இம்மஹாநாட்டை நடத்த இசைந்தது மிகவும் பொருத்தமானது. மேலும் இம்மஹாநாடு திவான்பஹதூர் **ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால்** திறக்கப்படுவது இந்நகரின் பெருமைக்கு உரைகல் போலல்லவா இருக்கிறது.

இத்தருணத்தில் எங்கள் வேண்டுகோளை அன்புடன் அங்கீகரித்து இச்சம்மேளனத்தைத் திறக்க இசைந்த திவான்பஹதூர் ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நகரத்துக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் எங்களது அழைப்பிற்கிணங்கி, ஆயுர்வேதஸேவையில் ஈடுபட்டு, ஆயுர்வேதமும் மற்ற பாரதீயகலை-விஞ்ஞானங்களுடன் செழித்தோங்கவேண்டுமென்ற முக்கியக் கருத்துடன் இவ்வாயுர்வேத மஹாநாட்டில் பிரஸன்னமாயிருக்கும் எல்லோருக்கும் நல்வரவாகுக! தங்களுக்கு இச்சமயம் நல்வரவு கூறும் பாக்கியம் எமக்குக் கிடைத்திருப்பதுபற்றி அளவிலா ஆனந்தமடைகிறோம். எங்களது ஆதித்யத்தைப் பெற்று தங்களது ஸேவையையும் பூர்ணமாக திட்டஞ்செய்து கொண்டு ஸேவையில் பிரவர்த்தித்து எங்களையும் க்ருதார்த்தர்களாக்குவீர்களாக என முதலில் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்.

பெரியோர்களே !

சாஸ்த்ரீயமான சர்ச்சைகளோ அல்லது அம்மாதிரியான தர்க்கவாதங்களோ எனது சக்திக்குப் புறம்பானது. அவைகள் தங்களைப்போன்ற வைத்யர்களின் காரியம். ஆனால் என் மனதில் பட்ட சிற்சில விஷயங்களைத் தங்களிடம் பிரஸ்தாபிக்க எண்ணுகிறேன்.

நமது தௌர்பாக்யத்தினால் இக்காலத்தில் வைத்யகலையின் அவசியம் அதிகமாகிக்கொண்டே வருகின்றது. நமது சூழ்நிலையின் தோஷமோ, அல்லது தெய்வத்தின் சோதனையோ, அல்லது போதிய வைத்யஸஹாயம் கிடைக்காததோ

இக்காலத்தில் பலவிதமாய்ப் பலருக்கு ஏற்படும் வியாதிகளுக்குக் காரணமாகலாம். ஆனால் முக்யமாக நமது ஸமாஜத்தில் நாம் பலகாலமாய் அனுஷ்டித்துவரும், ஆரோக்யவழிகளை அனுஷ்டித்துவாராததும், பல்வேறு சூழ்நிலைகளில் சிக்கிய நாம் நமது பிழைப்பின்பொருட்டு, நிர்ப்பந்தவசமாய் ஏற்றுக்கொள்ளும் உத்யோகப்போக்கில் நாளடைவில் நோயற்ற வாழ்வில் பற்று குறைந்துவிட்டதும் முக்கியமாகின்றது. சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குள் நகரங்களைக் காட்டிலும் அதிகமாக நோயற்ற வாழ்வு வாழ்ந்த கிராமவாழ்க்கையிலும் நாகரீகவாழ்க்கை என்ற ஓர் ஆபாஸவாழ்க்கை ஏற்பட்டு அங்கும் நோய்கள் பரவிக்கொண்டே வருகின்றன. இந்நோய் நொடிகளை வராமல் தடுக்க தகுந்த ப்ரயத்னங்கள் இதுகாறும் பலதடவை பலவிதமாக எடுத்துவந்தும் எதுவும் பூர்ண பலனை அளிக்கவில்லை.

நமது அதிர்ஷ்டவசத்தினால் பாரதத்தாய் நற்றவப்புதல்வர்களால் பல வருஷங்களின் கடுந்தவத்தால் நிறுவிக்கப்பட்ட ஸ்வதந்திர ஸாம்ராஜ்யம் இன்று இந்தியாவின் சோகம் ததும்பிய 5–6 நூற்றாண்டுகளின் சரிதையை மிகச்ரமப்பட்டு மாற்றி வருகிறது. இச்சேவையில் நமது தலைவர்கள் ஜனங்களின் ஆரோக்யத்திற்கும் முக்யஸ்தானம்கொடுத்து அதற்கு வேண்டிய ப்ரயத்னங்களைத் தீவ்ரமாய் செய்து வருகிறார்கள். அவர்களின் ப்ரயத்னம் நன்கு கைகூடுமாறு பகவானை நாம் ப்ரார்த்திப்போமாக.

நமது இந்தியாவில் மனிதனின் சராசரி வாழ்வு 25-வருஷங்கள் என்பது ஒரு கோரமான உண்மை. அமெரிக்கா போன்ற தேசங்களில் 45–50-வருஷங்கள் மனிதனின் சராசரி வாழ்வு என்பது அத்தேசத்தினர்கள் கொடூரமான ரோகங்களைத் தடுப்பதில் பூர்ணமாக ஈடுபடுவதாலும், நோய்

களை வராமல் தடுப்பதில் சிறந்த ஆரோக்ய வழிகளை அா சாங்கமே செய்வதாலும், அவ்வப்போது பிரசாரத்தினல் ஒவ்வொருமனிதனும் தனித்தனியே அனுஷ்டிக்க வஸதி யளிப்பதாலும் ஸாத்யமாகின்றது.

இந்தியாவின் இன்று நமது ஜனஸமுதாயத்தின் வாழ்க் கையை ஆரோக்யத்துடன் செழித்தோங்க செய்யும் காரியங் களில் இரண்டு முக்யமானவை. (1) அநேக கொடூரமான ரோகங்களினல் பாதிக்கப்படும் ஜனஸமுதாயத்திற்கு அவர் களுக்கு ஸுலபமாக ஏழை தனவான் என்ற வித்தியாஸ மின்றி வியாதிக்கேற்ற உயர்ந்த சிகித்ஸை கிடைக்குமாறு செய்து, இக்கொடூர வியாதிகளின் சக்தியைக் கிரமமாய்க் குறைப்பது. (2) நமது முன்னேர்களின் அனுபவஸித்த மான அநேக ஆரோக்யவழிகளை அனுஸரிக்கவும் மற்றும் ஆரோக்யத்திற்கு இன்றியமையாததான பலசூழ்நிலைகளை ஏற் படுத்திக் கொடுத்து ஜனஸமுதாயத்தின் மனதில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற ஒரு தீவ்ரமான நோ யற்ற வாழ்வில் பக்தி ஏற்படுத்துவது. இவ்விரண்டு காரியங் களிலும் பூர்ணமாக ஈடுபட்டுப் பலனளிக்கச் செய்வதுதான் தற்காலம் சாரீரமாகவும் மானஸீகமாகவும் குன்றியிருக்கும் ஆரோக்யத்தைத் திருப்பி ஜனஸமுதாயத்திற்கு ஈடு செய்ய சாத்தியமாகும். தற்சமயம் அதிகமாக ஒவ்வொரு இடங்க ளிலும் பூர்ணவஸதியுள்ள ஆஸ்பத்திரிகள் திறக்கவேண்டு மென்று ஜனங்கள் சர்க்காரிடம் முறையிட்டுக்கொண்டே இருக்கிருர்கள். வியாதி ஏற்பட்டபிறகு அதற்குத் தகுந்த சிகித்ஸை செய்ய ஆஸ்பத்திரிகள் தேவைதான். ஆனல் தேசத்தில் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கும் ஆரோக்ய சாலைகள்தான் தற்சமயம் மிகவும் அவச்யம். வியாதிகளைப் பலவிதமாகப் பரவச்செய்யும் சூழ்நிலையை நாம் மாற்றிக் கொள்ளாமல் வியாதிவந்த பிறகு அதைத் தடுக்க முயற்சிப்

பது புத்திசாலிகளின் காரியமல்ல. இவ்விதமான ஆரோக்ய வாழ்வை ஜனங்களுக்கு அளிக்கும் ஸேவையில் தாங்கள் முக்யமாக ஈடுபடவேண்டுமென்பது எனது ப்ரார்த்தனை.

2. நமது முன்னோர்களின் ஆரோக்ய வாழ்வு.

ஆயுர்வேதம் தற்சமயம் இருக்கும் வைத்யவஸதி தேவையில் எவ்வாறு ஈடுகொடுக்கும் என சிந்திக்கு முன் நம் முன்னோர்களின் நோயற்ற வாழ்வைப்பற்றிய சிந்தனை அவசியமாகின்றது.

19-வது நூற்றாண்டுவரை நமது தேசத்தின் ஆரோக்யத்தைக் காப்பாற்றிவந்தது நமது தேசியவைத்யம்தான். அன்றிருந்த நமது ஸமுதாயத்தின் நோயற்ற வாழ்விற்கும் இன்று நாம் இருக்கும் நோய்களால் சூழப்பட்ட நிலைக்கும் ஸம்பந்தமே கிடையாதென கூறலாம். அதன் காரணம் என்ன? நமது முன்னோர்கள் ஆரோக்யவழிகளைக் கடைப்பிடிப்பதில் சில விசேஷமுறைகளைக் கையாண்டுவந்தார்கள். இன்று நாம் நமது ஆரோக்யத்துக்கு அரசாங்கம்தான் பொருப்பாளி எனக் கருதி நமது பொருப்பை உணராது வாழ்ந்து வருவதுபோல் அவர்கள் வாழவில்லை. நமது கண்ணிற்குமுன் நமது மூதாதையரின் வாழ்க்கையையும் நமது வாழ்க்கையையும் பார்க்கிறோம். அவர்கள் தனது ஆரோக்யத்திற்குத் தனது தேஹம், மனம், புத்தி இவைகளின் நேர்மையான நடத்தையே சிறந்த வழிகளாகக் கண்டு அவைகளைப் பூர்ணமாய் பரிபாலிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். அதனால்தான் நமது வைத்யக்ரந்தங்களில் மனதில் சாந்தி, வைராக்யம், அன்பு, அஹிம்ஸைபோன்ற பல அபூர்வகுணங்களைக் கடைப் பிடித்தலும் சரீரத்தில் உள்ளும் புறமும் சுத்தியை சாஸ்த்ரமுறைப்படி கடைப்பிடித்தலும், தர்மம் நீதிவழுவாது நடத்தலும், ஆரோக்யத்திற்கும்

நோய் நீங்குவதற்கும் சிறந்த ஸாதனமாகக் கருதியிருந்தனர். ஆனால் தர்மங்களைக் கூறுவதற்காகத் தனியே ஆரம்பித்திருக்கும் தர்மசாஸ்திரங்களில் நம் முன்னோர் ஆரோக்யத்திற்கு ஸாதனமான நன்னடத்தைகளை தர்மஸாதனமாகக் கருதியிருக்கிறார்கள். இவ்விதம் தர்மத்திற்கும் ஆரோக்யத்திற்கும் இன்றியமையாத நன்னடத்தைகள் இக்காலத்திலுள்ள ஆரோக்ய சாஸ்திரங்களில் இடம் பெறாததுதான். நம் முன்னோரைவிட நாம் குறுகிய காலத்தில் ஆரோக்யம் குன்றி தேஹம், மனம் இவைகளில் வலிவு குன்றியவர்களாகக் காணப்படுகிறோம்.

நம் முன்னோர்களின் சரித்திரம் (History) போன்றிருக்கும் ஆயுர்வேதம், தர்மசாஸ்திரங்களைத் தவிர நமக்கு இப்பொழுது வேறு எது ஆரோக்கிய வழிக்கு உகந்த ஸாதனத்தை போதிக்கும் என சிந்தித்துப் பார்த்தால் ஆயுஸ்–தீர்க்ககாலம் ஆரோக்யமாய் உயிருடன்வாழ்வது, வேதம்–இதை அறியும் வழி–ஆகிய ஆயுர்வேதத்தைத் தவிர வேறு எதுதான் கதி ?

3. நமது தமிழ் நாடும், ஆயுர்வேதமும்.

நமது ஜனஸமுதாயத்திற்குப் பூர்ண வைத்ய வஸதியளிக்கமுக்கியமாய் சிலவிஷயங்கள் கவனிக்கப்படவேண்டும்.

ஏழை, தனவான் என்பதுபோன்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் ஸுலபமாக வைத்ய வஸதியளிக்க வைத்யர்கள் அதிகமாகக் கிடைக்கவேண்டும். வைத்யம் செய்ய உபகரணங்களான மருந்துகள் எளிதில் குறைந்த விலையில் தயாராக இருக்கவேண்டும். வைத்யர்களுக்கு ரோகி ஸேவையில் கடமைபுத்தியும், ஆவலும், ரோகிகளுக்கு ஆரோக்யமடைந்ததும் அதைப் பரிபாலிப்பதில் கடமைபுத்தியும் மிகவும் முக்கியமென்பது சொல்லாமல் தெரியும்.

இவ்வித வஸதி அளிக்க ஆயுர்வேதம் மிகவும் பொருத்த மானது என எனது அபிப்பிராயம்.

எவன் எந்த தேசத்தில் பிறந்தவனோ, வளர்கிறானோ அவனுக்கு அத்தேசத்தில் உண்டான ஔஷதங்கள்தான் ஹிதம் என்பது சான்றோர் வாக்கு.

இக்கூற்றில் பல உண்மைகள் உள. (1) ஒவ்வொரு பிரதேசத்திலும் ஜலம், வாயு இவைகள் சூழ்நிலையில் மாறுதலினால் ஒவ்வொரு பிரதேசத்தின் சீதோஷ்ணஸ்திதியும், அதில் பிறந்த மனிதன், செடி, கொடிகள் மற்றும் ஸ்தாவரஜங்கமப் பொருள்களும் உடல்கூற்றில் முற்றும் மாறுபட்டே காணப் படுகின்றன. இதைக் கருதியேதான் ஆயுர்வேதத்தைப் பிரசாரம் செய்த முன்னோர்கள் அந்தந்த தேசத்தில் கிடைக்கும் பொருள்களைக்கொண்டே அந்தந்த தேசத்தில் பிறந்து வளரும் மனிதர்களுக்குச் சிகித்ஸை செய்வதை முக்யமாகக் கருதி, அந்தந்த தேசத்துக்குத் தக்கவாறு வைத்யக் கிரந்தங்களை அமைத்துள்ளனர். அதனால்தான் இன்று நமது தேசீய வைத்யம் ஆயுர்வேதம், ஸித்தம் என இரண்டுவித பெயருடன் காணப்படுகின்றன. இவ்விரண்டு வைத்யங்களின் லக்ஷ்யத்தையும் த்ரிதோஷபஞ்சபூத ஸித்தாந்தங்களையும் தர்மத்தைப் பின்பற்றிய தேஹம், மனம் இவைகளின் நன்னடத்தைதான் ஆரோக்யத்தின் அடிப்படைக் காரணம் என்பது போன்ற மூலதத்துவங்களிலும் ஒன்றேயாகினும், தமிழ் நாட்டிலே கிடைக்கும் ஔஷதங்களைக் கொண்டே இவ்வைத்யம் செய்யப்பட்டு வந்தமையால் தமிழ் நாட்டினிடையே இதன் பிரசாரம் வலுத்துள்ளது. மற்றும் ஆயுர்வேதமும் ஸித்தவைத்யமும் பெயரளவில்தான் வேறு என்பதற்குப் பல பல உதாரணங்கள் உள. அவை தங்களுக்கு விவரித்துரைக்க வேண்டிய அவசியம் ஏதுவுமில்லை என்பதை உணர்ந்து இத்துடன் நிறுத்திவிடுகிறேன்.

முடிவில் முக்யமான விஷயம் ஒன்றைத் தெரிவிக்க முற்படுகிறேன்.

ஆயுர்வேதமும், ஸித்தமும்தான் நமது தமிழ்நாட்டின் ஆரோக்யத்தைக் காப்பாற்றத் தகுந்த சக்தி வாய்ந்ததாகும் என்பது எனது பூர்ணநம்பிக்கை.

ஆனல் தற்சமயம் எங்கும் சிகித்ஸை ஸேவை செய்து வரும் வைத்யநண்பர்களிடையே காணும் ஒருவிதக்குறையை தங்களிடம் உரைப்பதைத் தாங்கள் வேறுவிதமாய் எண்ண மாட்டீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

நமது வைத்யசாஸ்த்ரத்தில் ஆராய்ச்சியினுல் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டியவைகள் எதுவும் இருப்பதாகத்தெரிய வில்லை. ஆனல் நமது வைத்யசாஸ்திரம் வைத்யம், தர்ம சாஸ்த்ரம், யோகநூல்கள் போன்ற பல பிரிவுகளில் மறைந்திருக்கின்றன.

அகஸ்தியர், திருமூலர், நித்தியநாதர்போன்ற மாமுனிவர்கள் வைத்யசாஸ்திரம் தனியே எழுதியபோதிலும் அவைகளில் ஒவ்வொரு இடத்திலும் யோகமுறைகள், தர்மவழிகள் இவைகளைப் பிணைத்துத்தான் எழுதியிருக்கிறுர்கள். இம்மாதிரியே சரகர், ஸுச்ருதர்போன்றவர்களும் வைத்யசாஸ்திரங்களின் அடிப்படை சாஸ்திரங்களாக நியாயம், மீமாம்ஸை, ஸாங்கியம்போன்ற சாஸ்திரங்களைக் கூறுகிறுர்கள். இந்த அடிப்படை சாஸ்திரங்களைப்பற்றிய அந்தந்த சாஸ்திரங்களின் மூலக்கருத்தைப் பூர்ணமாய் அறிந்தாலல்லாது அந்த சாஸ்திரங்களை நமது இஷ்டப்படி தற்காலம் பயனளித்துப் பரிமளிக்கும்படி செய்யமுடியாதென்பது உண்மை.

ஆனல் திருமூலரின் யோகநுட்பங்களையறிய நமது அழகிய தமிழ்மொழியில் நல்ல பாண்டித்யமும், சரக, ஸுச்ரு

தர்களின் உண்மை அபிப்பிராயங்களை யறியவும், நியாய, தர்க்க நுட்பங்களை யறியவும் வடமொழியில் நல்ல பாண்டித்ய மும் பெறுவது இன்றியமையாததாகின்றது.

தற்காலம் இந்திய வைத்யப்படிப்பில் வெறும் மொழி பெயர்ப்பினாலும், தேவைக்குகந்ததென நமக்குப் புலப்படும் சில பாகத்தை மட்டும் போதித்தலாலும், வைத்யசாஸ்திரங் களின் பல பாகங்கள் நமக்குப் புரியாமலேயே கிடக்கின்றன. இரு மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பவர்களையே வைத்யம் பயிலச்செய்வதுதான் மிகவும் உத்தமம். தற்கா லம் வைத்யம் பயிலும் மாணுக்கனிடையே இக்குறை மிக வும் அதிகம் காணப்படுகின்றது. இதில் மாணுக்கர்களை குறை கூறுவது தகாது. பாடதிட்டம் வகுப்பவர்களே இதற்கு முக்ய காரணம்.

இவ்விதத் தவறுதல் ஏற்படாமல் இந்திய வைத்யசாஸ் திரத்தைப் பூர்ணமாகப் பயின்ற மாணுக்கர்களை விருத்தி செய்து ஜனஸமுதாயத்தின் பூர்ண ஆரோக்யஸேவையில் ஈடுபடுவீர்களாக.

ஸ்வதந்திர இந்தியாவில் ஜனத்தலைவர்களே அரசாங்கத் தை நடத்துவதால் நம் குறைகளை நியாயமான முறையில் எடுத்துரைத்தால் நிச்சயம் செவிசாய்த்து ஆவன செய்வார் கள். தனிப்பட்ட முறையில் கூறுவதை விட ஸங்கத்தின் மூலம் தெரிவிப்பதுதான் அதிக சக்திபெறும்.

ஆயுர்வேதத்திற்கு அரசாங்கம் செய்யவேண்டிய உதவி களை வைத்யர்களாகிய நீங்கள்தான் எடுத்துரைக்கவேண்டும். முக்யமாய் தற்போது மதுவிலக்குசட்டத்தில் ஆஸவாரிஷ் டங்களையும் சேர்த்ததால் இந்தியவைத்யர்களுக்கு ஏற்பட்டி-

ருக்கும் ஆபத்தையும் நீங்கள் தீரமாய் எடுத்துக் காட்டி பம்பாய் அரசாங்கத்தைப்போல் நம் மாகாண ஸர்க்காரையும் இந்தியவைத்யர்களுக்கு அனுகூலமான வழியில் மதுவிலக்கு சட்டத்தைத் திருத்தியமைக்கும்படி செய்யவேண்டும்.

இதுபோல் பலவற்றையும் நீங்கள் கூடி விவாதித்து உருவான தீர்மானங்கள் செய்து பொதுஜன ஆதரவைத் தேடி அதன்மூலம் அரசாங்கத்தையும் செவிசாய்க்கும்படி செய்ய வேண்டும்.

திறமைக்கும் அறிவிற்கும் பிரஸித்தி பெற்ற இந்நகரத்தில் நீங்கள் செய்யும் தீர்மானங்களே மற்றவர்களுக்கும் முக்யமாய் ஆயுர்வேத உலகிற்கும் வழிகாட்டியாக அமைய வேண்டுமென்பது எனது பேரவா.

கடைசியாக எங்களது வரவேற்புக்கிணங்கி இங்கு குழுமியிருக்கும் தங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்து, குற்றம் குறை காணினும் எங்களது உபசாரத்தை நன்மனதுடன் ஏற்றுக்கொள்ளுவீர்களாக என பிரார்த்திக்கிறேன்.

தங்கள் வரவு நல்வரவாகுக.

Vaidika Vardhini Press, Kumbakonam. 30-9-48, Cps. 400.